பிஸ்மில்லா ஹிர் றஹ்மா னிர்றஹீ|

—:[*]:—

மிஸ்பாஹுஸ்ஸலாஹ்.

பீ. தொவலீஹின்னிகாஹ.

—(௧)—

இஃது

மதருஸ் திருவல்லிக்கேணி.

எஸ். எம். முஸ்தபா லெப்பை.
என்பவனால் பல கிதாபுகளில் நின்றும்

இன்னும் சில பெரியோர்களால் கோர்வை செய்யப்பட்ட
பிரதிகளைக்கொண்டும்
தமிழால் வழுவற எழுதி முடிவுபெற்றது.

தீனத
ஹிதாயத்துல் இஸ்லாம் பிரசில்

பதிப்பிக்கப் பட்டது.

1915.

—(*)—

ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.

பிஸ்மில்லாஹி.

ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகலமான கனவான்களுக்குந் தெரிவிப்பது இந்த மிஸ்பாஹுஸ்ஸலாஹ், பீ. தௌலீஹின்னிகாஹ் கிதாப் யாவருக்கு உபயோகமாகும்பொருட்டு நம்மால் எழுதப்பட்டு நமது திவாயத்தால் இஸ்லாம் பிரஸ்ஸில் பதிப்பிக்கப் பட்டுள்ளது. இக்கிதாபை என் அனுமதியின்றி எவரேனும் முழுதிலுமாவது அல்லது சிலதையாவது எவ்விதப் பாஷையிலும் அச்சிடக்கூடாதபடி கவர்ன்மெண்டு சட்டப்படி [ரிஜிஸ்டர் காப்பிரைட்] செய்யப்பட்டிருக்கின்றது.

இதன் விலை	ரூபா	1—0—0
வி. பி. போஸ்டு சார்ஜ்	ரூபா	0—4—0

வியாபாரிகளின் விலை பிரத்தியேகம்.

ஒரே முறை 5 கிதாபுவாங்குபவர்களுக்கு 1 கிதாபுகமிஷன் கொடுக்கப்படும்.

ஷை இந்தக் கிதாபு தமிழிலும், அறபுத்தமிழிலும் இருப்பதால் தமிழென்றும், அறபுத் தமிழென்றும் பிரித்தெழுதுவதுடன் தங்கள் விலாசத்தையும் தெளிவாய் எழுதவேண்டியது.

மானேஜர்:—

எஸ். எம். முஸ்தபா லெப்பை.

இஸ்லாமிய்யா பிரசங்கநேசன் ஆபீஸ்,

நெ. 16. அரப்பமுதலி, தெரு,

திருவல்லிக்கேணி, மதராஸ்.

அட்டவணை.

பிரிவு	விஷயங்கள்.	பக்கம்
1	நபிநாயகத்தின் பேரில் சலவாத்து சொல்வது	3
2	நபிநாயகத்துனுடைய வசியத்துகள்	8
3	நிகாஹுடை சிரப்பு	9
4	நிகாஹுக்குமுன்படித்து அரியவேண்டியவைகள்	11
5	சாலிஹாகிய பெண்களின் அடையாளங்கள்	14
6	நிகாஹை விடுவதாலுண்டாகும் கெடுதிகள்	17
7	நிக்காஹினால் பூணும் ஹக்குகள்	18
8	புருஷன்பேரில் பெண்ஜாதியுடைய ஹக்குகள்	25
9	நிக்காஹை வெழிரங்கமாக்குவது	26
10	வலிமா என்னும் விருந்துண்பது	28
11	பகாவை பற்றியது	29
12	நிக்காஹுடைய சுன்னத்து முஸ்தஹபுகளையும் மக்ரூஹான பெண்களைப்பற்றியது.	30
13	பெண்ஜாதியை நலவுகொண்டு நடத்துவதைப் பற்றியது	32
14	பாத்திமா றலியல்லாஹு அன்ஹாவுடைய வரிசைகள்	34
15	கதீஜா றலியல்லாஹு அன்ஹா பாத்திமாறலியல்லாஹு அன்ஹாவைகெர்ப்பமானதைபற்றியது	38
16	பாத்திமா நாயகீத்தை அப்துர் றஹ்மான் ஔப் பெண் பேசியது,	40
17	பாத்திமா நாயகத்தின் கலியாணத்தைக் கூறுவது	41
18	பாத்திமா நாயகத்துக்குச் சொர்க்கத்தில் நின்றும் பட்டுப் பிடவை ஹதியா வந்த சிரப்பு	43
19	பாத்திமாநாயகத்தின் சீதனத்தைப்பற்றிகூறுவது	46
20	புருஷன் பெண்ணுக்கிடையில் நடந்தசெய்திகளை வெளியில் பேசுவதனாலுண்டாகும் கெடுதிகள்	48
21	பெண்பிள்ளைகள் வீட்டைவிட்டு வெளிப்புறப் படுகிறதை விலக்குகிறது	59
22	இல்முல் கியாபா-இல்முல் பரூசத்து என்னும் இல்முகளைப் பேசும்பாடம்	51
23	மானிடம்த்தக அமைப்பைப் பற்றி கூறுவதாம்	53
24	சிரசுமுளை நெற்றியிவைகளின் அடையாளங்கள்	53

அட்டவணை-

பிரிவு	விஷயங்கள்.	பக்கம்
25	புருஷத்தின் அடையாளங்கள்	59
26	கண்களின் அடையாளங்கள்	66
27	மூக்கின் காது அடையாளங்கள்	5[illegible]
28	பல்களின் எண்ணங்களும் உதடுவாய் அடையாளங்களும்,	63
29	நாவு அண்ணம் கீழ்வாய் கழுத்துமுகம் சகல அடையாளங்கள்	64
30	நாவின் கருவிகளின் அடையாளம்	65
31	தோள் அக்குள் பின்னங்கைமார்ப்பு இவைகள் அடையாளம்	66
32	வயற்றினுள்ளிருக்கும் கருவிகளின் அடையாளங்கள்	67
33	முதுகினுள்ளிருக்கும் தசை நரம்புகள் அடையாளம்	71
34	நிறம் உடல் ரோமம் இவைகள் அடையாளங்கள்	72
35	உடல் எலும்புகள் எண்ணங்களின் அடையாங்கள்	73
36	உடலின் குறிகளின் அடையாளம்	76
37	பிள்ளைக்கு பெண்கொள்வதன் விபரம்	77
38	பலவிதமான அடையாளங்கள்	„
39	ஆண்சாதி பெண்சாதி இவைகளின் விபரம்	78
40	தன ஒறலான பெண்ணும் புருஷரும் இருக்க வேண்டிய லக்ஷணங்கள்	79
41	புருஷன் பெண்ஜாதிக்கிடையில் கலந்துரவாடும் விபரம்	80
42	புணர்ச்சிக்குபின் அருந்துவதின் விபரம்	„
43	முதலாவது வகுப்பின் பெண்ணின் குறிகள்	81
44	இரண்டாவது வகுப்பு பெண்ணின் குறிகள்	82
45	மூன்றாவது வகுப்பு பெண்ணின் குறிகள்	83
46	நான்குவித ஸ்திரீகளின் இலக்ஷணம்	„
47	இரண்டாவது பத்தினிஸ்திரீயின் இலக்ஷணம்	84
48	மூன்றாவது அதமஜாதி ஸ்திரீயின் இலக்ஷணம்	85
49	நான்காவது அத்தமஜாதி ஸ்திரீயின் இலக்ஷணம்	„

அட்டவணை.

பிரிவு	விஷயங்கள்.	பக்கம்
50	முதலாவதுவகுப்பு நான்குவித புருஷர்களின் ஜாதி இலக்ஷணங்கள்	86
51	இரண்டாவதுவகுப்பு புருஷர்களின் ஜாதி இலக்ஷணங்கள்	87
52	மூன்றாவதுவகுப்பு புருஷரின் இலக்ஷணங்கள்	,,
53	நான்காவது வகுப்புருஷரின் லக்ஷணங்கள்	88
54	மாதர்கள் ஹைறு நாளைப்பற்றியது	89
55	அதிக ஜிமாவால் வரும் கெடுதிகளைப் பற்றி சொல்வது	91
56	ஜிமாஹ் கூடாத சமய விளக்கங்களைப் பற்றி சொல்வது	92
57	மாதரைச்சேரும் வயதுவிளக்கங்களைப்பற்றியது	93
58	கெர்பந்தரிக்கும் போது சூரியகலை, சந்திர கலையினுடைய விபரங்கள்	94
59	கெர்பந்தரிக்கும்போது தன் தன் வயசுகுறிகளைப்பற்றி சொல்வதாம்	96
60	கெர்பத்தில் கருவமைந்து 10 மாதம்வரை சிசுவின் நிலைமைகளை சொல்வது	100
61	கருவுதரித்து முதல்மாதம் மிருந்து 10 மாதம் வரை கருப்பையின் நிலைமையைபற்றி சொல்வது	102
(இதில் முதல்மாத முதல் 10 மாதம்வரை பிரிவு 10 அடங்கியது)		
71	கெர்ப்பித்திருக்கும் சிசு, ஆண், பெண், என்று அறியப்படும் விபரம்	111
72	பெண் சிசுவுகளின் அடையாளங்கள் கூறுவது	112
73	இருவரில் இன்னார் மலடென்று அறியும் விபரம்	113
74	ஒரு சூலில் இரண்டுபிள்ளை பெறுவதைப்பற்றிய விபரம்	113
75	பிறந்த பிள்ளைக்கு தொப்புட்கொடி அறுக்கும் விபரங்கள்	114
76	பிறந்த பிள்ளைக்கு பால்கொடுக்க வேண்டிய முறைகள்	115
77	பிள்ளைகளுக்கு ஸ்நானம் செய்து வைக்க வேண்டிய முறைகள்	115

அட்டவணை.

பிரிவு	விஷயங்கள்.	பக்கம்
78	பிள்ளை பிறந்த 1 வாரத்திற்குள் ஜனன ரிஜிஸ்தரில் பதிவிக்கும் விபரங்கள்	116
79	பிறந்தபிள்ளை அழாதிருந்தால் அழப்படுத்த வேண்டிய விபரம்	116
80	பிறந்த பிள்ளைக்கு பால்கொடுக்கும் விபரம்	117
81	தாதிபால் கொடுப்பதின் விபரம்	117
82	பிள்ளைகள் உடுமானங்கள் அணிவதைப்பற்றி சொல்வது	118
83	பிள்ளைகள் கதினா செய்வதின் பலன்களைப் பற்றியது	118
84	பிள்ளைகள் பள்ளிக்கூடத்துக்கு போகவேண்டிய முறைகள்	119
85	சல்லல்லாஹு அலைஹி வஸல்லம், ஹஜரத் அலிரலியல்லாஹுவுக்கு செய்தவசியத்து	120
	அவ்வல்கலிமா	
86	இரண்டாங் கலிமா பொருள்விளக்கம்	125
87	மூன்றாவது கலிமா பொருள்விளக்கம்	126
88	நாலாங்கலிமா தௌஹீதுகள்	127
89	ஐந்தாம்கலிமா பொருள்விளக்கம்	128
90	அறபு வாக்கியத்தைப்பற்றி சொல்வது	129
91	இஸ்லாமுக்கு மூன்றாவது பறுலாகிய ஸக்காத்து விபரம்	131
92	இஸ்லாமுடைய நான்காவது பறுலுடைய விபரம்	131
93	தண்ணீரினால், அல்லது ஈச்சம்பழம் இவைகளினால் நோன்பு திறந்த பின்னால் ஓதவேண்டிய விபரம்	134
94	சுன்னத்தான நோன்பைப் பற்றிய விபரம்	134
95	இஸ்லாமின் ஐந்தாவது பறுலின் விபரம்	135
96	ஹஜ்ஜின் பறுலுகளைப் பற்றி சொல்வது	135
97	ஹஜ்ஜின்சுன்னத்தினுடைய விபரங்கள்	136
98	ஈமான்களுடைய விபரங்கள்	137

அட்டவணை.

பிரிவு	விஷயங்கள் :	பக்கம்
99	இரண்டாவது அவன் மலக்குகளைக் கொண்டு ஈமான் கொள்வதாயிருக்கும்	139
100	3-வது வேதங்களைக்கொண்டு ஈமான் கொள்வதின் விபரம்	140
101	4-வது றசூல்மார்களைக் கொண்டு ஈமான் கொள்ளும் விபரம்	141
102	5-வது ஒடுக்கத்து நாளைக்கொண்டு ஈமான் கொள்ளும் விபரம்	142
103	ஈமானிலுள்ள ஆறாவது பறுலின் விபரம்	143
104	தொழுகையின் சருத்துகளை பயான் செய்யும் விபரம்	144
105	உலுவை பேசுகிறதைப்பற்றிய பாடத்தின்விபரம்	145
106	உலுவின் சுன்னத்துகள் விபரம்	146
107	உலுவைமுறிக்கும் விபரங்கள்	,,
108	முழுக்கைவாஜிபாக்கிவைக்கும் கருமத்தின்விபரம்	147
109	முழுக்கின் பறுலு இரண்டாக இருக்கவேண்டிய விபரம்	,,
110	முழுக்கின் சுன்னத்துகளுடைய விபரங்கள்	,,
111	ஜுனுபாளிக்கு ஹறாமுடைய விபரங்கள்	148
112	மாதர்கள் ஹய்லாவதின் 3 காரியம் அறும்	,,
113	உலுவில்லாதவர்களுக்கு 3 காரியம் அறும்	,,
114	தொழுகைக்கு பறுலுவுடைய விபரம்	149
115	தொழுகையை முறிக்கும் கருமத்தின் விபரம்	,,
116	தொழுகையின் சுன்னத்துகளை விரிவாக சொல்லப்பட்டது	151
117	அறபுவாக்கியத்தின் விபரங்கள்	152

அட்டவணை.

பிரிவு	விஷயங்கள்.	பக்கம்
118	புகாரி, றலியல்லாஹு அன்ஹுவும், முஸ்லிம் றலியல்லாஹு அன்ஹுவும் றிவாயத்துசெய்ததின் விபரம்	154
119	சுன்னத்துகளின் பாடத்தின் விபரம்	161
120	தொழுகையில் புகுறுகிறதற்கு சுன்னத்துகளின் விபரம்	16[illegible]
121	கிபுலாவின் திசையை முன்னோக்கவேண்டிய விபரங்கள்	171
122	தொழுகையிலுண்டாவாகிய மக்றூஹுகளின் விபரம்	173
123	தொழுகையில் ஹறாமான சங்கதியின் விபரங்கள்	174
124	தொழுகையில் மக்றூஹுத் தஹரீமாகிய ஒருத்துக்களை பேசுகிற பாடத்தின் விபரம்	175
125	தொழுகையில் மக்றூஹு தன்ஸீஹுகளை விபரிக்கும் பாடத்தின் விபரம்	176
126	விறைவால் உண்டாகும் கெடுதிகளை சொல்லும் விபரம்	178
127	மதனமானிட சரீரவிர்த்தி லேகியத்தின் விபரம்	180
128	நாள்பட்ட ரோகங்களை நீக்க சவுக்கிய பரிகாரம்	181
129	போகசக்தியை குறைக்கும் பரிகாரம்	185
130	சகலமான வியாதிக்கும் வீரதத்துவ லேகியம்	,,
131	வைத்திய கைமுறைகளின் விபரம்	187
132	முயல் லேகியம்	188
133	தேத்தான் கொட்டை லேகியம்	189
134	வச்சிரகண்டி லேகியம்	,,
135	எஸ். எம். மகாபூரணாதி லேகியம்	190
136	போசனசஞ்சீவிலேகியம்	193
137	சீதசுரத்திற்கு விபரம்	194

யாலத்தீபு.

பிஸ்மில்லாஹிர் றஹ்மானிர் றஹீம்.

மிஸ்பாஹு ஸ்ஸலாஹ.
பீ தௌலீஹின்னிகாஹ.

——(.*:)——

முகவுரை.

—(:*:)—

ஆண்டவன் புகழ்.

மூப்புகழுக்குரிய எப்பொருட்கு முதற்மையான சர்வ தத்துவதயாபரன்.

ஆலம்பதினென்ணாயிரம் முன்பாகவே மகிழ்ந்தேண்
மூலத்தரும் அருணாற்கில் மோகம்தரும் முதல்வாய்
காலம்வரும்நேரம் கலிமாவெந்தன்னாவில்
பாலன்தலைமேல் நின்று யர்பாடம் தருவாயே.

அஞ்சும் அரியாமல் அய்பெரும்காணாமல்
நெஞ்சுதனிலே யிருக்கும் நித்தேனேனான்
உன்செயல்கொண்டோதும் புகழ்ச்சி
தரும் ஆவடியெனில் மனதுள்போதம்
தருவாயே புரிந்து.

அர்ப்பசலமான அக்கினியால் அளியாமல்
காவல்செய்து கெர்ப்பமதிலே வைத்து
உருவாகி கிளம்பினின்றதுபின் தர்ப்பரனே

தாரணியில் தான் வளர்த்து கார்த்ததோரு
காரனேயிதர்க்கு கர்ப்பு.

எல்லாப் புகழ்தலும் யேகக்கடவுளாகிய அல்லாஹுத் தஆலாவுக்காக யிருக்கும் அவன் யெப்பேர் கொத்தவனுனல் ஆலத்தை படைத்து அந்த் தான் உண்டென்கிறதின் பேரிலே சாக்ஷி சொல்லுகிறதாகவும் அத்தாழ்சியாகவும் ஆகிவிட்டானே அப்பேர் கொத்தவன் இன்னும் எப்பேர் கொத்த வல்லபமுடையவனுனல் தன்னை தவிர் உள்ளவை அடங்கலை விட்டும் தான் தேவை அற்றவனுகவும் தன்னை தவிர உள்ளவையடங்கலும் தன்னளவிர் தேவையானவனுகவும் நாயகத்தனத்தை கொண்டும் தனித்திட்டானே அப்பேர்கொத்த நாயக தனத்துக்கு வல்லபமுடைய்வன் சலவாத்தும் சலாமும் தெரிந்து கொள்ளப்பட்ட நபிசல்லல்லாஹு அலைகிவசல்ல மவர்கள் பேரினும் தெளிவுதலாகிய ஆல் ஹசுஹாபிகள் பேரிலுமுண்டாவதாகவும் பின்னர் இந்த மிஸ்பாஹுஷ்ஷலாஹ் பீ. தெளலீஹின்னிகாஹ். என்னும் கிதாபாகிறது இதின் உள் அடங்கிய பிரிவுகள் யாவும் குரிப்பாகிய உலமாக்களில் ஞெம்பவும் வருசை பெற்றவர்களுடைய கிதாபுகளில் நின்றும் பிருக்கியெடுக்கபட்ட தசுங் கோர்வைசெய்துருபிர் வளிகேடென்னும் யிருளை நீக்கிய நிகாஹுனுடைய வரிசைகளைப்பற்றி வெகு நேர்த்தியாக யாவரும் அரிய மிஸ்பாஹுஷ்ஷலாஹ் பீ. தெளலீஹின்னிகாஹ் என்னும்பெயர்வைத்து யிதை விரப்பமாக முடிவுசெய்கிறதில்ஞெம்பவும் உபகாரத்தை வுடையவனுக அல்லாகுத் தலாவின் பேரில் நான் தவக்கலானேன் வகுவ ஹசுபிவநிகுமல் வக்கில் வலாஹ் வுலவலாக் குவ்வத்த இல்லாபில்லாகில் அலீயில்லலீம்.

1-வது பிரிவு.

இது நபி நாயகத்தின் பேரில் சலவாத்து சொல்வதால் உண்டாகும் பலன்களைப்பற்றி சொல்வதாம்.

அல்ஹம்துலில்லாஹி றப்பில் ஆலமீன் வல்ஆக்கிபத்து லில் முத்தகீன் வஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலா றசூலிஹி ஸையிதினா முகம்மதின் வஆலா வஆலிஹி வஅஸ்ஹாபிஹி அஜ்மயீன்.

ஹம்து ஸலவாத்துக்குப் பின் அல்லாஹுத் தஆலாவின் பிழை பொறுக்குதலையும், முகம்மது முஸ்தபா சல்லல்லாஹு அலைஹி வசல்லமுடைய ஷபாஅத்தையும், ஆதரவு வைத்தவனாகவும் இன்னும் நமது உடர்ப்பிறப்புகளாகிய சகோதரர்கள் யாவருக்கும் ஓர் அடிமையாகிய அப்துல்காதிர் லெப்பையுடைய புத்திரனான முஸ்தபாலெப்பையென்ற ஓர் அடிமை இரகசியத்திலும் பருஷியத்திலும் செய்பாவத்தை அல்லாஹுத் தஆலா மன்னித்துக் கொள்ளவேண்டும்.

அல்லாஹுத் தஆலா குருஆனில் திருவுளமானான். திடனாக அல்லாஹுத் தஆலாவும் அவனுடைய மலக்குகளும் நபி பேரில் சலவாத்துச் சொல்லுகிறார்கள், ஓய் முஃமினானவர்களே நீங்களும் அவர் பேரில் சலவாத்தும் சலாமும் சொல்லுங்களென்று திருவுளமானான்.

றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் திருவுளமானார்கள் யாராகிலுமொருவன் அவனுடைய ஹயாத்தில் என்பேரில் சலவாத்தை மிகுதப்படுத்தினால் அவனுடைய மவுத்தில் மக்லூகாத்

தடங்கலேயும் அவனுக்குப் பிழைபொறுக்கத் தேடும்படி அல்லாஹுத் தஆலாயேவுவானென்று திருவுளமானார்கள்.

அபூஹுறைறா றலியல்லாஹு அன்ஹு சொன்னார்கள். முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் பேரில் சொல்லும் சலவாத்தும் சலாமுமாகிறது. அந்த இரண்டும் சொர்க்கத்திற்குப் பாதையா யிருக்குமென்று சொன்னார்கள், அறிந்துகொள். இமாம்கள் சொன்னார்கள் அமலில் றியாவென்னும் முகத்தாக்ஷை சேர்ந்தால் அமலை கபூல் செய்யப்படாது சலவாத்தே ஒழிய, ஸலவாத்தில் றியா தங்கடஞ் செய்யாது, பிற்காலத்தில் அமல்களில் றியாவந்துகூடும். அப்போது ஈடேத்தம் பெறுகிறவர்களெல்லாம் சலவாத்தைக் கொண்டு தான் ஈடேத்தம் பெறுவார்களென்று சொல்லுகிறார்கள்.

றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் திருவுளமானார்கள். யாராகிலுமொருவன் என்பேரில் ஒரு சலவாத்து சொன்னால் அவன் பேரில் 3-நாளைக்குப் பாவம் எழுதவேண்டா மென்று அல்லாஹுத் தஆலாகிருமன் காத்திபீன் என்னும் மலக்குகளை ஏவுவானென்று திருவுளமானார்கள். இன்னம் றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் திருவுளமானார்கள். யாராகிலுமொருவன் என்பேரில் துனியாவில் சலவாத்தைக் கொண்டு சப்தமிட்டால் அவன் பேரில் மேலான வானத்திலும் மலக்குகள் சலவாத்தைக்கொண்டு சப்தமிடுவார்களென்று திருவுளமானார்கள்.

றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் திருவுளமானார்கள் யாராகிலுமொருவன் என் பேரில் 100 சலவாத்து சொன்னால் அல்லாஹுத் தஆலா அவனுடைய 2 புருவத்துக்கிடையில்

இவன் நரகத்தைவிட்டும் நிபாகை விட்டும் உரிமைபெற்றவனென்றெழுதி அவனைகியாமத்தில் ஷுஹதாக்களுடனே இருத்தாட்டுவான்.

இன்னும் றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் திருவுளமானார்கள், என்னிடம் ஜிப்றிலும், மீக்காயீலும், இஸ்றாபீலும், இஸ்ருயீலும், வந்துஜிப்ரீல் சொன்னார்கள். யாராகிலுமொருவன் தங்கள்பேரில் 10 சலவாத்து சொன்னால் நான் அவனுடைய கையைப்பிடித்து சிறாத்துல் முஸ்தகீமென்னும் பாலத்தை கடத்தாட்டுவேனென்று சொன்னார், மீக்காயில் சொன்னார். நான் அவனுக்குத் தங்கள் ஹௌலுல் கௌதரில் நின்றும் புகட்டுவேனென்று சொன்னார், இஸ்றாபீல் சொனனார், நான் அவனுக்காக ஆண்டவனுக்குசுஜுதுசெய்வேன். அவனுக்குப் பிழை பொறுக்கிற வரையில் நான் தலையை எடுக்கமாட்டேனென்று சொன்னார். இஸ்ருயீல் சொன்னார், நான் நபிமார்களுடைய றூஹைகைபத்துகிறதுபோல் அவனுடைய றூஹை கைபத்துவேனென்று சொன்னாரென்று திருவுளமானார்கள்.

(மஜாலிஸிலும் அப்றார்) என்னும் கிதாபில் வருகிறது ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் ஆண்டவர்களுக்குச் சொன்னார்கள். தங்களுக்கு, ஆண்டவன், சொர்க்கத்திலொரு குப்பாவை தந்திருக்கிறான். அதின் விசாலம் 300-வருஷத்து தூரம். அதைக் கருமத்தென்னும் தென்னல் சூழ்ந்திருக்கிறது. அதில் தங்கள் பேரில் சலவாத்தை மிகுதப்படுத்தினவனே அல்லாது புகுதமாட்டானென்று சொன்னார்கள்.

றிவாயத்தில் வருகிறது ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் சொன்னார்கள், முஹம்மதே தங்கள் பேரில் ஒருவன் ஒரு சலவாத்து

சொல்கிறதில்லை. அவன்பேரில் 70,000 மலக்குகள் சலவாத்து சொல்லியே யூழியவென்று திருவுளமானார்கள். றசூல் சல்லல் லாஹு அலைஹிவசல்லம் திருவுளமானார்கள், யாராகிலுமொருவன் வெள்ளிக்கிழமை என்பேரில் 100-சலவாத்து சொன்னால் அவன் கியாமத்தில் ஒரு ஒளிவுடனே வருவான். அந்த ஒளிவை மஹ்ஷருடையவர்கள்பேரில் பங்கிட்டால் அவர்களுக்கெல்லாம் போதுமாகும். இனி அவன் 1000-சலவாத்து சொன்னால் அவன் குடியிருக்கும் தலம்சொர்க்கமென்று கண்டொளிய மவுத்தாகமாட்டான். ஒருவன் 500 சொன்னால் ஒருநாளுமவனுக்கு மிடிமைதொடாதென்று திருவுளமானார்கள்.

ஹிக்காயத்து.

சாலிஹீங்களிலொருவர் சொன்னார், ஆண்டவர்கள் பேரில் நான் கணக்குவைத்து சலவாத்து சொல்லி வந்தேன். அவர்கள் என் கினவில் வந்து என்பேரில் சலவாத்தை மிகுதப்படுத்தின வாயைக் கொண்டு வரும் முத்தட்டு மென்றார்கள். நான் வெட்கித்து முகத்தைத் திருப்பினேன். அவர்கள் கன்னத்தைப் பிடித்து முத்தினார்கள். என்விடும் கன்னமும் வாசம் 8-நாள் கழிந்ததென்று சொன்னார்கள்.

இன்னுமொருவர் சலவாத்து ஓதிக்கொண்டிருந்தார்கள். தொழுகைக்கு வக்து முடிகிக்கொண் டிருந்ததென அவசரமாக சலவாத்தை முடித்தார்கள். ஆண்டவர்கள் வந்து ஏன் அவசரமாக ஓதினினீர் பாக்கி யிருந்தால் தொழுதுவிட்டு பதமையாய் ஓதவேண்டுமேயென்று சொன்னார்கள்.

ஹிக்காயத்து.

உலமாக்களிலொருவர் படுக்க முந்தி, 1000 சலவாத்து ஓதுகிறவர்களா யிருந்தார்கள். ஒருநாள் விடப்பட்டுப் போயி

ற்று. அன்றிரவில் நபிநாயகம் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களிடம் வந்து அவர்களுடைய தலையில் கையை வைத்து தடவி என்பேரில் சலவாத்தை மறந்துவிட்டீரே என்று சொன்னார்கள். விழித்துப்பார்க்கவும் நாயகத்துடைய கை பதிந்திருந்தது. அதின் பிறகு அவர்கள் 10,000 சலவாத்தை வளமைபடுத்திக் கொண்டார்கள்.

றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் திருவுளமானார்கள் யாராகிலுமொருவன்என்பேரில் 1000 விடுத்தம் சலவாத்துச் சொன்னால் சொர்க்கத்து வாசலில் அவனுடைய புயம் என் புயத்தோடு இடிக்குமென்று திருவுளமானார்கள்.

ஹிக்காயத்து

அல்லாஹுத் தஆலா மூசா அலைஹிஸ்ஸலாமுக்குச் சொன்னான், ஒய் மூசாவேஉம்முடைய நாவுக்கு மொழிச்சலும், உடலுக்கு உயிரும், கண்ணுக்குப் பார்வையும், உம்முடைய காதுக்குக் கேள்வியும், முடுகுதலாயிருக்கிறதைக் காணவுமக்கு முடுகியிருக்க நாடினால் என்னுடைய நபிமுஹம்மது பேரில் சலவாத்தை மிகுதப்படுத்து மென்று சொன்னான் கியாமத்தில் தாகம் தொடாதிருக்கவேணுமானாலும், அவர்களை ஆண்டவர்கள் பேரில் சலவாத்தை மிகுதப்படுத்தச் சொன்னான். வஹபு றலியல்லாஹு அன்ஹு சொன்னார்கள் பனீ இஸ்ருயீல் கூட்டத்தில் ஒரு வாலிபன் 100-வருஷம் மாறு செய்து கொண்டிருந்துவிட்டு மவுத்தானான். அவனை அவர்கள் குப்பையில் எறிந்து விட்டார்கள். அப்போது அல்லாஹுத் தஆலா மூசா அலைஹிஸ்ஸலாமுக்கு வஹியறிவித்தான். அவனைக் குளிப்பாட்டி கபன்செய்து பனீ இஸ்ருயீல்களோடு அவன் பேரில் தொழுவித்து அடக்கும் அவன் ஒருநாள் தவுறுத்தில் முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லமுடைய

பேரைக்கண்டு முக்தி கண்ணில் வைத்து அவர்கள் பேரில்சல வாத்து சொன்னன். அவனுக்கு நான் பிழைபொறுத்து அவனுக்கு ஹூறுல்யீனை கலியாண முடித்துக் கொடுத்தேனென்று வஹியறிவித்தான்.

ஆனதால் மூமினுகிய சகோதரர் யாவரும் சலவாத் தென்னும் மேன்பொருளாகிய நமது நாயகம் நபி சல்லல்லாஹு அலைஹிவசல்லம் பேரில் கய்விடாமல் சலவாத்தை வோதி அதின் பலன் பெருவீர்களாக ஆமீன் யாரப்பில் ஆலமீன்.

---

2 வ்து பிரிவு.

அல்கம்துலில்லாஹி றப்பில் ஆலமீன் வல்ஆகிபத்
துலில் முத்தகீன் அஸ்ஸலாத்து வஸ்ஸலாமு
அலா றசூலிகி செய்யிதினு முகம்மதின் வாலிஹி

வஸ்ஹாபிஹி அஜ்மயீன்.

ஒருநாள் நபிசல்லல்லாஹு அலைஹிவஸல்லம் மதினத்துப் பள்ளியில் உட்கார்ந்துக்கொண்டு அலிறலியல்லாஹு அன்ஹு அவர்களுக்குச் சில ஙசியத்துகள் திருவுளமானுர்கள், அதென்னவெனில் யாதொரு அடியான் இதன்படி அமல் செய்து வருவானுகில் அவனுக்கு நரகத்தைக்கொண்டு விடுதலையுமாய்த் துனியாஆகிறத்திலும் சிதேவித்தனமும் உலகத்தில் இரணமும்பருக்கத்தும் உண்டாகும் ஆகையால் இஸ்லாமானவர்களுக்கு இது வேண்டியதாயிருக்கிறது தானும் படித்துக்கொண்டு இன்னொருவருக்கும் படித்துக்கொடுத்து இதன்படி அமல் செய்தால் அவுலாதுகள் நல்லதாகும் இன்னும் இஸ்லாம்தனத்தில் காமிலாகும் அதனுல் நபிசல்லல்லாகு அலைஹிவசல்லம் அலிறலியல்லாவுக்கும் அசுகாபிகளுக்கும் எல்லா உம்மத்திற்கும் திருவுளமானுர்கள்.

3-வது பிரிவு.

நிகாஹினுடைய சிரப்பைப்புற்றி சொல்வதாம்.

அல்லாஹு சுபுஹானஹு வதஆலா குர்ஆனிலே திருவுளம்பற்றியிருக்கிறான். பெண்களில் நின்றும் உங்களுக்கு ஹலாலானதை இரவ்வண்டாக மும்மூன்ருக நவ்வாலாக நிகாஹு செய்து கொள்ளுங்கள். இன்னும் இந்த எண்ணிக்கை பெண்களுக்கிடையில் பங்கு முறையிலும் நபகாவிலும் சரியாக நடக்காமலிருக்கிறதை பயந்தீர்களானல் ஒரு பெண்ணை அல்லது உங்கள் கைகள் உடைய தாகிக் கொண்ட வெள்ளாட்டிகளை பற்றி பூண்டுக் கொள்ளுங்கள் என்றும் திருவுளமாயிருக்கிறான்.

நபிஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் திருவுளமானுர்கள். யாதொருவன் கலியாண முடித்தால் திட்டமாக தீனில் பாதியை பேணிக்கொண்டான். இரண்டாம் பாதியில் அல்லாஹுத் தஆலாவை தக்வா செய்துக்கொள்ளவுமென்று திருவுளமானுர்கள்.

இன்னும் ஹதீதில் வந்திருக்கிறது யாதொருவனுக்கு அல்லாஹுத்தஆலா ஸாலிஹாகிய பெண்ணை கொடுத்தால் திடனுக அவன் தீனில் பாதியின் பேரில் அவனுக்கு உதவிசெய்திட்டான்.

இன்னும் ஹதீதில் வந்திருக்கிறது. நிக்காஹ் என்னுடைய சுன்னத்தாயிருக்கும், யாதொருவன் என்னுடைய சுன்னத்தை விட்டுப் பிரக்கணித்தால் அவன் என்னிலுள்ளவனல்ல.

இன்னும் ஹதீதில் வந்திருக்கிறது. யாதொருவன் என்னுடைய தீனின் பேரிலும் தாவூது சுலைமான் இப்ருஹீம் நபி

களுடைய தீனின் பேரினுமாயிட்டால், அவன் கலியாணமுடித்துக்கொள்ளவும், அதளவில் பாதையைக் காணவில்லையானல் பீஸபீல் செய்யவுமென்று ஆனதால் நிக்காஹு பீஸபீலைக் காணமுற்படுத்தப் பட்டதாயிருக்கிறது.

இன்னும் மஆதுப்னு ஜபல்றலியல்லாஹு அன்ஹுவுக்கு இரண்டு பெண் குத்து நசலில் மௌத்தாகி தாங்களும் குத்து நசல் பிடித்திருந்தார்கள். அப்போது எனக்கு கலியாணம் முடித்துவையுங்கள் திட்டமாக நான் பெண்ஜாதி யில்லாதவனை அல்லாஹுத்தஆலாவை சந்திக்க பொருத்தக் கேடாகிறேன் என்றார்கள்.

இன்னும் அபீஹுறைறா றலியல்லாஹு அன்ஹுவைத் தொட்டும் வந்திருக்கிறது உங்களில் தீங்கர்களாகிறது உங்களில் பெண்ஜாதியில்லாதவர்களா யிருக்கும் பெண்ஜாதி யுள்ளவனில் நின்றும் இரண்டு ரகஅத்தாகிறது பெண்சாதி யில்லாதவனில் நின்றும் எழுபது ரகஅத்தைக்காண ஏற்றமா யிருக்கும்.

இன்னும் இப்னுஅப்பாசு றலியல்லாஹு அன்ஹுமா சொன்னார்கள். கலியாண முடியுங்கள் கலியாணத்துடன் ஒருநாள் ஆயிரம் வருடத்து இபாதத்திலும் ஏற்றமாயிருக்கும் என்று சொன்னார்கள்.

இப்றுஹீமுப்னு அத்ஹம் றலியல்லாஹு அன்ஹு அவர்களை ஒரு மனிதன் காட்டில் கண்டு உமக்கே சோபனம் கலியாணம் முடியாமல் அல்லாஹுத் தஆலாவுக்கு இபாதத்து செய்கிறதைக்கொண்டு பருக்காயிட்டீர் என்று சொன்னார். அதற்கவர்கள் சொன்னார்கள் நீ உம்முடைய பிள்ளை குட்டிகளுடைய சபபினால் ஒரு விடுத்தம் துக்கப்படுவாயே அதுவாகி

றது நான் இப்போதிருக்கிறேனே அதை எல்லாம் விட மெத்த வருசையா யிருக்குமென்று சொன்னார்கள். நீங்கள் ஏன் கலியாணம் முடிக்கவில்லை என்று கேட்டதற்கு பெண்ணளவில் ஹாஜத்துமில்லை என்னுடைய நப்ஸைக்கொண்டு பெண்பிள்ளைகளை மருட்ட நாடவுமில்லை என்று சொன்னார்கள்.

பாயிதா.

றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளம்பற்றினார்கள். ஒரு பெண்பிள்ளையை ஒரு ஆண்பிள்ளைக்குக் கலியாணமுடித்து அவர்களுக்கிடையில் சேர்த்துவிட ஒருவன் நடந்தால், அவனுக்கு ஆண்டவன் கியாமத்திற் ஹூறுல் ஈன்களில் நின்றும் ஆயிரம் பெண்களைக் கலியாணமுடித்துக்கொடுப்பான். ஒவ்வொருபெண்ணும் முத்துமாணிக்க மாளிகையிலிருப்பாள் இன்னும் அந்தக்கருமத்தில் நடந்தவனுக்கு, அல்லது, அதற்காக ஒரு பேச்சுப் பேசினவனுக்கு ஒவ்வொரு அடிக்கும் சொல்லுக்கும் இரவெல்லாம் வணக்கமும், பகலெல்லாம் நோன்புமாகவு மிருந்த ஒருவருடத்து இபாதத்து எழுதப்படுமென்று திருவுளம்பற்றினார்கள்.

4-வது பிரிவு.

இது நிக்காஹுக்கு முன் படித்தறிய வேண்டியவைகளைச் சொல்வதாம்.

நிக்காஹுக்கு முன் அதனுடைய ஹுக்மும்களை படித்தறியவேணும் முக்கியமாக ஈமான் இஸ்லாமை படிக்க வேண்டும். (தன்பீஹ்) யாதொரு ஆண்பிள்ளை ஈமான் இஸ்லாமுடைய

சிபத்தையறியவில்லையானால் நிக்காஹு கூடாது. ஆனதால்
மற்றும் பர்லான இல்முகளை படிக்குமுன் ஈமான் இஸ்லாமு
டைய இல்மை துவர்க்கமாக முக்கியமாய் படிக்கவேண்டும்.
யாதொருவன் ஈமான் இஸ்லாமுடைய சிபத்தையறியேனென்று
சொன்னால் அவன் காபிராயிருக்கும். அவனுக்கு தீனுமில்லை
தொழுகையுமில்லை நோன்புமில்லை யாதொரு இபாதத்துமில்லை
நிக்காஹுமில்லை அவன் பெற்ற பிள்ளைகளெல்லாம் ஸினாவில்
பிறந்த பிள்ளைகளாயிருக்கும். இதுபோல்தான் நிக்காஹு
செய்யப்பட்ட முஸ்லிமாகிய சிறு பெண் இஸ்லாமுடைய
ஸிபத்தை விளங்கியறியாதவளாயும் அதை வஸ்பு செய்ய தெரி
யாதவளாயும் அக்லுள்ளவளாய் பாலிகானால் அவள் புருஷனை
விட்டும் பிரிந்துப்போவாள். அவளை வீடு கூடாமலிருந்தால்
அவளுக்கு மஹருமில்லை. ஆனபோதே அவளுடைய புலூ
குக்குமுன் தன் தாய் தகப்பனை துடர்ந்து இஸ்லாமா
யிருந்தபோதிலும் புலூகுக்கு முன்னாலே ஈமான் இஸ்லாமு
டைய இல்மை படித்துக்கொள்வது வாஜிபா யிருக்கும்.

ஆனால் (லாயிலாஹ இல்லல்லாஹு) வென்னும் கிரப்பா
கிய கலிமா முஜ்மலாகிய ஈமானிலுள்ளது. இதுகொண்டு
ஈமான் நிறப்பமாய்விடும். எங்கிலும் முபஸ்ஸலாகிய ஈமான்
சொன்ன நேரத்தில் அப்படி ஈமான் கொள்ளுகிறது வாஜிபெ
ன்று அறியமாட்டேனென்று சொன்னால் முந்தின முஜ்மலாகிய
ஈமான் ஈமானல்லை. அந்த நேரத்தில் முந்தின ஹுக்முகள்
நிக்காஹு, மற்றதெல்லாம் புதிதாக துவர்க்கஞ் செய்கிறது
வாஜிபு, ஆனால் ஈமான் இஸ்லாமைச் சொல்லி சொல்லாமல்
முந்தி ஈமான் இஸ்லாமை சொல்லி காட்டி பின்பு இப்படிச்
சொன்னால்ஸவாபு இப்படிச்சொன்னால் கத்தாவென்றுசொல்ல
வேண்டும். அப்போது ஸவாபில் நின்றும் கத்தாவை யறிந்தா

ளாகில் நிக்காஹு கூடும். அப்படியறியவில்லையானால் நிக்காஹு கூடாதென்று பஸீலுல்புகஹா சொல்லியிருக்கிறார்கள்.

இல்மை படிக்காததால் ஈமானும்போய் நிக்காஹுப்பாத்திலாகிய சங்கடம் உண்டாகிறதினால் புலூகுக்கு முன்னாலே ஈமான் இஸ்லாமை முந்தி படித்து மற்றும் இல்முகளையும் படித்துக்கொள்கிறது வேணும். இக்காலத்தில் மிகுதமாய் குப்ரை வருத்துகிற பேச்சுகளையும் செயல்களையும் படித்தறிந்து அதைவிட்டும் தவிழ்கிறது நிரம்பவும் வேணுமானதாயிருக்கும். அம்மனிதர்களில் மிகுதிபேர் குப்ரை வருத்துகிற பேச்சை பேசும்படி கேழ்ப்பாய் அதைவிட்டும் அவர்கள் மாதிவானரா யிருப்பார்கள். ஆனதால் பேணுதலாகிறது ஜாஹிலானவன் அந்தந்த நாளடங்கலிலும் அவன் ஈமானை புதுப்பித்துக்கொண்டு அந்தந்த மாச மடங்களிலும் ஒரு விடுத்தம் அல்லது இரண்டு விடுத்தம் அவன் பெண்ஜாதியுடைய நிக்காஹை இரண்டு ஷாஹிதை வைத்து புதுப்பித்துக் கொள்கிறதாயிருக்கும். ஏனெனில் குத்தா ஆண்பிள்ளையில் நின்றும் உண்டாகவில்லையானாலும் பெண்பிள்ளையில் நின்றுமுண்டாகிறது மிகுதமாயிருக்கும்.

யாதொருவன் கல்பால் உண்மையாக்கிவைத்து நாவால் விண்ணப்பஞ் செய்தால் அவன் இஜ்மாவு கொண்டு முஸ்லிமாயிருக்கும். அப்படியிருக்கிறதுடன் ஈமானுடைய சிபத்தை வஸ்பு செய்ய தெரியாமலிருக்கிறது அவனை இஸ்லாமை விட்டும் புறத்திப்படுத்தாது. ஆனதால் அவன் காபிராகமாட்டான்.

5-வது பிரிவு.

இது சாலிஹாகிய பெண்களின் அடையாளங்களைச் சொல்வதாம்.

சாலிஹாகிய பெண்ணுடைய அடையாளமாகிறது அவளின் அழகு அல்லாஹுத் தஆலாவை பயப்படுகிறதாகவும் அவளின சீமான்தனம் உள்ளதைக் கொண்டு போது மாக்கிக் கொள்கிறதாகவும் அவளின் ஆபரணம் பத்தினித்தனமாகவும் பற்றுகளை இறுத்தபின் அவளுடைய இபாகத்து புருஷனுக்கு கிஸ்மத்து அழகாயிருக்கிறதாகவும் அவளின் நாட்டம் மௌத்துக்கு தங்கரிப்பு தேடுகிறதாகவு மிருக்கும் (லவ்ஜாத்தீ அஃவானீ அலத்தாசுதி) எஃனீ நம்பிராட்டிமார்கள் இபாதத்தின் பேரில் எனக்கு உதவி செய்கிறவர்களென்று நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் திருவுளமானார்கள்.

இன்னும் றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் திருவுளமானார்கள் கன்னிஸ்திரீகளை கலியாண முடியுங்கள்.

இன்னும் றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் திருவுளம்பற்றினார்கள், புருஷன்மீது அதிக உவப்பாயிருப்பாளே, அதிக பிள்ளை பெறுவாளே அவளைக் கலியாண முடியுங்களென்று திருவுளம்பற்றினார்கள்.

இன்னும் றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் திருவுளம் பற்றினார்கள். அழகான மலடியினும், அதிக பிள்ளை பெறும் அழகற்றவள் கைறுபிருக்குமென்றும், இன்னும் துனியாவுடைய இன்பசுகத்தில் மேலானது சாலிஹான பெண்ணாயிருக்குமென்றும் திருவுளம்பற்றினார்கள்.

இன்னும் றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் திருவுளம்பற்றினார்கள், ஆராகிலுமொருவன் துப்பறவானவனாக அல்லாஹுத் தஆலாவைச் சந்திக்க நாடினால், அவன் நாட்டாமகளைக் கலியாண முடிக்கவுமென்று திருவுளமானார்கள். ஜாபிர் றலியல்லாஹு அன்ஹு கன்னியழிந்த பெண்ணைக் கலியாண முடித்தபோது, நீர் கன்னியஸ்திரீயோடு கூடிவிளையாட வேண்டாமாவென்று சொன்னார்கள்.

இன்னும் அலி றலியல்லாஹு அன்ஹு சொன்னார்கள் கறுப்பினையத்தலாக்கு சொன்னால் அந்த மஹர் நான்கொடுப்பே னென்றார்கள். கருத்தாவது வெள்ளைப்பெண்ணை முடி யென்பதாம்.

ஹிக்காயத்து.

ஒருமனிதன் காத்தமுல் அஸம்மு றலியல்லாஹு அன் ஹு தங்கள் பெண்ஜாதி இடத்தில் போய் நான் சபர் போக நாடியிருக்கிறேன் சிலவுக்கு எவ்வளவு வேண்டுமென்று கேட்ட போது பின்னாலே நான் ஹயாத்தாக யிருக்குமட்டும் வேணு மென்றார்கள். அப்போது எவ்வளவு நாளைக்கு ஹயாத்தாக யிருப்பீரென்று நான் அறியமாட்டே னென்றபோது அதை யறிந்தவனளவில் பாஞ்சாட்டு மென்றார்கள்.

ஹஸன் றலியல்லாஹு அன்ஹு சொன்னார்கள், அல்லா வை பயந்தவனுக்கு மக்களைக்கொடுங்கள், உவந்தால் சங்கை கொடுப்பான், கோபித்தால் அநியாயஞ் செய்யமாட்டான். ஹுக்கமாக்கள் சொன்னார்கள், வாகனத்தில் சுகண்டி ஏறப் படாது, முத்தில் அழகு புதைப்போடப் படாதென்றுசொன் னார்கள். அதற்கொரு கன்னியழிந்த பெண் ஜவாபு சொன்னாள் வாகனமாகிறது, மூக்கனத்தால் வசக்கியேருமளவும் அதில் ஏறுவது சுகங்கொடாது. முத்தாகிறது புதையிட்ட வடத் தில் கோர்க்குமளவும் முத்துக்காரனுக்கு இலாபத்தை கொடா தென்று சொன்னாள்.

றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளம்பற்றி னார்கள், உங்களுண்டாப நுத்துபாவுக்கு நல்லதைத் தேடுங்க ளென்று திருவுளம்பற்றினார்கள்.

றிவாயத்து.

ஒரு மனிதன் மூசா அலைஹிஸ்ஸலாமிடம் எனக்கு சொர்க் கத்தை தந்தருளுமாக்கும்படி நாயனிடம் கேளுங்களென்று

சொன்னார். அவர்கள் அவ்வாறே கேட்டார்கள். அதற்கு அல்லாஹுத்தஆலா அந்தப்படி செய்துவிட்டேன். அவனுடைய மனதுக்கு இணங்கின வடிவான பெண்ணை நான் அவனுக்குக் கொடுத்தே னென்று சொன்னான்.

பாயிதா.

றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளம்பற்றினார்கள். ஆராகிலுமொருவன் முஸ்லிமானவர்களுடைய கடைகளில் ஒரு கடைக்குப்போய் ஒரு வஸ்துவை வாங்கிச் சுமந்துகொண்டு வீட்டுக்கு வந்து ஆண்மக்களன்றி பெண்மக்களுக்குச் சொந்தமாகக் கொடுத்தால் அவனளவில் அல்லாஹுத்தஆலா கிருபைக்கண்கொண்டு பார்ப்பான். அல்லாஹுத்தஆலா ஒருவனளவில் கிருபைக்கண்கொண்டு பார்த்தால் அவனை அதாபு செய்யமாட்டானென்று திருவுளம்பற்றினார்கள்.

கிதாபுன்னுறைன் என்கிற கிதாபில் வருகிறது. றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் திருவுளம்பற்றினார்கள், பெண்மக்கள் உண்டாயிருக்கும் வீடாகிறது, அதில் வானத்தில் நின்றும் தினம் பனிரண்டுறஹ்மத்திறங்கும் மலாயிகத்துகள் அந்த வீட்டை வியாறத்துச் செய்கிறது பத்தறுது. இன்னும் அந்தப் பெண்மக்களுடைய தாய்தகப்பன் மாருக்குத் தினந்தோறும் ஒருவருடத்து இபாதத்தை எழுதப்படுமென்று திருவுளமானார்கள்.

இன்னும் றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் திருவுளம்பற்றினார்கள் ஆராகிலுமொருவன் மூன்று பெண்மக்களை ஆதரித்து செலவுகொடுத்து வருகிறதில்லையானால் அந்த மக்கள் அவனுக்குத் திரையா யிருந்தொழிய வென்று திருவுளம்பற்றினார்கள்.

6-வது பிரிவு.

இது நிகாஹை விடுவதாலுண்டாகும் கெடுதியை கூறுவது.

அல்லாஹுத் தஆலா குறுஆனிலே திருவுளம் பற்றியிருக்கிறான், பெண்பிள்ளைகளை அவர்கள் புருஷர்களோடு விவாகஞ் செய்து கொள்ளுவதைத் தடுத்துவிட வேண்டாமென்று சொன்னான்.

ஹதீது.

றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளம்பற்றினார்கள், நிகாஹாகிறது என்னுடைய சுன்னத்தாயிருக்கும், ஆராகிலு மொருவன் என்னுடைய சுன்னத்தை விட்டும் பிறக்கணித்தால் திட்டமாக என்னை விட்டும் பிறக்கணித்தானென்றார்.

இன்னும் றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் ஒரு அஸ்ஹாபியிடத்தில் உமக்குப் பெண்ணுண்டாவென்று கேட்டார்கள். அதற்கவர் இல்லையென்றார். பணமுண்டாவென்றார்கள். ஓமென்றார் "அப்போது நீர் ஷைத்தானுடைய உடன் பிறப்பில் நின்றுமாயிருக்கும். நீர் நஸாறாக்களுடைய கூட்டத்திலிருப்பீராகில் அவர்களுடைய பாதிரிமாரில் சேர்ந்தவராயிருப்பீர். என்னுடைய மார்க்கத்தில் நின்றுமுள்ளது கலியாண முடிப்பதாயிருக்கும்" என்று திருவுளமானார்கள்.

ஹிக்காயத்து.

பிஷ்றுல் ஹாபீ றலியல்லாஹு அன்ஹுவை மனாமில் கண்ட ஒருவன் அல்லாஹுத் தஆலா உங்களை என்னை செய்தானென்று கேட்டதற்கு "என்னுடைய மாளிகை கலியாண முடித்தவர்களுடைய மாளிகைக்குக் கீழிருக்குதென்று சொன்னார்கள்" என்றார்.

7-வது பிரிவு.

இது நிக்காஹினால் பூணும் ஹக்குகளை பேசுவது. பெண்ஜாதியின் பேரில் புருஷனுடைய ஹக்காகிறது.

பெண்ஜாதி அவளுடைய இனம் ஜனம் தாய் தகப்பனைக் காணவும் புருஷனுடைய ஹக்கை முற்படுத்துவாள். பெண் பிள்ளையுடைய பீலபீலாகிறது தன் புருஷனுக்கு நடை பிடி அழகாயிருக்கிற தென்று ஹதீதில் வந்திருக்கிறது. தவாபை ஆதரவுவைத்து புருஷனுடைய கோபத்தின் பேரில் சபுரு செய்வாள். அப்படி சபுரு செய்கிறது அவளுக்கு பீலபீலாயிருக்கும்.

ஹிக்காயத்து.

நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய காலத்தில் ஒருபெண் பிள்ளையிருந்தாள். அவளுடைய புருஷன் வெளியிலிருந்து வீட்டுக்குள் வந்து புகுந்தால் அவள் தன் புருஷனை முன்னோக்கிவந்து (மறஹபன் பிஸையிதீ வஸையிதீ அஹ்லிபைத்தீ) எஃனீ, என்னுடைய நாயகத்தைக் கொண்டு என் வீட்டுடையவர்களின் நாயகத்தைக் கொண்டு சோபனம் என்று சொல்லி, அவன் கழுத்திலிருக்கிற மேல் வேட்டி பரிவட்டத்தை எடுத்து அவன் காலிலிருக்கிற செருப்பு அல்லது ஜூத்தாவை கழட்டுவாள். அவனை சலிப்பாளியாகக்கண்டால் ஏன் சலிக்கிறீர் உம்முடைய சலிப்பு ஆக்கிரத்திற்காக ஆகிட்டால் அல்லாஹுத் தஆலா உமக்கதிகமாக்குவான், உம்முடைய சலிப்பு துன்பாவுக்காகிட்டால் அல்லாஹுத் தஆலா உமக்கு போதுமென்று சொல்லுவாள். அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் இன்னவனை அவளுக்கு என் ஸலாமையோதி அவளுக்கு ஷஹீதுடைய கூலியில் பாதியுண்டென்று சொல்லென்றார்கள்.

இனி பெண்பிள்ளையானவள் அல்லாஹுத் தஆலாவின் ஏவலாகிய ஐந்தொக்து தொழுகைகளையும் தொழுது நோன்புகளை பிடித்து தன்னுடைய ஆபத்தையுங்கார்த்து புருஷனுக்கு வழிப்படுவாள். மலையின்கல்லை அவளைக் கொண்டுவரும்படியவன் ஏவினாலும் அதற்கவள் வழிப்படுவாள். புருஷனுடைய உத்திரவுயில்லாமல் அவள் வீட்டைவிட்டும் புறப்படாள். அவன் படுக்கை விரிப்பை வெறுக்காள். அவனுக்குப் பொருத்தமில்லாதவரை அவனிடத்தில் புகுதிவையாள். அவன் செய்த நன்றியை மறக்காள் அவள் பிடவைகளை அவன் வீடல்லாற்றதில்வையாள். அவளை அவன் தேடின நேரத்தில் அவள் தன்னை விலகிக் கொள்ளமாட்டாள். அவள் ஒட்டகை முதுகின் பேரிலிருந்தாலும், ✱ அடுப்பின் பேரிலிருந்தாலும் அவனுக்கு அவள் வழிப்படுவாள்.

இனி வெளி வேலைகளுக்கு புருஷன் காரியக்கர்த்தனயிருக்கிறது போல் வீட்டின் உள்வேலைகளுக்கு பெண்ஜாதி காரியக்கர்த்தியாய் இருக்கவேண்டும். அதாவது ஆக்கிறது, அவுக்கிறது பிடவைகளை கழுகிறது, கைதிருகை திரிக்கிறது, றொட்டிசுடுகிறது, இதுபோல் கொற்ற வேலைகளாம். ஆனால், அவளுக்கு நோவுநசல் இல்லத்து உண்டாயிருந்ததினால் அல்லது அவள்ஷரீபுடைய (எஃனி) சையிதுடைய மகளாயிருந்ததினால் சோறு கரியாக்கிறதை றொட்டி சுடுகிறதை திருகை திரிக்கிறதை விட்டும் விலகிக் கொண்டால் புருஷன் அவளுக்கு ஆள்வைப்பான. அப்படி யில்லையானால் வீட்டு வேலை பனிவிடையின் பேரில் அவளை வம்பிக்கப்படும்.

ஆனால், அவள் ஷரீபானவளாயிருந்தாலும் சிமான் தனமுள்ளவளாயிருந்தாலும் அந்த வேலை அவள் பேரில் வாஜிபாகும். ஏனெனில், பாத்திமா றலியல்லாஹுஅன்ஹா ஆலத்

✱ அடுப்பு வேலையின் பேரிலிருந்தாலும்.

தார்களுடைய பெண்களுக்கெல்லாம் நாயகமாயிருக்கிறத்துடன் வெளிவேலைகளை அலி றலியல்லாஹு அன்ஹு பேரிலும் உள்வேலைகளை பாத்திமா றலியல்லாஹு அன்ஹா பேரிலுமாக நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் வேலைகளை பங்குவைத்திட்டார்கள்.

இனி புருஷன் முகத்தில் கடுகடுப்பை வெளியாக்காள் அப்போது அல்லாஹுத் தஆலா அவள் பேரில் கோபமாவான். இன்னும் நாவால் அவனை நோவினை செய்யாள் எந்த பெண்பிள்ளை யாகிலும் அவள் புருஷனை நாவால் நோவினை செய்வாளாகில் அல்லாஹுத் தஆலா அவள் நாவை எழுபது முளமாக்கி அவளுடைய கழுத்துக்கு பின்னாலே முடியப்படுமென்று ஹதீதில் வந்திட்டது.

இனி வீட்டு செலவுக்காக அவன் பேரில் துக்கத்தை புகுவையாள். அவன் திராணிபெற்றதற்கு மேலாலே அவனை வருத்தப்படுத்தாள். அவன் மூக்கில் நின்று வந்த இரத்தத்தை சீலை அவள் நாக்கால் நக்கினாலும் வேலை கடிசினால் இரண்டிலொரு கையை கிடாரத்தில் அவிக்கப்பட்டதாக மற்றொரு கையை அடுப்பில் சுடப்பட்டதாக அவள் முற்படுத்தினாலும் அவனுடைய பணிவிடையில் அவள் திரக்கேட்டை செய்ததாகக் காணுவாள். புருஷனளவில் கிருபையில் அவள் திராணி பெற்ற மட்டும் உவப்பாள் புருஷனுக்காக வாடை மறைந்து நிறம் வெளியாகிய மணம்பூசுவாள் அவனுக்காக அலங்கரிப்பாள். பருதனிபூசுவாள் நாளடங்கலிலும் சுருமாயிடுவாள். புருஷன் உத்திரவு கொடுத்தாலும் தண்ணீர் புரையளவில் புறப்படாள்.

இனிமணம் பூசி அலங்கரித்துக் கொண்டு வீட்டைவிட்டுப் புறப்படாள் அவளை புருஷன் வீட்டிற்கு அனுப்பப்பட்டநேரம் தொடுத்து அவளை கப்ருககு அனுப்பப்படுகிற வரையில் வீட்டை பற்றிப் பிடித்துக் கொள்கிறது அவள்பேரில் வாஜிபு மார்க்கமல்லாத காரியத்தில் அவள் முதலே பஸாதாக்காள், அவன் சரக்கு சாமானை என்கிலும் அவள் சரக்கு சாமானை குடுக்கிறதில் அவனிடத்தில் உத்திரவு தேடுவாள். அவன் சப்தத்திற்கு மேலாலே அவள் சப்தத்தை யுயர்த்தாள். அவனுக்கு சொல்கொண்டு இறையாள் அவள் தாய். தகப்பனை அவள் இனப்ஜனத்தை அவன் உத்திரவு கொண்டோளிய மிவைப்போகாள் அவர்களில் மௌத்து ஹாலிராகிட்டாலு மொக்கும் அவர்களில ஜனாதாவுக்கும் புறப்படாள், தஃதியத்திற்கும போகாள்.

ஹிக்காயத்து.

நபிஸல்லல்லா ஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய காலத்தில் ஒருமனிதன் ஸபர்போகும்போது தன் பெண்ஜாதியை பார்த்து நீ மேல்வீட்டைவிட்டும் கீள் வீட்டளவில் இரங்காதே என்று அருதிபானஞ் செய்துவிட்டு போனார். அவள் தகப்பன் கீள் வீட்டிலிருந்தார் அப்படியிருக்கையில் அவள் தகப்பன் நசலாகி விட்டார். அப்போது கீள் வீட்டளவில் இரங்கி தகப்பனை பார்க்க உத்திரவுதேடி நபிஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமளவில் அந்த பெண்பிள்ளை ஆள் அனுப்பினாள். அப்போது உன் புருசன் சொல்லுக்கு வழிப்படு என்று நபிஸல்லல்லா ஹு அலைஹி வஸல்லம் திருவுளமானார்கள்.

அப்படி யிருக்கையில் தகப்பன் மௌத்தாகிட்டார் அப்போதும் உத்திரவு தேடினபோது உன்புருசன் சொல்லுக்கு வழிப்படு என்று திருவுளமானார்கள். தகப்பனை அடக்கப்பட்டபோது அவள் புருசனுக்கு வழிப்பட்ட ஸபபினால் அல்லா

ஹுத்தஆலா அவள் தகப்பனுக்கு பிழைபொருத்து விட்டானென்று அவளுக்கு செய்தி அறிவிக்கும்படி ஆள் அனுப்பினார்கள். (அலைஹிஸ்ஸலாம்.)

இனிஒருவனுக்கு ஒருவனை சுஜூது செய்யும்படிக்கி நான் ஏவுகிறதாயிருந்தால் பெண்ஜாதியை புருஷனுக்கு சுஜுது செய்யும்படி ஏவிப்போடுவேன் என்று நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள். புருஷனுடைய (மர்தபா) இவ்வளவு கனமும் சங்கடிப்புமா யிருப்பதால் அதைப்பேண ஏலாதென்கிற பயங்கரத்தின்பேரில் சில பெண்கள் நிக்காவை விட்டு தவிழ்ந்துக் கொண்டார்கள்.

ஹிக்காயத்து.

ஒருபெண்பிள்ளை நபிஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை நோக்கி என் தகப்பனுடைய சகோதரன் மகன் என்னை பெண்பேசுகிறான். ஆகையால் பெண்ஜாதியின் பேரில் புருஷனுடைய ஹக்கு இன்னதென்று அறிவியுங்கள் நான்திராணி பெற்றால் அவனுக்கு வாள்க்கை படுகிறேனென்று சொன்னாள். அப்போது அவனுடைய இரண்டு மூக்கும் இரத்தத்தால் சீழால் வழிந்தோடி அதை அவளுடைய நாக்கால் நக்கினாலும் அவனுடைய ஹக்கை அவள் இறுத்தவளல்லை. மனிதருக்கு மனிதர் சுஜுது செய்கிறது தகுமாயிருந்தால் பெண்ஜாதியிடத்தில் புருஷன் போகும்நேரம் புருஷனுக்கு பெண்ஜாதியை சுஜுதுசெய்யும்படி ஏவிப்போடுவேன் என்று திருவுளமானார்கள். அப்போது அவள் உங்களை ஹக்கு கொண்டு அனுப்பின நாயன்பேரில் சத்தியமாக நான் துன்யாவில் தரிபட்டிருக்கிற மட்டுக்கும் வாக்கப்பட மாட்டே

னென்ருள். இன்னும் சில பெண்கள் ஆகிறத்துடைய ஹால் களைப் பயந்து நிக்காஹை விட்டுந் தவிழ்ந்து இபாதத்துகொண்டு பார்க்காகி விட்டார்கள்.

ஹிக்காயத்து.

ரூபிஅதுல் அதவிய்யா றலியல்லாஹு அன்ஹாவுடைய புருஷன் மௌத்தான பின் ஹஸன் பசரீ றலியல்லாஹு அன்ஹு அவர்களும் அவர்களுடைய அஸ்ஹாபிகளும் அவர்களிடத்தில் போய் வீட்டில் புகுத உத்தரவு தேடினபோது திரையைச் சோரவிட்டு திரைக்குப் பின்னுலே இருந்துகொண்டு உள்ளே வரும்படியாய் உத்திரவு செய்தார்கள். இவர்கள் உள்ளே போய் உம்முடையபுருஷன் மௌத்தாகிட்டார் இந்த ஸாஹிதுகளில் நீர் நாடிய பேரை தெரிந்துக் கொள்ளுமென்ற போது சங்கையும் நிருமத்தும் பெற்றுக்கொண்டேன். என்கிலும் என் தன்னை நான் கலியாணம் முடித்துக்கொடுக்க உங்களில் யார் ரெம்ப அறிந்தவர்களென்றபோது எல்லாரும் ஹஸன் பஸரீ என்ருர்கள். அப்போது நாலு மஸ்அலாவுக்கு நீர் ஜவாபு சொன்னுல் நான் உமக்குதானென்ருர்கள். அப்போது ஹஸன் பஸரீ அல்லாஹுத் தஆலா நான் ஜவாபு சொல்ல நேர்வழி கட்டளை செய்தால் நான் ஜவாபு சொல்கிறேன் கேளுமென்ருர்கள். அப்போது ரூபிஅதுல்அதவிய்யா கேட்டார்கள். நான் துன்யா விட்டு மௌத்தானுல் முஸ்லிமாக மௌத்தாகுவனு அல்லது காபிராக மௌத்தாக்குவனு? அதற்கு இது கைபான காரியமென்ருர்கள்.

என்னை கப்ரிலே வைக்கப்பட்டு முன்கர் நகீர்வந்து கேள்வி கேட்டால் இருவருக்கும் ஜவாபு சொல்ல நான் திராணி பெருவேனு அல்லவா? அதற்கு இதுவும் கய்பான காரியமென்ருர்கள்.

கியாம நாளையில் மனிதர்களை எழுப்பப்பட்டு பட்டோலை கள் பரந்து சிலருக்கு வலது கையிலும் சிலருக்கு இடதுகையி லும் கொடுக்கப்பட்டால் என் பட்டோலையை வலதுகையி கொடுக்கப்படுமா அல்லது இடது கையில் கொடுக்கப்படுமா? இதுவும் கைபென்று சொன்னார்கள்.

அப்போது கேட்பார்கள் கியாம நாளையில் ஒரு கூட்டம் சொர்க்கத்திலு மொருகூட்டம் நரகத்திலுமா யிருக்குமென்று விளம்பரம் செய்யப்பட்டால் நான்சொர்க்கவாதி யாவனோ அல் லது நரகவாதி யாவனோ? இதுவும் கையென்றார்கள்.

அப்போது ரூமிஅத்தில் அத்திய்யா சொல்வார்கள். யா தொருவருக்கு இந்த நாலு காரியத்துடைய துக்கம் உண்டா யிருந்தால் எப்படி புருஷனளவில் ஹாஜத்தாவார். புருஷனைத் தெரிந்துக்கொள்கிறதில் பார்க்காகுவார் என்று சொல்லி பின்பு சொல்லுவார். ஹஸனே அல்லாஹுத் தஆலா அக்லை எத் தனை பங்காக்கினன் அதை எனக்கு சொல்லுமென்று சொன் னார். அதற்கு ஹஸன் பஸரீ பத்துபங்குகளாக்கி ஒன்பது பங்கை ஆண்பிள்ளைகளுக்கும் ஒரு பங்கை பெண்பிள்ளைகளுக் கும் கொடுத்தானென்றார்கள். பின்பு கேட்பார் ஹஸனே அல் லாஹுத் தஆலா ஆசையை எத்தனை பங்காக பங்கு வைத் தான் என்றபோது..ஹஸன் பத்து பங்காக பங்குவைத்து ஒன் பது பங்கை பெண்பிள்ளைகளுக்கும் ஒருபங்கை ஆண்பிள்ளை களுக்கும் கொடுத்தானென்றார்கள். அப்போது ஹஸனே ஒரு பங்கு அக்லுகொண்டு ஒன்பது பங்கு ஆசையை பேணிக்கொ ள்ள திராணி பெருகிறேனே நீர் ஒன்பதுபங்கு அக்லுகொண்டு ஒரு பங்கு ஆசையை பேணிக்கொள்ள திராணிப்பெரவில்லையா என்றார்கள்.

அப்போது ஹஸன் பஸரீ றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அழுதுகொண்டு போய் விட்டார்கள்.

8-வது பிரிவு.

இது புருஷன் பேரில் பெண்ஜாதியுடைய ஹக்கை சொல்வதாம்.

புருஷன் பேரில் பெண்சாதியுடைய ஹக்காகிறது தான் தின்னுவதில் அவளுக்கும் தின்னக் கொடுப்பான். தான் உடுக்கிறதில் அவளுக்கும் உடுத்தாட்டுவான். அவளை ஒரே வெறுப்பாக வெறுக்கான். அவளை யடிக்கமாட்டான். அல்லாஹுத் தஆலா நிஸ்கை விஸ்தீனம் செய்தால் அவள் பேரில் சிலவை விஸ்தீனம் செய்வான்.

நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் பெண்பிள்ளைகளுடைய ஹக்கில் (இஸ்தவஸூ பின்னிஸா கைரன் பஇன்னஹுன்ன குலிக்ன மின் ளில்இன்) என்னே, பெண்பிள்ளைகளைக் கொண்டு நலவை வசிய்யத்து செய்வதை கபூல் செய்துகொள்ளுங்கள் திட்டமாக அவர்களாவது வளைவாகிய பளுகெலும்பில் நின்றும் படைக்கப்பட்டவர்களென்று சொன்னதை கபூல்செய்வான். திடனாக பெண்பிள்ளைகள் நம்மிடத்தில் சிறைவாரப்பட்டவர்களாயிருக்கிறார்கள். அல்லாஹுத் தஆலா அவர்களை நமக்கு ஹலாலாக்கினான் நாம் அவர்கள்பேரில் யோசனைசெய்து நிற்கிறதற்க்கா, ஆனதால் அவர்களை மெல்லினம் கொண்டும் கிருபை கொண்டும் நடத்துவான.

ஹிக்காயத்து.

ஷகீகுப்னு இப்ருஹீம் றஹிமஹுல்லா வுக்கு குணம் கெடுதலாகிய பெண்சாதி யுண்டாயிருந்தது. அப்போது அ

வள் குணத்தின் தீங்குகொண்டு உங்களை யவள் நோவினை செய்துக்கொண்டிருக்க, ஏன் அவளை தலாகு சொல்லி பிரித்து விடவில்லை என்று கேள்க்கப்பட்டபோது. அவள் குணம் கெடுதலாகிட்டால் நான் குணம் அழகானவன். நான் அவளை பிரித்துவிட்டால் நானும் அவளைப் போலாகிட்டேன், அப்படி யிருக்கிறதுடன் அவளுடைய குணத்தின் கெடுதிக்காகமற்றொருவன் அவளை பிடியாமலிருக்கிறதை பயப்படுகிறேனென்றார்கள்.

9-வது பிரிவு.

இது நிக்காஹை வெழிரங்கமாக்குவதையும் பள்ளிக்குள்ளாக்குவதையும் பற்றி சொல்வதாம்.

ஹதீதில் வந்திட்டது (அஃலினூ ஹா பின்னிகாஹி வஜஅலூஹுபில் மஸாஜிதி வள்ரிபூ அலைஹிபித் தபூபி) இந்த நிக்காஹை (எஃனீ) முஸ்லிமானவர்களின் நிக்காஹை வெழிரங்கமாக செய்யுங்கள் அதைபள்ளிக்குள்ளாக்குங்கள் அதன்பேரில் * தப்புகளைக் கொண்டடியுங்கள், என்று இதிலே நாட்டம் நிக்காஹை பள்ளிக்குள் முடிக்கிறதும் தப்பை வெழியில் அடிக்கிறதுமா யிருக்கும்,

இன்னும் ஹதீதில் வந்திட்டது ஹலாலுக்கு ஹறாமுக்குமிடையிலுள்ளதை பிரித்திட்டது சத்தமும் தப்புமென்று. இதில் நாட்டமாகிறது. தூரத்திலுள்ளவர்கள் பேரில் மறையாமல் நிக்காஹுடைய காரியத்தை வெழிரங்கமாக்கிறதின்பேரில் அவேழ்க்கைப் பூட்டுகிறதா யிருக்கும். ஏனெனில் மிருந்தஹாலில் ரகசியத்திலே சொந்த மனிதர்களுடனே ஷாஹிதுகளை

* தப்பென்பது ஒரு முகமுள்ள தாயிரா வாயிருக்கும்.

வைத்து நிக்காஹு முடிவாகிவிடும் அப்போது தாரத்து மனிதர்கள் அறியார்கள்.

ஆனதால் சுன்னத்தாகிறது தப்படித்தும் ஹாலிரு யிருக்கிறவர்கள் சோபனஞ்சொல்லி அல்லத் ஆமாகிய பைத்துகள் பாட்டுகள் சொல்லி சத்தமிட்டும் நிக்காஹை வெழிரங்கமாகிறதாயிருக்கும், ஆனால் தப்படிக்கிறது ஆகுயென்கிறது அதற்கு கிலுக்குகளில்லாமலும் அதை ராகத்தினுடைய கோலமில்லாமலும் அடிக்கப்பட்டால் தான் ஆகும். ஏனெனில் தப்படிக்கிறது கியாசுடைய காட்டத்தின்பேரில் உண்டாக்கிட்டது. ஆனதால் எப்படி வந்திட்டதோ அதன் பேரில் சுருக்கிக் கொள்ளப்படும். அதைவிட்டும் கடக்கப்படாது.

இனி பள்ளிக்குள் வைத்து சாலிஹானவர்களின் கூட்டத்தோடு நிக்காஹு செய்கிறதும் ஜும்ஆவுடைய நாளையில் செய்கிறதும் சுன்னத்து. ஆனால் ஜும்ஆவும் ஈதும் குளிர்காலத்தில் ஒரு நாளையில் சேர்ந்திட்டால் வக்து கிட்டுமையானதற்காக இரண்டுக்கிடையில் நிக்காஹு மக்ரூஹ ஆனபோதே செவ்வால் மாஸ்தையில் நிக்காஹு செய்கிறதும் வீட்டுக்கு அழைக்கிறதும் துகூல் செய்கிறதும் ஆகும்.

ஆயிஷா றலியல்லாஹு அன்ஹாவை தொட்டும் வந்திட்டது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் சவ்வாலிலே என்னை கலியாணம் செய்து செவ்வாலிலே என்னைக்கொண்டு பினா செய்தார்கள். (எஃனீ) துகூல் செய்தார்கள் என்று. இன்னும் அவர்களைத் தொட்டும் வந்திட்டது றசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் செவ்வாலிலே என்னை கலியாணஞ் செய்து செவ்வாலிலே என்னை வீட்டுக்கு அழைத்தார்கள். எந்த பெண்பிள்ளைகள் என்னைக் காண அவர்களளவில் றொம்ப கிரு

யையாகிட்டார்கள் என்று ஆனபோதே நிக்காஹுக்காக செ
வால் மாதத்தை தெரிந்துக் கொள்வான்.

10-வது பிரிவு.

இது வலீமா என்னும் கலியாணவிருந்தை பற்றி சொல்வதாம்.

அந்த விருந்து செய்கிற வக்தில் உலமாக்கள் இக்திலா பாகிட்டார்கள். அதாவது, வலீமாச் செய்வது பெண்ஜாதியை விடுகூடின பின்னென்று சிலர் சொன்னார்கள். சிலர் நிக்காஹு முடிவாகும் போதென்றார்கள். சிலர் இரண்டிடத்திலு மென்றார்கள். இனி அப்படி விருந்து செய்கிறது வாஜிபள வில் முடிகுதலாகிய சுன்னத்து முஅக்கதாவாயிருக்கும்.

ஹதீதில் வந்திட்டது ஒரு கடா கொண்டாகிலும் வலீமா விருந்து செய்யென்று திடனாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் சைனபு றலியல்லாஹு அன்ஹாவிலே ரொட்டியும் இரைச்சியும் கொண்டு வலீமா செய்தார்கள். ஸபிய்யா றலியல்லாஹு அன்ஹாவில் இரைச்சியில்லாமல் ஈத்தம் பழம் சீனி மாவு கொண்டு வலீமா செய்தார்கள். இன்னும் சில நம் பிராட்டிமார்களின் மேரில் தொலி கோதும்பில் இரண்டு முத்து கொண்டு வலீமா செய்தார்கள் பாத்திமா றலியல்லாஹு அன்ஹாவுடைய வலீமாவாகிறது தொலி கோதும்பும் ஈத்தம் பழமும் நெய்யும் தயிரும் சேர்த்து நல்லாக பிசைந்து கொட்டையை எடுத்துப்போட்டு செய்யப்பட்ட (ஹைஸ்) என்னும் பலகாரமாயிருக்கும். இன்னுமொரு றிவாயத்தில் சஃது றலியல்லாஹு அன்ஹு கொடுத்த கிடாயும் அன்சாரிகளில் ஒரு

ஜமாஅத்து கொடுத்த சோளவமும் கொண்டு வலீமா செய்தார்களென்று வந்திருக்கிறது. அந்த நாளையில் அலீ றலியல்லாஹு அன்ஹுவுடைய வலீமா எல்லா வலீமாக்களிலும் ரொம்ப வருசையாகிட்டுது.

11-வது பிரிவு.

இது நபகாவை பற்றி சொல்வதாம்.

பெண்ஜாதிக்கி நபகா கொடுப்பது புருஷன்பேரில் இருவருடைய ஹாலுக்கு தகுந்த மட்டிற்கு வாஜிபு அவன் ஜிமாவுக்கு திராணியில்லாத சிறுபிள்ளையானாலும் பகீரானாலும் அவள் முஸ்லிமத்தானாலும் கிதாபிய்யத்தானாலும் பெரியவளானாலும் ஜிமாவுக்குத் திராணிபெற்ற சிறியவளானாலும் பகீரானவளானாலும் சீமான்தன மானவளானாலும் வீடு கூடப்பட்டவளானாலும் அல்லாவனானாலு பொருக்கும்.

ஆனபோதே இருவரும் சீமானாயிருந்தால் சீமான் தனத்துடைய நபகா வாஜிபு இருவரும் கைமெலிவாயிருந்தால் கைமெலிவுடைய நபகா வாஜிபு ஒருவர் சீமானும் மற்றொருவர் கைமெலிவுமாயிருந்தால் இரண்டுக்கும் நடுத்தரத்துடைய நபகா வாஜிபு ஆனால் அவன் சீமானாயிருந்தால் தான் திண்ணுவது போல் திண்ணக் கொடுப்பது முஸ்தஹப்பு.

இனி கைமெலிவுடைய நபகா கொடுத்து வரும்போது இடையில் சீமானாகி விட்டால், சீமான் தனத்துடைய நபகாவை நிருப்பமாக்கிவைப்பான்.

12-வது பிரிவு.

இது நிக்காஹுடைய சுன்னத்து முஸ்தஹப்புகளையும் பக்ருஹான பெண்களையும் பற்றிசொல்வதாம்.

அதாவது மிடுமையானவன் கலியாணத்திற்காக கைமாத்துகடன் வாங்கிறதும் வயசிலும் நல்ல நடத்தையிலும் மேலாம்பிலும் முதலிலும் அவள் அவனுக்குத்தாளாலேயிருக்கிறதும், குணத்திலும் அதபிலும் வாஇலும் அழகிலும் அவன் அவளுக்கு மேலாமேல யிருக்கிறதும், கலியாணம் முடிக்குமுன் அவளைப் பார்க்கிறதும், பெண்பேசின பின் மனத்தில கொஞ்சம் அவளுக்கு அவன் ஹத்யா அனுப்புகிறதும், நிக்காஹை வெளிரங்கமாகச் செய்கிறதும், பள்ளியில் வைத்து நிக்காஹு செய்கிறதும், ஜும்ஆவுடைய நாளையில் செய்கிறதும், நேர்வழியான ஆகிலை நீதமான ஷாஹிதை வைத்து முடிக்கிறதும், நிக்காஹுக்குமுன் குத்பா ஓதுகிறதும், மஹரை குறித்துக்கொள்கிறதும், அதில் கொஞ்சமாவது ரொக்கத்தில் கொடுக்கிறதும், நம்பிராட்டிமார்களின் மஹரை கடக்காமலிருக்கிறதும், கல்கண்டு பாதம் இருவர் பேரிலும் சொரிகிறதும், பெண்ணிற்கு ஆடை ஆபரணங்களைப் பூட்டி பருதனியிட்டு சீப்பு சீவி சுறுமாவுமிட்டு அலங்கரித்து மணம் பூசுகிறதும், மண வரையில் புகுந்தவுடன் இருவரும் இரண்டு ரகஅத்து தொழுகிறதும், மாப்பிள்ளைக்கி முபாரக்கு கொண்டு சோபனஞ்ச் சொல்லுகிறதும், வலீமா விருந்து செய்கிறதுமா யிருக்கும். இன்னும் மிடுமையானவன் கலியாணத்திற்காக கைமாற்று கடன் வாங்குகிறது சுன்னத்து. அந்தக் கடனை யிருக்கிறதற்கு ஏனுமோ ஏலாதோ வென்று பாராட்டான். அந்தக் கடனில் பிணை அல்லாஹுத் தஆலாவின் பேரிலாயிருக்கும், ஆனதால் கலியாணம்

முடிக்கிறது கொண்டு அவன் நிய்யத்து விலக்கான காரியங்களை விட்டு பத்தினியாகிட்டால் மிடுமையை பயப்படான்,

ஹதீதில் வந்திட்டது யாதொருவன் மிடுமையை பயந்து நிக்காஹை விட்டால் அப்படி விடுகிறது நம்மிலுள்ளதல்லே, (என்னீ) நம்முடைய குணங்களிலுள்ளதல்லவென்று ஆனால் கலியாணத்தில் ஷர்ஹுக்கு விரோதமாகியபித்அத்தாகிய காரியங்களை நடத்துகிறதற்கு கடன் வாங்கிறது இந்தப் பிணையிலுள்ளதல்லே, என்கிலும் இதுகொண்டு அவனை பிடிக்கப்படும் இக்காலத்தில் பித்அத்தான ஹராமான கருமங்களை நடத்துகிறதற்கு கடன் வாங்கிறது மிகைத்திருக்கிறது மறைந்ததல்லே. இதுகொண்டு அந்தப் பிணையம் நீங்கிப்போம்.

இனி மக்ரூஹான பெண்களாவது, அதில் முதலாவது மெலிந்த நெட்டைச்சியும், இரண்டாவது செம்பட்டை முடியாளும் மூன்றாவது பூனைக்கண்ணுடையாளும், நான்காவது முந்தின மாப்பிள்ளையில் பிள்ளை யுண்டாகி அந்தப் பிள்ளைகளுடன் இருக்கிறவளையும். ஐந்தாவது மிகுந்த முணக்கமுடையாளும் ஆறாவது செய்த நன்றியைச் சொல்லிக் காட்டுதலுடையாளும், ஏழாவது முந்தின புருஷன்மேல் மிகுந்த ஆசையுடையவளும் எட்டாவது துன்யாவில் மிகுந்த அவேட்கையுடையவளும், ஒன்பதாவது ஏறின மஹருள்ளவர்களும், பத்தாவது விபசாரத்தில் பிறந்தவளும், பதினோராவது பாசிகுடைய மகளும், ஆக இவ்வளவு பேரையும் விவாகஞ்செய்வது மக்ரூஹாயிருக்கும். ஆனால் இப்போது குறித்த பெண்களிலொருத்தியிடம் இவன் ஆசை கொண்டு மையலாகி அவளை மண முடிப்பதில் அவளுடைய பத்தினிதனம் பொருந்திருந்தால் அவளை முடிப்பது ஏற்றம்.

13-வது பிரிவு.

இது பெண்ஜாதியை நலவு கொண்டு நடத்துவதைப் பற்றி சொல்வதாம்.

பெண்பிள்ளையுடைய அக்லு குறைந்தலாயிருப்பதால் அவள் பேரில் கிருபையாகி அவளைத் தொட்டுண்டானவேனா வினையை சுமப்பான் அவளுடன் குணத்தை யழகாக்குவான். அவள்கோபமானபோதும் அதபுகுறைத்தலானபோதும்பொறுத்து பொறுமைபாகுவான். அவளுடன் விளையாடி கலந்து பேசி சமானமாகுவான். அவளை நெருக்கடி செய்யான் செலவில் நடுத்தரஞ்செய்வான் நல்ல வஜீபணத்தைக் கொண்டு தான் சொந்தமாகான் அதில் இருவரும் கூட்டாகுவார்கள். இது போல் தான் இன்னதுபோல் கொற்ற ஆண்மையில்லாத தங்கட மற்றியேவைத்து நடத்தவேண்டும். அப்படிக்கொற்ற தங்கடமுண்டானல் அவளை தலாகு சொல்லிவிடுகிறது வாஜிபு. அதாவது மூன்றையும் அல்லது ஸகரைமட்டும் அறுத்துப் போடுவதும் நசலினல் விதையடித்ததினல் சிஹ்றினல் தளன்ற வயசினல் பெண்ணை கலந்து விளையாடமுன் அவளோடு பேசினவுடன் மனீ இரங்கி விடுவதினல் ஸகரில் (இன்னைதது) என்னும் சோர்வையுண்டாகி தன் பெண்ஜாதியை ஜிமாவு செய்யத் திராணி பெருமலிருக்கிறதும், அல்லது கன்னியழிந்தவள் பேரில் திராணி பெற்று கன்னியழியாதவள் பேரில் திராணி பெருமலிருக்கிறது மாயிருக்கும்.

இனி ளிஹாராகிறது முஸ்லிமானவன் தன் பெண்ஜாதியை அல்லது அவளில் நின்றும் அவளைத்தொட்டும் வக்கணை பிடிக்கப்பட்ட ஒரு உறுப்பை, அல்லது அவளில் நின்றும் அடைய

வளைத்தலாகிய ஒரு ஜுசுவை அவனுக்கு பால் குடியினுலாவது எப்போதும் கொள்ள ஹராமானவர்களில் நின்றும் பார்க்கிறது ஹராமாகிய உறுப்பைக்கொண்டு ஒப்பிடுகிறதாயிருக்கும் அதாவது தன் பெண்ஜாதியை நோக்கி நீ அல்லது உன் தலை அல்லது உன்னி அரைவாசி என்பேரில் என் தாயின் முதுகைப்போல், அல்லது அவளின் அவயவத்தைப்போல், அல்லது அவளின் துடையைப்போல் அபத்தைப்போல் என்றும், அல்லது என் உடப்பிறந்தாளுடைய முதுகைப்போல் வயற்றைப்போல் என்று, அல்லது என் தகப்பனுடைய உடப்பிறந்தாளின் முதுகைப்போல் வயற்றைப்போல் என்று, இப்படிப்போல் சொல்லுகிறது. இப்படிச் சொல்லுகிறதுகொண்டு ளிஹார் செய்தவனுகிவிடுவான், (பிலானிய்யதி) அப்போது அவளை விடுவதும் மற்றும் விளையாட்டுகளும் தெண்டம் குடுக்கிறவரையில் ஹராம். அப்படி தெண்டம் குடுக்குமுன் வீடுகூடிவிட்டால் தௌபா செய்து இஸ்திக்பாறு செய்வான். தெண்டம் குடுக்கிறவரையில் மறுபடி மீளமாட்டான்.

இனி ளிஹார் செய்திட்டால் தெண்டத்தை வாஜிபாக்கிற மீளுதலாகிறது அவளை வீடு [illegible]ன்பேரில் நாட்டம் ஒரு மிக்கியதாயிருக்கும். வத்யுசெ[illegible] அவளை அவள் தேடுகிறதும் ஆகும். ஆனால் தெண்ட[illegible]க்கிறவரையில் அவளைக் கொண்டு சுகிக்கிறதை [illegible]னபவள் விலக்குகிறது அவள் பேரில் வாஜிபு.

இனி (அந்தி அலப்ப பிகலு) எனினீ, நீ என்பேரில் என் தாயைப்போல் என்கிற சொல்லைக்கொண்டு அவன் நன்றியை அல்லது ளிஹாரை அல்லது தலாக்கை நிய்யத்து செய்தால் அவனுடைய நிய்யத்து [illegible]கிட்டது. ஒன்றையும் நிய்யத்துச் செய்யவில்லையானாலும், அல்லது போலே என்கிறதை

யெடுத்துவிட்டாலும் அந்த சொல் வீணாகிவிட்டது. (அந்த அலய்ய ஹாராமுன் கவும்மீ) எஃனீ, நீ என்பேரில் என் தாயைப் போல் ஹாராமென்று சொல்லுகிறது கொண்டு தலாகுலிஹாரு இதில் எதை நிய்யத்துச் செய்தாலும் துரிஸ்தாகிவிடும். நன்றியை நிய்யத்துச் செய்கிறது துரிஸ்தாகாது. ஒன்றையும் நிய்யத்துச் செய்யவில்லையானால் லிஹாரத்து தரிபட்டிடும்.

14-வது பிரிவு.

இது பாத்திமா றலியல்லாஹு அன்ஹாவுடைய வருசையைப்பற்றிச் சொல்வதாம்.

பாத்திமா றலியல்லாவுடைய வருசையில் வந்திருக்கிறது கதீஜா றலியல்லாஹு அன்ஹா சொன்னார்கள். பாத்திமா றலியல்லாஹு அன்ஹாவைக் கொண்டு நான் ஹமலானபோது ரொம்ப இலேசாகிய ஹமலாயிருந்தது. வயற்றுக்குள்ளிருந்து என்னுடன் பேசிக் கொள்வது பாத்திமா வயற்றுக்குள்ளிருந்து என்னோடு பேசிக்கொள்கிறது. பேர்காலம் மூடுகிவிட்டபோது குறைசி கூட்டத்தாரனவில் ஆள் அனுப்பினேன். அவர்கள் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவசல்லத்திற்காக என்னிடத்தில் வருகிறதை விட்டு விலகிக் கொண்டார்கள். நான் அப்படி யிருக்கும்போது என்னிடத்தில் வருகிறதை விட்டு விலகிக் கொண்டார்கள். அப்படி யிருக்கும்போது என்னிடத்தில்நாலு பெண்பிள்ளைகள் வந்தார்கள். அவர்கள் பேரில் சொல்லமுடியாத அழகும் ஒளிவு முண்டாயிருந்தன. அவர்களில் ஒருவர் நான் உன்னுடைய தாய் ஹவ்வாவென்று சொன்னார்கள். மற்றொருவர் நான் ஆசியா வென்றார்கள். மற்றொருவர் நான் மூஸா

வுடைய உடன்பிறந்தாள் உம்முகுல்தூமென்றார்கள். மற்றொரு வர் நான் மறயம் நாங்கள் உம்முடைய காரியத்திற்கு காரியஸ் தர்களாக வந்தோமென்றார்கள்.

இனி! ஆயிஷா றலியல்லாஹு அன்ஹாவைத் தொட்டும் பேசிவரப்பட்டிருக்கிறது அவர்கள் பாத்திமா றலியல்லாஹு அன்ஹாவை நோக்கி பாத்திமாவே உம்முடைய தாயாரைக் காண நான் ரெம்ப ஏற்றமாயிருக்கும் ஏனெனில் றசூலுல்லா ஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் உம்முடைய தாயாரை கன்னியழிந்தவராகக் கலியாணம் முடித்தார்கள் என்னை கன்னியா தாரியாக கலியாணம் முடித்தார்கள். என்று சொன்னார்கள் அப்போது பாத்திமா றலியல்லாஹு அன்ஹா மனதில் கொஞ்சம் வருத்தமுண்டாயிற்று அப்போது நபிஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமளவில் வந்து ஆயிஷா என்னை யிப்படிச் சொன்னார்க ளென்று முறையிட்டார்கள். அப்போது றசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமானார்கள் நீ ஆயிஷாவுக்கு சொல கிறது நிஜம்சொன்னீர் றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் என்தாயாரை கன்னியழிந்தவர்களாகக் கலியாண முடித்தார் கள், உங்களை கன்னியதாரியாகக் கலியாண முடித்தார்கள், என்கிலும்என் தாயாரைக் கலியாணம் முடிக்கும்போது றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் கன்னியாதாரமாயிருந்தார்கள். உங்களை கலியாணம் முடிக்கும்போது அவர்கள் கன்னியழிந் தவர்களாயிருந்தார்கள். றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸ ல்லமுடைய கன்னியாதாரம் உங்களுடைய கன்னியா தாரத் தைக்காண ஏற்றமென்று இப்படிச் சொல்லென்றார்கள். அந் தப்படி பாத்திமா றலியல்லாஹு அன்ஹா ஆயிஷா றலியல் லாஹு அன்ஹாவுக்கு சொன்னவுடன், பாரும் பாத்திமாவே இந்த ஜவாபை நீர் அறிந்ததில் நின்றும் சுக்று செய்யுமென்று ஆயிஷா றலியல்லாஹு அன்ஹா சொன்னார்கள். பின்னர் நபி

ஸல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய நம்பிராட்டி மார்களடங்கலும் முஃமினானவர் களுக்கெல்லாம் தாய்மார்களாயிருக்கும்.

அனஸ் றலியல்லாஹு அன்ஹுவைத் தொட்டும் வந்திருக்கிறது, அபூபக்கர் உமர் றலியல்லாஹு அன்ஹுமா அவர்கள் இரண்டு பேரும் பாத்திமா றலியல்லாஹு அன்ஹாவைப் பெண் பேசி நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மளவில் வந்தார்கள். அப்போது நாயகம் அவர்களுக்கு யாதொரு சங்கதியும் சொல்லாமல் வாயை மூடிக்கொண்டார்கள். இன்னும் பாத்திமாவைக் கொண்டும் ஹக்குடைய கற்பனையை வழி பார்க்கிறேன் என்று இருவரில் ஒவ்வொருவருக்கும் சொன்னார்களென்றும் ரிவாயத்து வந்திருக்கிறது. அப்போது அவர்களிரண்டுபேரும் அலிறலியல்லாஹு அன்ஹு அளவில் நடந்துபோய் பாத்திமா றலியல்லாஹு அன்ஹாவை அலிறலியல்லாஹு அன்ஹு தங்களுக்கே பெண் பேசிக் கொள்ளும்படி ஏவினார்கள். அப்போது அலிறலியல்லாஹு அன்ஹு "நான் அதில் ஞாபகமில்லாமல் அதைவிட்டுப் பராக்காகிவிட்டதற்காக அவர்களிரண்டு பேரும் என்னை உஷாராக்கினார்கள்" என்று சொல்லித் தன்னை உஷாராக்கியதைக்கொண்டு சந்தோஷமாகத் தன்மேல் வேட்டியை யிழுத்துக்கொண் டெழும்பி நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமிடத்தில்வந்து பாத்திமாவை யெனக்குக் கலியாணம் முடித்துக் கொடுங்கள் என்று கேட்டார். நாயகமவர்கள் அதற்கு உம்மிடத்தில் ஏது வஸ்து உண்டாயிருக்கிறது. என்றார்கள் அதற்கு அலிறலியல்லாஹு அன்ஹு அவர்கள் என் குதிரையும் என் கவசமும் (இரும்புச்சட்டை) இருக்கிறதென்று சொன்னார்கள். உம்முடைய குதிரை உமக்கு வேண்டியானது. உம்முடைய கவசத்தை வில்லும் என்றார்கள். அந்தக் கவசத்தை

உஸ்மானிபுனு அப்பான் றலியல்லாஹு அன்ஹுவிற்கு 480 தீனாருக்கு விற்றார்கள். பின்பு உஸ்மான் றலியல்லாஹு அன்ஹு அக்கவசத்தை அலிறலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கே திருப்பிக்கொடுத்து விட்டார்கள். உடனே அலிறலியல்லாஹு அன்ஹு அந்தத் தீனார்களையும் கவசத்தையும்நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களிடம் கொண்டுவந்து கவசம் விற்கப்பட்டதையும் அது மறுபடி திருப்பிக்கொடுக்கப் பட்டதையும் கூறினார்கள். அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் உஸ்மான் றலியல்லாஹு அன்ஹுவிற்கு துவாச் செய்தார்கள்.

அலி றலியல்லாஹு அன்ஹு கூறுகிறார்கள். நான் அந்தத் தீனாருகளைக் கொண்டுவந்து நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய மடியின்மீது வைத்தேன் அவர்கள் அதில் ஒரு பிடியை யள்ளி பிலாலே! இதற்த மணம் வாங்கிக் கொண்டு வாரும் என்றார்கள். அங்கிருந்த மற்றவர்களை பாத்திமா றலியல்லாஹு அன்ஹாவிற்கு சீதன சாமான் வாங்கி வரும்படி ஏவினார்கள் என்று.

(ஹதீது) அந்த பிடியாகிறது மூன்றில் ஒரு பங்கு அல்லது கொஞ்சம் குறையவிருந்தது. அதை மூன்றில் ஒரு பங்காக நிறப்பமாக்கி மணம் வாங்கச் சொன்னார்கள். மற்றதை சீதன சாமான் வாங்கச் சொன்னார்கள்.

இன்னும் ஹதீதில் வந்திருக்கிறது. நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அலி றலியல்லாஹு அன்ஹுவை நோக்கி திருவுளமானார்கள். திடனாக அல்லாஹுத் தஆலா பாத்திமாவை யுமக்குக் கலியாண முடித்துத் தரும்படி என்னை யேவினான். திடனாக அல்லாஹுத் தஆலா உமக்குப் பாத்திமாவை

நானூறு கழஞ்சி வெள்ளியின் பேரில் கலியாண முடித்துத் தரும்படி என்னை யேவினான். அப்போது யாறசூலல்லா பாத்திமாவைப் பொருந்திக்கொண்டேன் என்று அலி றலியல்லாஹு அன்ஹு சொல்லி, அல்லாஹுத் தஆலாவிற்கு சுக்ரு செய்கதற்காக சுஜூதில் விழுந்தார்கள். சுஜூதில் நின்றும் தலையை யுயர்த்தினபோது பாரகல்லாஹுலகுமா ஓபாரகா பீகுமா வஅ அஸ்ஸ ஜத்தகுமா வஅரக்ஜா மின்குமல் கதீரத்தையப் (எஃனீ) அல்லாஹுத் தஆலா உங்கள் இரண்டு பேருக்கும் பாகத் செய்வானாகவும். உங்களிலே பரகத் செய்வானாகவும். உங்கள் பேர் மர்த்தபாவைச் சிறப்பாக்குவானாகவும். உங்களில் நின்றும் மணமாகிய ஙீதுந்த பிச்சளத்தைப் புறப்படுத்துவானாகவும் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் துஆஅ செய்தார்கள்.

15-வது பிரிவு.

இது கதீஜா றலியல்லாஹு அன்ஹா பாத்திமா றலியல்லாஹு அன்ஹாவை கெர்ப்பமானதை பற்றி சொல்வதாம்.

நபசிய்யும் மற்றவர்களும் சொல்லியிருக்கிறார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் மிஃறாஜுடைய இரவில் சொர்க்கம் புகுந்தபோது கதீஜாவுடைய மாழிகையைக் கண்டார்கள். ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அந்த மாழிகை மறத்தில் ஒரு துப்பாஹு பழத்தை யெடுத்து முஹம்மதே நீர் தின்னும் அல்லாஹுத் தஆலா இந்த பழத்தில் நின்றும் ஒரு பெண்மகளை படைப்பான். அந்த மகளைக் கொண்டு கதீஜா கெர்ப்பமாவார்கள் என்றார்கள். அந்தப்படி அந்தப் பழத்தை தின்றார்கள். கதீஜா றலியல்லாஹு அன்ஹா பாத்திமாவைக் கொண்டு கெர்ப்பமானபோது சொர்க்கத்து வாடையை ஒன்பது மாதம் தங்களிலே பெற்றுக் கொண்டார்கள். பாத்திமாவை

பெற்றபோது அந்த வாடை பாத்திமா அளவிலே திரும்பிவிட்டது. அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் சொர்க்கத்தளவில் ஆசையானால் பாத்திமாவை முத்தமிடுவார்கள். பாத்திமா பெரிய வயதானபோது இந்தஹறூருல் ஈனையாருக்கு கலியாண முடித்துக் கொடுப்பேன் என்றார்கள். அப்போ ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் வந்து இண்ணையிலே பாத்திமாவுக்கு நிக்காஹு முடிவு சொர்க்கத்தில் அவர் தாயாருடைய மாளிகையில் அவர் குடியிருக்கும் தலத்திலுண்டாகிட்டது. பெண் பேச வந்தவர் இஸ்றாபீல் ஜீப்றீலும் மீக்காயீலும் ஷாஹிதுகள் வலிய்யாகிறது சிரப்பையும் வலுப்பத்தையுமுடைய றப்பாயிருக்கும் மாப்பிள்ளை அலியாயிருக்குமென்று சொன்னார்கள்.

இனி பாத்திமா றலியல்லாஹு அன்ஹா ஆயிஷா றலியல்லாஹு அன்ஹாவை நோக்கி நான் உங்களைக்காண ரொம்ப வருசையாயிருக்கும். ஏனெனில் திடனுகை நான் றசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களில் நின்றும், பிறந்த ஒரு துண்டாயிருக்கிறேனென்றார்கள். அப்போது ஆயிஷா றலியல்லாஹு அன்ஹா துன்யாவில் நீர் சொன்னதுபோல் தான் ஆகிறதில் நபிஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடனே அவர்கள் பதவியில் நான் ஆரிடுவேன். இந்த இரண்டு பதவிகளுக்கிடையிலுள்ள வருசையளவில் நோட்ட மிட்டுப்பார் என்றார்கள், அப்போது பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அதர்க்கு ஜவாபு சொல்ல முடியாமல் வாய்மூடி விட்டார்கள். உடனே ஆயிஷா றலியல்லாஹு அன்ஹா எழும்பி அவர்கள் தலையைமுத்தமிட்டு நான் உம்முடைய தலையிலுள்ள ஒரு உரோமமாயிருக்க வேண்டாமாவென்று சொன்னார்கள்.

இனி அஸ்மாவு சொன்னார்கள். பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் பிள்ளை ஹஸன் றலியல்லாஹு அன்ஹுவைபெற்ற அவீர்களைக் கொண்டு முன்னேக்கினார்கள். அவர்களுக்கு இரத்தைக் காணவில்லை. அப்போது அல்லாவுடைய நபியே பாத்திமாவுக்குஹைஹலு ரெத்தம் நிபாஸு ரெத்தத்தை நான் காணவில்லையென்று சொன்னேன். அப்ப அவர்கள் நீ அறிபவில்லையா திடனுக பாத்திமாவாகிறது ரெம்பவும் துப்புர வாக்கப்பட்ட துப்புராவான் பிள்ளையென்றார்கள்.

இன்னும் ஆயிஷா றலியல்லாஹு அன்ஹா சொன்னார்கள். அசவே ஒருவரையும் நான் பாதிமாவைக்காண ரெம்ப வருஷைபாகக் காணவில்லை அவர்கள் தகப்பனார் நபிஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமைத்தவிர வென்று.

இன்னும் றிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது. கியாமநாள் உண்டாகிட்டால் அர்ஷுக்கு வுள்ளில் நின்றும் ஒரு விளம்பரம் உண்டாகிடும். கூட்டத்தையுடையவர்களே முஹம்மதுடைய மகள் பாத்திமா பாலம்கடக்கிற வரையில் உங்கள் தலைகளை கவிழ்ப்போடுங்கள் உங்கள் பார்வைகளை மூடிக்கொள்ளுங்கள் என்றார்கள்.

16-வது பிரிவு.

பாத்திமா நாயகத்தை அப்துர் றஹ்மான் பின் ஔப் பெண்பேசிய செய்தி.

ஒருநாள் அப்துர் றஹ்மான் பின் ஔப் றலியல்லாஹு அன்ஹு பெருமைப்பாடாகிப உடுப்புகளை யணிந்துகொண்டு பாத்திமா றலியல்லாஹு அன்ஹாவைப் பெண்பேசுவதற்காக நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மிடம் வந்திருந்து பேசினார்கள். அப்போது நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் யாதொன்றும் பேசவில்லை. அப்துர் றஹ்மான் பின் ஔப் நாம் மஹர் இன்னதென்று சொல்லாததால் நாயகமவர்கள் பேசவில்லை என்று எண்ணி பொன் வெள்ளி விலை மிகுந்த புடவைகள் முதலாிவது நாற்பது ஒட்டகசுமை மஹர்தருகிறேன் என்று சொன்னார்கள். அதற்கும் நாயகம் அவர்கள் ஒரு பதிலும் சொல்லவில்லை. அப்போது மஹர் போதாதென்று ஜவாபு சொல்லவில்லை யென்றெண்ணி அதற்கு இரட்டிப்புத் தருகிறேன் என்று சொன்னார்கள். அதற்கும் பதில் சொல்லவில்லை. அப்போதும் அப்துர்றஹமான் இன்னும் மஹர் பத்தாதென்றெண்ணி அதற்கு ஏழுபங்கு இரட்டிப்பு தருகிறேனென்று சொன்னார்கள் அப்போது நபிநாயகம

அவர்கள் இவர் இன்னும் அதிகமாய்ச் சொல்லுவார் என்றெண்ணி தங்கள் தலையை யுயர்த்தி "றசூல் மகளே பணங்களைச் கொடுத்து எடுக்கவாமென்று அபேட்சை வைத்திருக்கிறீரோ? ஒளபுடைய மகனே நீர் அறிந்திருக்கிறீரா? உமக்கு எவ்வளவு வேணும்? வேண்டியதை யெடுத்துக்கொள்ளும்" என்று சொல்லி தங்கள் முன்கையைப் பூமியிலடித்து உயர்த்தின போது றசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய விரல் இடைகளில் நின்றும் பூமியிலிருந்தும் இரத்தினங்கள் பொன் வெள்ளிகள் வெளியாகி நிரம்பின. அதைக் கண்ட அப்துர் ரஹ்மான் பின் ஒளப் உடனே அவர்பாதங்களை முத்தியிட்டு நான் தெரியாமல் சொல்லி விட்டேன் என்று சொல்லி மன்னிப்பு கேட்டுக்கொண்டார்கள். அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் "நீர் இப்படி மன்னிப்புத் தேடாவிடில் வானம் பூமி எங்கணும் இப்பொருள்கள் குவிந்து விடும்" என்று சொன்னார்கள். ஆகையால் பாத்திமா றலியல்லாஹு அன்ஹாவுடைய மகர் ஒப்பின்பேரில வைக்கப் பட்டதல்ல.

ஆனால், பாத்திமா றலியல்லாஹு அன்ஹாவிற்கு நானூறு கழஞ்சு வெள்ளி மஹர் வைத்தது அவர்களுக்கு மகர் மிஸ்லல்ல. ஏனெனில் யாரும் அவர்களுக்கு ஒப்புமில்லை உயர்வுமில்லை. ஆனதால் அது ஹக்குடைய உத்திரவின்படி வைத்த மகரல்லாது ஒப்பின் பேரில் வைத்த மகரல்ல.

17-ம் பஸல்.

பாத்திமா நாயகத்தின் கலியாணத்தைக் கூறுவது.

பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களுக்குக் கலியாண முடிக்கிற இரவில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் பாத்திமா நாயகி இடத்தில் கலியாணத்தைப்பற்றி கேட்

டார்கள். அப்போது அவர்கள் "திடனாக நான் துனியாவை உவக்கமாட்டேன் என்று தாங்கள் அறிவீர்கள். என்கிலும இந்த இரவில் என்னுடைய மிடிமையளவில் ஙோட்டமிடு கிறேன். அதாவது நீ என்ன கொண்டு வந்தாய் என்று அலி கேட்பாரென்று பயப்படுகிறேன்" என்றார்கள். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் உனக்குக் கார்மானமுண்டா யிருக்கிறது. அலி பொருந்திக் கொண்டவராயும் பொருந்தப் பட்டவராயு மாகிவிட்டாரென்று சொன்னார்கள்.

அந்நாளில் மிருந்த பணத்தையுடைய எஹூதியாகிய ஒரு பெண்பிள்ளையின் கலியாணத்திற்குப் பெண்பிள்ளைகள் அழைக்கப்பட்டார்கள். அப்போது அழைக்கப்பட்ட பெண் களெல்லாம் உயர்ந்த பெருமைப்பாடாகிய உடுப்புகளை அணி ந்துகொண்டு போகும்போது முஹம்மதுடைய மகளையும் அவர்களுடைய மிடிமையையும் பார்க்கவேணுமென்று ஒரு வருக்கொருவர் சொல்லிக்கொண்டு, பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் வீட்டுக்கு வந்து அவர்களைப் பார்க்கக் கூப்பிட்டார்கள். உடனே ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் சொர்க் கத்தில் நின்றும் ஒரு உடுப்பு கொண்டிறங்கினார்கள். அப் போது பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அதை அணிந்து மேல்போர்வை போர்த்துக்கொண்டு அந்தப் பெண்பிள்ளை களுக்கிடையில் வந்திருந்து மேல்போர்வையை நீக்கினார்கள். உடனே அது ஒளிவிட்டு பிரகாசித்தது. அப்போது அந்தப் பெண்பிள்ளைகளெல்லாம் பாத்திமா இது எங்கே யிருந்து உங்க ளுக்கு வந்தது என்றார்கள். பாத்திமா என் தகப்பனில் நின்றும் வந்தது என்றார்கள். உங்கள் தகப்பனுருக்கு எங்கே நின்றும் வந்தது என்று கேட்டதற்கு பாத்திமா ஜிப்ரீலில் நின்றும் வந்தது என்றார்கள். ஜிப்ரீலுக்கு எங்கே நின்றும் வந்தது என்றார்கள். பாத்திமா சொர்க்கத்தில் நின்றும் வந்

தது என்றார்கள். உடனே அந்தப் பெண்பிள்ளைகளெல்லாம் அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹு வஅன்ன முஹம் மதர் றசூலுல்லா என்று கலிமா சொல்லி இஸ்லாமாகிவிட் டார்கள். அப்போது அவர்கள் புருஷர்களில் இஸ்லாமான வர்களோடு தரிபட்டார்கள். புருஷர் இஸ்லாமாகாத பெண்டு கள் வேறே மாப்பிள்ளைக்கு வாழ்க்கைப்பட்டார்கள்.

18-ம் புஸல்.

பாத்திமா நாயகத்துக்குச் சொர்க்கத்தில் நின்றும் பட்டுப் பிடவை ஹதியா வந்ததைக் கூறல்.

பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களுக்குக் கலி யாணமுடித்துக் கூட்டி அனுப்புகிற இரவில் நபி சல்லல்லாஹு அலைஹிவசல்லம் புதிதாகிய ஒரு சட்டை தைத்துக் கொடுத் தார்கள். அதற்கு முன் அவர்களுக்கு அண்டைபோட்ட சட் டை ஒன்று உண்டாயிருந்தது. அந்நேரத்தில் ஒரு பகீர் வாச லில் வந்து நுபுவ்வத்துடைய வீட்டில் நின்றும் ஒரு பழஞ் சட்டை தேடுகிறேன் என்று சொன்னார். அப்போது பாத்திமா நாயகம் தங்களுடைய அண்டைபோட்ட சட்டையைக் கொடு க்க நாடினபோது அல்லாஹுத் தஆலா குர்ஆனில் நீங்கள் உவந்ததில் நின்றும் செலவு பண்ணுகிற வரையில் நலவைப் பெற்றுக்கொள்ள மாட்டீர்களென்று திருவுளமானதை நினைத் தார்கள். உடனே புதிதாகிய சட்டையை எடுத்து அந்த பகீருக்குக் கொடுத்துவிட்டார்கள். அப்போது பாத்திமா நாயகத்தைக் கூட்டி அனுப்புகிற வக்து நெருங்கிவிட்ட பொழுது ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் சொர்க்கத்தினின்றும் இற ங்கி முஹம்மதே திடமாக அல்லாஹுத் தஆலா உங்களுக்கு சலாம் ஓதிவைத்தான். பாத்திமாவின் பேரில் நான் சாலம்

சொல்லும்படி எனக்கு ஏவினன். அவர்களுக்கு சொர்க்கத்துப் பிடவைகளில் மெல்லிய பச்சைப்பட்டில் ஹதய்யா என்னுடன அனுப்பிவைத்தான் என்று சொல்லி ஸலாமையும் அவர்களுக்கு எத்திவைத்து தாங்கள் கொண்டுவந்த சட்டையும் அவர்களுக்கு உடுத்தாட்டின பொழுது சட்டையுடைய ஒளி கண்திறந்து பார்க்கவிடாதபடி பிரகாசித்தால் நபி ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் சட்டையின்மேலே கம்பளியை சுற்றினார்கள். ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் தங்கள் சிறகுகளைக் கொண்டு சுற்றினார்கள். காபிரான பெண்பிள்ளைகளுக் கிடையில் அவர்களிருந்தபோது ஒவ்வொரு பெண்பிள்ளைகளுடனும் ஒவ்வொரு பந்தமும் உண்டா யிருந்தது. பாத்திமா றலியல்லாஹு அன்ஹாவுடனே ஒரு விளக்கும் உண்டா யிருந்தது. அப்போது ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் தங்கள் சிறகையும் கம்பளியையும் நீக்கினார்கள். உடனே ஒளிகள் மஷ்ரிகு மக்ரிபெல்லாம் பிரகாசித்து எங்கும் ஒரே சோதிமயமாய்விட்டது. காபிராகிய பெண்பிள்ளைகளுடைய பார்வைகளின் பேரில் அப்பிரகாசம் விழுந்தபோது அவர்கள் அவர்கள் கல்புகளில் நின்றும் குப்று நீங்கிவிட்டது. உடனே அவர்கள் கலிமா ஷஹாதத்து சொல்லி இஸ்லாமாகிவிட்டார்கள்.

இன்னும் ஹதீதில் வந்திருக்கிறது, நபிஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் அலி றலியல்லாஹு அன்ஹுக்கு பாத்திமா றலியல்லாஹு அன்ஹாவைக் கலியாண முடித்துக் கொடுத்தபோது பாத்திமா றலியல்லாஹு அன்ஹா யாரசூலல்லா என்னை பகீராகிய ஆண்பிள்ளைக்குக் கலியாண முடித்துக் கொடுத்தீர்கள் என்று சொன்னார்கள். அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வசல்லம் "நீ பொருந்தவில்லையா, திடனாக அல்லாஹுத் தஆலா பூமியிலுள்ளவர்களில் நின்றும் இரண்டு

ஆண்பிள்ளைகளைத் தெரிந்துகொண்டான். இரண்டிலொருவரை யுன்னுடைய புருஷனாக்கினான்" என்று சொன்னார்கள்.

இன்னும் ஹதீதில் வந்திருக்கிறது. நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் பாத்திமா றலியல்லாஹு அன்ஹாவிடம் வந்து அஸ்ஸலாமு அலைகி எப்னதாஹ் என்று சலாம் சொல்லி எப்படி யுங்களுக்குப் பொழுது விடிந்தது என்றார்கள். அப்போது பாத்திமா ரலியல்லாஹு அன்ஹா அல்லாவினாணை நொம்பலமாக விடிந்தேன். பசி என்னைத் தங்கடம் செய்துவிட்டது என்றார்கள். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அழுது "பயப்படாதிரும். அல்லாவின் ஆணை நான் மூன்று நாளை ஒஜீபனம் அருந்தவில்லை. நான் உம்மைக்காண அல்லாகுத் தஆலாவிடத்தில் கல்குகளில் நின்றும் மிகவும் சங்கை பெற்றவன். அல்லாஹுத் தஆலாவிடத்தில் நான் கேட்டால் எனக்கு ஒஜீபனம் கொடுப்பான். என்றாலும் துனியாவைக் காண ஆகிரத்தைத் தெரிந்துகொண்டேன்" என்று சொல்லிப் பின்பு தங்கள் கையினால் அவர்கள் தோள் புயத்தில் தட்டி "நீ நல்மாராயம் பெற்றுக்கொள். உன்னைத் துனியாவிற்கும் ஆகிரத்திற்கும் நாயகமானவருக்குக் கலியாண முடித்தேன். உன்னுடைய பெரிய தகப்பன் மகன் அலியைக்கொண்டு போதுமாக்கிக்கொள். நீ சொர்க்கத்துடைய பெண்களுக்கெல்லாம் நாயகியா யிருக்கும்" என்றார்கள். அப்போது பாத்திமா ரலியல்லாஹு அன்ஹா பிர்ஔனுடைய பெண்சாதியாகிய ஆசியா எங்கே, இம்ரானுடைய மகள் மரியம் எங்கே யென்றார்கள். அதற்கு நாயகம் ஆசியாவாகிறது ஆசியாவுடைய ஆலத்துடைய பெண்டுகளுக்கெல்லாம் நாயகி. மரியமாகிறது மரியமுடைய ஆலத்துடைய பெண்டுகளுக்கெல்லாம் நாயகி. நீ உன்னுடைய ஆலத்துடைய பெண்டுகளுக்கெல்லாம் நாயகி" என்றார்கள்.

19-ம் பஸல்.

பாத்திமா நாயகத்தின் சீதனத்தைப்பற்றிக் கூறுவது.

பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களுக்குக் கொடுத்த சீதனமாகிறது இரத்தினக் கம்பளமும் தண்ணீர் கிர்பாவும் (துருத்தி) ஈச்சம் ஓலையைத் திரித்துப் பின்னப்பட்ட கட்டிலும் உள்ளே ஈச்சம் சருகுவைக்கப்பட்ட தோல் தலையணையுமாம். இன்னம் இரண்டு கித்தான் மெத்தைகள்; ஒன்றுக்குள் ஈச்சம் சருகும் மற்றொன்றுக்குள் தோலறுத்த கூளமும் வைக்கப்பட்டதென்றும், நான்கு தலையணைகள் இரண்டில் ஈச்சம் சருகும் இரண்டில் ஆட்டு உரோமமும் வைக்கப்பட்டிருந்ததென்றும் கூறப்பட்டிருக்கிறது. இன்னும் சித்துகள் உள்ள புருதென்னும் இரண்டு ஜாமாவும், மஹம்மல் என்னும் வில்லூநும், சாய்மான திண்டும், தண்ணீர் சாலும், தண்ணீர் குடிக்கிற சொட்டோராவும், மரக்குண்டாவும், கொடுங்கையில் கட்டுகிற வெள்ளி பாஜிபந்தும், இதுபோலொத்ததவும் அனுப்பினார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. இதுகளெல்லாம் அவர்களுக்குச் சீதனமாயிருக்கும்.

அனஸ் றலியல்லாஹு அன்ஹுவைத் தொட்டும் வந்திருக்கிறது, பாத்திமா றலியல்லாஹு அன்ஹா நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களிடத்தில் யாரசூலல்லா திடனாக எனக்கும் என் பெரிய தகப்பன் மகனாகிய அலியாரவர்களுக்கும் ஆட்டுத் தோலைத் தவிர வேறே விரிப்பில்லை. இரவில் அதின் பேரில்தான் நாங்கள் நித்திரை செய்கிறோம். பகலில் அதன்பேரில்தான் எங்களுக்குத் தண்ணீர் சுமக்கிற ஒட்டகத்திற்குத் தீனிவைக்கிறோம் என்றார்கள். அப்போது நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அருமை மகளே சபுர் செய்துகொள்

இம்ரானுடைய மகன் மூஸா அலைஹிஸ்ஸலாம் தங்கள் பெண் சாதியுடனே பத்து வருடம் இருவர்க்கும் கட்டை கட்டை யான சுணையுள்ள ஒரு வெள்ளைக் கம்பளம் தவிர வேறொன்று மில்லாமலே யிருந்தார்கள் என்று திருவுளமானார்கள்.

இன்னும் பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களைக் கலியாண முடித்து அலிறலியல்லாஹு அன்ஹு அவர்களள வில் கூட்டியனுப்பிய பின் நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல் லம் மூன்று நாள் கழித்து நாலாம் நாள் குளிரான காலை நேரம் அவர்களிடம் போனார்கள். அப்போது இருவரும் ஒரே துப் பட்டியைப் போர்த்துக்கொண் டிருந்தார்கள். நபிஸல்லல் லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் நீங்கள் அப்படியே யிருங் களென்று இருவருடைய தலைப்புறத்தில் போயிருந்து தங்களு டைய இருபாதத்தையும் இரு கெண்டைக்காலையும் இருவருக் கிடையில் புகுதவைத்தார்கள். அப்போது அலிறலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஒரு பாதத்தை யெடுத்து தங்கள் நெஞ்சின் பேரிலும் வயற்றின் பேரிலும் காலுக்குச் சூடுண்டாவதற்காக வைத்துக்கொண்டார்கள். பாத்திமா றலியல்லாஹு அன்ஹா மற்றொரு பாதத்தை யெடுத்து அம்மாதிரியே தங்கள் நெஞ் சின்பேரிலும் வயற்றின்பேரிலும் வைத்துக் கொண்டார்கள். அப்போது பாத்திமா றலியல்லாஹு அன்ஹா கித்மத்துக்கு ஒரு ஆள்வேண்டுமென்று பர்வாயிடம் கேட்டார்கள். அதற்கு நாயகம் அவர்கள் தஸ்பிஹு (சுபுஹானல்லா) சொல்வதுகொ ண்டும் தஹ்மீது (அல்ஹம்து லில்லா) சொல்வது கொண்டும் தக்பீர் (அல்லாஹு அக்பர்) சொல்வது கொண்டும் ஏவி னார்கள்.

இன்னும் அலிறலியல்லாஹு அன்ஹுவைத்தொட்டும் வந்திருக்கிறது, பாத்திமா றலியல்லாஹு அன்ஹா திரிகை திரி

த்து திரிகையுடைய அதர்ச்சியால் தாங்கள் அடைந்த வருத்தத்தைக் கூறியபோதும் நீங்கள் இருவரும் இரவில் நித்திரை செய்யத்தொடங்கினல் தக்பீற் 33, தஸ்பீஹ் 33, தஹ்மீது 33 சொல்லிக்கொள்ளுங்கள். இது உங்களுக்கு காதிமைக்காண (அடிமை) ஏத்தமாயிருக்கும் என்று சொன்னார்கள்.

20-ம் பஸல்.

இது புருஷன் பெண்ணுக்கிடையில் நடந்த செய்திகளை வெளியில் பேசுவதனாலுண்டாகும் கெடுதியைக் கூறுவது.

றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள், ஜிமாவு செய்துவிட்டு, ஒருவர் மற்றொருவருடைய ஸிர்றை பேசும் புருஷனும் பெண்ணும் அல்லாஹுத் தஆலாவிடத்தில் கியாமத்தில் மனிதரில் மெத்த தீங்குடையவர்களா யிருப்பார்கள்.

அஸ்மா றலியல்லாஹு அன்ஹா சொன்னார்கள். ஒருநாள் ஆண்டவர்களிடம் ஆணும், பெண்ணும்கூடியிருக்கையில் சொன்னார்கள், ஒரு புருஷன் பெண்ணுடனே செய்ததையும், ஒரு பெண் புருஷனுடனே செய்ததையும் அவர்கள்வெளியில் பேசிக்கொண்டிருக்கலாமென்று சொன்னார்கள். அப்போது ஒருவரும் ஒன்றும் சொல்லவில்லை; நான் அப்படி நடக்குதென்று சொன்னேன். அப்போது ஆண்டவர்கள் நீங்களப்படிச்செய்யவேண்டாம், அப்படிப்பேசுகிறவர்கள் மனிதர் பார்த்திருக்க ஒன்றுக்கொன்று புணரும் ஷைத்தானைப்போலா யிருக்குமென்று சொன்னார்கள்.

றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள், உங்களில் ஒருவன் "நான் ஜிமாவில் மெத்த குவ்வத்துடையவன், பிகுநேரம் உட்கார்ந்தேன்" என்று சொல்வது அவன் பேரில் ஹறாமாயிருக்கும்.

பாயிதா.

ஜிமாவு செய்த விபரத்தையும், சுகம் பாராட்டின கருமங்களையும், புருஷன் அல்லது பெண் வெளியில் சொல்வது ஹறாம், ஜிமாவு செய்ததை மாத்திரம் சொல்வது மக்றூஹ்.

21-ம் பஸ்லு.

இது பெண்பிள்ளைகள் வீட்டைவிட்டு வெளிப் புறப்படுகிறதை விலக்குகிறதைப்பற்றிக் கூறுவது.

அல்லாஹுத்தஆலா குறுஆனிலே திருவுளமானன், பெண்களே நீங்கள் வீடடங்கியிருங்கள். முந்தின மடையர்களான கூட்டங்கள் வெளிப்புறப்பட்டதுபோல், நீங்களும்வெளிப்புறப்படாதேயுங்கள், தொழுங்கள், ஸக்காத்து கொடுங்கள் அல்லாவுக்கும், அவனுடைய றசூலுக்கும் வழிப்படுங்களென்று திருவுளமானன்.

ஹதீது.

றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்திருவுளமானார்கள். பெண்பிள்ளை ஔறத்தாயிருக்கும், அவள் வீட்டைவிட்டுப் புறப்பட்டால் ஷைத்தான் அவளை எட்டிப்பார்ப்பான். இன்னும், அவள் நாயனுக்கு மிகவும் முடுகுதலாயிருப்பது, அவள் வீடடங்கி யிருக்கும்போதிலாயிருக்குமென்று திருவுளமானார்கள்.

றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள் ஒரு பெண்பிள்ளை புருஷனுடைய பொருத்தமில்லாமல் வெளிப் புறப்பட்டால், அவளை வானத்தில் உண்டாயிருக்கும் மலக்குகளடங்கலும் எஃனத்துச் செய்வார்கள். இன்னும் திருவுளமானார்கள், ஒரு பெண்பிள்ளை மணம் பூசிக்கொண்டு, அவளுடைய வாடையை யாவரும் காண்பதற்காக ஜனங்கள் எதிரில் நடந்தால் அவள் ஸினைச் செய்கிறவளாயிருக்குமென்று திருவுளமானார்கள்.

றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள். நான் நரகத்தினுதயமாகிப் பார்த்தேன். நரகத்திலுள்ளவர்களில் மிகுந்தவர்கள் பெண்பிள்ளைகளாகக் கண்டேன், ஏனெனில் அவர்கள் அல்லாஹுக்கும், றசூலுக்கும் வழிப்படுவது குறைந்ததாகவும், வெளிப் புறப்படுவது மிகுதமாகவு மிருப்பதாலும், இன்னும் அவர்கள் வீட்டைவிட்டும் வெளிப்புறப்படநாடினால் பெருமையான உடையுடுத்தி, புகட்டி, சோடித்து மனிதரைப் பித்தனவி லாக்கினவர்களாய் புறப்படுவார்கள். அவர்கள் தங்களுடைய நபுஸில் ஸலாமத்து பெற்றாலும், மனிதர் அவர்களை விட்டும் ஸலாமத்து பெறார்களென்று திருவுளமானார்கள்.

இன்னும் றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள், நான் சொர்க்கத்தைப் பார்த்தேன், அதிலுள்ளவர்களில் பெண்பிள்ளை குறைவாயிருப்பதைக்கண்டு கேட்டேன். அவர்களைப் பொய்யும, காயங்காச்சும் சேலையும் சொர்க்கத்தை விட்டும் பறக்காக்கி விட்டதென்று சொல்லப்பட்டது.

ஹதீது.

பெண்பிள்ளை ஔறத்தாயிருக்கும். அவளை வீட்டில் தடுங்கள். அவளை வெளியில் கண்டு நீ எங்கே போகிறாயென்று

கேட்டால், நஸலாளியை மினவ அல்லது மையத்து வீட்டுக்குப் போகிறே னென்பாள். நீங்காமல் அவள் தன்னுடைய கொடுங்கையை வெளியில் காட்டுமட்டும் ஷைத்தான் அவளுடனே யிருப்பானென்று கூறப்படுகிறது.

ஹிக்காயத்து.

ஹாதில் குலூபென்னும் கித்தாபில் வருகின்றது, முந்தின ஸாலிஹீன்களில் நின்று மொருவர் வெளியிலிருந்து வீட்டுக்கு வந்தார்கள். பெண்சாதி உத்திரவன்றி வீட்டை விட்டும் வெளிப் புறப்பட்டிருக்கிறதைக் கண்டு அவளைத்தலாக்குசொல்லிவிட்டார்கள். பின்பு அவள் வந்து கேட்டதற்கு சொன்னார்கள். எந்தப் பெண்பிள்ளையாவது புருஷனுடைய உத்திரவன்றி வீட்டை விட்டும் வெளிப் புறப்பட்டால் அவளை எழுபதினாயிரம் மலக்குகள் லஃனத்துச் செய்வார்களென்று வருகின்றது. ஒருத்திக்கு எழுபதினாயிரம் லஃனத்துப் பிடித்திருக்க அவள் என் வீட்டிலிருக்கிறதும், அந்த லஃனத்தில் சிலது என்னைத் தொடுவதும் தகாதென்று சொல்லிவிட்டார்கள்.

றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள், எந்தப் பெண்பிள்ளையாவது விரிப்பில் தன்னுடைய புருஷனுக்கு சதிமானஞ் செய்தால் அவள் பேரில் இந்த உம்மத்தாரில் பாதி பேருடைய பாவமுண்டென்று திருவுளமானார்கள்.

இன்னும் இதைச்சார்ந்த சில அஹ்க்காம் ஹதீதுகளும் ஜைனு முனுக்கின் அஹ்க்காம் ஹதீதுகளும் பின்னால் எழுதப்படும்.

22-ம் பஸல்.

இது இல்முல் கியாபா, இல்முல் பருசத்து என்னும் இல்முகளைப் பற்றிக் கூறுவது.

இந்த இல்முகள் மிகவும் சிறப்புள்ள இல்முகளாக விருக்கின்றன. அதாவது அங்கத்தின் உறுப்புகளின் குறிப்புகளைக்

கொண்டு மனிதருடைய குணங்களை யறிவதைப்பற்றிக் கூறுவது. இந்த இல்மில் காமிலீன்களாகிய தேர்ந்த பெரியோர்கள் ஒருவர் முகத்தைப் பார்த்த மாத்திரத்தில் நற்குணசாலியென்றும், அல்லது துர்க்குணசாலியென்றும் அறிந்துகொள்கின்றார்கள். நாமும் விரும்பில் திட்டமா யறியலாம்.

ஆகையால் ஷை இஸ்லாமானது இரண்டு பலனைத் தருகின்றது. அதில் முதலாவது, தன்னிலுண்டா யிருக்கும் உறுப்பின் குறிப்புகளைக்கொண்டு அதனாலுண்டாகும் கெட்ட குணங்களா யிருப்பதை விட்டுவிடவும், இரண்டாவது, அன்னியர்களுடைய அங்கங்களின் அடையாளங்களைப் பார்த்து அவர்களுடைய கெடுதியில் நின்றும் விலகி யிருக்க உதவியாகின்றது.

இன்னும் இந்த இல்மின் உண்மைக்கு அத்தாட்சியாக இந்த ஹதீது சாட்சியாகின்றது. அதாவது நம்முடைய ஆண்டவர்கள் முஹம்மது முஸ்த்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லாமவர்கள் திருவுளமானார்கள். நெட்டையர்களில் அபூபக்ரினிஸ் ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தவிர மற்றவர்களெல்லாம் மடையர்களென்றும், குட்டையர்களில் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தவிர மற்றவர்களெல்லாம் பித்றுவுடையவர்களென்றும் திருவுளமா யிருக்கின்றார்கள். ஆகையால் ஹுகமாவென்னும் தத்துவ சாஸ்திரிகள் சொல்லியபடி இல்முவின் கியாபாவை எழுதத் துடங்குகின்றோம்.

23-வது பிரிவு.

மானிட தேக அமைப்பைப்பற்றி கூறுவதாம்.

நாம் சுகாதார விஷயத்தைக் குரித்து முந்தினது தெரிந்துகொள்ள வேண்டியதாயிருக்கும் நமது தேகமும் தேகத்தின்

கருவி கருணுதிகளும் இன்னவிதமாக அமைக்கப்பட் டிருக்கின்றதென்பதையும், ஷை கருவி கருணுதிகளின்பிரயோஜனங்களையும், அவைகளினிடத் தமைந்திருக்கும் அற்புதகுணங்களையும், பாகுபாடுகளையும், அவை நமக்கு செய்யும் உதவிகளையும் நாம் முன்னர் அறிந்திராவிடின், சுகாதாரம் இப்படிப்பட்டதென்றும், அதை இவ்விதம் அநுஷ்டிக்க வேண்டுமென்றும், இன்னவிதமாக நடந்துகொண்டால் தேகத்திற்கும் தேகத்திலுள்ள கருவி கருணுதிகட்கும் சுகமுண்டாகுமென்றும், இன்ன வகையில் நடந்துகொண்டால் கெடுதியுண்டாகுமென்றும் நமக்கு ஒருபோதும் தெரியவராது. ஏனெனில் உலகத்தில் ஆண்டவனால், படைக்கப்பட்ட வஸ்துக்கள் யாவற்றிலும் பலவகையுண்டு அதில் மானிட பிரவியே சிறந்ததென்று சகலசாஸ்திரங்களிலும் கூறப்பட்டிருக்கின்றது. இவ்விதம் மானிடப்பிறவி வாய்க்கப்பெற்ற ஒவ்வொருவருக்கும் எவ்விஷயங்களையும் ஆராய்ச்சி செய்து இது நன்மை இது தீமை என்று அரிந்துகொள்வதர்க்கும், அவ்விதம் அரிந்துகொண்டு உலகத்தில் சுகத்தோடிருப்பதற்கும் ஏதுவாகப் பகுத்தரிவு என்னும் ஓர் பிரதான அறிவு றஹ்மானென்னும் கடவுளால் நமக்கு அருளப்பட்டிருக்கின்றது. இப்பகுத்தரிவைக்கொண்டு நமது தேகத்தின் கண் அமைந்திருக்கும் எலும்பு, சதை, நரம்பு, கொழுப்பு, இரத்தம், தோல் முதலிய பிரதான வஸ்துக்களின் தன்மைகளைச் சிறிது ஆராய்வோம்.

24-வது பிரிவு.

இது சிரசு மூளை நெற்றி இவைகளின், அடையாளங்களைப் பற்றி சொல்வதாம்.

மூளை, துணைமூளை எனயிரண்டு மூளைகள் சிரசிலிருக்கின்றன. அந்த மூளைகளின் ஏற்றக்குறைவுக்குத்தக்கபடி புத்தியா

னது கூர்மையும் மந்தமாயும் பூர்வவாசனைப்படி அமையும் மூளை யானது சிரசளவில் பறந்து கவிழ்ந்திருக்கும் தலைபோட்டுக்கு உட்புறங்கொண்ட அளவு எவ்வளவோ அவ்வளவுக்கு நிறைந்த தாயும் வலது இடது இருபுரத்தையும் நோக்குவதுபோல் இரு பிளவுகாட்டிய கோடுவிழுந்ததாயும் இருக்கின்றது மேற்படி மண்டையோட்டுக்கு நிறைந்த அளவா யிருந்தபோதிலும் அடி யும் புறமும் ஒருநூல் அளவுகுறைந்ததாகவும் அந்த குறைவுக் குச் சரிவர ஜெலம் நிறைந்திருக்கும்.

துணைமூளையென்பது தலையின் பின்பக்கத்தில் கீழ்ப்பக்கப் கீழ்ப்பிடரியைப்பற்றி பந்துபோல் திரண்டவடிவாயிருக்கின்றது தலைமூளையின் எட்டில் ஒருபங்குகொண்டது துணைமூளை யள வாம் இந்த மூளைகள் உள்பாகம் அதிகவெண்ணிறமும் மேல்பா கம் சற்றுகம்மலான அரை வெளுப்பாயுமிருக்கும் மூளையின் மேல்புறம் பார்க்குமளவில் அதிக கிளைவிட்டுப்படர்ந்த மரம் போல் மூளையின் மேற்பாகந்தோறும் நரம்புகள்படர்ந்திருக்கும் மேற்படி மூளைமுற்றும் படர்ந்த நரம்புகள் காற்பதன்னியில் மூன்று சவ்வுகள் கவசமிட்டதுபோல் படர்ந்துசுற்றி மூடியிருக் கும் அந்த ஜவ்வுகளில் மேல்சவ்வு அதிக தடிப்புள்ளதாகவும் நடுச்சவ்வு மிகவும் மெல்லியதாயும் அதற்கு இடசவ்வுமகானுண் ணியதாகவும் இரத்தக்குழல்களால் பின்னப்பட்டதாகவுமிருக் கும் அந்த சவ்வுகள் எப்போதும் பசுமையாயிருக்குமாறு ஜெ லம் பரவியிருக்கும்.

முதுகு, கடைவாய் ஓங்கி நிர்கிரமுள்ளர்தண்டின் சார்ப் பாய் கைவிரலின் பருமனுள்ள ஒரு கொடியானது மூளையிலிரு ந்து முள்ளந்தண்டை யொட்டியிறங்கி யிருக்கும் இரத்தப்பாச் சலுக்கு துவாரமுடையதாயிருக்கும் இந்த கொடிமேல் தலை ப்பு குமிள்வடிவாய் மூளையை ஒட்டிக்காத்திருக்கும்.

பின்பக்க மிருக்கும் துணைமூளையைப்பற்றி சிறு நரப்புக ளான்து பெலங்கொண்டதாயும் வெண்ணிறமுடையதாயும் மூளையிலிருந்து கிளம்பி இரண்டுசோடுகளாகப்பிரிந்து முகத் தின் எப்பகுதிகளுக்கும் சென்று காது, கண், நாக்கு, மூக்கு இவைகளுக்கு ஆகாரமாகியும் இவைகளின் தொழிலுக்குக் கார ணமாயு மிருக்கிறது.

பெரிய சிரசாகவும் உருளைப் போல் மயிர்கள் அடர்ந்த தாகவும் யிருப்பது புத்திமதி அரிவு உணர்ச்சி தய்ரியம் தயாளம் இவைகளின் அத்தாழ்ச்சியாகும் இன்னும் சின்ன சிரசாகவும் அவலட்சணமானதாயும் மயிர்கள் வில்தீரண மாயுமிருப்பது மட்டிதனம் முட்டாள் மடதனமும் புத்தி குரைவான அத்தாழ்ச்சியா யிருக்கும் நெற்றி அதிக நீள மாயும் சுரிப்பும் வரிகளும் இல்லாம லிருப்பது துஷ்ட்ட குண மும் பெருமை கெவர்த்தி இதுகளின் அடையாளமாகும் நெற்றி விரிவிலும் நிகளத்திலும் மத்திபமானதாயும் சுருக்கங்களும் வரி களு முண்டாயிருப்பது அன்பு வுள்ளமை விவேகம் நல்ல அதி ஷ்டம் யோஜனை நல்ல புத்தி இவைகளின் அத்தாழ்ச்சியா யிரு க்கும் ஒடுங்குதலான விரிவற்ற நெற்றியாயிருப்பது வருமையும் தர்த்திரியமும் வெழ்க்கங்கெட்ட தன்மையா யிருக்கும் இன் னும் நெற்றி முளுதும் வரையும் சுருக்கமுண்டாயிருப்பது அதிக கோபமும் அகங்காரத்தின் அடையாளமாகும் இன்னும் நெற்றியில் வரையுண்டாயிருப்பது நீண்ட ஆயிசின் அடையா ளமாகின்றது (எஷ்னி) வொத்தவரையுண்டாய் யிருக்குமாகில் (10) வயதுக்கு அடையாளமாகும் இரண்டுவரை யுண்டாயிருந் தால் (20) வயதுக்கு அடையாளமாகும் அதர்க்கு மேல் இது போல் ஒவ்வொரு வரை அதிக முண்டாயிருக்குமாகில் பத்து வயது அதிகமென்று அரிந்துகொள்ளவும் இந்தபடி மேல் கண்டதின்படி சொல்லப்பட்டிருக்கின்றது.

25-வது பிரிவு.

இது புருவத்தின் அடையாளங்களைபற்றி கூறுவதாம்.

அதாவது புருவங்கள் பருத்ததாயும் நீண்டதாகவும் ரோமங்கள் அடர்ந்ததாயும் மிருப்பது துர்குணம் தான் யென்கிற கெருவம் மிடிமை பெருமை இதுகளினடையாளமாகும் புருவம் மிரண்டும் ஒன்றோடொன்று சேர்மானமாய் யிருக்குமாகில் அன்பு அபேட்சை பிரியம் இதுகளினடையாளமாகும் ஆண் பிள்ளையானால் ஸ்திரீகளின் மீது அதிக முஹப்பத்துள்ளவனாகவும் பெண்பிள்ளையானால் புருஷர்கள் மீது அதிக அன்புள்ளவளாயும் மிருப்பாள் இன்னம் மூக்கின் அருகு புருவத்தின் நுனி முனையா இருந்தால் வன்மத்தின் அத்தாள்ச்சியாகும் இன்னும் புருவங்கள் உயரமாகிருப்பது மூடத்தனமும் புருவத்தில் மயிர்கள் நீளமா இருப்பது வீரதத்துவம் கெட்ட குணம் சண்டை செய்கிரதின் அந்தாள்ச்சியாகும்.

26-வது பிரிவு.

கண்களின் வுள்கருவிகளைப்பற்றி கூறுவதாம்.

கண்களானது நெற்றிக்குமேல் கவிழ்ந் திருக்கும் கபலாமாகிய மண்டையோட்டின் முன்பக்கத்திலிருக்கும் குழிகளில் அதற்குத்தக்க வடிவாயும் கோழிமுட்டைபோல் உருண்டையாயும் பதிக்கப்பட்டிருக்கின்றது.

கண்களென் றமைக்கப்பட்ட உருண்டையின் முன்பக்கத்தில் வெண்மை நிறமான இரண்டு சவ்வுகள் அமைந்திருப்பதால் அதை வெள்ளைவிழியென்றுசால்லப்படும் அந்த

வெள்ளை சவ்வானது அதிகபலனுள்ளதாயும் கண்ணாடியைப் போல் உருவெளியுள்ளதாயும் பளபளப்புள்ளதாயும் நீர் பருவுதற்கு இடைவழியுள்ளதாயு மிருக்கின்றது.

மேற்கூறிய இரண்டு வெள்ளை சவ்வுகளுக்குப் பின்புறமாய் கருமைநிறமான ஒரு சவ்வு இரத்தப் பொறைபொருந்திய குழைகளினால் பின்னப்பட்டு கண்களின் வட்டம் முழுமையும் போஷிக்கத்தக்க இரத்தபாச்சலுடனிருக்கின்றது. அதற்கு பின்னால் கண்கள் வித்தியாசமாய் காணப்படும்படி பல நிறத்தைக்கொடுக்கும் ஒரு சவ்விருக்கின்றது மேற்கூறிய இரண்டு சவ்வுகளுக்கும் மத்தியில் ஒரு கரும்புள்ளியிருக்கின்றது அந்த புள்ளியானது திலர்தம்போன்ற பொட்டாகவிருக்கின்றது அதை கருவிழியென்று கூறுவது அந்த கருவிழியானது கருவூரில் அமைந்த அளவேயன்றி மற்றக் கருவிகள்போல் தேகத்தோடு வளருவதில்லை.

அந்த கருவிழிக்குப்பின்னால் அதைத்தாங்குமாறு ஒரு வெள்ளைச்சவ்வு மிகவும் மெல்லியதாயும் பார்வை நரம்புக்கு உள்ளுறையாயுமிருக்கின்றது அந்தபார்வை நரம்பானது இந்த சரீரத்துக்கு ஆதாரமாகிய கபாலமூளையிலிருந்து உற்பத்தியாகி இருகண்களின் பிற்பகுதிமட்டும் ஓடிகண்ணுக்குள்ளே பரவியிருக்கின்றது.

கருவிழி வெள்ளைவிழி இவைநிறைந்த அளவுக்கு மேற்புறத்தில் ஈசலிரகுக்கும் மெல்லிய மூன்று சவ்வுகள் ஒன்றின மேலொன்றாக கவசமிட்டதுபோல் மூடியிருக்கின்றது அதற்கு மேலும் மாசிமருமுதலிய தூசுகளொதுவும் கண்ணிற்படாதபடி காக்கும் பொருட்டு ஆறு சதைநரம்பு இலைகளும் கண்மடலெனப்படும் செப்பையிலிருக்கின்றன அவற்றிற்கு மாதசவாய் இரப்பையின் முனையளவும் இரகுபோல் ரோம அரும்புகள்

யானையின் செவிபோல் விசிறிக்கொண்டேயிருக்கின்றது கருவிழியானது கண்ணினுள்ள பலபகுதியிலும் சுத்திவருமாறு மெல்லிய நிணமிருப்பதால் யாதொரு சேதமுமின்றி எப்பக்கத்திலும் தாராளமாய் கருவிழி சுழலுகின்றன.

வெளிச்சம் அல்லது ஒரு வஸ்துவின் கிரணம் இவைகள் கண்ணுக்குள்ளே செல்லும்போதே கருவிழியின் பின்பக்கமிருக்கும் தரிசியமென்னும் வெண்மையான சவ்வானது அயக்காந்தம் இழுப்பதுபோலும் ஒன்றுக்கொன்று சுத்திரிக்கோல்போல குருக்கிட்டிழுத்துக்கொள்ளும் இதினால் கண்ணாடியில் படும் உருவம்போலே பிரதிவுருவம் யெதிர்ப்பட்டிலங்கும்.

கண்களைச் சூழ்ந்திருக்கும் சர்வ ஆகாரங்களுங்கடந்து யாதேனும் தூசி மாசி; இவைகள் கண்ணிற் படுமாயின் புறகூறுகிய கடைக்கண் பக்கமாயிருக்கும் நீர்க்கோளம் அல்லது நீர்ச்சவ்விலிருந்து சுரக்கும் நீரானது கண்ணீரெனப்படும் அந்த கண்ணீரானது கண்முழுமையும் பரவுமளவில் அப்போது ஜன்னலின் இரக்கைபோன்ற ரெப்பைகள் விசிறிக்கொண்டிருக்கும் அப்படி விசுறுவதினால் அங்ஙனமுள்ள தூசுகளைத் தள்ளித் தள்ளியும் கண்ணீருடன் கலக்கச்செய்து மூக்குத்தண்டின் அடியாயும் கண்களின் உட்கூறுயுமிருக்கும் கண்ணாடியின் உட்கூறுக்கு நேராய் வந்திருக்கும் நரம்புக்குழாய்களின் வழியாய் போக்கி மூக்குத்துவாரத்தின் வழியே வெளியாய்விடும்.

யாதொரு பொருளையும் நெடுநேரம்வரை உற்றுப்பார்ப்பதாலும் சூரியன் தீபம் மின்னல் இவற்றின் அதிகவொளிவுகள் கண்ணிற்படுமாயின் கண்களுக்குக் கெடுதியாகும் ஆகையால் அதற்குக்கெடுதி வாராவண்ணம் வாரத்திற்கிரண்டுமுறை தயிலந்தேய்த்து வென்னீரில் ஸ்நானம் செய்யவேண்டியது அவசியம்.

கண்களின் அடையாளங்கள், பெரிய கண்களாகவும் கருத்ததாயும், இருப்பது சடவுசோருவு இதுகளின் அத்தாட்ச்சியாகும். சின்னகண்களாகிருப்பது அகமானம் மட்டித்தனம் இதுகளின் அடையாளமாகும் நடுத்தரமானகண்ணுகிருப்பது நாணம் விசுவாசத்தின் அத்தாள்ச்சியாகும்உள்ளடங்கி பரிந்த கண்ணுக இருப்பது அகப்பெருமை கெடுதிபிரட்டு கள்ளத்தனம் துர்குணத்தின் அத்தாள்ச்சியாகிருக்கும் விரிவானகண்களாகவும் மினுமினுப்பு இல்லாமல் மங்கலாய் இருப்பது வம்பித்தனம் அகமானத்தின் அத்தாள்ச்சியாகும் அதிக ஜல்தியாய் கண் பொத்தி முழிப்பது திருட்டுத்தனம் சூதுவஞ்சகம் இதுகளின் அத்தாள்ச்சியாகும், பெரிய கண் சிவந்த நிரமா இருப்பது நீண்ட ஹயாத்து வீரதத்துவத்தின் அத்தாள்ச்சியாகும் பின்பு பூனைகண்ணுக விருப்பது அகமானம், பிச்னுரித்தனம், புத்திகெட்டதய்ரிமில்லாத தன்மையின் அத்தாள்ச்சியின் அடையாளமாகும் ஆஸ்மான் வர்ணமுள்ள சின்ன கண் துடிதுடிப்புள்ளதா இருந்தால், யெத்துதனம். காம பயித்தியத்தின் அத்தாள்ச்சியாகும். வட்டமான கண், மூதேவிதனத்தின் அடையாளமாகும் பெரிசிலும் சிரிசிலும் சிவந்த கருப்பினும் நீலமாயும் மத்திபமான கண்ணுகிரது நல்ல குணம் நல்ல சிநேகிதத்தின் நல்ல அதிஷ்டத்தின் அத்தாட்ச்சியாகும்.

---

27 வது பிரிவு.

இது காது மூக்கின் அடைய்யாளங்களைப்பற்றி கூறுவதாம்.

செவி என்பது உலகத்திலுண்டாகும் நற்றீச்செயல்கள் யாவற்றிலும் பிரயோகிக்கும் சத்தம் அல்லதுஒலிமுதலிய சகல

சொற்களையும் கேட்டு மனதுக்கு ஆறுதலும் சந்தோஷமும் உண்டுபண்ணுவதற்குரிய உருப்பாயிருக்கின்றன. இது வெளிக்காது நடுக்காது உட்காதுயென மூன்றுவகுப்பாயிருக்கின்றது. வெளிக்காதுமுகத்தையெடுத்தபாகமாகவும் தலைக்குபுறம்பாகியும் தோற்றப்படும் சிலையைப்போன்ற வளைவாக நரம்புகளால் வளைக்கப்பட்டு அந்நரம்புகள் தோற்றாகபடிதோலினால்மூடப்பட்டு இவற்றிற்கு நடுவே துவாரமுள்ளதாயிருக்கின்றது.

அந்த துவாரத்தின் வழியாய்பூச்சி புழுமுதலிய சிற்றினங்கள்புகுராதபடி நடுக்காதினிடமாகக் குரும்பியென்னும் ஒருவித பசை வளர்ந்துகொண்டிருக்கும் மேற்படி குரும்பி அதிகப்படாவண்ணம் எடுத்துவிடுவாராகையால் குரும்பி வளரப்பெற்றயிடத்திற்கு உட்புறம் துவாரத்திற்கு அறைத்திட்டமாக உருவெளியான ஒரு சவ்வு வளர்ந்திருக்கும் அதற்கப்புறம் மகா நுண்ணியதான நாலுயெலும்புகள் ஒரே கோர்வையாய் நடுக்காதில்கிடக்கின்றன. அக்கோர்வையின் ஒரு தலைப்பு உட்பக்கமும் மற்றொரு தலைப்பு வெளிக்காதினிடமாயுள்ள குவளைபோன்ற பள்ளத்தாக்கில் தொடுத்திருக்கின்றன. காற்று நுழையும்பொருட்டாய் நடுக்காதிலிருந்துபின் தொண்டை அருகுவரையிலும் சிறுநரக்புக்குழை ஓடியிருக்கிறது வாய் - மூக்கு - காது இம்மூன்றுருப்புகளின் வழியாய் காற்றுபோக்குவருத்துமுண்டு சற்றுலேசான மூச்சுபிடித்தால் மேற்படி மூன்றுருப்புகளையும் மூடிக்கொண்டு மூச்சினைஸ்தம்பித்தால் விட்டு விடும் கேள்விநரம்பானது மூளையிலிருந்துஉற்பத்தியாகி உட்காதுக்குஉள்ளே புகுந்து அந்த உட்காதின் புரைக்குழியிலிருக்கும் சவ்விலுள்ள நீரில் மிதந்துகொண்டிருக்கிறது. இந்த கேள்விநரம்பானது உட்காதின் பகுதிமட்டும் அடக்கபா யிருக்கின்றது. இந்தநரம்புக்கும் சவ்வுக்கும் ஆதாரவாக நடுக்காதினளவில்நாலு சிறுயெலும்புகள் மூன்று அறைகளுள்ளனவாய் சிக்கும்முக்கும் சுத்தும் சுழற்றலுமுள்ள குடைபோல் தாவியிருக்கின்றது.

வெளிக்காதிலடையும் ஒலி அல்லது சப்தங்கள் ஒன்ருய்த்திரண்டு நடுக்காதுக்குள் செல்லும்போது அந்தநடுக்காதிலுள்ள சவ்வு அதிர்ந்து உள்காதோடே தொடுத்திருக்கும் எலும்புக்கோர்வைவழியாய் அந்த அதிர்ச்சியைசேர்த்துவிடுவதும் அந்த அதிர்ச்சியானது கேள்விநாம்பின் கூந்தலில்பட்டு அந்தநரம்பின்வழியாய்மூளைக்குட்சென்று தாக்குவதினல் அந்த ஒலியின் பயனை மனம் அறிந்து சுகதுக்கத்திற்கிடாய் சம்பநதப்படும்.

பெருத்த காதாயிருப்பது நல்லெண்ணம் கியாபகத்துவம் நீண்ட ஆயுல் சுறுசுறப்பு இவைகளின் அத்தாழ்ச்சியாய் இருக்கும் இன்னும் சின்ன காதாயிருப்பதுமட்டித்தனம் தெம்மாடி தனத்தின் அடையாளமாகும் நடுதரமான காதாயிருப்பது புத்திமதி நல்லறிவு நல்ல பாக்கியத்தின் அத்தாழ்ச்சியாகும். காதின் மடல்கள் சதை வுள்ளதாயிருப்பது செல்வத்தின் அத்தாழ்ச்சியாயிருக்கும்.

மூக்கின் உள்கருவிகளைப்பற்றி கூறுவதாம்.

மூக்கு என்று மருவப்பெற்ற நமது நாசியானது பிராணவாயுவாகிய சுவாசக்காற்று செல்லவும் திரும்ப உள்ளுக்குவரவும் ஆதாரியாக விருக்கின்றது. பிராணவாய்வு சஞ்சாரமாக விருக்கின்றமையால், புலன் ஐந்தில் இதைமாத்திரம பிரதானமாக யெண்ணலாம் இந்த நாசின் துவாரமானது இரு புருவத்தின் மந்திபிலிருந்து இரண்டு கண்களுக்கும் மண்டையிலுள்ள பெருமூளைக்கும், தொண்டைகுழிக்கும், வழியுள்ளமுச்சந்தியாயும் அந்த முச்சந்தியிலிருந்து பகிர்முகமாயும் இரு துவாரமாகப் பிரிந்து முனைநாசிக்கு மூக்கென்று பெயர்பெற்றது.

நாசித்துவாரத்தின் முச்சந்திக்கிடையில் சளியூரும் சவ்வுகள் மூடிக்கொண்டிருக்கிறது. காற்றின்வழியாக மணம் பரு

கும் அதாவது, வாசனை அறியும் நாற்ற நரம்புகள் மிகவும் சிறு யிழைகளுக் கொப்பாக கூந்தலைப்போல் நாசி துவாரத்தின் ஆரம்பத்தில் அடைந்திருக்கிறபடியால், அந்த நாற்ற நரம்புகளுக்கு சேதம் வாராதபடி அதில் சளியூரும் சவ்வினால் மூடப்பட்டிருக்கின்றது. அதில் எப்போதும் சளியும், நீரும், சுரந்துகொண்டிருக்கும் யாதாமொரு பொருள்களை மணக்கும் போது அந்த மணமானது நாற்ற நரம்பென்னும் கூந்தல்களின் வழியாய் மூளைக்குச்சென்று அவ்கேமணமானது உணர்ந்துகொள்ளுகின்றது. இந்நாசியென்னும் புலனானது நல்ல வாசனைகளை முகரவும் துர்வாசனைகளை ரேசிக்கவும் இந்நரம்புக் கூந்தல்களே காரணமாகவிருக்கின்றது புகையிலைப்பொடி போடுவதினால் அங்குள்ள நாற்றநரம்புகளின் தொழில்களை நடத்தவொட்டாது அங்கு அழுக்குகள் சேர்ந்துதடைப்படுத்தும் இதுவுமன்றிசளியூறும் சவ்வையும் தடிக்கப்பண்ணும், இவ்வித குற்றங்களுக் கிடங்கொடுப்பதினால் மூச்சுதடைப்பட்டு மூக்கின்வழியாய் வரவேண்டியசளி முதலிய வஸ்துக்கள் வாய் வழியாய்வரும்.

(மூக்கின்குகறிள்,) மெல்லிய மூக்காயிருப்பது, கொஞ்சத்தனம் புத்தி, யீனதின் அத்தர்ழ்சியாகும். அகலமான மூக்காகவும் நாசிதுவாறம் விரிவாயிருப்பது அதிக காமத்தின்பெரும் துஷ்டத்தனத்தின் அத்தாழ்சியாயிருக்கும், பின்புதிருத்லான மூக்குகள் ஆச்சாறம் நகிடிதனத்தின் அத்தாழ்சியாகும். நீளமான பெரும் மூக்காயும் நுனி, கிளி, மூக்கைப்போல் வளவாய் இருப்பது பெரும்செல்வத்தின் அத்தாட்சியாயிருக்கும். மூக்கின், நடுகு தாழ்ந்திருப்பது, மிடுமை நகவறட்சியின் அத்தாட்சியாயிருக்கும்.

28 வது பிரிவு.

பல்லுகளின் எண்ணங்களைப்பற்றி கூறுவதாம்.

பல்லுகள் மொத்தம் 32.

இவற்றில் மேல்தாடை எலும்புக்குழிகள்	16
கீழ்தாடை எலும்புக்குழிகள்	16.

குழந்தைகளுக்கு ஒவ்வொன்றுக் தாடையொன்றுக்கும் பத்துபல்லுகள் முளைத்து ஆறுவயதுமுதல் பதினாறு வயதுக்குள்ளாக அவைகள் விழுந்து அதன்பிறகு தாடையொன்று க்கு பதினாறு பல்லுகளாக வேறே நிலையான பல்லுகள் முளைக்கும் மேல்வரிசை கடைவாய்ப்பல்லுகள் ஆறும் கீழ்வரிசை கடைவாய்ப்பல்லுகள் ஆறும் ஆக பனிரெண்டு பல்லுகட்கும் மும்மூன்று வேர்களும் மற்ற பல்லுகளுக்கு ஒவ்வொரு வேறு மிருக்கும் அந்த வேரிலிருக்கும் துவாரங்களோடும் சிறுநரம்பு கள் ஓடியிருக்கும்.

நாம் அருந்தும் சகலபதார்த்தங்களையும் தீனிப்பையினிடமாக இலேசாய் சமிக்கத்தக்கதாக நசுக்கி அரைத்துவிடும் அன்றியும் பேசும்பொழுது சொற்களையும் எழுத்துகளையும் தெளிவாய் உச்சரிக்கப்பண்ணுவதும் பல்லுகளின் தொழிலாம் அவைகளில் வியாதியணுகவொட்டாமல் அவைகளை சுத்தமாக வைத்திருக்கவேண்டும்.

இது வுதடு, வாய், பல்களின், அடையாளங்களைப் பற்றிக் கூறுவதாம்.

வுதடு, பெருந்து தடிப்பாயிருப்பது, புத்தி, குறைவு, துஷ்டத்தனம், குரோதம், இதுகளின் குறிகளாம். மெல்லிய உதடு விவேகம், நல்ல அழகானவாக்கியம், நல்ல குணத்தின் அடைய

ளம். சிவந்தவுதடு, நல்ல அமிசையுடன், சந்தோஷத்தின் அத்தாட்சியாகும், பின்பு, வுதடு நீலவர்ணமாயும் கருக்ததாகவுமிருப்பது, கெட்டகுணமும் போக்கிரிதனத்தின் அத்தாட்சியாகும்.

(வாயின் அடையாளம்) பெருத்த பல்களாயும், நெருங்கினதாய் இருப்பது கெட்ட நடத்தையின் அத்தாட்சியாகும். சின்ன பல்களாகவும் பல்களுக்கிடையில் துவாரமுமுண்டாயிருப்பது வுடம்பு சவுக்கியம் வுண்டாயிருப்பதின் அத்தாட்சியாகும். பல்கள் தெத்து பல்களாயிருப்பது குபாடம், வஞ்சகம், சூதுவாதுகளின் அத்தாட்சியாக விருக்கும். பெரிசிலும் சிரிசிலும் நடுத்தரமாயும் ஒழுங்காயிருப்பது நல்ல சம்பத்து சொல் சுத்தியின் அத்தாட்சியாயிருக்கும், பல்கள் முப்பதுக்குமேல் முப்பத்திரண்டு வரையிலுமுண்டா யிருப்பது செல்வம் நல்லரிவின் அத்தாட்சியா யிருக்கும் முப்பத்துக்குக் குரைவா இருப்பது மிடுமையின் அத்தாட்சியா யிருக்கும்.

---

29 வது பிரிவு.

இது நாவு அண்ணம் கீழ்வாய் கழுத்து முகத்தின் அடையாளங்களைப்பற்றிக் கூறுவதாம்.

அன்னபானதிகள் செல்லும் தொண்டைத் துவாரமானது வெணண்குருத்து எலும்புகளால் ஒருவிரல் செல்லக்கூடிய இடமுள்ள குழையா யிருக்கின்றது அதின் மேல்துவாரம் முக்கோணவடிவாயும் கீழ்துவாரம் விரல்பருமனுடைய வட்ட வடிவமாயுமிருக்கின்றது அந்த துவாரத்தின் இடையே பக்கத்திற்கு இரண்டாக நாலுசவ்வு முடிச்சுள்ளதாய் நாக்கின் கீழ்தாடை

சுவாசக்குழல் இவைகளுடன் பொருந்தியிருக்கின்றதாம். அந்த சவ்வுகளுக்கு குரல் நரம் என்று பெயர். மேற்படி நாக்குகளுக்கு இடையிலிருக்கிற வெடிப்பு அறைகட்கு முடிச்சிவாயல் என்று பெயர். அந்த நாக்குகளுக்கு வலம் இடமாகக் கீழ்மேலும் இருக்கும் இரண்டு பாகத்திற்கும், இடைவெளிக்கு முடிச்சுக்குழல், யென்றுபெயர். அந்த முடிச்சுகளானது அடிநாவில் பொருந்தி மிதந்துகொண்டிருக்கும், நாமுண்ணும் ஆகாரங்களை சுவாசக்குழியில் செல்லாதபடி காவல்பண்ணுவது, மேற்படி நாணங்களென்னும் முடிச்சுகளின் தொழிலாம். இந்த முடிச்சுகளின் காவல்கடந்து ஏதேனும் ஒலி அணுவளவு தின்பண்டங்கள் சுவாசக்குழையில் சென்றால், புரையேறிற்றென்று சொல்லுவர். நாம்பேசுவதற்காய் ஆரம்பிக்கும், தொனிகளுக்கு மேற்படி சவ்வாகிய நாணங்களும் நாவின் அடிப்பக்கமுள்ள இரண்டு முடிச்சுகளும் ஒருமித்து கடித்து எழும்பி தொண்டைக்குழியை விலகி யிடங்கொடுத்தால் மாத்திரம் சத்தம் பிறக்கிறது.

30-வது பிரிவு.

இது நாவின் கருவிகளைப்பற்றிக் கூறுவதாம்.

சரீரமாகிய நமது உடலை வளர்க்குமாறு நாம் உண்ணும் சுவை முதலிய வஸ்த்துவுகளின் ருசியை அறியப்பண்ணும், புலனும் இதற்கு (நாவு) அல்லது நாக்குயென்று மருவியது நமது நாக்கானது நீர் ஊறும் சவ்வினால் மூடப்பட்டு அதாவது தசை இலைகளின் அடுக்கின்பேரில் நீரூறும் சவ்வினால் சௌவ்வப்பட்டிருக்கிறது. இந்த நாவின்பேரில்நாக்கடுமென்னும் சிறு கூர்மையான முள்கள் அமைந்த சவ்வினால் பாய்விரித்தது போல் நாவின்மீது மூடப்பட்டிருக்கிறது. அந்தமுள்களின் கீழ்ப்புறத்தில் ஒவ்வொரு முள்களுக்கும் சுவைபருகும் வேர் இணைக்கப்பட்டு கூந்தல் இரங்கியதுபோல் நாவின் முழுமையும் நுண்ணிய சிறுவேர்களிறங்கி யிருக்கின்றது. நாமுண்ணும் சுவைகளுக்குத் தக்கபடி நாவின்முள்கள் தடிப்புண்டாகி நீர்சுரந்து

சுவையை அல்லது ருசியைப்பார்க்கும் கடும்புளிப்பு வஸ்துக்கள் நாவில் படுமாகில் நாவிலுள்ள முள்கள் யாவும் எழுச்சியுண்டாகி யிருந்த தடிப்பாகத்தோற்றும நம்மைப்போலவே மற்ற ஜீவராசிகட்கும் அதனுகளுக்கு இணக்கமான உணவுகளை சுவையறிந்து தின்னும் இணங்காத வஸ்துக்களை தள்ளுவதற்கும் பிரதானமான கருவியாக விருக்கின்றது.

நாவும் அண்ணமென்னும மேல்வாயும் சிவந்து இருப்பது யோகசாலித்தன்மையின் அத்தாழ்ச்சியாகும் கருப்பு நிரமாயும் மஞ்சள் நிரமாயுமிருப்பது நிர்பாக்கியத்தின் அடையாளமாகும் கீழ்த்தாவாயானது மெலியதாக யிருப்பது நல்லவர்க்கு அடையாளமாகும் சதைஉள்ளதா யிருப்பது தெம்மாடித்தனம் பெருமை பாராட்டுதலுமான அத்தாழ்ச்சியாகும் நடுத்தரமாயிருப்பது போகம் கைத்தொழில்வித்தை இதுகளின் அத்தாழ்ச்சியாகும். கழுத்தாகிறது கட்டை கழுத்தானல் வீரதத்துவமில்லாத தன்மையாகும்கழுத்தில் ஒரு வரி உண்டாயிருப்பது நீண்ட ஆயுள் இரண்டுவரி உண்டாயிருப்பது கைதொழில் கூர்மையும் மூன்றுவரி உண்டாயிருப்பது பெருத்த வாழ்வின் அடையாளமாகும் முகம் சதையுள்ளதாயிருப்பது சோம்பேறித்தனம் நினவுமாறி மடத்தனம் இவைகளின் அடையாளமாகும்.

சதை தளதளப்பாயுமில்லாமல் வறச்சியுள்ள முகம் கபடத்தின் அடையாளமாகும் நல்ல வஜீகரமுள்ள முகமானல்நற்குணத்தின் அடையாளமாகும்.

31-வது பிரிவு.

இது தோள் அக்குள் பின்னங்கை மார்ப்பு இதுகளின் அடையாளங்களைப்பற்றி கூறுவதாம்.

(தோளின் அடையாளமாவது) தோள் மெலிந்து யிருப்பது கெட்டவழக்கமும் மெத்த விரிவான தோள்மடத்தனமும்

தோளின்மேல் உரோமம் முளைத்திருப்பது நிர்பாக்கியமும் நடுத்தரமான தோள் நல்ல புத்தி, பாக்கியம், நல்லதிஷ்டம், இவைகளினடை யாளமாகும் (அக்குள் பின்னங்கையின் குறிகள், அக்குள் சதையுள்ளதாயும், புறங்கைப் தண்டு நீண்டு யிருப்பது யோகசாலித் தனத்தையும், வேலைதொழில் விர்த் தியையும், அக்குள் வறட்சியும், புறங்கைப் கட்டையாயு மிருப் பது வருமை தனத்துக்கு அடையாளமாயிருக்கும். மார்பு விரிவாயும், சதையுள்ளதாயு மிருப்பது, நல் பாக்கியத்தின் அத்தாட்சியாகும் குறுகியமார்ப்பும் சதையில்லாதிருப்பதும் மிடுமைத்தனத்தின் அடையாளமாகும்.

இது ஸ்தனத்தின் அடையாளங்களைப்பற்றி
கூறுவதாம்.

இரண்டு ஸ்தனமும் ரொம்பவும் பெருத்திருப்பது அதிக பாக்கியம் புத்திர சம்பத்து விர்த்தியும் இன்னும் ஒன்று பெருத்தும ஒன்று சிறுத்தும் இருப்பது தர்த்திரியத்தின் அடையாளமாகும்.

32-வது பிரிவு.

வயிற்றினுள்ளிருக்கும் கருவிகளின் விபரங்களைப் பற்றிக் கூறுவதாம்.

1-வது, உமிழ் நீர் கோளமென்பது நாவுக்கு அடியிலும் இருதவடைகட்குள்ளும் காதுகட்கு அடுத்த உட்பாகத்திலும் பக்கத்திற் கிரண்டாகயிருக்கும் அவற்றில் உமிழ் நீர் கரிப் புண்டாம்.

2-வது, மிடறு யென்பது அடிநாவிலிருந்து உற்பத்தி யாகி இரைக்குழல்மட்டும் ஓடியிருக்கிற ஓர்குழல் அதி சவ்வின்

இலைகளால் உண்டாக்கப்பட்டதாய் மூன்று அங்குல நீளமாயும் சற்றுவிசால முள்ளதாயுமிருக்கும்.

3-வது, இரைக்குழல் யென்பது ஒரு அடி நீளம் தடித்த சவ்வின்குழையாம் இதன்வழியாகத்தான் நாமுண்கிறபோஜனதின்பட்டங்கள் இரப்பையினுட் செல்லுகிறது.

4-வது, இரப்பையென்பது றப்பரைப்போன்ற இசிவுள்ள மெல்லிய மூன்றுசவ்வுகளால் அமைக்கப்பட்டிருக்கிறது இந்த இரப்பையானது நெஞ்சுகுழிக்குக்கீழே அடிவயற்றுக்கு மேலே உடம்புக்கு நடுப்பாகமாய்ச் சற்றே இடபாகத்தைச் சார்ந்தாற் போலிருக்கும் மேற்கூறிய மெல்லிய மூன்று சவ்வுகளென்பதில் வெளிப்படலம் மிகவும் அழுத்தமுள்ளதாயுந் நடுப்படலம் நுண்ணிய யிழைகளால் பின்னப்பட்ட அடுக்கடுக்காயுள்ளதாயும் உள்படலம் அதிக விசாலயிடந் தரத்தக்கதாயினும் அடுக்கடுக்காய் மடிப்பு பெற்றதாய் சுருங்கியிருக்கும் அம்மடிப்புகளில் சளி பரவியிருக்கும் அந்த மடிப்புப் படலமானது சிறுகுடல் பெறுகுடல்களுக்கு உள்ளுரையாய் அவைகளின் தொடர் நெடுகப்பரவியிருக்கின்றது. அன்றியும் ஜலப்பைகுண்டிக்காய் முதலியவைகளுக்கும், உள்ளுரையாய் ஓடியிருக்கின்றது.

5-வது, துணைக்குக்கியென்பது சிறுகுடலிலே மிகவும் ஆதாரமான ஒரு பாகமாய் அது ஏறக்குறைய பன்னிரண்டங்குலம் நீளமுடையதாய் இரைப்பையின் கீழ்துவாரத்தில் தொடுத்திருக்கின்றது. இதற்குள்ளே 'ஈரலிலிருந்து வருகிறபித்தநீர் நீர்க்குழையும் இதுவே குழையாயிருக்கின்றது.

6-வது, இரசாயனி யென்பது சிறுகுடலின் உட்பக்கத்திலிருந்து கிளையபுகிற மிகவும் சிறிய குழல்களாம் அதாவ

துவாரம் பொருந்திய நரம்புகளாம் அவைகள் மணிக்குடலுக்கு உள்ளே சென்று இரசதாரையிலே பொருந்தியிருக்கின்றது.

7-வது, குடல்களென்பது இருவகை அதாவது சிறு குடல், பெருகுடல் என்பதாம் துவாரமுள்ள சிறுகுழல் அல்லது சிறுகுடலென்பது 25-அடி நீளமுள்ள தாயிருக்கின்றது பெருங்குடல் யென்பது ஏறக்குறைய 10-அடி நீளமுள்ளதாயிருக்கின்றது. அவற்றின் முனைகளாகிய இருபகுதியும் மலாந்திரத்தையும் மலவாசயத்தையும் ஒட்டியிருக்கிறது.

8-வது, இரசதாரை யென்பது ஒருகுழல் அல்லது ஓர் குடல் யெனப்படும் அது ஈரலுக்குப் பின்பக்கந்தொடங்கி முள்ளந்தண்டின் முற்பக்கமாக யேறி அடிக்கழுத்தின் கீழ் நோக்கி முன்பக்கமாக மடங்கி தனக்குள்ளாகப் பிரவேசிக்கும் இரசத்தை இடதுதாரை யெலும்புக்குப் பின்னாகயிருக்கும் நாளத்திற்குள் செலுத்தும் நாளமென்பது இரத்தம்பொறையும் தசையிலைகளென்னும் மாமிசவடிவுகளாம்.

9-வது, ஈரலென்பது 12-அங்குல நீளம் 9-அங்குல அகலமும் நாலு இராத்தல் நிறையிமுள்ளதாம் கருமையும் சிகப்புப் கலந்த நிறமும் உதிரங்கலந்து தடித்த சிகப்பான ஒரு உருப்பாகும் அது வலதுபக்கம் விலாவிற்குள் வலது சுவாசப்பைக்கு கீழேயிருக்கிறது இதிலிருந்துபித்தநீர்பிறந்துஇந்தஈரலின்கீழ்ப் பக்கத்திலே மஞ்சள் நிறமான கசப்புகள் பித்தநீர் தங்கும்பை யொன்றிருக்கிறது மேற்பிறக்கும் பித்தநீர்யாவும் இந்த பையினிடமாகத் தங்கும் இந்தப்பைக்கு பிளிசையென்று பெயர் இந்தப் பித்தநீரானது இரைப்பையின் கீழ்துவாரத்தில் தொடுத்திருக்கும் துணைக்குக்கியென்னுங் குழலின் வழியாய்ச் செல்லுமாகில் சரீரம் யாதொரு ஆபத்துமின்றி சுகமாயிருக்கும் துணைக்குக்கி கீலின்வழியில் யாதேனும் தடைபட்டு பித்தப்

பையினிடமாகவே அளவுமீறி தங்குமாயின் பித்தம் அதிகமான அனேகவியாதிகள் சம்பவிக்கும் (கணையமென்னுங் குழை) இரப்பைக்குப் பின்புறம் சற்றுகீழாவிருக்கின்றது அதினுரு வம் உள்ளுவாரமுள்ளதாயினும் சப்பையாய் ஒடுங்கினதாகவும் நீண்ட உருப்பாகவுமிருக்கின்றது இந்த கணையமென்னுங் குழ லுக்குள்ள இரப்பையிற் கசியும் நீரும் துணைக்குக்கியில் பித்த நீரும் ஒன்றாய்ப்பொருந்தி மலப்பையினிடமாகச் செல்லும்.

10-வது, பிளிகையென்பது வட்டவடிவானதும் சற்றேகன தியுள்ள சப்பையான உருப்பாயும் கருமை நிறமுள்ளதாயுமி ருக்கின்றது அது இடதுபக்கமாக இரைப்பையோடும் இரைப் பையின் பின்பக்கமிருக்கும் கணையத்தோடும் சேர்ந்திருக்கிறது இந்தச் சரீரத்தில் காச்சல்கண்டு நீடித்திருக்குமாகில் அந்த உஷ்ணத்தைத் தாங்காமல் கணையமென்னுங் குழை இரைப் பையைத் தொடுத்திருக்கும் பித்தநீர்க்குழை இவற்றில் வரும் நீரை கிரகிப்பதினால் அந்த பிளிகையென்னும் உருப்பானது பெருப்பதுண்டு அதைக் காய்ச்சல் கட்டியென்பார்கள்.

11-வது, அவளிகையென்பது நாலுமடிப்புள்ள ஒரே சல் வாம் அது முந்தாணியைப்போல சதுரமுனைகளைக்காட்டி குடல் களுக்கு முன்னே தொங்கிக்கொண்டிருக்கும்

12-வது, குண்டிக்காயென்பது முள்ளந்தண்டின் அடிப் பாசத்தின் இடுப்பினருகே யிருபக்கத்திலுமிருக்கும் நான்கு ஐந்து அங்குலநீளமும் கனமுமுள்ள இரண்டு உருப்புகளாம் இவைகள் நிரைக்கோலிலுள்ள குண்டுகள்போல இரத்தப் பையை இழுத்திழுத்து இரத்தத்தினுள்ள நீரைப்பிரிப்பத னால் இரத்தம் சுத்தியாகிறது ஒவ்வொரு குண்டிக்காயிலிருந் தும் ஒவ்வொரு குழல்கள் கிளம்பி இரண்டுகுழல்களும் அடி வயற்றினடுவே யிருக்கும் ஜலப்பையை நாடியோடி அந்தப்

பையுடன் பொருந்துகின்றன அந்தக்குழல்களின் வழியாய் மூத்திரமானது சொட்டு சொட்டாய் இறங்கி ஜலப்பையை நிறப்புகின்றனவாம்.

13-வது பெரும் வயறு புத்திகேட்டையும் நடுத்தரமான வயறு கூர்மையான புத்தியும் நல்லறிவையும் இன்னும் வயற்றின்மேல் ஒரு வரி இருப்பது கத்திக்குத்தால் வெட்டப்பட்டு இறந்துபோவதின் அடையாளம் இன்னும் இரண்டு வரி ஆண்பிள்ளைகளுக்கு உண்டாயிருக்குமாகில் பெண்கள் பேரில் போகத்தில் அதிக ஆசையுடையவனாயிருப்பான்.

14-வது பெண்பிள்ளையானால் ஆண்போகத்தில் அதிகஆசையுள்ளவளாயு மிருப்பார்கள் யென்பதையும் மூன்று அல்லது நான்கு ஐந்து வரி உண்டாயிருந்தால் நல்ல புத்திமதி கல்விகளினடையாளங்களையும் வரி இல்லாமலிருப்பது நல்லகுணத்தின் அடையாளங்களை குறிக்கும். தொப்புள் பெரிதாயிருப்பது நல்ல அதிஷ்டத்தின் அத்தாட்சியாகும்.

33-வது பிரிவு.

முதுகினுள்ளிருக்கும் தசைகளின் நரம்பின்குறிகளைப் பற்றி கூறுவதாம்.

தசைநரம்பு என்னும் ஓர் வகைநரம்பு நமது தேகத்தில் சர்வஅங்கமும் இருக்கின்றன. இரத்தம் தேகத்துள் பரவுவதின் காரணம் தசைநரம்பின் பிரதானமே. இவ்வகைத்தான தசை நரம்புகள் கூடியே மாமிசம் அல்லது தசை உண்டாகின்றது. தசை நரம்பின் உருவம் அடி பெருத்தும் நுனி சிறுத்துங் காணப்படும். கண்ணுக்குப் புலப்படாத மிகு நுட்பமானநரம்புகள்

ஒன்றோடொன்று இணைந்து தசைநரம்புக ளுண்டாகின்றன. ஷெ தசைநரம்புகள் தேகத்துகள் பற்பல விசித்திரங்களாகக் கட்டப்பட்டிருக்கும். இவ்வித கட்டுகள் நமது தேகத்துள் சுமார் ஐந்நூறு கட்டுக ளிருக்கிறதாகக்கண்டிருக்கிறது. அவைகளுள் சில கட்டுண்டும், சில எலும்போடேயே ஒட்டிக்கொண்டுமிருக்கக் காணலாம். தசைநரம்புகள் நமது இஷ்டத்தைபோல் அவயவங்களை வளைக்கவும் நிமிர்த்தவும் மிக்க உபயோகமாய் இருக்கிறது தசைநரம்புகளின் வல்லமையினாற்றான். நாம் இங்குமங்கும் ஓடவும் நிமிரவும் குனியவும் படுக்கவும், இவை முதலிய கிரியைகளைச்செய்ய உதவியா யிருக்கின்றன இதனால், தசை நரம்புகள் இல்லாவிடின் நாம் இறந்துபோய்விடுவோ மென்று நன்கு புலப்படுகிறது. ஷெ தசைநரம்புகள் பலப்பட்டிருப்பதற்கு நாம் ஒவ்வொருநாளும் தேகாப்பியாசஞ் செய்தல் வேண்டும். கஷ்டமான தொழில் செய்வது நல்லது. இப்படிச் செய்யின் தசை நரம்புகள் மூதற்கொண்டு சகல அவயவங்களும் நல்ல பலத்தைப் பெற்றுத் தம்தம் தொழிலை இடையூறின்றி நடத்த ஏதுவாயிருக்கும்.

(முதுகு) அகலமாகிய முதுகு பெரும் கோபம் அதிக பெருமையும் வளைந்த முதுகு கெட்ட ஆதத்தும் நிகளமாகிய முதுகு மூதேவி தனமும் நடுதரமான முதுகு நர்பாக்கியம் நல்லதிஷ்ட்டமும் காட்டும் அத்தாட்ச்சியாகும.

34-வது பிரிவு.

இது நிறம் உடல் ஊரோமம் இவைகளைப்பற்றிக் கூறுவதாம்.

நிறம் சிவந்த நிறமும் படபடத்தபேச்சும் மனவருத்தமடையும், தன்மையும் பசுமை நிறம் வஞ்சகமாம் சிவந்த வன்மையான நிறம், நற்குண்மாம், கறப்பு கலந்திருந்தால்

கெட்ட துற்குணமாம் அழுகியபசுமை நிறமாவது நல்லறிவு வாழ்வின் இவைகளின் அத்தாட்சியாம்

35-வது பிரிவு.

உடலின் எலும்புகளின் யெண்ணங்களைப்பற்றி கூறுவதாம்.

மானிடரூபத்திற்கு தசைமுதலிய மாமிசங்கூடி தோலினால் போர்வை யிட்டிருந்தால் மாத்திரம் சரீரமென்று பெயர் தசையின்றிவெறும் யெலும்பினால் கோர்வையிட்ட ரூபத்திற்கு கங்காளமென்று பெயர் இந்தச் சரீரத்தொடுப்பாகிய யெலும்புகளானது வெண்ணிறமுள்ளதாயும் உறுதியான சவ்வினால மூடப்பட்டதாயும் அவைகளுக்கு அதிக பெலனைத் தரத்தக்க சுண்ணாம்பும் ஒருவிதப் பச்சைபழுப்பினதாயும் இளந்தையில் மெதுவுள்ளதாயும் நடுவயது வரையில் வளரப்பட்டதாயும் முதுமையில் இலேசாகத் தெரிக்கத்தக்கதாயும் வைரமுள்ளதாயு மிருக்கின்றது.

" நடுவயது பெற்ற சரீரத்தினெலும்புகள் யாவுங்கூடிய நிறைபலம் 320

" ஒன்றிரண்டென எண்ணிக்கையில் கூடிய எலும்பு 208

" இவற்றில் குழந்தைகளின் நெஞ்செலும்பு துண்டு 8

" இந்த எட்டுதுண்டும் பாலியத்தில் மூன்று துண்டாகவும் முதுமையில் ஒரே துண்டாகவும் மாறும்.

" கபாலத்தில் கருக்குக் கூர்மைகளால் இசைக்கப்பட்டிருக்கிற எலும்புத் துண்டுகள். 8

" செவிகளிரண்டிலும் சிறு யெலும்புகள் 8

" முகத்தினெலும்புக் துண்டுகள் 14

" நாவின் அடியினெலும்பு 1
" நெஞ்செலும்பு 1
" ஆசனப் பெருமெலும்புகள் 4
" பெருந்துவாரத்தின் வழியாய் ஒரு நரம்புக் கொடியி னல் கோர்த்திருக்கிற முழந்தண்டி னெலும்புகள். 24
" மேற்படி எலும்பு வலது பக்கத்தில் 12
" " இடது பக்கத்தில் 12
" தோள்பட்டை யிரண்டிற்கும் நெஞ்சறைக்குப் பின்பக்கமாய் முக்கோணவடிவான பட்டை யெலும்பு 2
" மேற்படி பட்டை யெலும்பு வலது பக்கத்திற்கு 1
இடது பக்கத்திற்கு 1
" காறை யெலும்புகள் 2

இந்த காறை யெலும்புகளும் மேற்படி பட்டை யெலும்புகளும் ஒவ்வொரு தலைப்பிலும் இருள்ளதாய் தோள்பட்டைக்கும் நெஞ்சறைக்கும் முதுகின் பின்படைவுக்கும் பொருந்தி நீளவும் குருக்கவும் இசைந்திருக்கும்.

நெஞ்சறைக்கு மேலே பின்புறமாக யிருக்கும் தோள் பட்டை யெலும்புகள். 2

" இவற்றில் வலது புஜத்திற்கு 1
"இடது புஜத்திற்கு 1

" முதுகடைவாய் ஒங்கிநிற்கும் தண்டெலும்பு யிருபாலும் கோர்க்கப்பட்டதாய் இருபக்கங்களிலுஞ் சூழ்ந்து குடல், ஈரல் முலியவற்றைத் தாங்கியிருக்கும் விலா வெலும்புகள். 32
" முன்கை யெலும்புகள் 4
" இவற்றில் இடதுகை யெலும்புகள் 2
" வலதுகை யெலும்புகள் 2

" கையின் அக்குள்களிரண்டிலும் இரண்டு நிறையாயிருக்கும் சிற்றெலும்புகள். 16

" உள்ளங்கை யிரண்டிலும் ஒவ்வொன்றிற்கு 5-எலும்புகளாக இரண்டிற்கு எலும்புகள். 10

" வலதுகையின் பெருவிரலி னெலும்புகள் 2

" மற்ற நான்கு விரல்களிலும் விரல் ஒன்றிற்கு 3-துண்டுகளாக எலும்புகள். 12

" இடதுகையில் பெருவிரலெலும்புகள். 2

" மற்ற நான்கு விரல்களுக்கும் விரல் ஒன்றிற்கு 3-துண்டுகளாக எலும்புகள். 12

" இந்தச் சரீரத்துள்ள எல்லா யெலும்புகட்கும் நீளமும் பெரியதாயு மிருப்பது துடையெலும்புகள் துடை ஒன்றிற்கு 1-எலும்பாக இரண்டு துடைகட்கும் எலும்புகள். 2

" முழங்கால் சிலெலும்புகள் 2

இந்த இரண்டெலும்பு முகப்பும் துடையெலும்பு முகப்புல் பந்துபோல் குமிழாகவும் இருமுகப்பும் கூடிப் பொருந்தற்கேற்ற கிலைப்போன்ற மட்டமுள்ளதா யிருக்கும்.

" முழந்தாட்கு அடியில் கால் யெலும்புகள் 4

" இவற்றில் வலதுகால் எலும்புகள் 2

" இடதுகால் யெலும்புகள் 2

மேற்கண்ட நான்கில் ஒன்று பெரிதும் ஒன்று சிறிதுமா

" கும் வலது பாகத்தின் யெலும்புகள் 26

இவற்றின் பின்பாகத்தின் யெலும்புகள் 7

நடுபாகத்தின் யெலும்புகள் 5

நுனிப்பாகத்திலுள்ள விரலெலும்புகள் 14

" இடது பாகத்தின் எலும்புகள் 26

இவற்றில் பின்பாதத்தின் எலும்புகள்	7
நடுப்பாதத்தின் எலும்புகள்	5
நுனிப்பாதத்தின் விரலெலும்புகள்	14

ஒன்றையொன்று பின்னி நிற்குமாறு நாறுக்கெலும்புகள் அநேகருண்டு. சில பெரியோர்களின் நூல்களில் ஆயிர மென்றுஞ் சொல்லப்பட்டிருக்கின்றன.

---

36 வது பிரிவு.

வுடலின் குறிகளை பற்றி கூறுவதாம்.

இன்னும் மெதுவாகிய உடல் திரமான புத்தியும் நற்குணமான வார்த்தையுமாகும் உரமானதெடத்த உடல் புத்திகேட்டினடையாளமாகும் இன்னும் தேரகத்தில் உரோமத்தினடையாளமாவது மிருப்பவும் அழுத்தமான உரோமம் வீரதத்துவத்தினடையாளமாகும். அதிக மெதுவான உரோமம் அதிக வெட்கத்தினடையாளமாகும் அதிக மெதுவாயும் அழுத்தமாயும் நடுத்தரமான உரோமம் வெளிரங்கமும் உள்ரங்கமும் உத்தமாயிருப்பதற் கடையாளமாகும் நெஞ்சின் மீதிலும் வயற்றின் மீதிலும் உரோமம் அதிகமாயிருப்பது புத்திகேட்டின் அத்தாழ்ச்சியாகும் உரோமம் குரவாயிருப்பது புத்தி, கூர்மை, நல்னடத்தை விரைதப் மாறல் இவைகளின் அத்தாள்ச்சியாகும் சிவந்தரோமம் வீரியம் நல்லபுத்தியின் அத்தாழ்ச்சியாகும். இன்னம் வொரு ரோமக் காலில் யிருந்து இரண்டு மயிர் உண்டாயிருக்குமாகில் சமர்த்தரின் அடையாளமாகும் மூன்று உரோமமுண்டாயிருப்பது தொழுகை நல்வணக்கத்தினடையாளமாகும் நாலு உரோமம் ஒரே மொத்தமாயுண்டா யிருப்பது சமர்த்தில்லா, ஏரும்பயே மாளித்தனத்தினடையாளமாகும்.

37-வது பிரிவு.

பிள்ளைக்கு பெண் கொள்வதைப்பற்றி கூறுவதாம்.

நம் தேசத்தவர்கள் பிள்ளைக்குப் பெண் தேடும் விஷயத்தில் அவரவர்களில் சிலர் தங்களது அந்தஸ்துக்குச் சமதையான அந்தஸ்தையும், சிலர் கால்வழியையும், சிலர் மேலினத்தையும் சிலர்சம்பத்தையுமாத்திரம்உத்தேசித்து கலியாணத்தை முடித்துவிடுகிறார்கள். சாதாரணமாக ஸ்திரீ புருஷர்களை நான்கு ஜாதிகளாக முன்னோர்களாலே பிரிக்கப்பட்டிருக்கின்றன. அதாவது, புருஷர்களில் உத்தமம், மத்திமம், அதமாதமம், எனவும் அதே பிரகாரமாக ஸ்திரீகளில் நான்கு வகுப்பாகப் பிரிவினை செய்திருக்கிறார்கள். அந்த ஆண் பெண்ணாகிய இருபாலாருள்ளும் ஜாதி வித்தியாசமாக அதாவது உத்தமஜாதிப்புருஷனுக்கு மத்திம ஜாதி ஸ்திரீயும், அதமஜாதி ஸ்திரீக்கு அதமாதம ஜாதிப் புருஷனுமாக ஏற்பட்டுவிடுகிறதாலேயே ஸ்திரீபுருஷாளுக்குள் ஒருவித சுகபோக ஒற்றுமையில்லாமல் ஒருவரையொருவர் விட்டுப் பிரிந்து அன்னிய சம்பந்தம் செய்ய ஏற்பட்டு விடுகிறார்கள்.

38-வது பிரிவு.

இது பலவிதமான அடையாளங்களைப்பற்றி கூறுவதாம்.

ஜவாஹிருல் கம்ஸாவில் சொல்லப்படுகிறது. இஷ்குடைய பெண்களாவது அறச்த்தா தாலீசு சொல்லியிருக்கின்றார்கள். பெண்பிள்ளைகளுடைய அடையாளங்கள் அனேகமுண்டு, அதில் சிலதை இங்கு சுருக்கமாக சொல்கிறேன்.

இப்போது நாம் அறியவேண்டிய கருமங்களாவது நாம் இவ்வுலகத்தில் நமக்கு அலாலான பெண்களைப்பற்றி சொல்வதாம்.

1-வது வெளிக்களத்து நீண்டவட்டம் கூடினதாயும் இரு தோள் புயமும் மிகுதி பருத்ததாயும் இரண்டு கால்களின் படங்கள் மெதுவாக யிருந்தால் தன் புருஷன் மீது அதிக பிரிய முள்ளவளா யிருப்பாள்.

2-வது, இரண்டு குரிகால், அதிக தடிப்பாயிருப்பதோடு திரேகத்தில் அதிக வுஷ்ன சூட்டினால் கண் நாக்கு சிவந்தும் இருக்குமாகில் தன், புருஷனோடு, ஷஹ்வத்தில் அதிக பிரிய முள்ளவளா இருப்பாள்.

3-வது, இருகண் சுருமாயிட்ட கண்களைபோலும் முகம் யெப்போதும் சிரித்தமுகமாயும் மூக்கு கவ்சம் யிட்ட மூக்காய் இருப்பதும் நல்வணக்கம் தொழுகை இவைகளின் மீது அதிக பிரியமும தன் புருஷன் சொல்லிய வார்த்தைகளை தட்டி நடச் காதவளுமா யிருப்பாள்.

4-வது, கண்கள் பெருத்ததாகவும் மூக்கு ரொம்ப பெருத்ததாயும் அதிக விரிவான முகமும் தலைமுடிகள் விரிந்து பறட்டை தலையைபோலும் யிருப்பது அதிக ஜிமாவில் விருப்பமுடையவளா இருப்பாள்.

39-வது பிரிவு.

இன்னும் ஆண்சாதி பனிரண்டு பெண்சாதி பனிரண்டாயிருக்கும் அவர்கள்வுடைய யின்பசுகங் களும் பனிரண்டு வகையாயிருக்கும்.

ஆனதால் அதற்குத் தக்கபடி புருஷனுக்கு பெண்ணும் பெண்ணுக்கும் புருஷனும்சாதி பேதகம் யில்லாமல் கெடைத்து

விடுமாகில் வொருவரை மற்றொருவர் கொஞ்சநேரமாகிலும் பிரிந்திருக்கமாட்டார்கள்.

40-வது பிரிவு.

இது தன் ஹலாலன பெண்ணும் புருஷரும் இருக்கவேண்டிய லெக்ஷணங்களைப்பற்றி சொல்வதாம்.

பெண்சாதி புருஷரும் அழகும் பலமும் தீர்க்கஆயிசும் முள்ளபிள்ளைகளை தரவேணும் என்ற யெண்ணத்துடன் நம்மை அர்பஜல அக்கினியால் அளியாமல் காவல் செய்யபட்ட ரகுமான் பேரில் அதிக பூணிப்புடன் இருந்து கொள்ளவேணும்.

இன்னும் நமது ஹலாலன பெண்ணை அவளுடைய முன்னெற்றி ரோமத்தை பிடித்து இருவரும் பாறகல்லாஹு லிகுல் லிமின்னுமீஸாஹி பிஹி யென்று சொல்வதும் யாதாவொரு பேச்சும் பேசமுன் இருவரும் ஆண்டவன் பேரில் சுகுர் செய்து இரண்டு றக்அத்து தொழுவதாம் சுன்னத்து.

இன்னும் நல்ல உடைகளை அணிந்து கொண்டு கஸ்தூரி முதலிய வாசனை திரவியங்களை பூசிக்கொண்டு தாம்பூலம்தரித்து சீவிசிங்காரித்து இருவரும் மனகளிப்புடன் அன்போடுங் கூடி ஆனந்தத்தை யுண்டாக்க கூடியவரை பேசிக்கொண்டிருப்பது பின்பு.

41-வது பிரிவு.

புருஷன் பெண்ஜாதிக்கிடையில் கலந்துரவாடுவதின் விவரங்களைப்பற்றி சொல்வதாம்.

புணர்ச்சிக்குரிய நாயக நாயகிகளிருவரும் இரவிலே போஜனம் செய்த பின்பு வீட்டிலாவது வெளியிலாவது சிறிது நேரம் உலாவிக்கொண்டிருந்து பிறகு சயன அறையையடைந்து படுக்கையைச் சுத்தப்படுத்தி அதன்மேலிருவரு மிருந்துகொண்டு தங்களாலியன்றவரையில் கெட்ட எண்ணம், கோபம், பயம் முதலியவைகளை நீக்கிச் சந்தோஷசித்தர்களா யியன்றவரையில் ஆடையாபரணாதிகளாலலங்கரித்துக்கொண்டு வாசனைத்திரவிய மணிந்து பரிமளமான நறுமலர் சூடித் தாம்பூலந்தரித்துக்கொஞ்சமேனும் வேறு ஞாபகமில்லாமல் சரச சல்லாபத்துக்கும் காம விரகத்துக்கு ஏதுவான தாகவும் நல்ல அமல்களைப்பற்றி பேசும்போது நாயகன் மனைவியினது முகத்தையும் நாயகி நாயகனுடைய முகத்தையுந்தவிர வேறொன்றையும் பாராமலும் நல்ல செய்கைகளால் மனைவிக்குக் காமவிரகத்தை மூட்டவேண்டும். அவ்வாறு காமவிரக முண்டானதற் கடையாளமாகக் கண்கள் சிவந்து சேரும், வார்த்தை குளறும், போகவழுகை தோன்றலும் தனங்கள் விம்முதலும், பரவசமாகமயங்கிப் புருஷனை ஆசையோடு அணையவருதலுமாகிய தருணத்தில் நாயகன் அதிக சந்தோஷத்தோடு கூடிக் கலவினைய முடித்துப்பின்பு இருவரும் முளிக்கின் பாலே பற்றி முடித்துக்கொண்டு ஏதேனும் தின்க பிரியமிருப்பின் பின்னால்கூறுவதையறிந்து உட்கொள்ளலாம்.

42-வது பிரிவு.

புணர்ச்சிக்குப் பின் அருந்துவதைப்பற்றி சொல்வதாம்.

இப்போது நம்சகோதரர்களில் பெரும்பாலார் சம்போகத்துக்குப் பின் தண்ணீர் அல்லது குளிர்ந்த பானங்கள் செ

துவருகின்றார்கள். அப்படிச் செய்வதால் பட்சவாதம், முக வாதம், கரல் நடுக்கம் முதலிய நோய்களுண்டாகும்.

நமது நாட்டில் முன் வுண்டாகிய கல்வியில் சிறந்த நன் பர்களாகிய பெரியோர்களாலும் அருள்செய்து யிருந்த சில பிரதிகளை தமிழ் கிரந்தபடி சொல் பிசகாமல் சீர்திருத்தத்து டன் சிலதை இதனுடன் சேகரிக்கப்பட நேர்ந்தது. இதை பற்றி யாவருக்கும், விளக்கமான பொருளே அன்றி இந்த பொருள் வொருவரும், சொந்தமாய் விடாது, ஆனதால் இதை பார்த்த புண்ணியவான்களாகிய, பெரியோர், சிறியோர், யாவ ரும் நற்கெதி அடையும்படி ஆண்டவன் யாவருக்கும் எனக்கும் நல்லிரணம் கொடுப்பானாக, ஆமீன், யாரப்பில் ஆலமீன்.

43-வது பிரிவு.

முதலாவது வகுப்பு பெண்ணின் குறிகளைப்பற்றி சொல்வதாம்.

மாதர்களின்ஜாதியும் இலக்ஷணங்களையும் சொல்வதாம்.

மண்ணுலக மாதர்களை மூன்று வகையாய்ப் பிரித்து கூறப் படும். அதாவது பெண்மான்ஜாதி, பெட்டைக் குதிரைஜாதி, பிடி.யானைஜாதி, என்பதாம். இவைகளுள் பெண்மான் ஜாதி யாள், சுருங்கி நெளியோடிருக்கும் கூந்தலும், கொவ்வைக் கனி போன்ற இதழும், மான்போன்ற மருண்ட பார்வையுடையகண் களும், பெண்யானை நடையும், மின்னற்கொடிபோல் துவளு கின்ற இடையும், மகா பெரியோர்களும், தபசிகளும் மயங்கும

படியான பிரகாசமுள்ள முகமும், செந்தாமரையென்ச் சிவந்த பாதமு முடையவளாயிருப்பாள். அல்லாமலும் புணர்ச்சியில் மிகத்தெளிந்தும் தாமரை மலர் மணச் சுரதநீரும் யானைத்துதிக்கைபோன்று திரண்ட பருத்த துடைகளும், பொற்கிண்ணம்போல் பிரகாசிக்கும் புணர் முலையும், கோபஞ்செய்வாரிடத்திற் பொருமையும், அழகிய நீண்ட கழுத்தும், குதலைமென்மொழியும் குறைந்த உணவும், மணங்கமழும் சண்பகமலர்போலும், சிவந்த மேனியளாயும் காணப்படுவாள்.

44-வது பிரிவு.

இரண்டாவது வகுப்பு பெண்ணின் குறிகளைப்பற்றி சொல்வதாம்.

பெட்டைக் குதிரைச்சாதியாள் குவிந்தும் உயர்ந்துமுள்ள உச்சந்தலையும் நீண்ட கூந்தலும், பருத்த நீண்ட முகமும், தாமரை இதழ்போன்ற கண்களும்; நெருங்காது இடைவெளிதோன்றும் வெண்பல்லும், நீண்ட சிவந்த உதடும், பெரிய தோளும் மிகப் பருத்த மார்பும், ஒடுங்கிய வயிறும், தொண்டையாற் குழறிப்பேசும் வார்த்தையும், டணைத்துத்திரண்ட துடைகளும், அன்னம் போன்ற நடையும், ஆழ்ந்த உந்திச்சுழியும், போசனம் நித்திரை இவைகளிற் பிரியமும், தன் நாயகன்மேல் நீங்காத சிந்தையும் செம்பஞ்சுபோல் சிவந்த பாதமும் பொருந்தி பொன்னிறமேனியளாய்க் காணப்படுவாள்.

45-வது பிரிவு.

மூன்றாவது வகுப்பு பெண்ணின் குறிகளைப்பற்றி சொல்வதாம்.

பிடியானை ஜாதியாள், நெற்றி, கன்னம், செவி, மூக்கு இவைகள் மிதமின்றி பருத்தும், குறுகிப் பருத்த கால் கைகளும் கெட்டியான தோள்களும, விம்மிய கழுத்தும், நெருங்கியிராத சாதாரணமான பல்லும், சுருண்டிருக்கும் கூந்தலும், இராப் பகல் சுவனமும், யானை யொத்த வார்த்தையும், வருத்துத் தொங்கிய உதடும், வீண் சண்டை செய்பவளும், ஒளிவு குறைந்த கண்களும், முறையின்றி யாவரோடும்கூடுதலும் ஆகிய இத் தன்மையுடையாள்.

46-வது பிரிவு.

நான்குவித ஸ்திரீஜாதிகளின் இலக்ஷணமும் இவைகளைப்பற்றி சொல்வதாம்.

முதலாவது உத்தமஜாதி ஸ்திரீயானவள்மகா பதிவிரதையும், ஆண்டவன்பேரில்பக்தியும், மான்விழியும், கோகிலத்தொனியும், செந்தாமரை மலர்வாசனையும், அன்னநடையும், கிளிமொழியும், கொடியிடையும். புன்னகையோடு கூடிய சுந்தரமுகமும், சொகுசான ஆகாரத்தில் அற்பமாக அருந்துதலும், கொவ்வை பிழும செவ்வையாய்ச் சிவந்த உதடும், தித்திபபுச் சாமான்களில் பிரியமும், வெண்ணிற உடைகளும் வெண்மையான புஷ்ப

மும் அணிந்துகொள்பவளும், தாமரையிதழ்க் கண்ணும் என் மலர் போன்ற நாசியும், இழை நுழையக்கூடாத நெருங்கிய இரு ஸ்தனங்களும், நீண்ட கூந்தலும், ஒற்றைநாடித் தேகமும், நல்ல சுபாவமும், ஆடல்பாடல்களில் ஆசையும், அதிரூபமுமுடைய செண்பகமேனியாள் இவளுக்குப் பத்மினி யென்ற ஓர் பெயருமுண்டு.

47-வது பிரிவு.

இரண்டாவது மத்திம ஸ்திரீயின் இலக்ஷணமும் குணங்களைப்பற்றி சொல்வதாம்.

சாதாரணமான அழகும், உறுதியான எண்ணமும், உண்மையான வார்த்தையும், நன்மையான நடத்தையும், தாய் தகப்பன் ஆண்டவன் இவர்களிடத்து முஹப்பத்தும், பத்தினித்தனமும், தர்மத்தில்குன்றாமலும் ஜிமாவில் சொற்பப்பிரியமும், இன்சொல்லும் பாவச்செயலில் மனமில்லாதவளும், நடுத்தர உயரமும், சாசமானவார்த்தையும், கூர்மையான மூக்கும், மிருதுவானசரீரமும் அழுத்தமாய் நெருங்கிய ஸ்தனங்களும், நீண்ட கண்களும், யாவர் மனசையும் கவரத்தக்க நற்குண வார்த்தையும், சிற்றின்ப ஹதீதுகளில் அதிக இஷ்டமும், மூன்று ரேகைகளையுடைய கண்டமும், புளிப்பான சாமான்களில் மெத்த விருப்பமும், விசித்திர துணிமணிய ஆசையும், வாசனைத் திரவியங்களில் மிக்க அபேக்ஷையும், சுருண்டமயிரும் சொகுசாய் அலங்கரித்துக் கொள்ளுபவளுமானவள். இவளுக்கு சித்தினி ஜாதி ஸ்திரீயென்றும் ஓர் பெயருண்டு.

48-வது பிரிவு.

மூன்றாவது அதமஜாதி ஸ்திரீயின் இலக்ஷணமும் குணங்களைப்பற்றி சொல்வதாம்.

மிருதுவாய் நீண்ட அங்கமும்சதாபசியும், அண்டமு கட்டை யெட்டும்படியான நகைப்பும், பிறர்க்குத் தீங்குசெய்யப் பிரியமும், சிற்றின்ப ஆசையை மூட்டும்படியான புன் சிறிப்பும், அன்னிய புருஷனைச் சேர்ந்து சுகிக்க ஆசையும், கெட்ட வார்த்தையிலேயே இஷ்டமும், தன் துமாமி, மைனி, முதலியவர்களை அலெக்ஷியம் பண்ணுமவளும், உயரமானவளும் சாதாரண சௌந்தரியமும், சிவப்பு உடைகள் சிவப்பு புஷ்பம் இவைகளில் பிரியமும், உஷ்ண சரீரமும் கடைக்கண் பார்வையும், புருவத்தில் அதிக ரோமமும், அடிக்கடி கோபமும், ஆகிய இவைகள் பொருந்தியவளா யிருப்பாள். இவளுக்கு சங்கினி என்றோர் நாமமுமுண்டு.

---

49 வது பிறிவு.

நான்காவது அதாதமஜாதி ஸ்திரீயின் இலக்ஷணமும் குணங்களைப்பற்றி சொல்வதாம்.

கெட்டவழக்கங்களில் விருப்பமுள்ளவளும், தடித்த தேகத்தை யுடையவளும், பரட்டைத் தலையும், புன்னகையுதடும், சிவந்த கண்களும், அதிகமாய் நீண்டு பருத்த கொங்கைகளும்

சிற்றின்ப ஆசையைத் தணித்துக்கொள்வதில் நாணமற்றும் காம வெறியால் புருஷர்களை ஆலிங்கனம் செய்ய ஆசைகொள் ளுக்லும், நீண்ட கால்விரல்களும், சிறுத்த கழுத்தும், கார மான வஸ்துவின் பேரில் அதிக பிரியமும், கடினமான தும், நீண்ட புருவமும், செத்தாலும் போகா கறுநாற்றமும், தன்னைப் புகழ்பவரிடத்து ஆசைகொள்வதும் உரோமம் நிறைந்த தேகமும், பயத்தைக் கொடுக்கும்படியான நகைப்பும், சொரசொரப்பான தோலும், பருத்த தொந்தியும், பூனைக் கண்களும் பொருந்தியிருப்பாள்; இவளுக்கு அத்தினி ஜாதி ஸ்திரீயென்னும் ஓர் பெயருமுண்டு.

5()-வது பிரிவு.

முதலாவது வகுப்பு நான்குவித புருஷர்களின்ஜாதி இலக்ஷணங்களைப்பற்றி சொல்வதாம்.

முதலாவது உத்தமஜாதிப் புருஷனென்பவன், உயரத்தில் நடுத்தரமும், நல்ல சுந்தரமான முகமும், பரிசுத்தமும் தாய், தகப்பன, உஸ்தாதுமார், பெரியோர்கள் இவர்களிடத்தில் முஹப்பத்தும், அன்னியர்மனைவியை அன்னையரென்றே நினைப்ப தும்சாந்தம் பரோபகாரம் மரியாதை இவைகளோடு பெருந்தோ ரணையான வார்த்தையும், நீண்டு கறுத்த தலைமயிரும் உண்மை யும், தணிந்த குரலும், மிருதுவான தாமரைப்பூ வாசனையு டைய தேகமும், சிவந்த கண்களும், முத்தைப்போன்ற தந்த

வரிசையும், குறைந்த் போஜனமும், நிறைந்த் செல்வமும் போக த்தில் சொற்ப பிரியமும் உள்ளவனும். இவனை முயற்சாதி யென்றும் சொல்வதுண்டு.

51-வது பிரிவு.

இரண்டாவது வகுப்பு புருஷர்களின் ஜாதி இலக்ஷணங்களைப்பற்றி சொல்வதாம்.

இரண்டாவது மத்திமஜாதிப் புருஷனானவன் பெருத்த அங்கமும், குளிர்ச்சியான தேகமும், விரிந்த மார்பும், புன்சிரிப்பமைந்த உதடும், குகித்த கண்டமும், அதிக போஜனமும் இராப்பகலில் சங்கீதப் பிரியமும், மஸ்ஜிது பெரியோர் தர்கா பணிவிடையும், விருந்தினருபசரிப்பும், கடினமான சித்தமுள் பெரியோர்கள் விசுவாசமும், தாய் தந்தையரிடத்துப் பிரியமுமுள்ளவனுவான். இவனுக்கு மான் ஜாதிப் புருஷனென்றும் சொல்வதுண்டு.

52-வது பிரிவு.

மூன்றாவது வகுப் புருஷரின் லக்ஷணங்களைப் பற்றி சொல்வதாம்.

மூன்றாவது அதமஜாதிப் புருஷனானவன், சிறியகால்களும் நீண்ட நாக்கும், பாக்குவாசனைத் தேகமும், பெருந்திண்டி தின்பதும், பலமான சரீரமும், ஸ்திரீகளை அடிக்கடி பார்க்கப் பிரியமும், வெட்கமற்றவனும், ஆண்டவன் பேரில் பக்தியற்ற

னும், பாவ காரியத்தில் பழக்கமும், மோகத்திலமுழ்ந்தியும், சத போக இச்சையும் குறைந்த நித்திரையும், விசாலமான நெற்றியும், அழகிய கழுத்தும், நீண்ட கைகளும், மந்த நடையும், தானப்பிரியம், தைரியமனசும், பிரிய சம்பாஷணையும், மெத்தப் பசியும், கூச்சமின்மை பாலியர், சுகமும், தன்னைக்கண்டு ஸ்திரீகள், பிரியப்பட நினைப்பவனும், ஆகிய இவையெல்லாம் பொருந்தியவனும், இவனுக்கு ரிஷபஜாதிப் புருஷனெனவும் பெயருண்டு.

53-வது பிரிவு.

நான்காவது வகுப் புருஷரின் லக்ஷணங்களைப்பற்றி சொல்வதாம்.

நான்காவது அசுவஜாதிப் புருஷனென்வன், கறுத்தமேனியும், ஆண்டவன் பேரில் நல்லபக்தி யென்பதும் தினைத்துணையுமில்லாமையும், வேகமான நடையும், கொழுத்த சரீரமும், காமவீரகத்தால் தேகத்தைக் கெடுத்துக் கொள்ளுதலும் துஷ்டத்தனமும் மிக கெட்ட நடவடிக்கையும், காமவெறியால் எவளானாலும் கலக்கப் பிரியப்படுதலும், பெரியோர் வார்த்தையைத் தள்ளித் தன் வார்த்தையை மேலாகப் பேசுவதும், வெளிப்படையாய்ப் பேசுவதும் தரித்திர திசையும், சஞ்சலமான மனசும், உதடு, பற்கள் காது இவை நீண்டும், கோணற்பார்வையும், ஆகிய இத்தகைய குணதிசயங்கூடினவனும். இவனுக்கு அசுவஜாதிப்புருஷனென்றும் சொல்வதுண்டு.

54-வது பிரிவு.

இது மாதர்கள் ஹைழு நாளைப்பற்றி சொல்வதாம்.

ஹைழுவான நாளாகிய 3. நாளும் கழிந்து சுத்தமான 4-ம் நாளிலே ஸ்திரீபுருஷாளிருவரும் சேருவதால் கருதரித்துப் பிறப்பது பக்தி விஸ்வாசமுள்ள ஆண்பிள்ளையாகும். 5-வது நாள் கூடிகருத்தரிப்பது வேசித்தனத்துக்கும் அவதூருக்கும் பாத்திரப்பட்ட பெண்ணைப் பிறக்கும். 6-வது தினத்திலே தரித்துப் பிறப்பது ஆண் குழந்தையாகும் ஆனால் அது தன் காலமுழுவதும் வறுமையுடையவனாவான். 7-வது தினத்திலே தரித்துப்பிறப்பது பெண் குழந்தையாகும். ஆனால் அந்தக் குழந்தையானது தனது பருவத்திலே தன் நாயகனைவிட்டு வேறு புருஷனைச் சேர்ந்து வாழ்வாள். 8-வது தினத்திலே கூடிக் கருவுற்பத்தியாகி வெளிவருவது ஆண்பிள்ளையாம். ஆனால் அக்குழந்தை தனது பருவத்திலே மகா பாக்கியவானாகவும் ஆண்டவனுடைய வணக்கத்திற் சிறந்து எல்லாராலும் புகழப் பதம் பெற்று வாழ்வான் 9-வது நாளிற்றரித்துப் பிறப்பது பெண்ணாகும். இந்தப் பெண்ணானது தனது பருவத்திலே கற்பு நிலை தவறாத பரிசுத்தமான காரியங்களில் பிரீதியுள்ளவளாயும் பூரண ஆயுசோடுவாழ்வாள். 10-வது தினத்திலே தரித்துப் பிறப்பது ஆணாகும். ஆனால் அந்த ஆண் குழந்தையானது தனது பருவ முழுவதும் குறையாத சம்பத்துடையவனாயும் சிரேஷ்டமான கெம்பீரமாயும் சுக வாழ்வோடு தன் சகாக்களிடத்திலே மிகவும் மதிப்புக மந்திரி யென்னப் புகழப் பதம்பெற்று வாழ்வான். 11-வது தினத்திலே தரித்துப் பிறப்பது பெண்ணாகும். அந்தக் குழந்தையானது தனது பருவத்திலே தன் வம்சத்துக்கும் குறையாத செல்வமா

யும், அதனால் கீர்த்திபெற்று தன் குலத்துக்கு மேன்மையுண்டு பண்ணிச் காலங்கழிப்பாள். 12-வது நாள் கருவமைந்து பிறப்பது ஆணாகும் ஆனால் அந்தக்குழந்தை தனது பருவத்திலே பிதாவுக்கு மேம்பாடுடையவனும் சிற்றின்பத்திலே சிதறாத புத்தியுள்ளவனும் காணப்படுவான். 13-வது நாள் கலந்து கருவமைந்து பிறப்பது பெண்ணாகும். அப்படிப் பிறக்கும் பெண் தனது பருவத்திலே உண்மை பேசுபவளாயும் இனியமிருதுவான குரலுள்ளவளாயும் நல்வணக்கத்துடன் தீர்க்காயிசாய் வெகுநாளிருந்து வாழ்வாள். 14-வது நாள் தரித்துப் பிறப்பது ஆண்குழந்தையாம் ஆனால் அந்தப்பிள்ளை தனது பருவத்திலே தர்மம், நன்றி நல்லகுணம் என்னுமிவைகளோடு பெரியதான அதிகாரமும் பெற்று வாழ்வான். 15-வது நாள் கூடிப்பிறப்பது பெண்ணாகும் இந்தப் பெண் தனது பருவத்திலே அதிக அழகும் குணமு முடையவளாய் அரசனுக்குப் பத்தினியாயும், அநேக பிள்ளைகளைப்பெறும் பாக்கியசாலியாயும் வாழ்வாள். 16-வது நாள் கூடிப் பிறப்பது ஆணாகும் ஆனால் இந்த ஆண் குழந்தை தனது பருவத்திலே வித்தை இலக்கணம், சத்தியம் பொறுமை, புலனடக்கம் என்பவறையமைந்து சகலயுக பண்டிதனாய் அநேகபண்டிதர்களிற்சிறக்க யோக்கியமாய் வாழ்வான் என்று இந்தவிதமாக சில சரித்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. வல்லாஹு அஃலம்.

இன்னும் உலகத்திலே மாதர்போகமென்பது மகா பெரியோர்களாலும் வெறுக்கமுடியாதது பதிமயங்கித் தங்கள் அரிய வணக்கங்களெல்லாம் அடியோடு துலைந்து விடுகின்றார்களென்று பல விதமான ஹதீதுகள் சாஸ்திரங்களிலும் வந்திருக்கிறது. சொல்லிவருவதைப்பார்த்தால் அதுமிக அசாத்தியமாக ஏற்படுகின்றதே! தாங்கள் கூறும் சாஸ்திரப்படி நடக்க முடியு

மோமென சந்தேசங்கேதங்க்கின்றேன் ஆயினுமிருக்கட்டும், மாத மொன்றுக்கு இத்தனை முறைதான் சம்போகப்கூடுமென சந்தே கமுண்டோ?

(வல்லாஹு அஃலம்.)

55-வது பிரிவு.

இது அதிக ஜிமாவால்வரும் கெடிதிகளைப்பற்றி சொல்வுதாம்.

ஒருவன் மிதமிஞ்சி ஜமாஃ செய்வானுயின் அதனல் அதிகமான விந்து வெளியாகின்றது அது வெளிப்படவே அதற்கு முதற்காரணமாகிய இரத்தம் குறைகின்றது; அது குறையவே அதற்காதாரமாகிய ஜீவாக்கினி குறைகின்றது; அது குறையவே தேக வுருப்புகளின் சுபாலத் தொழில் கெட்டு அதனல் தேகம் கலகலக்கப்பட்டு பின்பு மட்டில்லாத கெட்ட வியாதிகட்குட்பட்டு நஷ்டமடைய நேரிடும்; அதாவது பயித்தியம், புத்தித் தெளிவின்மை, காமாலை, க்ஷயரோகம், நீரிழிவு, அக்கினிமந்தம், மெய் வாய் கண் மூக்குச் செவி இவைகளின் உணர்ச்சி பேதம் ஆகிய இவைகள் நிச்சயமாய் வருமெனவறிக.

மனிதனுக்கு சுக்கிலமென்ற வீரியமானது எல்லாவித அங்க உருப்புகளிலும் தசை, எலும், இரத்தம், நரம்பு, கொழுப்பு, மூளை, ஆகிய இவைகளுக்கு மேலான அருமையும்ஆதாரமுமா யிருப்பதோடு ஜீவமணியா யேற்பட்டிருக்கின்றது. விந்துவிட்டான் நொந்து கெட்டான் என்ற முதுரைப்படி வீரியத்தை அதிகமாகக் கழிப்பவன் தேகம் அதிக சீக்கிரமாக காரசாரமற்று தேகத்தின் பலங்குன்றி நடைப்பிணமாய்த் திரிவதை

நாம் பார்த்தும் வருகின்றோம். கல்வியில் சிறந்த பெரியோர் ஹக்கீம் சொல்கிறார் நம் தேக இரத்தத்தில் சுத்த இரத்தம் 80-துளிக்கு ஓர் துளி விந்து விளைகின்றது, அங்ஙனமாயின் ஓர் தடவை வெளியாகும் விந்துவுக்கு எவ்வளவு இரத்தம் முறிந்திருக்கவேண்டும்? இதை நம் நாட்டுச் சகோதரர்கள் சிறிதும் உணர்வதில்லை. ஓர் தடவை வெளிப்படும் வீரியத்துக்கே அவ்வளவு இரத்தம் குறையுமானால் தினத்துக்கு 2, 3, முறை போகிப்பவருக்கு எவ்வளவு இரத்தம் குறையுமென்பதை அவரவர்களே அறியவேண்டும்.

சுக்கிலம் தடித்துப் பிசின்போலிருந்தால் தான் பிள்ளை பாக்கியத்திற்கு எதுவாகும்; நீத்தாவது தெளிந்தாவது தண்ணீரைபோல் கெட்டு விடுமேயானால் பிரயோசன மற்றதாகும். தவிர விந்துவிளைவிற்கு நாம் உட்கொள்ளும் ஆகாரமும் அவ்வாகாரத்தைச் சீரணிக்கச் செய்கிற உள்ளுறுப்புகளின் சக்தியுமே காரணமாயிருக்கின்றது. நெய், பால், இறச்சிகளும், உளுந்து கடலை பாதம்பிஸ்தா முதலிய புஷ்டியைத் தரத்தக்க உணவுகளை காலத்தருந்தி சீரணித்துக்கொள்பவருடைய சுக்கிலம் பலமும் புஷ்டியுமா யிருக்கும். அப்படிக் கெட்டிப்பட்டாலொழிய சம்போகத்திலின்பமும் விபாதியற்ற பலமான பிள்ளையுமுண்டாகாதென்றறியவும் வல்லாஹு அஃலம்.

5ஆ-வது பிரிவு

இது ஜிமாஃ கூடாத சமய விளக்கங்களைப்பற்றி சொல்வதாம்.

இனி தன் அலாலான பெண்ணுடன் ஜிமாவுக்கு நாடினால் தாங்கள் உண்ட உணவு ஜீரணமாகாமல் மந்தப் பட்டிருக்கும்

போதும், கிரமமாக நித்திரையன்றி குறைவுபட்டிருக்கும்போதும், யாதாமொரு விஷயத்தைக் குறித்து வியாகூல சித்தமாயிருக்கும்போதும், மதிமயங்கி யிருக்கும்போதும், ஊர்ப் புறம் போய் வந்து களைப்பாயிருக்கும்போதும், கடும் பசியாயிருக்கும்போதும், தேகம் அதிக குளிர்ச்சியாயும் அல்லது சூடாயிருக்கும் போதும், அதிக வேர்வைக்குப் பின்னும், விஷக்காற்று வீசும் சமயங்களிலும், தலைநோய் காச்சல் முதலியவைகட் குட்பட்டபோதும், சூலை குன்மம் நீரிழிவு தேகதுர்ப்பல முதலிய நோய்கள் தொந்தப்பட்ட சமயங்களிலும் எண்ணெய்களைப் போல் கொத்த தைலங்களை தங்கள் தங்கள் வளமைப்போல் தலைக்கு தேய்த்து முழுகின தினத்திலும் தலைமுடிபெரக்கி கொண்ட தினத்திலும், ஒருபோதும் கூடாதென்வறிக

57-வது பிரிவு.

மாதரைச் சேரும் வயசு விளக்கங்களைப்பற்றி சொல்வதாம்.

இப்போது நமது அனுபோகத்துக் கெட்டியவரையில் பெரும்பாலும் புருஷர்கள் 14-வயதுக்கு. மேலும், பெண்கள் 12-வயதுக்கு மேலும் ஜிமாவுக்கு ஆரம்பித்துவிடுகிறார்கள். இதனால் சரீரம் அதிசீக்கிரம் கெட்டுவிடுவதோடு சரியானவயசில் மரணத்துக்கும் ஆளாகிறார்கள், தவிரபுத்திர வுற்பத்தியும் உண்டாகிறதில்லை. அப்படி யுண்டானாலும் தேரை, தேவாங்கு, எலிக்குஞ்சு என்னும் இவைகளைப்போன்ற துர்ப்பல அதிஷ்டமாய்ப் பிறக்கும் இதையறிந்தே பெரியோர்கள் சற்றேறக்குறைய புரு

ஷர்களுக்கு 22-25-வயசுக்குப் பின்பும் ஸ்திரீகளுக்கு 16 வயதுக்குப் பின்புமே புணர்ச்சி கூடுமென்றும், அப்படிக்கூடுவதால் பிறக்கும் பிள்ளைகளை மிக்க பலசாலிகளும், தீர்க்காயிசோடு நோயில்லாமையும் பெற்றி திவ்விய தேகஸ்தியோடு வாழ்வார்களென்றும் கூறியிருக்கின்றார்கள்.

58-வது பிரிவு.

இது கெர்ப்பந் தரிக்கும்போது சூரியகலை சந்திரகலை என்னும் விபரங்களைப்பற்றி சொல்வதாம்.

ஆணும் பெண்ணுங்கூடி அனுபோகிக்கும்போது வலது நாசியில் ஓடும் சூரியகலையும் இடதுநாசியில் ஓடும் சந்திரகலையும் அளவு குறையாமல் இருகலையும் பூரணமா யோடிக்கொண்டிருக்க அச்சமயம் கருக்குழியினிடமாக நாதந்தாக்குமாயின் அந்தப் பிள்ளை நல்ல விவேகியாகவும் யோக்கியவானாகியும் பூரண ஆயுசுள்ளவனுய்.மிருப்பான்.

ஆணும் பெண்ணுங்கூடிநாதவிந்தானது கருப்பையி லுரையும்போது சூரியகலை ஒருபங்கும் சந்திரகலை இரண்டுபங்குமாக ஓடினால் அங்கனமுதிக்கும் சிசுவானது தரித்திரவனாகவே யிருப்பான்.

ஆணும் பெண்ணுங்கூடி கருக்குழியினிடமாக சுக்கிலமணுகும்போது சூரியகலை இரண்டுபங்கு சந்திரகலை ஒருபங்கு ஓடினாலும் அந்த சிசுவானது தரித்திரனாகவே யிருப்பான்.

ஆணும் பெண்ணுங்கூடி கருக்குழியினிடமாக நாதமுதிக்கும்போது சூரியகலையும் சந்திரகலையும் பிரியாமல் கலைநாலும் வளர்ந்தோடினால் யோகவானாயிருப்பான்.

ஆணும் பெண்ணுய்க்கூடும்போது சந்திரகலை ஐந்தங்குலம் வளர்ந்தோடினால் திரண்டசெல்வமும் யோகவானுமாய்ப் பிறப்பான்.

ஆணும் பெண்ணுங் கூடும்போது சந்திரகலையானது ஆறங்குலம் வளர்ந்தோடினால் காணி, பூமி முதலிய நிலப்பலனுடையவனாகப் பிறப்பான்.

ஆணும் பெண்ணுங் கூடும்போது சந்திரகலையானது ஏழங்குலம் எட்டங்குலமுமாய் வளர்ந்தோடினால் மிகுந்த செல்வம் தழைத்து வாழ்பவனாய்ப் பிறப்பான்.

ஆணும் பெண்ணுங் கூடும்போது சந்திரகலை ஒன்பதங்குலம் வளர்ந்தோடினால் இராஜாங்கயோக முடையவனாகப் பிறப்பான்.

ஆணும் பெண்ணுங் கூடும்போது சந்திரகலை பத்தங்குலம் வளர்ந்தோடினால் அஷ்டமாசித்துடையவனாகப் பிரப்பான்.

ஆணும் பெண்ணுங் கூடும்போது சந்திரகலை பதினோரங்குலம் வளர்ந்தோடினால் சிவயோகியாகப் பிறப்பான்.

ஆணும் பெண்ணுங் கூடும்போது சந்திரகலை பன்னிரண்டங்குலம் வளர்ந்தோடினால் துரைத்தன அதிகாரமுடையவனாகப் பிறப்பான்.

ஆணும் பெண்ணுங் கூடும்போது சந்திரகலை பதிமூன்றங் குலம் வளர்ந்தோடினால் மந்திரித்துவம் பெற்றவனைப் பிறப் பான்.

ஆணும் பெண்ணுங் கூடும்போது சந்திரகலை பதினான்கு அங்குலம் வளர்ந்தோடினால் ஞானியாகப் பிறப்பான்.

ஆணும் பெண்ணுங் கூடும்போது சந்திரகலை பதினைந் தங் குலம் வளர்ந்தோடினால் சாந்தகுணமுடையவனைப் பிறப்பான்.

ஆணும் பெண்ணுங் கூடும்போது பூர்வ புண்ணியவசம் முன்னே வந்து கிட்டி சந்திரகலைபர்ணது பதினாறங்குலம் பூரண மாய் வளர்ந்தோடினால் உலகமுழுதும் அரசாட்சி செய்யும் சக் கிரவர்த்தியாகப் பிறப்பான். (வல்லாஹு அஃலம்.)

59-வது பிரிவு.

இது கெர்ப்பம் தரிக்கும்போது நன் தன் வயதின் குறிகளைப்பற்றிச் சொல்வதாம்.

ஆணும் பெண்ணுங் கூடிக்கலவி புரிந்து நெஞ்சழிந்து, நாதவிந்தானது மங்கையினது கருக்குழியில் உதிக்கும்போது பிராணவாய்வானது லிங்கபீடமாகிய சுவாதிஷ்டானத்தில் உறைந்திருக்கும் பிருதிவியிடமாக மோதியெழுந்து பதினாங் குலத்திற்குக் குறையாமல் ஒற்றைநாசியின் வழியில் ஓடிக் கொண்டிருந்தால் வயது, 100

ஆணும் பெண்ணுங் கூடும்போது பிராணவாய்வானது மேற்படி பிருதிவிஸ்தானத்திலிருந்து உந்திக்கமலமாகிய மணிபூர மூலமாகிய அப்புஸ்தானத்திலிருந்தெழும்பினால் வயது. 10

ஆணும் பெண்ணுங் கூடும்போது பிராணவாய்வானது மேற்படி அப்புஸ்தானத்திலிருந்து அபானவாய்வோடு கூடி பதினெட்டங்குலம் வோடினால் வயது. 90

ஆணும் பெண்ணுங் கூடும்பொழுது பிராணவாய்வானது அப்புஸ்தானத்தில் பதினாறு அங்குலத்திற்குக் குறையாமல் ஒன்றரை நாழிகைவரையில் ஓடிக்கொண்டிருந்தால் வயது. 80

ஆணும் பெண்ணுங் கூடும்போது பிராணவாய்வானது மணிபூரகஸ்தானமாகிய அப்புவில் பாய்ந்து அபானவாயுவைக் கலந்து பனிரெண்டங்குலம்வரையிற் பாய்ந்தோடினால் அதற்கு வயது. 70

ஆணும் பெண்ணுங் கூடும்போது பிராணவாய்வானது இருதய கமலமென்னும் அனாகதமாகிய தேயுஸ்தானத்திலிருந்து ஒரு நாழிகை வரையில் பத்தங்குலத்திற்குக் குறையாமல் ஓடிக்கொண்டிருந்தால் வயது. 60

ஆணும் பெண்ணுங் கூடும்போது பிராணவாய்வானது ஆக்கினை யென்னும் ஆகாயஸ்தானத்தினின்று கூர்மன், கிருகரன் என்ற வாயுக்களோடுகூடி ஏழங்குலம்வரை அரை நாழிகை பரியந்தம் ஓடினால் வயது. 40

ஆணும் பெண்ணுங் கூடும்போது பிராணவாய்வானது ஆக்கினை யென்னும் ஆகாயஸ்தானத்திலின்று அரை நாழிகை வரையில் இரண்டங்குலம் ஓடினால் வயது. 38

ஆணும் பெண்ணுங் கூடும்போது பிராணவாய்வானது விசுத்தியில் நின்று வியானவாயுவோடு ஒன்பதங்குலம் ஓடி கூடினால் வயது. 35

ஆணும் பெண்ணுங் கூடும்போது பிராணவாயுவானது கண்ட ஸ்தானமாகிய விசுத்தியில் உரையும் வாயுஸ்தானத்தில் நின்று முக்கால் நாழிகைவரையில் ஒன்பதங்குலம் ஓடினால் வயது. 30

ஆணும் பெண்ணுங் கூடும்போது பிராணவாயுவானது இல்லியென்னும் சுழியில் அடங்கிநின்றால் வயது. 25

ஆணும் பெண்ணுங் கூடும்போது பிராணவாயுவானது இடையின் இருபாரிசமும் விட்டு ஏறினால் வயது. 20

ஆணும் பெண்ணுங் கூடும்போது பிராணவாயுவானது சுழியை விட்டு இடத்திற் பாய்ந்தால் வயது. 16

ஆணும் பெண்ணுங் கூடும்போது பிராணவாயுவானது உந்திக் கமலமாகிய மணிபூரகத்தில் நின்றால் வயது. 10

ஆணும் பெண்ணுங் கூடும்போது பிராணவாயுவானது குண்டலியைப் பூட்டியோடினால் வயது. 8

ஆணும் பெண்ணுங் கூடும்போது பிராணவாயுவானது மூலத்தில் சுழித்து சிதறியோடினால் வயது. 5

ஆணும் பெண்ணுங் கூடும்போது பிராணவாயுவானது மூலத்தில் நின்றுவிடில் வயது. 3

ஆணும் பெண்ணுங் கூடும்போது பிராணவாயுவானது மூலத்திநோடினால் வயது. 2

ஆணும் பெண்ணுங் கூடும்போது பிராணவாயுவானது துக்கிளென்னும் ஆகாயஸ்தானத்தினின்று தீவிரமான ஓட்டத்தில் நின்றால் மாதம். 1-15

ஆணும் பெண்ணுங் கூடும்போது பிராணவாய்வானது மேற்குறித்தயிடத்தில் பத்தங்குலம் ஓடி நாலங்குலம் கழித்தால் வயது கொஞ்சம்.

ஆணும் பெண்ணுங் கூடும்போது பிராணவாய்வானது சிதறியோடினால் கெற்பமுண்டாயிருந்து முடிவில் அழியும்.

ஆணும் பெண்ணுங்கூடும்போது இருதயமாகிய தேய்வுஸ்தானத்தில் பிராணவாய்வுமோதி அத்துடன் அபானவாய்வுங் கூடி எட்டங்குலம் பாய்ந்து இரண்டங்குலங்கழிந்து ஆறங்குலந்திரும்பி உள்ளடங்கினால் கருப்பப்பையில் குத்தலுண்டாகி கருவழியும்.

ஆணும் பெண்ணுங் கூடும்போது தேய்வுஸ்தானத்தில் பிராணவாய்வுமிருந்து அத்துடன் அபானவாய்வு கூடியோடினால் கர்ப்பம் அழியும்.

ஆணும் பெண்ணுங்கூடும்போது பிராணவாய்வானது றுக்கே சுழண்டிருக்குமாகில் 9-மாதத்தில் கெற்பமழியும்.

ஆணும் பெண்ணுங்கூடும்போது பிராணவாய்வானது ஆக்னையென்னும் ஆகாயஸ்தானத்தினின்று சக்கரம்போல சுழன்றுவோடினால் 4-மாதத்தில் கெற்பமழியும்.

ஆணும் பெண்ணுங்கூடும்போது பிராணவாய்வானது உந்திக்கமலமாகிய மணிபூரகத்தில் உயர்ந்து நெட்டினால் 1-மாதத்தால் கெற்பமழியும். (வல்லாஹு அஃலம்.)

60-வது பிரிவு.

இது கெர்ப்பத்தில் கருவமைந்து 10-மாதம் வரைக்கும் சிசுவின் நிலமையைப்பற்றி சொல்வதாம்.

இப்போது நமது நாட்டு மங்கையர்களுக்கு மாதா மாதம் வெளிப்படுகிறது ஹைலு யென்று பெயரல்லவா? இதுவர்னது அவர்களின் தேகத்தினின்றும் கழிவா கிற மேன் மிச்சங்களெல்லாம் ஒன்றாய்ச்சேர்ந்து தானே வெளிப்பட்ட பின்பு அவர்களுக்குத் தேகச் சௌகரியத்தையடைகின்றது. இது எப்போது முதல்முதல் ஆரம்பமாகிறதோ அது முதற்கொண்டு வயோதிக பருவத்தில் நின்றுவிடுகிற பரியந்தம் புத்திரோற்பத்திகாலமென்றறிக. ஆனால் ஹைலு தோன்றுவதற்கு முன்னும் அது சுத்தமாக நின்றுவிட்ட பின்னும் புத்திரோற்பவமாகாதெனவறிக. சம்போக மங்கையர்களுக்கு கருக்குழியில் கரு எவ்வாறு பொருந்துமெனில், நாயக நாயகிகளிருவரும் சேர்வதால் அவர்களிடமிருந்து வெளியாகிற விந்துநாதமிரண்டும் ஒத்து கருக்குழியாலிழுக்கப்பட்டு பக்குவப்படுத்தி கருவை வளர்க்கும் சுபாவம், கருப்பொறைக்குரிய முக்கிய வியல்பாமெனவறிக.

சாதாரணமாக நாயகனுடன் ரமித்த ஸ்திரீகளுக்கு கர்ப்பம் தரித்து ஹைலு நின்றவுடனே முதனாளிலாவது அல்லது மறுநாளிலாவது புணர்ச்சியில் மிக்க, விருப்பமாயிருக்கும். அப்படி யவர்கள் அதிப்பிரியத்தைத் திருப்தி செய்யவேண்டி புருஷர்கள் அடிக்கடி இணங்கவொண்ணாது. ஏனெனில், இருவரும் அதிகமாசக் கூடிக் கலவி புரிவதால் கருவழிந்து அக்கருவை வளர்க்கும் சக்தியுமற்று போய்விடுமெனவறிக, இதற்குசாக்ஷியாக சதா சம்போகிகளாகிய தாசிகளுக்குப் பிள்ளையுண்டாவ தரிதாயிருக்கிறதைப் பார்க்கலாம். ஆகவே

சந்தான விருப்பமுடைய நாயக நாயகிகளிருவரும் அடிக்கடி சேரக்கூடாதெனவறிக. மிகச் சிலரினுஞ் சிலர் ஸ்திரீ போகமே கூடாதென (உடலையும் நீண்ட ஆயுளையும் கருதி) வெறுத்து நிறுத்திவிடுகிறார்கள். இதனால் தேகத்துக்கு, அநேக கெடுதிகள் நேரிடுமெனவறிக. முக்கியமாய் கண்டத்துக்கு மேலேயுள்ள சிரோரோகமே அபாயகரமாய் வருமெனவறிக.

நாயகனுடன் சம்போகத்துக்குரிய மங்கையானவள் சயனத்தில் ஒருக்கணித்துப் படுத்திருக்கும்போது புருஷன் இணங்கக்கூடாவாம். ஏனெனில், மனைவியின், ஜனனேந்திரியமானது வாயுவினால் பலமாய் வாதிக்கப்பட்டு மெத்த இம்சைபட நேருமெனவறிக. வலதுபக்கமாய் ஒருக்கணித்துப் படுத்திருக்கும் மனைவியுடனே நாயகன் கூடினால் சிலேத்துமம் அதிகப்பட்டு சுக்கிலம் கருப்பொறையில் போய்ச் சேராதபடி அதனுடைய பலத்தைக்குறைத்துத் தடுத்துவிடும். இடதுபக்கமாய் ஒருக்கணித்துப் படுத்திருக்கும் மனைவியுடனே நாயகன் சம்போகிக்கில், பித்தம் மேலிட்டு சுக்கில சுரோணிதமிரண்டையுந் தகித்து விடுகிறது. இதனால் ஸ்திரீயானவள் சமனாகப் படுத்திருக்கும்போது தான் இணங்குவது கிரமமெனவறிந்து கொள்க. இவ்வித இயல்புப் புணர்ச்சியன்றி விகாரப்புணர்ச்சியாகிய சித்திரக்காரர்களின் புத்தி சாதுர்யமாய் முடியுமேயொழிய அவ்வாறெல்லாம் மனப்போனபடி கஷ்டத்துக்குள்ளாகிப் புணர்வதில் ஏதோ அதிக சுகமிருப்பதாக யெண்ணி மதிமயங்கி அதையே சதா ஞாபகத்திலும் செய்கையிலும் வைத்துக்கொள்பவரின் புத்திசாலித்தனம் இம்மட்டென்பது என்னாற் சொல்லத் தரமன்று.

61-வது பிரிவு.

இது கருத்தறிந்து முதல் மாதம் கருப்பையின் நிலைமையைப்பற்றி சொல்வதாம்.

நாயக நாயகிகளிருவரும் ரமிக்குங் காலத்திலே அவர்களிட மிருந்து வெளிப்படும் சுக்கிலச் சுரோணிதமென்னும் இருவித சூதக நீருள் மிகச் சிறியபாக மொன்று சேர்ந்து குழைந்து ஒத்து நீர்க்குமிழியாம் 5 நாளையில்; அதன் மேல் 9-வது தினத்துளே மிளகு பெரிதும், 12-வது தினத்துளே சுண்டற்காய் பெருமென்னும், அதன்மேல் 13-வது தினத்துளே நெல்லிக்காய் பெருமென்னுர், 15-வது தினத்துளே எலுமிச்சம் பழத்தள வும், அதன்மேல் 17-வது தினத்துளே விளாங்காயத்தனை பெருமெனும் அதன்மேல் 20-வது தினத்துளே உருண்டை வடிவானது மாறி அகலப்பட விரிந்து சிறிது சப்பட்டையாகி யுர், அதன்மேல் 27-வது தினத்துளே ஆமையைப்போல சிறிது நடுவுடல் சதுரமாகியும், அதன்மேல் 30-வது தினத் துளே சதுரமாகிய ஆமை வடிவிலே தலை கால் கை இவைகள் சொற்பமாக அதாவது, கருணைக்கிழங்கில் முளைத்திருக்கிற சிறிய பாகங்களாகத் தோன்றி கழுத்து தோள் இவைகள் அற்ப்பமாக மையம் சங்களைப்போல் அமையும்.

1-வது மாதம் கெர்ப்ப நோயை, சவுக்கிய படுத்தும் ப்ரிகாரம்.

இந்த, நாளில் தாயாருக்கு கொஞ்சம் நோவு கண்டால், இதன் கீழ்கண்ட, மருந்துகளை முறை பிரகாரம், சேகரித்து கொடுத்தால், இந்த நோவு, ஆண்டவன் கிருபையால், தீரும்

விபரமாவது:

தாமரைப்பூ, சந்தனம்
வகைக்கு விராகனிடை.

(2) எடுத்த பசுவின் பாலில்
அரைத்து கிருபாக் களவு
பாலில் கலந்து கொடுத்தால்,
ஆண்டவன் கிருபையால் நோவு தீரும்.

இது 2-வது மாதம் காணும் பிண்ட நிலைமைகளைப்பற்றி சொல்விதரம்:

இரண்டாவது மாசத்துக்கு மேல் 3-வது மாசத்துக்குள்ளாக ஷை பிண்டமானது ஆண்ம வடிவு மாறி நீண்டு, அதற்கு அன்ற, புறங்கால்; சிரசாக பிரிந்து தோன்றிய அம்சத்துக்கு வாய், கண், மூக்கு; நெற்றி இவைகள் மிக்க சொற்பமாகப் பிரிந்து ஒருவித திட்டமாகக் காணப்பட்டு 6 அங்குல அளவினதாய் வளர்ந்திருக்கும்:

2-வது மாதம் கெர்ப்ப நோயை; சவுக்கிய படுத்தும் பரிகாரம்:

இந்த நாளில் தாயாருக்கு கொஞ்சம் நோவு கண்டால் இதின் கீழ்கண்ட மருந்துகளை. முறைபிரகாரம் சேகரித்து கொடுத்தால் இந்த நோவு ஆண்டவன் கிருபையால், தீரும்.

விபரமாவது:

தாமரைப்பூவும், தக்கோலம், விதைக்கு
5 விருகனிகட, சேர்த்து, பசுவின்பாலில்
விட்டு அரைத்து; பாக்களவு
பசுவின்பாலில் கலக்கி கொடுத்தால்
ஆண்டவன் கிருபையால் நோவு தீரும்.

இது 3-வது மாதம் காணும் பிண்ட நிலைமைகளைப்பற்றி சொல்வதாம்.

3-வது மாசத்துக்குமேல் 4-வது மாசத்துக்குள்ளாக மேலே கூறிய பிண்டத்துக்கு சிரசு, இருதுடைகள் இன்னும் கைகால் இவைகள் மிக நுட்பமாகப் பிரிந்து தோன்றுவதோடு பச்சிசுபுக்கு ஒர்லித உணர்ச்சியும் மேற்பட்டு 8 அங்குல அளவினதாக வளர்ந்திருக்கும்.

3-வது மாதம் கெர்ப்பநோய் சவுக்கிய படுத்தும் பரிகாரம்.

இந்த காளில், தாயாருக்கு கொஞ்சம், நோவுகண்டால், இதின் கீழ்கண்ட மருந்துகளை, முறை பிரகாரம், சேகரித்து, கொடுத்தால், இந்த நோவு, ஆண்டவன் கிருபையால், தீரும் விபரமாவது.

செங்கழுனீர்கிழக்கு,
வெண் தாமரைப்பூ,
வகைக்கு 2 விராகனிடை சேர்த்து,
தனி பசுவின்பாலில் அரைத்து,
புளி கொட்டை, அவவு பாலில்
கலக்கி கொடுத்தால், ஆண்டவன்,
கிருபையால் நோவு தீரும்,

இது 4-வது மாதம் காணும் பிண்ட நிலைமைகளைப்பற்றி சொல்வதாம்.

4-வது மாசத்துக்கு மேல் 5-வது மாசத்துக்குள்ளாக மேற்கூறிய நீட்சியான பிண்டத்திற்கு சிறிதாகப் பிரிந்த தோன்றிய அவயவங்களானவை ஒவ்வொன்றும் பூர்த்தியாக வள[illegible]

முகத்திலுள்ள ஒவ்வொரு உறுப்புகளும் முழுப்பாகமாய்த் துலங்குவததோடு ஆண்குறி பெண்குறி இவைகள் பிரிந்து தோன்றி 10 அங்குல அளவினதாக வளர்ந்திருக்கும்.

4-வது மாதம் கெர்ப்ப நோயை சவுக்கியபடுத்தும், பரிகாரம்.

இந்த நாளில் தாயாருக்கு கொஞ்சம், நோவுகண்டால் இதின் கீழ்கண்ட மருந்துகளை முறை பிரகாரம் சேகரித்து, கொடுத்தால் இந்த நோவு ஆண்டவன் கிருபையால் தீரும்.

விபரமாவது.

நொச்சிவேரும்,
நேதர்கிழங்கும்,
வசைக்கு,
3-வருகனிடை,
சேர்த்து பசுவின் பால் விட்டு அரைத்து,
கெச்சகாய் அளவு பாலில் கலந்து சாப்பிடவும்
ஆண்டவன் கிருபையால், நோவு தீரும்.

65-வது பிரிவு.

இது 5-வது மாதம் காணும் சிசுவினிலைமைகளைப்பற்றி சொல்வதாம்.

5-வது மாசத்துக்கு மேல் 6-வது மாசத்துக்குள்ளாக மேலே கூறிய சிசுவின் அங்கவுறுப்புகளுக்குள்ளே மிருதுவாக எலும்புகள் அமைவதும் முகத்துள்ள மூக்கு, வாய், கண் காது, இவைகளுக்கும் சிரசுள்ளிருக்கிற மூளைக்கும் துவாரங்கள் அமைவதோடு மற்றுமுள்ள கீழ் அவையவங்களாகிய மல

துவாரமும் மனத்துலக்கமும் ஏற்பட்டு 12 அங்குல அளவின ங்களும் வளர்ந்திருக்கும்.

5-வது மாதம் கெர்ப்புணையை சஷக்கிய படுத்தும், பரிகாரம்.

இந்த நாளில், தாயாருக்கு கொஞ்சம், நோவு கண்டால் இதின் கீழ்கண்ட, மருந்துகளை, முறை பிரகாரம், சேகரித்து கொடுத்தால் இந்த நோவு, ஆண்டவன் கிருபையால், தீரும்

விபரமாவது.

இலாமிச்ச வேரும்,
அம்பர் பூவும்,
வகைக்கு ஐ-விராகனிடை சேர்ந்து
பசுவின்பாலில், அரைத்து
கொட்டைபாக்களவு,
பாலில் கலர்ந்து கொடுக்கவும்,
ஆண்டவன் கிருபையால், நோவு தீரும்.

௬-வது பிரிவு.

இது 6-வதுமாதம் காணும் சிசுவின்நிலைமைகளைப்பற்றி சொல்வதாம்.

6-வது மாசத்துக்கு மேல் 7-வது மாசத்துக்குள்ளாக மே[illegible] நரம்பு, கை, கால்களில் காணப்படும் [illegible] தேக அவயங்களில் போதுமா[illegible] 14 அங்குல அளவினதாக வளர்ந்திருக்கும்.

6-வது மாதம் கெர்ப்ப நோவை, சவுக்கிய படுத்தும் பரிகாரம்.

இந்த நாளில், தாயாருக்கு கொஞ்சம், நோவு கண்டால், இதின் கீழ்கண்ட மருந்துகளை, முறை பிரகாரம், சேகரித்து, கொடுத்தால், இந்த நோவு, ஆண்டவன் கிருபையால், தீரும்.

விபரமாவது.

தீருட்க்ஷி. பழம்
நாரை கிழக்கு,
திப்பலி
வகைக்கு, 2-விருகனிடை,
சேர்ந்து பசுவின் பால் விட்டு அரைத்து
பசுவின், பாலில் கலர்ந்து கொடுக்க,
ஆண்டவன் கிருபையால், நோவு தீரும்.

67—வது பிரிவு.

இது 7-வது மாதம் காணும் சிசுவினிலைமைகளைப்பற்றி சோல்வதாம்.

7-வது மாசத்துக்கு மேல் 8-வது மாசத்துக்குள்ளாக மேலே கூறப்பட்ட அங்க வுறுப்புகளில் நீட்ட மடக்க வேது வான முட்டெலும்புகள் ஒன்றுயமைந்து தேகத்தின் மேலே ரோமத்துவாரங்கள் மிக நுட்பமாக ஏற்பட்டு ரோமங்களுக்கு சிறிய குறுத்துகளாகத் தோன்றும் இதுவல்லாமலும், கருப் பைக்குள் சிசு அசைந்து கொள்ளும், ஆறுதாரமும் ஐந்தெழுத் தும் 51 அக்ஷரமும், பஞ்சபூதங்களும், அதூல சூக்ஷ மமாகத்தோன்றி 16 அங்குல அளவின ளவாக இருக்கும்.

7-வது மாதம் கெர்ப்பநோவை, சவுக்யப்படுத்தும் பரிகாரம்.

இந்த நாளில், தாயாருக்கு கொஞ்சம், நோவு கண்டால், இதின் கீழ்கண்ட மருந்துகளை, முறை பிரகாரம், சேகரித்து கொடுத்தால், இந்த நோவு, ஆண்டவன் கிருபையால், தீரும்.

விபரமாவது.

நைதர்கிழங்கு,
தாமரைப் பூவு
வகைக்கு,
2-விருகனிடை சேர்த்து,
பசுவின் பால்விட்டு அரைத்து புளிகொட்டை அளவு
பாலில்கலந்து கொடுக்கவும்,
ஆண்டவன் கிருபையால்தீரும்,

68-வது பிரிவு.

இது 8-வது மாதம் காணும் சிசுவினிலைமைகளைப்பற்றி சொல்வதாம்.

8-வது மாசத்துக்குமேல் 9-வது மாசுத்துக்குள்ளாக மேலே கூறியவளர்த்தியோடு தேகத்திற்குள்ளே 72,000 நாடி நரம்புகளும், கர்ப்பவதியுண்ட அன்னசாரமானது சிசுவின் தொப்புள் வழியாகப்போவதற்குவேண்டி, தாயின் அன்னசாரப் பைக்கும் சிசுவின் தொபபுளுக்கும் ஒருவிதஜவ்வுக்குழாவானது கொடிபோல ஏற்பட்டு அதன் வழியாக தாயுண்ட அன்னசார மானது குழந்தையின் உதரத்திற்சென்று சிசு ஆண்டவன் கிரு பையால் வளர்ந்து உயிருடனசைந்து கொண்டிருக்கும். அல்லா மலும் மணிக்குடல், இரைக்குடல், கல்லீரல், நுரையீரல், இர

த்த ஈரல், குண்டிக்காய், மலஜலப்புரை யிதுகளும் ஏற்பட்டு 18 அங்குல அளவினதாக வளர்ந்து காணப்படும்.

இந்த எட்டாமாதக் குழந்தையானது ஏதும் உற்பாதங்களால் கர்ப்பத்தினின்றும் வெளிவரின் அது அநேகமாய்ஜீவித்திருப்பது சந்தேகமாம் அல்லாமலும் சிசுவின் தாய்க்கு தேகத்தில் ஏதும் கெடுதிகள் ஏற்படுமாயின் அதினின்றும் அந்தத் தாயும் பிழைப்பதரிதாய் முடியும்.

8-வது மாதம் கெர்ப்ப நோவை, சவுக்கிய படுத்தும் பரிகாரம்.

இந்த நாளில், தாயாருக்கு கொஞ்சம், நோவு கண்டால், இதின் கீழ்கண்ட, மருந்துகளை, முறை பிரகாரம், சேகரித்து கொடுத்தால், இந்த நோவு, ஆண்டவன் கிருபையால், தீரும்.

விபரமாவது.

அரசம்பட்டை,
மருதம்பட்டை,
வகைக்கு 3 விருகன் இடை,
சேர்த்து பசுவின் பாலில்.
அரைத்து பசுவின் பாலில்,
கலச்கி கொடுக்கவும்,
ஆண்டவன் கிருபையால் நோவுதீரும்.

69-வது பிரிவு.

இது 9-வது மாதம் காணும் சிசுவினிலைமைகளைப்பற்றி சொல்வதாம்.

9-வது மாசத்துக்கு மேல் 10-வது மாசத்துக்குள் மேலே கூறிய அம்சத்தோடுகூடிய சிசுவின் தேக அஸ்திக்கும்

சிரசில் மூளையும், தேகத்துக்குள் இரத்த சுத்தமாகி, யும் தேக அங்கங்களுள்ளே கிரமமாக ஏற்படவேண்டிய ஸ்தானங்களில் கொழுப்பும், தேக மேற்றோல் இரத்த பூரிப்பால் அழுத்தமாயும் சர்வ அங்கங்களெல்லாம் முன்னிலும் வளர்ந்து பருத்து வனுவேறி கர்ப்பப்பைக்குள் கட்டுப்பட்டு வெதுவெதுப்பின் கஷ்டம் பொறுக்கலாற்றாது கல்லறிவோடு அடிக்கடி புரண்டும் நீண்டும் நிமிர்ந்தும அசைந்துகொண்டிருக்கும். இவ்வித நிர்ப்பந்தத்துடனிருக்கிற சிசுவானது 19 அங்குல அளவினதாய் வளர்ந்திருக்கும்.

9-வதுமாதம் கெர்ப்ப நோயை சவுக்கிய படுத்தும் பரிகாரம்.

இந்த நாளில், தாயாருக்கு கொஞ்சம், துவாலே கண்டால், இதின் கீழ்கண்ட, மருந்துகளை, முறை பிரகாரம், சேகர்த்து கொடுத்தால், இந்த நோவு, ஆண்டவன் கிருபையால், தீரும்.

விபரமாவது.

துவாலேக்கு பரிகாரம்
இதின் அடியில் கண்ட, மருந்தை
முறைபிரகாரம் சேர்த்து, கொடுக்கவும்,
நைதர் கிழங்கு,
அதிம்துரம்,
சந்தணம்,
வெள்ளி லோத்திரம்,
இவைகள் வகைக்கு,
7 விருகனிடை சேர்த்து,
நல்ல தண்ணீர் விட்டு,
அரைத்து 4-பங்கு செய்து,

வொரு பக்கு விருதம்,
பச்ச அரிசிகளனீரில்
கலக்கி
காலை—மாலை
கொடுக்க ஆண்டவன் கிருபையால், தீரும்.

70-வது பிரிவு.

இது 10-வது மாதம் காணும் சிசுவினிலைமைகளைப்பற்றி சொல்வதாம்.

1வது மாசத்திலே சிசுவானது பூர்வம் கர்ப்பவாசத்துள்ளே கருவாயமைந்த தினமுதலாக 300 நாளானவுடன் கர்ப்பப்பை கனிந்தும், கர்ப்ப வாசல் தளர்ந்தும், (ஒருவன் மலைமேலிருந்து தலை கீழாய்க் குப்புற விழுவதுபோல்) சிசுவானது, தான் கர்ப்பப் பைக்குள் கட்டுப்பட்டிருந்த சிசுவானது நம்மை ஆளும் ஆண்டவன் கிருபையாலும் அவனுடைய வல்லபத்தைகொண்டும் நல்வணக்கத்தோடும் அமைத்தபடி வெளியாக்கிறன் அப்போது சிசுவானது 20 அங்குல அளவினதாக்க காணப்படும். (வல்லாஹு அஃலம்.)

71-வத் பிரிவு.

இது கெர்ப்பத்திருக்கும் சிசு ஆண், பெண் என்டரியும் விபரங்களை சொல்வதாம்.

கேளாய், சாதாரணமாக மனிதர்களுக்குள் தங்கள் நாயகி கர்ப்பவதிகளாக யிருப்பார்களானல்அந்த கர்ப்பத்துக்குள்ளே யிருக்கிற சிசு ஆணு அல்லது பெண்ணு யென்று தெரிந்து

கொள்ளவேண்டியது அநேகருக்கு அவசியமாகத் தோற்றும் மாதாவின் நம்மையின் பொருட்டும் கர்ப்பத்துள்ளேயிருக்கிற சிசுவானது ஆணயிருக்குமாயின் அந்தக் கர்ப்பிணியின் வலது ஸ்தனம் பருத்திருத்தல், அந்த ஸ்தனத்திலே நிரம்பியிருக்கிற பாலானது கலங்கலாகவும் வெண்மையாகவுமிருத்தல், கர்ப்பிணியின் சிறுநீர் முன்னேய வர்ணமாறி பல வர்ணமாய் காணப்படல், சிசு கர்ப்பத்தின் வலது பக்கமிருப்பதாகத் தோன்றுதல் கர்ப்பிணி எழுந்திருக்கையிலும் உட்காருகையிலும், அடிக்கடி வலது, கையை யூன்றுதல், ஸ்தனத்திலுள்ள பாலில் ஓர் துளியை தண்ணீர்விட மிதத்தல் ஆகிய இவ்வடையாளங்களால் கர்ப்பத்துள்ளது ஆணென்றறிந்துகொள்ளலாம்.

72-வது பிரிவு

இதுபெண் சிசுவுகளின் அடையாளங்களை இனி சொல்வதாம்.

பெண்சிசுவுள்ள கர்ப்ப அடையாளம்.

கர்ப்ப மாதர்களது இரு ஸ்தனங்களில் இடது ஸ்தனம் பெருத்துக்காணல், தேகத்தில் அதிக சோம்பலுண்டாகுதல், கேவலமான தின்பண்டங்களில் பிரியமுண்டாகுதல், அடிக்கடி பொய்ப்பசி தோன்றுதல், முகத்தின் வர்ணமாறி வேறு வர்ணமாறுதல், கர்ப்பத்தினுள்ளே சிசுவானது இடதுபார்சமாயிருப்பதுபோலத் தோன்றல், உட்காரும்போதும் எழுந்திருக்கும்

முன்பக்கத்தில், 62, 63 64, பிரிவுகளை விட்டுவிட்டதினுல் அட்டவணையில் பார்த்துக்கொள்ளலாம்.

போதும் உடனுக்குடன் இடதுகையை யூன்றுதல் ஆகிய இவ்வடையாளங்களால் பெண்ணென்றறிந்து கொள்ளலாம்.

73-வது பிரிவு.

இது இருவரில் இன்னார் மலடரென வறியுந் திறம்.

சாதாரணமாய் மலடாயுள்ள ஆண் பெண் இருவர்களின் சிறுநீரை வெவ்வேறு பாத்திரத்தில் பிடித்து அதை, பயிராகி வளர்கிற சுரைக்கொடியில் தனித்தனியாக 5 தினம் வார்த்து வர, எவர் நீர் விட்ட கொடி காய்ந்ததோ அவர் மலடரெனவறிக.

இன்னும் இரண்டு பாத்திரங்களில் சொற்ப மொச்சைக் கொட்டை போட்டு அதில் இருவருடைய சிறுநீரையும் தனித்தனியா யூற்றிவர, சில தினங்கழித்துப் பார்க்கும்போது யாருடைய நீர்விட்ட கொட்டை முளைக்கவில்லையோ அவர்களை மலடரென் வறிந்துகொள்ளலாம்.

74-வது பிரிவு.

இது ஒரு சூலில் இரண்டுப் பிள்ளை பெறுவதைப்பற்றி சொல்வதாம்.

நாயக நாயகிகளிருவரும் சேர்ந்து விந்து நாதங்கள் வெளிப்பட்டு கருக்குழியில் இழுக்கப்படுகிற சுரத நீர் தாரை வல்லயானது, சாதாரணமாக அறுவம்புல் நுனியில் தங்கிடும் பனி நீர்த்துளி யெவ்வளவோ அவ்வளவே கருப்பையா லிழுக்கப் படுமன்றி இருவரிடமிருந்து வெளிப்படும் சுரதநீர்யாவும் கருப்

பொரையிற் செல்லமாட்டாது திருஷ்டாந்தமாக துறவியாம் பட்டினத்தடியார் பாடலின் ஓர் பால்.

ஒரு மடமாதை மொருவனுமாகி யின்பசுகந்தரு மன்பு பொருந்தி யுணர்வுகலங்கி யொழுகியவிந்து ஊறுசுரோணித மீதுகலந்து பனியிலோர் பாதி சிறு துளிமாது பண்டியில் வந்து புகுந்துதிரண்டு என்று கூறியவாற்றானும்.

75-வது பிரிவு

பிறந்த பிள்ளைக்கு தொப்புட்கொடி அறக்கும் விபரங்களை சொல்வதாம்.

கெர்ப்பத்தில்னின்றும் சிசு வெளிவந்தவுடனே மாயையில் ஒட்டிக்கொண்டிருக்கிற அதன் தொப்புட்கொடிக்கு ஓர் சிறு நூல்கயிற்றினாலாவது அல்லது டேப்புக் கச்சையினாலாவது குழந்தையின் நாபியினின்றும் இரண்டங்குல தூரத்தில் கொடியில் ஒரு கட்டும், அதினின்றும் இரண்டங்குல தூரத்தில் ஒரு கட்டுமாக இரண்டு கட்டு கட்டவேண்டும். பின்னர் மூங்கல் கத்தியினால் அவ்விரண்டு கட்டுகளுக்கு மிடையில் கத்தரித்துக் குழந்தையை தாயினின்றும் வேறுபடுத்தி விடவேண்டும்.

சிசுவின் தாய் சௌக்கியமாய் படுக்கையில் படுத்துக் கொண்ட பிற்பாடு மருத்துவ ஸ்திரீயானவள் சிசுவுக்கு ஸ்நானஞ் செய்வித்து நன்றாய்த் துவட்டி பால்கொடுக்கத் தாயினிடம் கொடுக்கவேண்டும்.

பிரசவித்த ஸ்திரீக்கு உடனே தத்தம் வழக்கப்பிரகாரம் கொடுக்கவேண்டிய மருந்து கொடுத்து அதுசரிவர இரைப்

மையில் சென்று சிரணித்த பின்னர் இளைப்புக் களைப்புத்தீர சிறிது ரவைக்கஞ்சி சூடாகக் கொடுக்கலாம் தண்ணீர்பானம் ஒருபோதுங் கூடாது. இப்படி மூன்றுதினம் சென்றபின்னர் வழக்கத்துக்கு விரோதமன்னியில் பத்தியமாக சிறிது காரசாரத்தோடு தனக்குவேண்டிய அளவுசாப்பாடு கொடுக்கவும். அப்படிப் புசித்தால் தான் தேகம் மிகத் திட்டப்படும். பாலுங் குணப்படும் நிற்க; அடிவயிற்றில் போட்டிருக்கிற கட்டு நழுவி விடாமல் அடிக்கடி கவனித்துச் சீர்படுத்திக்கொள்ளவேண்டும்.

76-வது பிரிவு.

பிறந்த பிள்ளைக்கு பால்கொடுக்கும் விபரங்களை சொல்வதாம்.

பிறந்த குழந்தை பால்குடித்து வாயெடுத்த பின்னர் அடிக்கடி இரண்டு உதட்டையும் துணியினால் நன்றாகத் துடைக்கவேண்டும். அவ்வாறு செய்யாவிடில், குழந்தை சப்பும் மூலைக்காம்பு வரம்பைச்சுற்றி யேற்கனவேயுள்ள கருமையானது உதட்டில் பிடித்துக்கொண்டு எப்போதும் கறுப்புதடாகவேயிருக்கும். ஆகையால் ஞாபகமாய்ச் செய்யவேண்டும். இந்த மர்மம் அநேகருக்குத் தெரியாதபடியால் தான் சிலருக்கு எப்போதும் உதடு கருமையாகவே யிருக்கிறது.

77-வது பிரிவு.

பிள்ளைகளுக்கு இஸ்தானம் செய்யும் விவரங்களை சொல்வதாம்.

குழைந்தைகளுக்கு ஒன்றுவிட்டொன்று நீரார்ட்டவேண்டும். மிதமான வெந்நீரா யிருக்கவேண்டும். 1-மாதம் சிசுவுக்கு 5-நிமிஷத்துள்ளும் அதன்மேற்பட்ட குழந்தைகளுக்கு

10-நிமிஷத்துக்குள்ளும் நீராட்டவேண்டும். அப்படி நீராட்டும் வெந்நீரில் சுட்டிவிளாயிலைக்கியாழம் சிறிது கலந்து ஸ்நானம் செய்விக்க தேகத்துக்கு மிக சுகமாயிருக்கும்.

இராக்காலங்களில் குழந்தை தூங்காமல் அழுதுகொண்டேயிருக்குமானல் அதற்காக மாலைநேரத்தில் மேற்கண்டபடி ஸ்நானஞ் செய்வித்தால் சுகமாய்த் தூங்கும்.

78-வது பிறிவு.

பிள்ளை பிறந்த வோரு வாரத்துக்குள் கஜனரிஜிஸ்தரில் பதிவிக்கும் விபரங்களை சோல்வதாம்.

குழந்த பிறந்த ஒரு வாரத்துக்குள்ளாக ஜனன ரிஜிஸ்தரில் பதியும்படி கிராம உத்தியோகஸ்தரிடம் தெரிவிக்க வேண்டியது. குழந்தை பிறந்த 3 மாதத்துக்குமேல் 1-வருஷத்துக்குள்ளாக சர்க்கார் உத்தியோகஸ்தர்களால் அம்மை குத்திக்கொள்ளவேண்டியது. அப்படி அம்மை குத்தும் உத்தியோகஸ்தரைக் குத்தக்கூடாதென்று நிராகரிக்கக்கூடாது அப்படி நிராகரித்தால் சட்டப்படி தண்டனையடைய நேரிடும். அம்மை குத்தும் பால் பசுமாட்டில் எடுத்ததாயிருந்தால் மெத்த நன்மை.

79-வது பிரிவு.

பிறந்த குழந்தை அழாதிருந்தால் அழச்செய் சிகிச்சை.

பிறந்த சிசு அழாதிருந்தால் அதன் முதுகினமேல் மெதுவாய் இரண்டொரு தட்டு தட்டிக் கொடுத்தாலாவது அல்லது

முகத்தில் குளிர்ந்த ஜலத்தை இரைத்தாலாவது அழத்தொடங்கும். குழந்தை பிறந்தவுடனே மூச்சு விடுவதற்கு லாகுவாயிருக்கும்படி மல்லாக்கிப் படுக்கவைக்கவேண்டும.

---

80 வது பிறிவு.

பிறந்த பிள்ளைக்கு பால் கொடுக்கும் விபரங்களைப் பற்றி சொல்வ்தாம்.

பிள்ளைகளுக்கு தாயி பால்லானது மிகவும் சிரெஷ்டமானதும் முக்கியமானதுமாய் யிருக்கும் பிள்ளைக்கு பால் கொடுக்கும் தாயானவள் ஒருவருஷம் வரைக்கும் பத்தியமாயும் ஒழுங்காயும் நடந்துகொள்ளவேண்டியது. தாயானவள் குளிர்ச்சியான வஸ்துக்களை பிரவேசிக்கக்கூடாது. இன்னம் கடலைமாவுபோல், கொத்த பலகாரங்களையு பொசிப்பதும், பிள்ளைக்கு நாளாவண்ணத்தில் சீதளம் மாந்தம் அஜிர்னம்பேதி, முதலிய நோய்கள் வுற்பத்தியாகும். ஆனதால் பிள்ளைகளுக்கு 12-மாதம் வரைக்கும் தாயின் பாலை தவிர வேரே பசுவின் பாலையும் கொடுக்கலாம். அன்னம்போல் கொத்த பதார்த்தங்கள் கொடுப்பது மகாபெரும் கஸ்டத்துக்கு வழியாகும்.

81-வது பிரிவு.

தாதி பால் கொடுப்பதின் விபரங்களைப்பற்றி சொல்வதாம்.

தாயிக்கு பால் இல்லாவிட்டால் ஓர் நல்ல தாதியை அமர்த்தி கொள்ளவேண்டும். அவர்கள் 23-வயதுக்குள்

பட்டவர்களாயும, ஆரோக்கியவதியாயும் யிருக்கவேண்டும். அவள் நிரேகம் வியாதி அற்றவளாயும், அவள் கய்பிள்ளைக்கு யாதாமொரு நோவும் இல்லாமல் யிருக்கவேண்டும். அப்படி அவள் குழந்தை யிறந்துபோய் யிருக்குமாகில், அந்த பிள்ளை எவவித நோயால் யிறந்தது. என்றும் தீர்க்க விசாரித்து அவளை தம்மள் வீட்டில் சாப்பாடுகொடுத்து, பத்தியமாய் வைத்துகொள்வது மிக்க நலம்.

82-வது பிரிவு.

பிள்ளைகளுக்கு உடுமானங்கள் அணையும் விபரங்களைப்பற்றி சொல்வதாம்.

1-வது பிள்ளைகள் தரிக்கும் உடைகள் ரொம்பவும் பரிசுத்தமாக யிருக்கவேண்டும். 2-வது வுடுத்தும் கய்லிகள் மொரடாகவும், பளசாகவும், யிருக்ககூடாது. 3-வது அப்படி யிருப்பது, விளயாட்டு பிள்ளைகளுக்கு மெத்தவருத்தத்தை கொடுக்கும். 4-வது இன்னம் பள்ளிகூடத்து பிள்ளைகளுக்கு உடைகள் மிக்க வெண்மையாக யிருக்குமாகில், கல்விக்கு மனபிரிய முண்டாகி புத்தியை விளங்க செய்யும்.

---

83 வது பிறிவு.

பிள்ளைகள் நித்திரை செய்வதின் பலனைபபற் றி சொல்வதாம்.

பிள்ளைகளுக்கு ஆகாரம் எவ்வளவு அவசியமோ, அது போல் நித்திரை செய்வது அவ்வளவு அவசியாமானதாகயிருக்

கும். பிள்ளைகளுக்கு நித்திரை செய்யும் அறைகள் நல்லபரிசுத்தமாயும், நல்ல காத்து வரக்கூடியதாயும், பிள்ளை படுக்கும் விரிப்பானது மெத்தவும் மெதுவாயும், வெண்மையுள்ளதாயும் யிருக்கவேண்டும். இன்னும் பிள்ளை நன்றாய் தூங்கும்போது யோச்சல் செய்து திடுக்கிட்டு முழித்துக்கொள்ளுமாகில் அதிக பயத்துடன் அழுகும் அதனால், வெகுநேரம் வரையில் அழுகுமாகில் சில தொந்து வியாதிகள் அண்டும் இன்னும் 2-3 பிள்ளைகள் ஒரு படுக்கையில் படுக்கவைப்பது மகா கெடுதியுண்டாகும். அதனால் பிள்ளைகள் ஒருவருக்கொருவர் புரண்டு உருண்டு கால் கைகளை மேல் விட்டுக்கொண்டு தூக்கத்தை கெடுதி செய்வதுமல்லாமல் ஒரு பிள்ளைக்கு யிருக்கிற வியாதி மற்ற பிள்ளைகளுக்கும் உண்டாகும் ஆனதால் பிள்ளைகளை ஒண்டியாகவும், நல்ல சவுகரியமான இடங்களிலும் படுக்கவைத்து தூங்கி எழுந்திருப்பது நோய் அணுகாது திரேகத்துக்கு சவுக்கியம் உண்ணின பால் செறிக்கும் புத்தி தெளிவுண்டாகும்.

---

84 வது பிரிவு.

பிள்ளைகள் பள்ளிக்கூடத்துக்கு போகும் விபரங்களைப்பற்றி சொல்வதாம்.

பிள்ளைகளை 5 வயதிலிருந்து மதரசாக்களுக்கு அனுப்பி கமதுமேலதசட்டங்களை கற்பித்துக் கொடுக்கும்படியாக ஒஸ்தாதினிடம் அனுப்பவேண்டியது. அவசியம், இவ்விதமாக 20-வது வயது வரையிலுமென்றும் குறிக்கலாம், இவ்விதமாக தினந்தோறும் காலையில் எழுந்திருந்து முகம் கைகால் சுத்தி செய்து நல்லவிதமான உடைகளை அணிந்துகொண்டு பிள்ளை

களை மதரசாக்களுக்கு இளம் பருவத்தில் படிக்கும் கல்விக ளும், நல்லொழுக்கமும், அவர்களுடைய புத்தியிற் படிந்து நன் ருய் வேரூன்றிக்கொள்ளும். பெரிய பிள்ளையான பின்பு கல் வியில் பிரவேசிப்பது பிரயோஜனமற்றதாயிருக்கும். இன்னும் பாலர் பருவத்தில் கல்வி, கற்றுக்கொள்வதுதான் பிரயோஜன த்தை கொடுக்கும். இன்னும் கல்வியினல் வுண்டாகும், பிரயோ ஜனத்தையும், கீர்த்தியையும், பிள்ளைகளுக்கு நன்ருக தினந் தோறும் போதித்து வரவேண்டும். உலகத்தில் கல்வியே மிக்க பிரதானமுள்ளதா யிருப்பதால் யாவரும் கல்விகற்று நல்வணக் கத்துடனிருப்பது நலமானதாகயிருக்கும்.

85-வது பிரிவு.

இது நமதுநாயகம் சல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் ஹஸறத் அலிறலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு செய்த வசியத்தை சொல்வதாம். அல்ஆலி முல்பாலில் மவுலாணு மவுல்வி நூஹ் லெப்பை ஆலிம்சாஹிபு அவர்கள் திருவாய் மலர்ந்தருளியது.

ஆதித்திருத்தூதர் நபியிறசூல்
அலியார் அவர்களுக் கருளிச் செய்தார்
நீதி மனைவாள் தன்னுடனே
நிதமும் கூடும்நாள் கூடாநாளும். 1

மாதந் துவக்கமும் நடுவாலையும்
மாதமொடுக்கமும் கூடாதேயும்

நாதனந்நாளில் தரித்த பாலன்
தவிரு பயித்தியம் வெண்குட்டமும்.

விரைந்து அவளுக்கும் அவள் பிள்ளைக்கும்
வினையாய் ஹலாக்கு தான்பிடிக்கு மென்றார்
மறந்து லொஹ்றுக்கு பின்னதாக
மகிழ்ந்து மனையாட்டி யுடன் கூடினால்.

பந்த வேளையில் தரித்த அந்த
புதல்வன் ஷைத்தான்தன தோழனாவான்
அணைந்து இருவரும் முடிந்த பின்பு
ஆடை துடைப்பதும் வேறே வேண்டும்.

துடைக்கும் பிடைவையை யொன்றாகவே
துடர்ந்து இருவருந் துடைப்பாராகில்
துடரா யிருவர்க்கும் தொடுக்குஞ் சண்டை
தொடுசு நீங்கிப்போம் தலாகுடனே.

கூடும் மனையாளை நிலைதனிலே
கூட ஒண்ணாது கூடினாக்கால்
தேடுமதில் பாலன் தரித்துதாகில்
தினமும் விரிப்பினிற் சிறுநீர் செய்வான்.

கூடும் ஹ்லாலைத்தான் கூடும்போது
ஊணமாய் பேசொண்ணாது பேசுகையில்
தேடும் பிள்ளைகளதில் தரித்தால்
தேடாய் குருடுமை யாகுமென்றார்.

ஒளுவுடன் சேரும்மாதுதன்னை
ஒளுவன்றி சேரில் தரித்தபிள்ளை

ஒழுவன்றி கல்பு குருடு பாய்ந்து
விஷகேடுஞ் சோம்பலுண்டா மென்றார்.

புதநாள் அண்ணையில் வீடுகூடி
அது நாள் தன்னிலே தரித்தபாலன்
சதியாம் அநியாய காரனுக்கு
சரீர சகாயஞ்செய் உதவிசெய்வான்.

சனிநாள் அண்ணையில் வீடுகூடி
சனிநாள் தன்னிலே தரித்தபிள்ளை
சமைந்த பிள்ளைகள் நெருப்புத் தண்ணீர்
சரிந்த சுவரினில் சாவாரென்றார்.

ஒருநாள் தன்னிலும் கூடும்போது
ஒருவ ரபத்தையுங் காணொண்ணது
குறிநாள் தன்னிலே தரித்தபிள்ளை
குதாவின் வேதனையி லாகுமென்றார்.

ஞாய ருச்சயில் வீடுகூடி
ஞாயருச்சயில் தரித்த பிள்ளை
நெறியாகிய தாய் தந்தை சொல்லை
நெட்டி நடப்பவனென் றெனமொழிந்தார்.

பொழுது கிளம்பத்தா னடுக்கும்நேரம்
பூவையுடன் கூடியணைந்தானாகில்
முழுதுமதில் பாலன் தரித்து தாகில்
மூடுகி ஜனங்களை வழியறிப்பான்.

வாங்குங் காமத்து சொல்லும்போது
வாழும் வதுவையை யணைந்தானாகில்

பாங்கா யதில் பாலன் தரித்துதாகில்
பகையாய் முகத்தாட்சி முனபிகாவான்.

வேறே யொருத்தினைப் யாசைவைத்து
வெற்றியுடன் கன்னிதனைக் கூடினால்
வேறு ஆசையால் வீறுங்குன்றி
வெறுத்து குஸ்ருவாய்ப் போகுமென்றார்.

பிறைக்கு முன்நாளும் அமாவாசிலும்
பொதிந்த ஹைலிதும் நிபாசிலையும்
மறந்து சுகியாதே மனையாட்டியை
துடர்ந்து கூடாதே யாகாதென்றார்.

பொருத்த மில்லாநாள் ஒழிக்கையிலும்
பொதிந்த நசல்களில் நித்திரையில்
பொருந்தி சுகியாதே மனையாட்டியை
புணர்ந்து கூடாதே யாகாதென்றார்.

திங்கட்கிழமையில் தரித்த பாலன்
தெரிந்த ஆலிமும் ஹாபிலாவான்
துங்க செவ்வாயில் தரித்த பாலன்
தவிரும் பொய்புறம் தன்னைக்கொண்டும்.

தரிபாடாகவே யிருப்பானென்று
தெரிந்த உலமாக்க ளெடுத்துரைத்தார்
தரிக்கும் பிள்ளைகள் வியாழந்தன்னில்
தருமாய் இல்முடன் பூரயமாம்.

சிறக்கும் ஜும்ஆயில் தரித்தபாலன்
சிறந்த கதிபுமாய் ஆலிமாவான்

சேர்க்கும் பகீஹுமாய் இபாதத்தினில்
சிறப்பும் சாலிஹா யிருப்பானென்றார்.
இந்த செயல்களை யறிந்து நீங்கள்
இதமாம் கூடுங்கள் ஹாலாலுடனே
வந்த பிணிகளும் வாராதென
வாழுமென சொன்னார் நபியிறசூல்.
இந்தப்படி சொன்னேன் இமாம்கள் சொல்லை
இதமாய் நூஹென்னும் பேரானவர்
சொந்தமாயிதையறிவதற்குச்
சொன்னார் நபியிறசூலுஞ் சொன்னார்.

85-வது பிரிவு.

இஃது

அறபுவாக்கியம்.

அவூதுபில்லாஹி மினஷ்ஷைத்தா னிர்றஜீம்.

இதன் பொருள்.

எடுத்தெறியப்பட்ட ஷைத்தானுடைய தீங்குகளை விட்டும் அல்லாஹுத் தஆலாவைக்கொண்டு நான் காவற்றேடுகிறேன்.

அறபுவாக்கியம்.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மானிர்றஹீம்.

இதன் பொருள்.

அல்லாஹுத் தஆலாவின் அழகிய திருநாமத்தைக் கொண்டு துவற்கம் துடங்குகிறேன் பூலோகத்தின்கண் நல்லவர்கள் பொல்லாதவர்கள் எல்லோருக்கும் கிருபை செய்கிற

வன். ஆகிறத்தில் முவுமீங்களுக்குமட்டும் தனதாக கிருபை செய்கிறவன்.

மேன்மை பெருந்திய இஸ்லாமார்க்கமாவது கலிமா தொழுகை ஸக்காத்து நோன்பு ஹஜ்ஜி ஆகிய இவ்வைந்து காரியங் கொண்டெடுக்கப்பட்டதாக விருக்கும் ஆதலால் அவ்வைந்து காரியங்களான அறபுவாக்கியங்களையும் பொருளுடனே தனித் தனி விளக்கமாகச் சொல்லுகின்றனம்.

அவ்வல்க்கலிமரதையிபு.

லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றசூலுல்லாஹி.

இதன் பொருள்.

வணக்கத்துக்குப் பாத்திரவான் யாருமில்லை அல்லாஹுத் தஆலாவைத் தவிர முஹம்மது நபிஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமாகிறவர்கள். அல்லாஹுத் தஆலாவின் திருத்தூதராக விருக்குமென்றும் உண்மையாக நானறிந்து ஈமான் கொண்டேனென்பதாம்.

86-வது பிரிவு.

இரண்டாங்கலிமா ஷஹாதத்து.

அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹு வகுத குலா ஷரீக்கலகு வஅஷ்ஹது அன்னமுஹம்மதன் அப்துகு வறசூலுஹு.

இதன் பொருள்.

அஷ்ஹது திடனாக நான் அறிந்து உண்மைகொண்டு சாட்சி சொல்லுகிறேன் அன்லாயிலாஹ இல்லல்லாஹு கருமமாகிறது உண்மையாக வணக்கத்துக்குப் பாத்திரவான் யாருமில்லை அல்லாஹுத் தஆலாவைத் தவிர (வஹ்தகு) அவன் தனித்தவன் லாஷரீக்கலஹு அவனுக்கு யாதொரு இணையுமில்லை. இன்னம் திடனாக நான் சாட்சிசொல்லுகிறேன் உண்மையாக முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களாகிறவர்கள் அல்லாஹுத் தஆலாவின் அடியாரென்றும் அவனுடைய திருத்தூதரென்றும் உண்மையாக நானறிந்து ஈமான் கொண்டேனென்பதாம்.

---

87 வது பிரிவு.

மூன்றுவதுகலிமா தம்ஜீது.

ஸுபுஹானல்லாஹி வல்ஹம்துலில்லாஹி வலாயிலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர் வலாஹவ்லவலாகுவ்வத்த இல்லாபில்லாஹில் அலிய்யில் அலீம்.

இதன் பொருள்.

ஸுபுகானல்லாஹி அல்லாஹுத் தஆலா துய்தானவன் வல்ஹம்துலில்லாஹி எல்லாப்புகழும் புகழ்ச்சியும் அல்லாஹுத் தஆலாவுக்காக விருக்கும் வலாயிலாஹ இல்லல்லாஹு வணக்கத்துக்குப் பாத்திரவான் யாருமில்லை. அல்லாஹுத் தஆலாவைத் தவிர வல்லாஹு அக்பர் அல்லாஹுத் தஆலா

மெத்தவும் பெரியவன் வலாஹவ்லவலாகுவ் வத்த இல்லாபில்லாஹில் அலிய்யில் அலீம் யாதொரு பாவத்தை விட்டும் திருப்புதலுமில்லே. யாதொரு இபாதத்தின்பேரிலும் பெலனுமில்லே. வலுப்பமாகிய உபர்த்தியாகிய அல்லாஹுத் தஆலாவின் உதவிகொண்டேயொழிய வென்று ஈமான் கொள்வதாம்.

88-வது பிரிவு.

நாலாங்கலிமா தௌஹீது.

லாயிலாக இல்லல்லாஹு வஹ்தகு லாஷரீக்கலகுல்முல்கு வலகுல் ஹம்துயுஹ் யீவயுமீத்து பியதிஹில்கைறுவகுவ அலா குல்லிசையின் கதீற்.

இதன் பொருள்.

நாலாங்கலிமா ஓர்மைப்பாட்டுடையது.

வணக்கத்துக்குப் பாத்திரவான் யாருமில்லே. அல்லாஹுத் தஆலாவைத் தவிர அவன் தனித்தவன் அவனுக்கு இணைதுணை யாருமில்லே. இன்னம் அவனுக்கே இராஜாங்கம் அவனுக்கே புகழ் அவன் தான் ஹயாத்தாக்குவான் மவுத்தாக்குவான், அவன், கைவசத்தில் தான் நலவடங்கலும் தரிபட்டிருக்குது இன்னம் அவன் எல்லா வஸ்துவின் பேரிலும், தத்துவம் உடையவனென்று ஈமான் கொள்வதாம்.

89-வது பிரிவு.

ஐந்தாங்கலிமா றத்துல்குபிர்.

அல்லாஹும்ம இன்னீ அவூதுபிக்கமின் அன்உஷ்ரிக்க பிக்கசை அன்வ அன அஃலமுபிஹீ வஅஸ்தக்பிறுக்க லிமா லாஅஃலமுபிஹி துப்த்து அன்ஹுவத்தபற்ற அத்துமினல் குப்ரி வஷ்ஷிறுக்கி வல்மஆஸீ குல்லிஹா வஅஸ்லம்து வஆமந்து வஅகூலு லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றசூலுல்லாஹி.

ஐந்தாங்கலிமா குபிரை றத்துசெய்கிறதுடையது இதன் பொருள்.

ஆண்டவனே ஓர் வஸ்துவைக்கொண்டு உன்னை இணைவைக்கிறதைவிட்டும் நான் உன்னிடம் காவல் தேடுகிறேன் இன்னம் நான் அதைக்கொண்டு அறிந்தவனாகவிருக்கிலும் அறியாதவனாகவிருக்கிலும் சரி உன்னிடத்தில் பிழைபொறுக்கத் தேடுகிறேன் அதைவிட்டும் தௌபாச்செய்து மீளுகிறேன் இன்னம் குபிர் சிறக்கு பாவங்களடங்கலைவிட்டும், நான் நீங்கிக்கொண்டேன் நான் இஸ்லாமாயிருக்கிறேன் ஈமான்கொண்டிருக்கிறேன் இன்னம் லாயிலாக இல்லல்லாஹு முஹம்மதுர் றசூலுல்லாஹி யென்கிற கலிமாவை நான் சொல்லுகிறேனென்று சொல்லி ஈமான் கொள்வதாம்,

இந்த கலிமாவை நிதமும் ஓதிவரவேண்டும்.

கலிமா ஐந்தும் பொருளும்-முற்றிற்று.

90 வது பிரிவு.

இதாவது

அறபுவாக்கியம்.

புனியல் இஸ்லாமு அலாகம்ஸின் ஷஹாதத்தி அன்லாயி லாஹ இல்லல்லாஹு வஅன்ன முஹம்மதர் றசூலுல்லாஹி வஇகாமிஸ்ஸலாத்தி வயீத்தாயிஸ்ஸகாத்திவ ஸவ்மிறமலான வஹஜ்ஜில் பைத்திமனிஸ்த்ததாஅ இலேஹி ஸபீலா.

இதின் பொருள்களும் பயான்களும்.

இஸ்லாமார்க்கம் ஐந்துகாரியத்தின் பேரில் எடுக்கப்பட்டதாக விருக்கும் முதலாவது (கலிமா ஷஹாதத்து) அதாவது மேற்கூறிய விபரப்படி ஈமான்கொண்டு நாவினாலும் மொழிகிறதாகயிருக்கும் இரண்டாவது (தொழுகை) இது ஒரு நாள் இரவு பகலேச்கு ஐந்து (வகுத்து) தொழுகையாகவிருக்கும் அதில் (லுகறு)த்தொழுகையாகிறது பொழுது உச்சியில் நின்றும் திரும்பிய (ஸவால்) நேரம் தொடுத்து ஓர் வஸ்துவின் நிழல் அவ்வஸ்துவுக்குச்சரியாகு மட்டுமாகவிருக்கும் (லுஹறு)த் தொழுகைக்கு நாலு றக்ஆத்து பறுலுஅந்நாலு றக்ஆத்துக்கும் கூடிய (பறுலு) அன்பத்லைதந்தாக விருக்கும் இன்னும் எந்தத் தொழுகையிலும் பறுலு பத்தொன்பது அதின் விபரம் பின்னால் சொல்லுவோம்.

(அஸறுத்) தொழுகையாகிறது மேல்படி நிழல் ஒருவஸ்துவிற்கு சரியாகிவிட்டநேரம் தொடுத்துபொழுதுமறைந்து (மரிபாகுமட்டு மாகவிருக்கும் அத்தொழுகைக்கு நாலு றக்ஆத்து

(பறுலு) அந்நாலு றக்ஆத்துக்கும் கூடிய பறுலு அன்பத்தைந்தாகவிருக்கும்.

இன்னும் (மக்ரிபுத்) தொழுகையாகிறது பொழுது மறைந்தநேரம் தொடுத்து செம்மேகம் மறையுமட்டுமாக விருக்கும் அத்தொழுகைக்கு மூன்று றக்ஆத்து (பறுலு) அம்மூன்று றக்ஆத்துக்கும் கூடிய பறுலு (நாற்பத்திமூன்றாக) விருக்கும்.

(இஷாவின்) வக்த்தாகிறது செம்மேகம் மறைந்தது தொடுத்து மெய்வெழுப்பு வெழுக்கும்மட்டுமாக விருக்கும் அத்தொழுகைக்கு நாலு (றக்ஆத்து பறுலு) அந்நாலு றக்ஆத்துக்கும் கூடிய பறுலு அன்பத்தைந்தாக விருக்கும்.

ஸுபுஹுத்தொழுகையின் வக்த்தாகிறது மெய்வெழுப்பு வெழுத்தது தொடுத்து பொழுது உதயமாகும் வரையிலாக விருக்கும் அத்தொழுகைக்கு இரண்டு (றக்ஆத்து) பறுலாயிருக்கும் அவ்விரண்டு றக்ஆத்துக்கும், கூடிய பறுலு முப்பத்தொன்றாகவிருக்கும் ஆகஐந்து (வக்த்து) தொழுகைக்கும் கூடிய பறுலாகிய றக்ஆத்து பதினேழாகவிருக்கும் அப்பதினேழு றக்ஆத்துக்கும் கூடிய பறுலு இருநூற்றி முப்பத்தொன்பதுவாயிருக்கும் அதில் (தக்பீறு தொண்ணூற்றிநாலு அத்தக்பீறுகளில் ஐந்து தக்பீறு (வாஜிபு) மற்ற தக்பீறுகள் அடங்கலும் ஸுன்னத்தாகவிருக்கும் அதின் விபரம் ஸுபுஹுக்கு பதினொன்று மக்ரிபுக்கு பதினேழு (ளுஹறு) அஸறு (இஷா ஒன்றொன்றுக்கும் இருபத்திரண்டு. அத்தஹிய்யாத்து ஒன்பது அதில் ஐந்து வாஜிபு நாலு அத்தஹிய்யாத்து ஸுன்னத்தாகவிருக்கு ஸலாம் பத்தாகவிருக்கும் அதில் ஐந்து ஸலாம் வாஜிபு ஐந்து ஸலாம் ஸுன்னத்தாகவிருக்கும் தஸ்பீஹு நூற்றி அன்பத்திமூன்று அதில் ஸுபுஹுக்கு பதி

னெட்டு (மக்ரிபுக்கு இருபத்தேழு ஒகறுக்கும் அஸறுக்கும் இஷாவுக்கும் ஒன்றொன்றுக்கு முப்பத்தாறு தஸ்பீஹ ஸுன்னத்தாகவிருக்கும்.

---

91 வது பிரிவு.

இஸ்லாமுக்கு மூன்றாவது பறுலாகிய ஸக்காத்து

ஸக்காத்துக்கொடுப்பது பொன் வெள்ளி ஆடு மாடு ஒட்டகை நெல்லு கோதுமை முதலிய தானியங்களிலும் மனிதர்கள் முளைக்கப்போட்டு பயிர்ச்செய்து தங்கரீகம் செய்து ஒஜீபனமாக்கி புசிக்கப்படுகிற கீழ்கூறுகின்ற முதலிய வஸ்துக்களிலும் சகாத்தெனும் குறிக்கப்பட்டவர்களுக்கு தர்மதானஞ் செய்கிறது இஸ்லாமாகிய ஆண் பெண் அடங்கல்பேரிலும் பறுளாக விருக்கும் அதறகு சறத்து அம்முதலே ஒருவருஷத்திற்கு உடையதனம் ஆக்கினவர்களுக்கெனவாம் ஆனால் தானியங்களில் ஒருவருஷம். ஆகவேண்டுமென்பது ஹக்குமில்லை எப்போது தயாறுயினதோ அப்போது உமியுடன் இருக்கிறதை (10) கோட்டை உடையதாக்கினால் 1 கோட்டையும் உமியில்லாமல் அரிசியைப்போலிருக்கிறதில் அஞ்சு கோட்டை தயாறுனால் அரைக்கோட்டையும் பழவர்க்கங்களில் ஈத்தப்பழம் முந்திரிப்பழத்திலும் யாபாரத்துடைய சரக்குகளிலும் புதையல் எடுத்த முதல்களிலும் ஸக்காத்து விதியாகிய பத்திப்பூண்ட டறுலாகவிருக்கும் வெள்ளியுடைய துகை (140) களஞ்சிக்கு 3 களஞ்சி கொடுக்கவும் பொன்னுடைய துகை (20) களஞ்சிக்கு அரைகளஞ்சிக் கொடுக்கவும் ஹலாலான ஆபரணத்தில் ஸகாத்து விதியில்லை ஹறாமான பொன்பாத்திரம் வெள்ளிப்பாத்திரம் இவைகளில் (2) தினாறு நிறையிருக்கின்றவைபோன்ற ஒத்த

அடிமைகளை பெண்கள் உள்பட அணிகிறதும் புழங்கிறதும் ஹறாமாயிருப்பதுடன் அதற்கு ஸக்காத்தும் விதியாகும்.

ஆட்டின் துகை (40) க்கு ஒரு வயதுடைய ஓர் ஆட்டுக் குட்டியாகவிருக்கும் (121) க்கு இரண்டு ஆடும் (201) க்கு (3) ஆடும் (400) க்கு (4) ஆடும் இதற்கப்புறம் ஓர் நூறுக்கு ஓர் ஓர் ஆடும் கொடுக்கிறது பறுலாயிருக்கும் மாட்டின் ஸக்காத்து (30) க்கு ஒரு வயது நிரம்பி இரண்டு வயதாகும் ஓர் கன்றுக் குட்டியும் [40] க்கு இரண்டு வயது நிரம்பி மூன்று வயதில் புகுந்த ஒரு கன்றுக்குட்டியும் [60] க்கு ஒரு வயது நிரம்பி இரண்டு வயதில் புகுந்த இரண்டு கன்றுக்குட்டியும் இந்தப்படி முப்பது அடங்கலிலும் ஒரு வயதுடைய கன்றும் நாற்பது அடங்கலிலும் இரண்டு வயதுடைய கன்றுமாகக் கொடுக்கவும் ஈத்தம்பழம் முந்திரிப்பழம் ஐந்து கோட்டைக்கு அரைக் கோட்டையாக விருக்கும். இன்னம் வியாபாரத்துடைய சரக்குகளில் அதின் விலையில் பத்தில் ஒன்றில்காலில் ஒன்றுக் குடுக்க வாஜிபாகும் இதின் துகை வெள்ளி பொன்னின் துகைகள் போலாம் அதில் எந்த வஸ்துவின் துகை எத்தினதோ அந்த துகைக்கு கொடுக்கலாம் புதையலுடைய முதலுக்கு ஸகாத்து வெள்ளி பொன்னுக்குச் சொன்ன ஹக்கும் களாகவிருக்கும்.

92-வது பிரிவு.

இஸ்லாமுடைய நாலாவது பறுலாகிறது.

நோன்பாகவிருக்கும் அன்நோன்புக்குபறுலாகிறது இரண்டுண்டும் அதில் ஒன்றுவது (றமழான்) மாதம் ஒவ்வொரு நாளை

க்கும் ஒரு தாம் கல்புகொண்டு பிசகற நிய்யத்து வைக்கிறது இரண்டாவது கிழக்கு மெய்வெழுப்பு வெழுத்த பிறகு தொடு த்து பொழுது அஸ்தமிக்கும் வரையும் நோன்பை முறிக்கும் காரியத்தை விட்டும் தன்னை தடுத்துக்கொள்வதாம் இன்னம் பறுலான நோன்பாக விருந்தால் அதை றமலானென்றும் கலா வாகவிருந்தால் கலாவென்றும் சுன்னத்தாகவிருந்தால் சுன்னத் தென்றும் அதைக் குறித்து பொழுதடைந்த நேரத்தோடு (பஜற்வாதிக்கு) வரையும் அந்தநிய்யத்தை எண்ணிக்கொள்வது இது இரண்டும் சறுத்தாகவிருக்கும் நிய்யத்தை வாயினல் மொழிகிறது முஸ்தஹப்பென்று வருகின்றது.

அந்த நோன்புக்கு நிரப்பமான நிய்யத்தாகிறது

இதுவாகவிருக்கும்.

அறபுவாக்கியம்.

நவைத்து ஸவ்மகதின் அன் அதாயிபற்லி றமலான ஹாதி ஹிஸ்ஸனத்தி லில்லாஹித்த ஆலா இந்த வருஷத்தின் றம லான் மாதத்துடைய பறுலான நோன்டை அதாவாக நளைப் பிடிக்க நிய்யத்துச் செய்கிறேன் அல்லாகுவுக்காக என்று சொல்லுகிறதுமாம்.

நிய்யத்து வைத்தவுடன் ஓதவேண்டும்.

அல்லாஹு லாயிலாஹ இல்லாஹுவல் ஹய்யூல்கய்யூம் அல்காயிமு அலாகுல்லி நபுஸின் பிமாகஸபத்து என்று ஓது வது ஸுன்னத்தாகவிருக்கும்.

93-வது பிரிவு.

தண்ணீரினால் அல்லது ஈச்சம்பழங்களினால் நோன்பு திறந்த பின்னால் ஓதும் துஆ.

அல்லாஹும்ம லக்க ஸும்து வஅலா ரிஸ்கிக்க அப்தர்த்து தஹபல்லமாவு வப்தல்லத்தில் வுறூகுவதபத்தில் அஜறு இன்சா அல்லாஹுத் தஆலா என்று ஓதுகிறது ஸுன்னத்தாக விருக்கும்.

இன்னும் துஆ.

அல்லாஹும்ம லக்க ஸும்து வஅலா ரிஸ்கிக்க அப்தர்த்து பத்தக்கப்பல மின்னீ யாறப்பல் ஆலமீன் என்றும் ஓதலாம்.

நோன்பை முறிக்கும்வகை.

நோன்பை முறிக்கும் காரியங்களைச் செய்வது ஹறாமென் றறிந்து மூரண்டாக தனது துவாரங்களில் கண்ணுக்குத் தெரியப்படுகிற வஸ்துவைச் செலுத்தினால் மனமூரண்டாக சத்தியெடுத்தாலும் ஜெமாவு செய்தாலும் மற்றும் வகையினால் டீணியிறக்கினாலும் வாயில் வஜீபனமிருக்க மெய்வெழுப்பு வெழுத்துப்போனபின் அதை முழுங்கினாலும் நோன்பு முறிந்துவிடும் கலாச்செய்வது (வாஜிபா) கவிருக்கும் ஸுறுமா இடுவதினால் நோன்பு முறியாதிருந்தாலும் அதை விடுவது வரிசையாக விருக்கும்.

94-வது பிரிவு.

இன்னும் சுன்னத்தான நோன்பாகிறது.

துல்ஹஜ்ஜி மாதம் ஒன்பதாம் அறபாநாளிலும் முஹர்ற மாதம் பத்திலும் ஒன்பதிலும் சவ்வால்மாதம் ஆறுநாளிலும்

ஹஜ்ஜிமாதத்திலும் (13-14-15) இதுகளிலும் வியாழம் திங்கட்கிழமைகளிலும் நோன்பு பிடிக்கிறதும் ஸுன்னத்து (முஅக்கதா) வாக விருக்கும் இன்னும் அறபாவுக்கு முன் எட்டுநாளிலும் முஹர்றமாதம் பதினொன்றிலும் பிறை (28-29-30) இதுகளிலும் நோன்பு வைக்கிறது (ஸுன்னத்தாக விருக்கும் ஹஜ்ஜி செய்கிறவர்கள் அறபா நோன்பை விடுகிறது ஸுன்னத்தாகவிருக்கும் (றஜபும் ஸஹ்பானும்) நோன்பு பிடிக்கிறது ஏற்றமென்று வந்திருக்கின்றன.

95-வது பிறிவு.

இஸ்லாமின் ஐந்தாவது பறுலாகிறது.

இஸ்லாமின் ஐந்தாவது [பறுலு] ஹஜ்ஜி செய்கிறதாக விருக்கும் அந்த ஹஜ்ஜிற்காகச் செல்வதற்குத்தக்க முதலும் சரீர ஆபியத்தும் ஏறிப்போக வாகனமும் உண்டாயிருக்கிறதுடன் வழியில் பயமும் இல்லாதிருக்கில் (ஹயாத்தில்) ஒரு தடவை மக்கத்திற்குப்போய் (ஹஜ்ஜும் உம்றுவும்) செய்ய விதியாக விருக்கும்.

96 வது பிறிவு

அந்த ஹஜ்ஜின் பறுலுகளாவது ஆறாகவிருக்கும்.

(அப்பறுலில்) ஒன்றாவது ஹஜ்ஜில் புகுந்தேனென்று இஹறும் கட்டுகிற நிய்யத்து வைக்கிறதாகவிருக்கும் இரண்டாவது துல்ஹஜ்ஜி மாதம் ஒன்பதாம்பகல் (ஸவாலுக்கும்) பெருநாளிரவு பஜ்றுக்குமிடையில் கொஞ்சநேரமாகிலும் அற

பாமலையில் தரிக்கிறது மூன்றுவது பெருநாள் பாதியிரவுக்குப் பின் (தவாபு செய்கிறது) நான்காவது (அறபாவில்) தரிக்க போகாதிருக்கும்வரையிலும் (தவாபுல் குதூமென்னும்) ஸுன்னத்தான தவாபுக்குப்பின் (ஸபாமறுவா) என்கிற இரண்டு மலைக்கிடையில் (ஸபா) கொண்டு துடங்கி [மறுவா] கொண்டு முடித்து ஏழுதரம் திட்டமாக்கி தொங்கோட்டம் ஓடுகிறது அறபாவில் தரித்து விட்டால் பறுலான முன் குறித்த [தவாபுல் இபாலாவுக்குப்] பின்னுலே ஓடவேண்டும் ஐந்தாவது தலை முடியில் மூன்றுரோமங்களுக்குறையாமல் நீக்குகிறது [ஆறுவது] முன்சொல்லும் ஒழுங்கின்படி தர்த்தீபாயிக்கொண்டு வருகிறது.

இன்னம் [உம்றுவின் பறுலாகிறது] அறபாவில் தரிப்பது தவிர மற்ற ஐந்தும் பறுலாகவிருக்கும்.

97-வது பிறிவு.

ஹஜ்ஜின் சுன்னத்தின் விபரம்.

ஹஜ்ஜின் சுன்னத்துகளாகிறது இஹ்றும் கட்டுகிறதற்கும் மக்கத்திற் புகுதுகிறதற்கும் [அறமாமுஸ்தலிபா] வில் தரிபடுகிறதற்கும் [அய்யாமுத்தஷரீ] கெனும் நாள் [11] [12] [13] லும், கல்லெறிகிறதற்கும் குளிக்கிறதும் இஹ்றும் கட்ட கொஞ்சமுன்பதாக மணம்பூசிக்கொள்வதும் தல்பிய்யத்தெனும் லப்பைக்க அல்லாஹும்ம லப்பைக்கலாஷரீக்கலக்க லப்பைக்க, இன்னல் ஹம்து ஒன்னிவுமத்தலக்க வல்முல்க்கலாஷரீக்கலக்கவென்று சொல்லுகிறதும் அதை எந்த நேரத்திலும் மிகுதமாக்குகிறதும் நிய்யத்தை வாயினுல் நவைத்துல் ஹஜ்ஜ அஹ்றம்துபிஹீலில்லாஹித் 'தஆலா வென்று மொழிகிறதும்

ஸலவாத்தோதுகிறதற்கும் ஸொற்கத்தைக் கேட்பதும் நரகத்தைவிட்டும் காவல்தேடுகிறதும் இம்மூன்று சருமமும் மிகுந்த தலங்களிளெல்லாம் ஸுன்னத்தாகவிருக்கும் யாவரும் ஸம்ஸம் தண்ணீரில் நின்றும் குடிக்கிறது முஸ்தஹப்பாகவிருக்கும் அந்த தண்ணீரு ஸொற்கலோகத்து ஹவ்லுல்கவ்தற் என்கிற ஆற்றுத் தண்ணீரைக்கான மிகவும் ஏற்றமென்று ஹதீதுகளில் வந்திருக்கின்றன. இன்னம் அந்த ஸம்ஸம் கிணற்றின் மேன்மையாகிய நீரைக் கொண்டு வருகிறதும் ஸுன்னத்தாகவிருக்கும்.

98-வது பிரிவு.

ஈமானில் ஆறுகாரியம் பறுலா யிருக்கின்றதின் விபரங்களை பயான்செய்து கூறுகின்றனம்.

ஈமானுகிறது ஆறுகாரியங்கொண்டதாக விருக்கும், அதாவது

அறபுவர்க்கியம்.

ஆமன்துபில்லாஹி வமலாயிக்கத்திஹீ வகுத்துபிஹீவறுஸுலிஹி வல்யவ்மில் ஆகிரி வல்கதிரிகய்ரிஹி வசற்றிஹீ மினல்லாஹித்தஆலா.

ஒன்றுவது அல்லாஹுத் தஆலா ஒருவன் அவனுடைய உள்ளமயிலும் வன்னிப்பிலும் வன்னிப்புவெனும் ஸிபாத்திலும் திருநாமங்களிலும் செயல்களிலும் இணைதுணையில்லை

யென்றும் இன்னம் அவனுக்கு தரிபாடான ஸிபாத்துகள் இருபது அதில் முதலாவது உஜூது வென்னும் உள்ளமை கிதம் என்னும் பூர்வீகம் பகர யென்னும் தரிபாடு முகாலபத்துன்லில் ஹவாதிதி என்னும் புதுசடங்களுக்கு விதற்பமாயிருக்கிறது கியாமுன்பினப்ஸிஹீ என்னும் அவன் தன்னைக்கொண்டு தங்கிலேபாடாகயிருக்கிறது வஹ்தானியத்து என்னும் அவன் ஒருவனென்கிறது ஹயாத்து என்னும் ஜீவன் இல்மு என்னும் அறிவு இருதத்து வென்னும் நாட்டம் குதறத்து வென்னும் தத்துவம் ஸம்வு வென்னும் கேள்வி பஸறு வென்னும் பார்வை கலாம் என்னும் பேச்சு ஹய்யுன் என்னும் உடலன்றியே ஜீவனுடையான் ஆலிமுன் கல்பன்றியே அறிவுடையான் [முரீதுன்] நபுஸன்றியேநாட்ட முடையான் [காதிறுன்] ஆதாரமன்றியே தத்துவமுடையான் [ஸமீவுன்] காதன்றியே கேழ்வியுடையான் பஸீறுன் கண் ணன்றியே பார்வையுடையான் (முத்தக்கல்லிமுன்) நாவன் றியே பேச்சுடையான் இன்னம் இருபது [ஸிபாத்தும்] அவ னுக்குடையதுவாம் இதின் கீழ் எழுதும் இருபது [ஸிபத்து களும்] அவனுக்கு ஆறவேஇல்லாத [முஸ்த்தஹீலான) ஸிபத் துகளாம். அதாவது இல்லாண்மை, புதிது, அழிவு, பிறாள வில் தேள்வை, இணை, சாவு மடமை, நடாதிருக்குதல், ஏலா ண்மை, செவிடு, ஊமை, இறந்தவன், மடையன், நாடாதவன், ஏலாண்மையானவன், செவிடன், குருடன், ஊமயன் ஆக இந்த இருபது எழுதப்பட்டதில் ஒன்றே யாவது அவனுக்கு உண்டு மென்று சொன்னால் உடனே காபிறுவதன், நஊதுபில்லாஹி மின்ஹா.

இன்னம் அல்லாஹுத் தஆலாவுக்கு உண்டாயிருக்குத லும் இல்லாதிருக்குதலும் ஸமமாயிருக்கும் ஜாயிஸானஸியாத்

துகளாவது முன்சொன்ன இருவகை விபாத்துகளையும் தவிர உள்ள ஸிபாத்துகளாகவிருக்கும், அதாவது படைக்கிறது அழிக்கிறது இரணம் கொடுக்கிறது, நேர்வழி காட்டுகிறது நேர்வழி காட்டாதிருக்கிறது, பிரயோசனம் செய்யுகிறது, தங்கடம்செய்கிறது கொடுக்கிறது விலகிறது படைக்கிறவன் அழிக்கிறவன் இரணம் கொடுக்கிறவன் நேர்வழி காட்டுகிறவன் நேர்வழி காட்டாதிருக்கிறவன் பிரயோசனம் செய்கிறவன் தங்கடம் செய்கிறவன் கொடுக்கிறவன் விலகிறவன் இவைபோலொத்த ஸிபாத்துகளாக விருக்கும் இன்னம் மாதா பிதா மனைவிமக்கள் ஊண்குடிப்பு உறக்கம் மறதி அழுகை சிரிப்பு நசல்சு வாத்தியம் பலநிறம் பலகுணம் நீளம் அகலம் கட்டைநெட்டை ஆண் பெண் இதுபோலுள்ள கட்டுதிட்டங்கள் அடங்கலைவிட்டும் தூய்தானவ னென்றும் அறிந்து ஈமான் கொள்கிறதாம்.

99-வது பிரிவு.

இரண்டாவது அவன் மலக்குகளைக்கொண்டு ஈமான் கொள்வதாயிருக்கும்.

அதாவது அந்த மலக்குகள் அல்லாஹுத் தஆலாவின்படைப்பென்றும் ஆணுமில்லை பெண்ணுமில்லை யென்றும் அவன் ஏவலுக்கு மாறு செய்யாமல்ஏவின படியேநடப்பார்களென்றும் அவர்களுக்கு ஊணும் குடிப்புமாகிறது தஸ்பீஹும் தஹ்மீதும் தக்பீறும் தஹ்லீலும் மூமினனபேர்களுக்காக அல்லாகுத் தஆலா இடம் துஆ கேட்கிறதும் பிழை பொறுக்கத்தேடுகிறதுமாகவிருக்கும். இன்னம் அவர்களுடைய எண்ணிக்கையையும்

வலுப்பங்களையும் அல்லாஹுத் தஆலாவே யல்லாது யாரும், அறியார்கள் அவர்களடங்கலிலும் ஏற்றமானவர்கள் நபிமார்கள் ஸமுகம் ஒஹி அறிவிக்கிற ஜிபுரீல் அலைகிஸ்ஸலாம் பின்பு தண்ணீர்கொண்டு சாட்டப்பட்ட மீகாயீல் அலைகிஸ்ஸலாம் பின்பு றூஹு வாங்குதல் கொண்டு சாட்டப்பட்ட இஸ்றுயீல் அலைகிஸ்ஸலாம் பின்பு காற்றைகொண்டு சாட்டப்பட்ட இஸ்றுபீல் அலைகிஸ்ஸலாம என்றும் அறிந்து ஈமான் கொள்வதாம்.

100-வது பிரிவு.

மூன்ருவது அவனுடைய வேதங்களைக்கொண்டு ஈமான்கொள்வது.

அதாவது அவனுடைய வேதங்கள் ஸுஹ்புகள் அடங்கலும் உண்மையானதென்றும் இன்னம் வேதமாகிறது நாலென்றும் அதில முநதினது தவ்றுத்து அதாவது அபுறுனிப்பாசயில் நபி மூசா அலைகிஸ்ஸலா முக்கென்றும் ஸபூறு வேதம் யூனனியாப்பாஷையில் நபிதாவூது அலைகிஸ்ஸலா முக்கென்றும் இன்ஜில் வேதம் ஸுரியானியாப் பாஷையில் நபிஈசா அலைகிஸ்ஸலாமுக் [illegible] றும் புறுகான் வேதம் அறபிய்யாப் பாஷையில் நம்முடைய நயினர் நாயகம் முஹம்மது நபிஸல்லல்லாஹு [illegible] வஸல்ல மவர்களுக்கு இறக்கிவைக்கப்பட்டதெ [illegible] ன்னம் நூறு ஸுகுபு உள்ளதில் ஆதம்நபி அலைகிஸ்ஸலாமுக்கு பத்தும் சீதுநபி அலைகிஸ்ஸலாமுக்கு அன்பதும் இதுரீஸ்நபி அலைகிஸ்ஸலாமுக்கு முப்பதும் இப்றுகீம் நபி அலைகிஸ்ஸலாமுக்கு பத்தும் இறக்கிவைககப் பட்டதென்றும

இதுகளடங்கலும் அல்லாஹுத் தஆலாவின் திருவசனமென்றும் படையுண்ணப்பட்டதல்ல வென்றும் ஸத்தமும் ஓசையுமில்லாததென்றும் உண்மையானதென்றும் நமது புறுகான் வேதத்துக்கு பின்னல் மற்றுண்டாவாகிய வேதங்களும் ஸுஹ்புகளும் அதிலுண்டாவாகிய கட்டளைகளடங்கலும் மாற்றப்பட்டுப்போச்சு தென்றும் புறுகானுடைய கட்டளைகள் கியாமமெனும் முடிவு பரியந்தம் வரை மாற்றப்படாமல் தரிப்பாடாய் நடக்குமென்றும் ஈமான்கொள்வதாம். இன்னும் குருஆனில் ஒரு சூறத்தையாகிலும் ஒரு ஆயத்தையாகிலும் காரிகள் ஒற்றுமையாகிய ஒரு கலாமையாவது ஒரு ஹறுபையாவது அல்லத்தட்டினலும் கூட்டினலும் உடனே முறுத்தத்தாவான் என்றறிக நவூதுமில்லாகிமின் ஹா.

101-வது பிரிவு.

நாலாவது றசூல்மார்களைக்கொண்டு ஈமான்கோள்வது.

அதாவது அவனுடைய தூதர்களான றசூல்மார்களடங்கலும் நபிப்பட்டத்திற்கு முன்னும் அதற்கு பின்னும் பெரும்பாவம் சிறும்பாவம் அடங்கலைவிட்டும் காற்கப்பட்டவர்களாய் ஆண்பிள்ளைகளாய் நாட்டாமக்களாய் மேனிகளில் ஏதும் குறைவில்லாதவர்களாயிருக்கிறூர்கள். ஒரு ஹதீதின்படி ஒரு லக்ஷத்தி இருபத்தி நாலாயிரம் நபிமார்கள் அதில் முந்நூற்றி பதிமூன்று முறுசல்கள் அவர்களில் ஊலுல் அஸ்மி ஆதம் நூஹு இப்றுகீம் மூஸாஈஸா முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் [அஜ்மயீன்] இவர்களாயிருக்குமென்றறிந்து ஈமான் கொள்வதாம்.

102-வது பிரிவு.

ஐந்தாவது ஒடுக்கத்து நாளைக்கொண்டு ஈமான்கொள்வது.

அதின் பிரிவாவது மௌத்தாக்கி கபுறில் அல்லது எந்த
விதங்கொண்டுள்ள தலத்திலாவது ஆனவுடன் முன்கற் நக்கீறு
இரண்டு மலக்குகள் வந்து அவர்களையும் எழுப்பி கேள்வியுங்
கேட்டு இவன் ஸாலிஹாகவிருந்தால் கபுறுக்கு நேராக சொர்க்க
வாசலைத்திறந்து இன்பத்தை அனுபவிக்கவும் [பாவியாயிருந்
தால் நரகவாசலைத்திறந்து துன்பத்தை அனுபவிக்கவும்
செய்து போனதின் பிறகு பின்னால் சூறாதிஸகல கல்குகளும்
அழிந்து மலைகளெல்லாம் தவிடுபொடியாகி பூமியும் செம்புத்
தறையாகிச் சில காலததின் பிறகு அல்லாஹுத் தஆலாநாடிய
படி இரண்டாம் சூறாதி கல்குகளடங்கலையும் எழுப்பி மஹ்ஷ
ரென்னும் வெளியில் நிறுத்தி முவுமினனவர்களுக்கு வலது
கையில் நன்மைப் பட்டோலையும் காபிருகளுக்கு இடதுகையில்
தின்மைப் பட்டோலையும் கொடுத்து அடங்களுடைய அமலும்
மீஸானின் நிறுத்து கேள்விகணக்குக். கேழ்க்க நாடிய ஸகல
ரையும் கேட்டு நன்மை மூர்க்கமானவர்களை ஸிறுத்துல் முஸ்த
கீம் என்கிற பாலத்தில் மின்வெட்டி மறைந்ததுபோல் கடத்தி
ஹவ்லுல்கவ்தர் என்கிற ஆற்றின் தண்ணீரிலும் குடிப்பாட்டி
லிவாவுல் ஹம்தென்கிற கொடிநிழலும் அறுசின் நிழலும்
பெற்று சொர்க்கம் புகுதுவார்கள் பாவிகளில் மிகுதி பேருவ்,
நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் 12 தலத்தில் நின்
று மண்டாடுவதில் சிலரெல்லாம் கலாஸு பெறுவார்கள், கட்சி
ஷபா அத்துக்கு பறுவில் மிகுதிபேரெல்லாம் கவீபெறுவார்
கள் தின்மை மூர்க்கமானவர்கள் அப்பாலம் தாண்டமுடியாமல்
நரகமடைவார்கள் கல்பில் ஆற்புமட்டும் ஈமானுள்ளவர்கள் கால

காலம் அன்னரகத்தில் தரிபடுகிறதில்லை. காபிர்கள் ஒருக்கா லும் நரகப்விட்டு நிவாரணமாகிறதுமில்லை, நபிமார்களுக்கும், உலமாக்களுக்கும், சுஹாதாக்களுக்கும் ஷபா அத்து கொடுக்கப் பட்டு அவர்களும் அவர்கள் நாடின சிலபேர்களுக்கு ஷபா அத் துச் செய்வார்கள் என்றும் அறிந்து ஈமான் கொள்வதாம்.

103-வது பிரிவு.

ஈமானிலுள்ள ஆராவது பறுலாகிறது.

நன்மைதின்மை நயம்நஷ்டம் இன்பம்துன்பம், ஈமான் குபிர் இதுவெல்லாம் அல்லாகுத் தஆலா இடத்தில் நின்றும் உள்ளதென்றும் அவன் கட்டளைப்படி நடக்குமென்றும் ஈமா ன்கொள்வது நன்மையைப் பொருந்துவானே யல்லாது தின்மை யைப் பொருந்தமாட்டா னென்றதில் அவன் நாட்டமன்றியே, தின்மை செய்யவும், நன்மை செய்யவும், ஏலுமா என்றுகேழ்ப் பது மெய்தான், பின் நடக்கிற காரியம் இன்னதென்று அவன் நமக்கு அறிவித்து தரவில்லை அவன் நமக்கு அறிவித்து தந்ததெல்லாம் ஏவலும விலகலும் தான் ஆனதால் அறிந்ததை யெடுத்துக்கொண்டு அறியாததில் யோசனை செய்யவேண்டிய தில்லை நாயன் ஏவல்விலகலை நமக்கு அறிவித்து தந்திருப்பதால் அதைப்பிடித்து நடப்பதுவே கடமையல்லாது வேறில்லை அவன் நாட்டத்தையே பிடித்து பேசி இபுலீஸைப்போல் வழி கெட்டு போறது சரியல்லை.

104-வது பிரிவு.

(பஸில்) தொழுகைகளின் சருத்துகளை பயான் செய்யுதல்.

தொழுகையில் தொடுக்குமுன் வேண்டுமான ஷறுத்துகள் பத்தாகவிருக்கும் அந்த பத்து ஷறுந்தும் தொழுகை முடியுமளவும் உண்டாகியே யிருக்கவேண்டும் (ஒன்ருவது) இஸ்லாமாகவிருக்குதல் இரண்டாவது தம்மீஜெனும் வகைவிபரம் எத்துதல் மூன்ருவது பெருந்துடக்கென்ற ஜெனுபத்து ஹயனு நிபாஸைவிட்டும் சிருதுடக் கென்றவுலுவு முரித்தலைவிட்டும் துய்தாகவிருக்கிறது நாலாவது உடுபிடவையும் தொழுந் தானமும் பொறுக்கப்படாத நஜீஸை விட்டும் துப்பரவாக விருப்பது ஐந்தாவது ஏலுமான நாட்டா மகனும் பயலும் வெள்ளாட்டியும் தொப்புழுதொடுத்து முழந்தாள்வரையும் நாட்டாமகள் முகமும் மணிக்கட்டுவரையில் இருமுன் கையும் சரீரமெனும் மேனியடங்கலும் ரோமக்கால் நகம் உள்ளங்காலுள்பட மறைத்துக் கொள்வது ஆருவது பயங்கரம் கடிசான நேரத்தில் சகல தொழுகையும் ஆமான ஸபறில் ஸுன்னத்துத் தொழுகையும் தவிர மற்றும் தொழுகைகளில் கிபுலாவை முன்னோக்கிறது [ஏழாவது] தன்பேரில் தொழுகை பறுலென்றறிகிறது எட்டாவது [ஹாஸிறத்தான்] தொழுகையின் ஒகுத்தை அறிகிறது ஒன்பதாவது தொழுகையின் பாங்கு பரிசையறிகிறது பத்தாவது பறுலை ஸுன்னத்தை விட்டும் பிரித்தறிகிறது இந்த பத்து ஷறுத்தில் ஒன்ருவது தப்பினுல் தொழுகை கூடாது அதெவ்விதமெனில் தொழும்போது முறுத்தத்தாகிற நினவை வருத்தினுலும் நினவு மாறினுலும் ஹய்லு கண்டாலும் நஜீஸானது உடலில் உடயில் தலத்தில் விழுந்து உடனே நீக்காவிட்டாலும்

உடுமானம் அவ்றத்தைவிட்டும் நீங்கி உடனே மறைக்காவிட்டாலும் வொகுத்துக்கு முந்தி தொழுதுவிட்டாலும் கிபுலாவை விட்டு நெஞ்சிகொண்டு சறுகிகின்றாலும் தொழுகைகூடாது அறிவில்லாத; [ஆமியானவன்] தொழுகையின் சியலடங்கலையும் பறுலென்றெண்ணினால் குத்தமில்லை பறுலை ஸுன்னத்தென்றும் அல்லது அடங்கலும் ஸுன்னத்தென்றும் எண்ணினால் அப்படி தொழுத தொழுகையும் கூடமாட்டாது.

---

105 வது பிரிவு.

(பாபுல் உலு) உலுவைப்பேசுகிறபாடம்.

உலுவின் பறுது ஆறாகவிருக்கும் ஒன்றாவது நிய்யத்து அதாவது உலுவின் பறுலை இருக்குகிறேன் என்று நிய்யத்துச் செய்யுதலெனும் எண்ணங்கொள்கிறது இரண்டாவது அந்த நிய்யத்துடன் முகம் கழுவுகிறது, முகமாகிறது நீளத்தால் தலையில் முடிமுளைக்கும் தலத்துக்கும் நாடிக்குழிக்கும் அகலத்தால் இரண்டுகாதுக்கு மிடையிலுள்ள ரோமம் மேனி அடங்கலையும் கழுவுகிறது மூன்றாவது இருகையும முழங்கை யுள்பட கழுவுகிறது நாலாவது தலையில் சிலதைமஸ்குச் செய்கிறது ஐங்காவது இரண்டு காலையும் பரண்டையுள்பட கழுவுகிறது, முன் சொன்ன ஒழுங்கின்படி முன் பின் வராமல் கொண்டுவருகிறது ஆக இந்த ஆறும் பறுலாக விருக்கும்.

106 வது பிறிவு.

இன்னம் உலிவின் சுன்னத்து பத்தாகவிருக்கும்.

ஒன்றுவது [பிஸ்மி] சொல்வது இரண்டாவது முன்கை கழுகல் மூன்றுவது வாயிக்கு தண்ணீர் செலுத்தல் நாலாவது நாசிக்கு வாயுடன் தண்ணீர் செலுத்தல் ஐந்தாவது தலையில் நாலிலொரு பங்கு மஸ்ஹு செய்யுதல் ஆறுவது இருகாதும் மஸுஹுச் செய்தல் ஏழாவது தாடி கால்விரல் இதுகளை குடைந்து கழுகுதல் எட்டாவது வலது பாகம் முந்திகழுவல் ஒன்பதாவது கிபுலாவை முன்னேக்கிக் கொள்வது பத்தாவது உறுப்புகளை மூன்று விடுத்தம் கழுகிறது இந்த பத்தும் ஸுன்னத்தாகவிருக்கும்.

107-வது பிரிவு.

உலுவை முறிக்கும் வகைகள்.

உலுவை முறிக்கும் கருமம் ஐந்தாகவிருக்கும் ஒன்று வது முன் பின் துவாரத்தினுல் யாதொன்று பிறப்படுகிறது, இரண்டாவது சமைந்த இருப்பென்றி உறங்குவது, மூன்றுவது அபத்தில் அகங்கைபடுதல், நான்காவது தன்னை மறபோதக் கேடாகுதல் ஐந்தாவது தனக்குக் கொள்ளத்தக்க தான மாதரைத்தொடுகிறது இந்த ஐந்துமாகவிருக்கும்.

108 வது பிரிவு.

முழுக்கை வாஜிபாக்கிவைக்கும் கருமங்கள்.

முழுக்கு வியாதியாகும் வகைகள் ஆருகவிருக்கும் ஒன்ருவது கத்தனை வரைமட்டில் ஆபத்துக்குள் மறைகிறது அதுபின் துவாரமாயிருக்கிலும் சரிதான் இரண்டாவது மனி வெளியிடுகிறது, மூன்ருவது மொவுத்து திட்டமாகிறது பீஸபீல் மௌத்தைத்தவிர நான்காவது ஹைலுபத்தறுகின்றது ஐந்தாவது பிள்ளைபேரின் துடக்கெனும் நிபாஸூ பத்தறுகிறது, ஆருவது பிள்ளை பெறுகிறது ஈரமில்லாதிருக்கிலும் சரியே.

---

109 வது பிரிவு.

முழுக்கின் பறுலு இரண்டாகவிருக்கும்.

அப்பறுலில் ஒன்ருவது பெருந்துடக்கையான் நீக்குகிறோனென்று நிய்யத்து வைத்தல். இரண்டாவது அந்த நிய்யத்துடனேசரீரமடங்கலையும் துப்புரவாக்குகிற தண்ணீரால்நனைப்பதுவுமா யிருக்கும்.

---

110 வது பிறிவு

முழுக்கின் சுன்னத்து ஆருகவிருக்கும்.

அந்த சுன்னத்தில் ஒன்ருவது பிஸ்மி சொல்லுகிறது, இரண்டாவது முன்கைகழுவல், மூன்ருவது உலுச செய்யு

தல், நான்காவது தொடர்ச்சையாகக் குழித்தல்; ஐந்தாவது சரீரம் தேய்த்தல், ஆறுவது வலதுபாகம் முந்திக்குதல் இந்த ஆறும் சுன்னத்தாகவிருக்கும்.

---

111 வது பிரிவு.

ஜுனுபாளிக்கு ஹராம் ஐந்து.

முழுக்கு விதியாகிய ஜுனுபானவர்களுக்கு ஐந்துகாரியம் ஹறுமாயிருக்கும் தொழுகிறது குறுஆன் ஓதுகிறது அதைத் தொடுகிறது பள்ளியில் தரிககிறது மக்கா கவுபாவைத் தவாபு செய்யுதல் இந்த ஐந்துமாகவிருக்கும்.

112-வது பிரிவு.

மாதர்கள் ஹெய்லானுல் (8) காரியம் ஹராம்.

மேற்கூறும் ஐந்து காரியமும் இன்னும் மூழந்தாள் தொப்புளுக்கு மிடையியில் கையிணக்கமும் சேற்கையும் நோன்பு பிடிக்கிறதும் இந்த மூன்று கருமமுமாகவிருக்கும்.

---

113 வது பிரிவு.

உலுவில்லாதவர்களுக்கு மூன்று காரியம் ஹராம்.

ஒன்றுவது குறுஆனைத் தொடுகிறது. இரண்டாவது தொழுகிறது, மூன்றுவது தவாபு செய்கிறது, இந்த மூன்றுமாகயிருக்கும்.

114—வது பிரிவு

தொழுகைக்கு பறுலு பத்தொன்பதுவாயிருக்கும்.

1-வது நிய்யத்து அதாவது அவ்வல் தக்பீறுடன் சேர்த்து நிய்யத்து வைக்கிறது, 2-வது அவ்வல் தக்பீற், 3-வது நிலையில் நிற்கிறது, 4-வது பாத்திகா ஓதுகிறது, 5-வது றுகூஉ செய்கிறது 6-வது அதில் தரிக்குதல், 7-வது இஹுத்திதால் என்னும் நிமிர்ந்து நிற்கிறது, 8-வது அதில் தரிக்குதல், 9-வது முந்தின ஸுஜூது செய்கிறது; 10-வது அதில் தரிக்கிறது, 11-வது இரண்டு ஸுஜூதுக்கிடையி லிருக்கிறது, 12-வது அதில் தரிக்குதல், 13-வது இரண்டாம் சுஜூது செய்கிறது, 14-வது அதில் தரிக்கிறது, 15-வது பிந்தின அத்திகிய்யாத் திருப்பு, 16-வது அத்தஹிய்யத் தோதுகிறது, 17-வது சலவாத் தோதுகிறது 18-வது ஒரு சலாம் சொல்லுகிறது, 19-வது இந்த ஒழுங்கின் படி தற்த்தீபாக் கொண்டுவருகிறது ஆகக்கூடிய பறுலுகள் சுறுக்கத்தில் 19, ஆகவிருக்கும்.

115-வது பிறிவு.

தொழுகையை முறிக்கும் கருமங்கள்.

தொழுகையை முறிக்கும் கருமங்கள் பத்தாகவிருக்கும். ஒன்றுவது கலாம் தொழுகையில் பொருள் விளங்கும்படிக்குள்ள ஒரு ஹறுபு அல்லது தொடர்பிடியாய் இரண்டு ஹறுபு கொண்டாவது மொழிந்தாலும் முறியும். இன்னம் தொழுகையில் மறந்து பேசினாலும் தொழுகையில் பேசினல் முறியுமென்

றறியாமல் பேசினலும் இதுவெல்லாம் அறியா விதத்தில்
கொஞ்சமாக நாவினல முந்திவிட்டதென்றல் முறியமாட்
டாது. இரண்டாவது மூன்றுசெயல் தொடராகச் செய்கிறது
அதாவது மூன்று எட்டு வைக்கிறது மூன்று அடி அடிக்
கிறது. கையைமூன்று விடுத்தம் உசுப்புகிறது மூன்று விடுத்
தம் சொறிகிறது. இனிபொறுக்க முடியாத சொறிச்சலில்
கையை மிருதமாய் உசுப்புகிறது கொண்டு தொழுகை முறி
யாது மூன்றுவது நோன்பை முறிக்கும் வஸ்துவைப் பரி
மாறுகிறது அதாவது தீன்குடிப்பைப்போல ஒருவனுடைய
வாயில் எள்ளுப்போல வொத்தது உண்டாயிருந்து அதை
முழுங்கினலும் அல்லது காறலை முழுங்கினலும் அல்லது
பேதகமான உமநீரை முழுங்கினலும் தொழுகை முறியும்
பேதகமல்லாத கலப்பற்ற உமிநீரை முழுங்கினலும் தொழுகை
முறியமாட்டாது. நாலகாவது சிறுதுடக்கு பெருந்துடக்கு
உண்டாய் விடுகிறது, ஐந்தாவது தொழுகையில் நஜீஸ்வுண்டா
கிறது. கையைக் கொண்டு நஜீஸை உதறினல் தொழுகை
முறியும் இன்னம் உலர்ந்த நஜீஸு விசயமாகி தன்னலே விழுந்
திட்டாலும் மூட்டைபோலொத்ததை நீசிக்கிட்டாலும்தொழு
கைமுறியாது. ஆறுவது நெஞ்சை கிபுலாவைவிட்டும் திருப்பு
கிறது ஏழாவது அவறத்தை நீக்குகிறது இனி பிடவையை
காத்து நீக்கி உடனே மறைத்துக்கொண்டாலும் பிடவை அவி
ழ்ந்து உடனே அதை மீளவைத்துக்கொண்டாலும் தொழுகை
முறியாது. எட்டாவது நிய்யத்தை பிசகுப்படுத்துகிறது
தொழுகையைவிட்டு புறப்பட்டேன் என்று நிய்யத்து வைத்
தாலும் அல்லது தொழுகையை முறிக்கிறதை நாடினலும் அல்
லது தொழுகையை விட்டுப் புறப்படலாமோ தொழலாமோ
வென்று இருமனது கொண்டாலும் தொழுகை பாத்திலாம்,
ஒன்பதாவது நித்தத்தெனும் குபிரைவருத்தும் கருமம் உண்
டாக்கினலும் அ ஆதனல்லாகு மின்ஹா பத்தாவது சியலள

வில்சேர்ந்தபறுலே அதிகப்படுத்துகிறதும் இஹ்த்திதாலில் அல்லது இரண்டு ஸுஜூதுக்கிடையி லிருக்கிற இருப்பில் தரிபடுகிறதுபோலொத்த பறுலேவிடுகிறதும் தொழுகையை முறிக்குமென்பதாம்.

---

116 வது பிரிவு.

தொழுகையின் சுன்னத்துகளை விரிவாக விவரமாய்க் கூறுகின்றனம்.

தொழுகையின் சுன்னத்துகளாகிறதும் இரண்டு வகையாக விருக்கும் அதில் ஒருவகை [ஹைஹாத்து] சுன்னத்தென்றும் ஒருவகை அப்ஆலுசுன்னத் தென்றுமாக விருக்கும் அந்த ஹைஹாத்து. சுன்னத்துகளின் விபரமாவது தொழுகையைத் துவக்கம் செய்யும்போது இஹ்ருமுடைய தக்பீறு கட்டுதலில் லில்லாத்துஆலா வெனும் அதின்பொருள் அல்லாவுக்காக வேண்டி என்றும் அல்லாகுத்தஆலா அளவில் அந்த நிய்யத்தைச் சேர்த்துக்கொள்கிறதும் கிபுலாவை முன்னோக்கினவனகத் தொழுகிறேன் யென்று எடுத்துக்காட்டும் சொல்லைக்கொண்டு வருதலும் இத்தனை றக்அத்து வென்று யெடுத்துச் சொல்வதும் அதாவாக யிருந்தால் அதாவென்றும் கலாவாகவிருந்தால் கலா வென்றும் சொல்லிக்கொள்கிறதும் அதாகிறது முன் அதாவுக்கு ஒப்பாகிய தொழுகை கலா வில்லையானலும் சரி நிய்யத்துச் செய்ததுபோல் வாயினல் மொழிந்துகொள்வதும் இன்னம் நிலேயில் நிற்கும்போது கொஞ்சம் தலையை முன்பக்கத்தில் சாய்த்தவனகிய அவன் சுஜூது செய்யும் தானத்தை நோட்டமிடுவதும் இஹ்ரு முடைய

முதல் தக்பீறு கட்டுமப்போது இவன் இரண்டு கைகளையும் தோள்புயத்துக்கு நேராலே பிடவைபோ மற்றவல்லதோ கொண்டு மறைந்திராமல் வெளியாக்கினவனாக அதை உயர்த்துகிறதும் றுகூயில் நின்றும் கிளம்பும்போதிலும் அப்படியே இரண்டு கையும் உயர்த்திக்கொள்கிறதும் இன்னம் முந்தின அத்தகிய்யாத்தில் நின்றும் எழும்பும்போது அப்படி உயர்த்திக்கொள்கிறதும் அவன் நெஞ்சிக்கு கீழாலே இடதுகையை வைத்து அதின்மேல் வலதுகையை வைத்து மணிக்கட்டு உள்பட பிடித்துக்கொள்கிறதும் அவன் கால் இரண்டையும் ஒட்டைச்சாண் அகலம் இடையிருப்பதாக நிலையிலே பிரித்து வைத்துக்கொள்கிறதும் அவூது ஓத முன்னாலே இடம்பாடாகவிருக்குமானால் இரகசியமாக ஒஜ்ஜிஹத்து வென்றதை ஓதிக்கொள்கிறதும் இடம்பாடென்றது என்னவென்றால் தொழுகை களாவாகபோகுது அல்லது இமாம் றுகூவுக்கு குனிந்திட்டார் இப்படிப்பட்ட கருமங்கள் இல்லாதிருக்கில் தான் அதை ஓதுகிறது அல்லது இமாம் அத்தகிய்யாத்திற்கு இருக்கிறார்கள் இவனும் அவருடன் போயிருந்திட்டானேயானாலும் அந்த இபுத்தித் தாஹெனும் ஒஜ்ஜிஹத்து விழுந்துவிடும் ஓதவேண்டியதில்லை அந்த ஒஜ்ஜிஹத்துவாகிறது.

---

117 வது பிரிவு.

அறபு வாக்கியம்.

வஜ்ஜஹத்து வஜ்ஹியலில்லதீபத்தஸ்துமாபத்திஹல் அறலிஹனீ பன்முஸ்லிமன்வமா அனமினல்முஷ்ரிக்கீன் இன்னஸ்ஸலாத்தி ஒனுஸ்கீ ஒபஹயா ஒமமாத்திலில்லாஹி றப்பில் ஆலமீன் லாசரீக்கலகு ஒபிதாலிக்க உமிற்த்து ஒமா அனமினல்

முஸ்லிமீன் பின்பு அவூது ஓதுவான் அந்த அவூதாகிறது எல்லா ரக் அத்திலும் இரகசியமாக ஓதுகிறதும் இன்னம் பிஸ்மில்லா அல்ஹம்து இதுகள் ஓதுகிறதாக விருந்தால் அது அதுகளுக்கு வகுபுச் செய்து நிப்பாட்டிருக்கும் ஆயத்துகளிலெல்லாம் நிப் பாட்டலெனும் வகுபுச்செய்து கொள்ளுகிறதும் [இன்னம்] [அன் அம்தஅலேஹிம்] என்ற விடத்தில் ஒகுபுச் செய்கிறதை மக்றாஹாக்கப்படும் பாத்திகா முடிந்த பின்பு லேசான சத்த மாக ஆமீன் கூறுவதும் இமாமுடைய ஓதல்களைக் கேட்டார் களே யானால் அந்த [மவுமு] மென்னும் அவரை துயரப்பட்ட வர்கள் அடங்கலும் இமாம் ஆமீன் சொல்லாமல் விட்டுவிட்டா லும் இவர்கள் சொல்லிக் கொள்வதும் சுன்னத்தாக விருக்கும்.

நபிசல்லல்லாகு அற்கிவசல்லம் திருவளமானார்கள் இமா மானவர் ஆமீன் சொல்வாரேயானல் அவருடனே மவுமூங்களும் ஆமீன் சொல்லிக்கொள்ளுங்கள் என்றார்கள் இன்னம் அந்த இமாமுடைய, ஆமீனல் மவுமூம்முடைய ஆமீன் ஒத்துமை பட்டுதானல் மலாயிக்கத்துமார்களும், அதுவுடன் ஆமீன் கூறுவார்கள் அப்படி கூறப்பட்டால் உடனே அவர்கள் அடங்கலுடைய முன்செய்த பாவமும் பின்செய்த பாவமும் பொறுக்கப்படுமென்று நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூ லுல்லாகி சல்லல்லாகு அலேகிவசல்லமவர்கள் திருவாய்மலர்ந்த ருளினார்கள்.

118 வது பிறிவு.

புகாரிய்யி றலியல்லாகு அன்குவும் இன்னம் முஸ்லிம் றலியல்லாகு அன்குவும் றிவாயத்துச் செய்திருக்கிறார்கள்.

பின்பு குறுஆனில் நின்றும் கொஞ்சத்தை ஓதுகிறதும் அதாவது சூறத்தாயிருக்கிலும் அல்லது ஆயத்தாக யிருக்கும் போது மையாகும் ஆயத்து ஓதுகிறதாக விருந்தால் பாத்திகா ஓதினபின்பு மூன்று ஆயத்தாக சேர்த்து ஓதலைக்கேட்ட மவுமூமல்லாதவன் பாத்திகாவுக்கு பின்னாலே முந்தின இரண்டு றக்அத்திலும் சூறத்துகளோ ஆயத்துகளோ ஓதிக்கொள்வதும் அந்த ஓதலிலோ அல்லது இமாமுடைய ஓதல்களிலோ [மஅனாவென்னாம்] பொருள்களையும் அது தெரியாவிடில் அதின்கருத்துகளையும் நன்றாய் விளங்கிக் கொள்வதும் இன்னம் அந்த ஓதல்களை இமாமுடன் துயர்ந்தவனாக யிருக்கும்போதில் இரைந்தவனாக சத்தத்துடன் ஓதுவது மக்றூஹாக விருக்கும் சிலர்களுக்கு சூறத்து அல்லது ஆயத்துகள் பாடமில்லாதிருந்தால் பாத்திகாவைத் தான் மீளவும் இரண்டுதரமாய் மடக்கி ஓதிக்கொண்டாலும் சுன்னத்துண்டாகும் குறுஆனில் சில ஆயத்துகளை ஓதுகிறதைக் காணவும் ஒரு நிரப்பமாகிய சூறத்தை ஓதுகிறது வரிசையானதாக விருக்கும் [தறாவீஹுத் தொழுகையில் அப்படிக்கல்ல இன்னம் இரண்டு சூறத்துகளை ஓதுகிறதில் துயர்பிடியாக அடுத்ததுக் கடுத்ததாக விருக்கிறதும் அந்த சூறத்தில் இரண்டாம் றக்அத்தில் ஓதுமென்னத்தகாகதாகிய சூறத்து முந்தின றக்அத்தில் ஓதின சூறத்தைக்காணவும் கொஞ்சம் சிறுசாக விருக்கிறதும், இன்னம் குறுஆனி லுண்டாவாகிய தற்தீபு பிரகாரம் முந்தினதை முந்தியும் பிந்தினதை பிந்தியும் ஓதுகிற

தும் இன்னம் வெள்ளிக்கிழமை சுபுகுத் தொழுகையில் [அலிபுலாம்மீம் தன்சீல்] சூறத்தையும் ஹல்அதா சூறத்தையும் ஓதுகிறதும் இன்னம் அந்த ஜூம்ஆஉடைய இரவுஇசாத்தொழுகையிலும் பகல்ஜூம்ஆத்தொழுகையிலும்யுஸப்பிஹ் ஸில்லாஹி சூறத்தும்)இதாஜா அகல்முனபிகூன சூறத்தும் அல்லது ஸப்பிஹிஸ் மறப்பிக்கல் அஃலா சூறத்தும்ஹல் அத்தாக்கசூறத்தும் ஓதுகிறதும் அந்த ஜூம்அ மகரிபுத் தொழுகையும் குல்ஹூவல்லாசூறத்தும் குல்யா அய்யுஹல் காபிறானசூறத்தும் இன்னம் முஸாபிறென்னும் சபர்போறவர்களும் சுபுகில் அப்படியே ஓதிக்கொள்வதும் வெள்ளிக்கிழமை விட்டு சனிக்கிழமை மக்ரிபில் முஅவ்வதத்தைனி என்று சொல்லும் [குல்அவூது பிறப்பில் பலகு சூறுவும் குல்அவூ து பிறப்பினாஸ்சூறுவும்) ஓதிக்கொள்வதும் இன்னம் சத்தமிட்டு ஓதும் தானங்களில் சத்தமிட்டு ஓதுகிரதும் இரகசியமாக ஓதும் தானங்களில் இரகசியமாக ஓதிக்கொள்வதும், சுன்னத்தாகவிருக்கும்.

இன்னம் குனிகறது நிமிர்கிறது அதுகள் அல்லாதயிடங்களிலும் திக்றுகள் தக்பீறுகள் சொல்லுகிறதும் அந்த திக்றிலுண்டான மஅனையும் அதின்கருத்துகளையும் ஆராய்ந்து கொள்கிறதுடன் ஓதலிலும் [ஸூஜூது றுகூவுகில்] சொல்லும் தஸபீகுகளிலும் சவர்சேர்பேசுகள் விட்டுப்போய் விடாமல் அதுகளைச் சொல்லிக் கொள்கிறதும் இன்னம் (அல்லாகு அக்பர்) என்று சொல்கிறது சமிஅல்லாகுலிமன் ஹமீதவென்று சொல்கிறதும் ஒரு பறுவில் நின்று திரும்பி மறுபறுவில் போயி சேர்கிறவாயில் நீட்டிச் சொல்லிக் கொள்கிறதும். றுகூவுவில் அவனுடைய உள்ளங்கை இரண்டையும் இரண்டு முட்டிலும் வைக்கிறதும் முதுகு பிடரியும் சரியாக ஒன்றுக்கொன்று தாழ்த்தி உயர்த்தி இல்லாமல் நிற்கிறதும் இன்னம் அந்த றுகூவில் மூன்று தடவை சுபுகானறப்பி

பல் அலீம் ஒபிஹம்திஹீ என்றும் சொல்கிறதும் அதில் நின்றும் உயர்ந்து வரும்போது சமியல்லாஹு லிமன் ஹமீதா வென்று சொல்கிறதும் பின் நிமிர்ந்து இஹுத்திதாலின் னிலையில் றப்பனுலக்கல் ஹம்துமில் அஸ்ஸமாவாத்தி ஒமில்அல் அறலிஒமில் அமாசிஹ்த்தமின்சைய்யின் பவுது வென்று சொல்கிறதும் இன்னம் குனூத்து ஓதலில் தோள்புயத்திற்கு நேராலே அவன் இரண்டு கையையும் உயர்த்திக்கொள்கிறதும் இமாமாகவிருந்தால் அந்த குனூத்தில் ஒதல்களை விரைந்து ஓதுவதும் இன்னம் மவுமூங்கள் அந்த இமாமுடைய குனூத்தை கேட்டார்களே யானல் அதிலுண்டாவாகிய துஆக்களுக்காக ஆமீன் கூறுகிறதும் இன்னம் அதில் நபி ஸல்லல்லாஹு அலைஹிவசல்லமீதில் சலவாத்துச்சொல்லுகிறதும் அந்த சலவாத்தில் அவர்களுடைய பிச்செளமாகிய ஆலின் பேரில் ஆலிகி என்று சொல்லிக் கொள்கிறதும் இன்னம் இமாமானவர் குனூத்துடைய துஆவோதி அத்திகியாத்தி லுண்டாவாகிய துஆக்களோ ஓதுகிறதாக இருந்தால் ஜெம்வு வென்று சொல்லும் மத்தமவுமூங்களுக்கும் சேர்த்து ஓதிக்கொள்கிறதும் அது வாகிறது எவ்விதமானல் அல்லாகும்மகுதினு வென்று ஓத வேண்டும் அப்படிக்கல்லாமல் அல்லாஹும்மக்தி னீ யென்றோதினல் அதின்பொருள் நாயனே என்னை நேர்வழி காட்டு வென்றுருது எங்களை என்றுவரவில்லை தன்னுடைய நபுசுக்கு மட்டுந்தான் அந்த துஆ ஆகுது ஆதலால் தன்னுடைய நபுசுக்கு மட்டும் இமாம் ஓதுகிறது மக்றூஹாகவிருக்கும் இன்னம்சுஜூதிலும் அத்தஹிய்யாத்துக்கு யிருக்கிறபோதிலும் அவனுடைய முட்டுக்கால்களை ஒரு ஒட்டைச்சாணுடைய கதற் விரித்ததாக வைத்துக்கொள்கிறதும் இன்னம் அவனுடைய இரண்டுகைகளையும் சுஜூதில் பிடவையோ மற்றவல்ல வஸ்துக்களோ மறைக்காமலும் கைவிரல்களை பொத்திக் கொள்ளாமலும் அந்த

விரல்களை விரலோடு விரல் சேர்த்தவனாக தோள்புயத்துக்கு நேராலே கிபுலாபாகமாகத் தரையில் வைத்துக் கொள்வதும் பின்பு நெத்தியுடனே மூக்கையும் தரையில் வைப்பதும் அவன் கால் இரண்டையும் அதின் விரல்கள் புறக்கால்கள் கிபுலா பாகத்தை நேரிட்டதாக வைப்பதும் அதில் விரல்கள் நட்டபட்டதாகவும் ஒட்டைச்சான் அகலமாக இரண்டுகாலையும் விரிக்கப்பட்டதாகவும், வைப்பதும் அந்தகால்களை முந்தாணிப் பிடவையோ மற்றவல்லதுகளோ விழுந்து மறைத்துக்கொள்ளாமல் திறக்கப்பட்டதாக இருப்பதும் இன்னும் சுஜூதி லேசபுகான றப்பியல் அஃலாஒபிஹம்திஹிஎன்று மூன்றுவிடுத்தம்சொல்லுறதும் அந்த சுஜூதில் ஆண்பிள்ளையாகயிருந்தால் தன்னுடைய கொடுங்கைகளை தன்விலாப்புறத்தை விட்டும் இடையிட்டதாக வைத்துக்கொள்வதும் அவன் வயற்றை அந்த சுஜூது செய்யும் தானத்தில் வெளியிட்டதாக துடைக்குமேலில் வைத்துக் கொள்ளாமல் பிறத்திப் படுத்திக்கொள்வதும்.

இன்னம் றுகூவுவிலும் அப்படியே வைத்துக்கொள்வதும் பெண்பிள்ளையாகவிருந்தால் மேல் சொன்னதுக்கு மாற்றமாக அவள் கொடுங்கை முதலியவைகளை அவள் விலாப்புறத்தில் தானே சேர்த்துவைத்துக் கொள்வதும் இன்னம் இபுத்திருசுடைய இருப்பு இருக்கிறதும், அதாவது இரண்டு சுஜூதுக் கிடையில் இருக்கிற இடையிருப்பில் வலதுகாலை நட்டி இடதுகாலின்பேரில் ஹனபிமது'கபுக்காரர்கள் அத்தகிய்யாத்து முதலியவைகளில் யிருக்கிறதுபோல் இருக்கிறதும் அந்த இடையிருப்பில் இரண்டு கைகளையும் முட்டுக்கு முடுகினதாகவும் விரல்களை பரத்தினதாகவும் துடையின்மேல் வைப்பதும் இன்னம் அவ்விருப்பில் றப்பிக்பிர்லீ என்று மூன்றுதரம் சொல்வதும் ஒருதரம்வற்ஹம்னிஒஜிபுறுனி வற்பகுனி வற்சுகுனி ஒஸ்

தினி வஹூபினி என்று சொல்வதும் சுஜூதுக்குப்போய் நிமிர்ந்து நிலையில் போறபோது இஸ்திருசத்து இருப்பு இருக்கிறதும் அந்த இருப்பின் பரிசாவது மேல்கூறும் இபுத்திரு சுடையயிருப்பின் விதத்தைப்போல் அர்ப்பமாக யிருந்தெழும்புகிறதும் இன்னம் முந்தின அத்தகிய்யாத்திலேயும் இது பிறகாரம் இபுத்திருசுடைய இருப்பு இருக்கிறதும் கையை ஊன்றி சுஜூதுக்குபோகிற போதும் அங்கிருந்து குவூதென்னும் இருப்புகளுக்கு வருகிறபோதும் அதில் நின்றும் எழும்பி நிலையில் போகும்போதும் பூமியில் அவனுடைய உள்ளங்கையை பொத்திக்கொள்ளாமல் ஊன்றுதல் பிடித்துக்கொள்கிறதும் கடைசி அத்தகிய்யாத்தில் தவற்றுக்குடைய இருப்பென்று சொல்லும் வலதுகாலை நட்டினவனாக இடதுகாலை வலதுபாகத்தில் தெரியும்படியாக மற்றமுன்சொன்ன இருப்புபோல் காலின் பேரில் இராமல் பித்தட்டைதறையில் வைத்தவனாகத்தானே இருக்கிறதும் அதாகிறது பின்பு சஜதாசஹ்வுக்கு செய்யவேண்டிய சங்கதிகள் இருந்தால் அப்படி யிராமல் அவன் காலின் பேரில் தானிருக்கவேண்டும்.

இன்னம் இரண்டு அத்தகிய்யாத்திலும் அவனுடைய இடதுகையை பொத்தாமல் விரல்களை பாத்தினவனாக அவன் முட்டிடைய அருகின்பேரில் வைக்கிறதும் இன்னம் அவனுடைய வலதுகையின் விரல்களை அறபிகள் அன்பத்திமூன்று லெக்கத்திற்கு அடையாளம் காட்டுவார்களே அதுபோல் சிறுவிரல்பக்கவிரல் நடுவிரல் இதுகள் மூன்றையும் பொத்தி கலிமாவிரலை நிமிர்த்தி பெருவிரலை கலிமாவிரலின் அடிமூட்டில் வைத்தவனாக யிருக்கிறதும் அப்படி அத்தகிய்யாத்திலிருந்து ஓதும்போது இல்லல்லாவென்று வருமே அந்த தானத்தில் முதல் அலிபை நாவில் உச்சரிக்கும்போது கலிமாவிரலை உயர்த்திவைக்கிறதும் அந்த விரலாகிறது கொஞ்சம் குனிந்ததாக யிருக்கிறதும் இன்

னம் அவ்விரலை முதல் அத்தகிய்யாத்தானுல் நிலையளவில் போகிறவரையிலும் அல்லது இரண்டாம் அத்தகிய்யாத்தோ அல்லது சுபுஹு போல் கொத்ததிஉண்டான அத்தகிய்யாத்தோவாயிருந்தால் சலாமூட்டுகிறவரையிலும் அப்படியே தரிபாடாக உயர்த்தப்பட்டதர்கவைத்துக்கொள்வதும்இன்னம் அந்த விரலை இசாறுவாக உயர்த்தப்பட்டதே அந்நேரம் தொடுத்து கடைசிவரையிலும் ப்பார்வையை அதைவிட்டு கடக்காமல் அதின் பேரிலேயே நோட்டமிட்டிருக்கிறதும் இரண்டு அத்தகிய்யாத்தை ஓதுகிறதிலும் கீழ் எழுதுகிறதுபோல் நிரப்பமான அத்தகிய்யாத்தாக ஓதுகிறதும் அந்த அத்தஹிய்யாத்தாகிறது அத்தஹிய்யாத்து அல்முபாறக்காத்து அஸ்ஸலவாத்து அத்தஹிய்யாத்துலில்லாஹி அஸ்ஸலாமு அலைக்க அய்யுஹன்னபிய்யு ஒறஹ்மதுல்லாகி ஒபாறக்காத்துஹு அஸ்ஸலாமு அலைனு ஓ அலா இபாதில்லாஹிஸ் சாலிஹீன் அஷ்ஹது அன்லாயிலாக இல்லல்லாஹு ஓ அஷ்ஹது அன்னமுகம்மதுர் றசூலுல்லாஹி என்றும் பின்பு கடைசி அத்தஹய்யாத்திலே நபிசல்லலலாஹு அலைஹிவசல்லமவர்கள் மீது ஓதும் சலவாத்துகளில் நிரப்பமானதாகிறது அல்லாஹும்முசல்லி அலாமுஹம்மதின் வஅலா ஆலி முசம்மதின் கமாஸல்லைய்த்த அலா இபுறுஹீம, வஅலாஆலி இபுறுஹீமவபாறக்க அலாமுகம்மதின் வஅலாஆலிமுஹம்மதின்கமா பாறக்த்த அலாஇபுறுஹீம ஓ அலா ஆலி இபுறுஹீம இன்னக்க ஹமீதுன் மஜீத் பின்புஹமதீதில் வந்த துஆவை ஓதவேண்டும் அதாவது அல்லாகும் மக்பிர்லீ மாகத்தம்த்துவமா அக்கறத்துவமா அஸ்றற்த்துவமா அஃலந்த்து ஓமா அஸ்றப்த்துவமா அந்த அஃலமுபிஹி மின்னி இன்னக்க அந்தல் முகத்திமு வ அந்தல் முஅக்கறு லாயிலாஹஇல்லா அந்த அல்லாகும்மஇன்னீ அகூது ஒல்ம மாத்திஒமின் பித்னத்தில்மஸீ குத்தஜ்ஜால் அல்லாகும்ம இன்னீல்ளம்து நபுஸீ லுல்மன் ஒலாயெக்பி றுச்சுனூப இல்லா அந்தமக்பிர்லீமக்பிறத்துன்மின் இந்திக்கஒற்ஹம்னி

இன்னக்க அந்தகல்லூறுர்றகீம் யாமுகல்லி புல்குலூப்தப்பித்து கல்பீ அலாதீனிக்க என்று நிரப்பமான அத்தகிய்யாத்தாக ஓது கிறதும்.

இன்னம் இரண்டாவது சலாம் இடபாகத்தில் சொல்கிற தும் அதிலே ஒறஹ்மதுல்லாகி என்ற சொல்லை அதினமாக சேர்த் துக்கொள்வதும் அந்த இரண்டு சலாத்திலும் முந்தின சலாத் தில் முகத்தை வலதுபாகத்தில் திருப்புகிறதும் இரண்டாவது சலாத்தில் முகத்தை இடதுபாகத்தில் திருப்புகிறதும் அவன் திரும்பும்போது அவன் சொல்லும் சலாமை மலாயிக்கத்துமார் கள் பேரிலும் முமீனுகிய மனிதர்கள் முவுமீனுகிய ஜின்னுகள் பேரிலுமாக நிய்யத்துச் செய்துகொள்வதும் மாமூமானவர்கள் சலாம்சொல்வதில் ஒருசலாமை மேல்சொன்னது போ லும் இரண்டில் எதாவதொன்றை அவர் நிய்யத்துச்செய்து நாடுவாரே அதை மவுமூம்கள் பேரிலுமாக நிய்யத்து சொல்லிக் கொள்வதும் அந்தமவுமூம் அவன் நாடின சலாத்திலொன்றை இமாமானவர் பேரில் நிய்யத்துச் செய்ததாகச் சொல்லிக்கொள்வதும் அந்தசலாமை துயர்பிடி யாக நீட்டுதலன்றியே அதிலுண்டாவாகிய ஹறுபுகளை பேணி னவனுக திருத்தமாகச் சொல்லிக்கொள்வதும் இன்னம் தொழு கையில் நின்றும் பிற்ப்படுகிறேனென்று முந்தின சலாம்சொல் லும் போதிலேயே நிய்யத்துச்செய்து கொள்வதும் இதுகள் அடங்கலும் சுன்னத்துகளாகயிருக்கும் இன்னம் அதின் கீழ் எழுதும் சுன்னத்துகளுக்குப் பேர் (அப்ஆது) சுன்னத்தென் று சொல்லப்படும் அதில் ஒன்றை ஒருவன் விடுவானேயானுல் அவன் ஸஜதாசகுவு செய்யவேண்டும்.

119-வது பிறிவு

தொழுகையில் நின்றும்.

அப்ஆலு சுன்னத்துகளின் பாடம்.

அந்த அப்ஆலு சுன்னத்துகளாகிறது முந்தின அத்தகிய்யாத்து ஓதுகிறதும் அதற்காக வேண்டியிருக்கிறதும் அதில் நபி ஸல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் பேரில் சலவாத்துச்சொல்கிறதும் பின்பு கடசி அத்தகிய்யாத்திலும் நாயகம் அவர்களின் கிளையாராகிய ஆல்கள்பேரிலும் பிக்கமின் அதாபல் கபற்லுமின் அதாபின்றும் அப்படியே சலவாத்துச் சொல்லிக்கொள்வதும் இன்னம் சுபுகுத் தொழுகையில் கடைசி இஃறாத்திதாலெனும் ஒடுக்கத்து றுகூவில்நின்று எழும்பி நிற்கும்நிலையில் குனூத்தென்று சொல்லும் துஆவை ஓதுகிறதும் இன்னம் றமலான்மாதம் பாதியில் கடைசிபாதியாகிய அரவாசிக்குமேல் வித்துறுத்தொழும்போது அதில் குனூத்து ஓதுகிறதும், அந்தகுனூத்தாகிறது (அல்லா ஹும்மஃதினீ பீமன் ஹதைத்தவ ஆபினீ பீமன் ஆபைய்த்த ஒத்தவல்லனீ பீமன் தவல்லைத்த ஒபாரிக்லீபீமா அக்த்தைத்த ஒகினீசற்ற மாக்கலைத்தப இன்னக்கதக்லீ ஒலாயுக்லா அலைக்கப இன்னஹூலாயதில்லு மன்வாலைத்த ஒலாய இஸ்சுமன் ஆதைத்த, தபாறக்கத்த றப்பனா ஒத்த ஆலைத்த பலக்கல்ஹம்து அலாமாகலைத்த ஒஅஸ்த்தக்பிறுக்க ஒஅதூபு இலைக்க) என்பதுகொண்டு அந்த சுன்னத்துண்டாகி போய்விட்டது.

இன்னம் அந்த குனூத்து ஓதுவதில் அவன்நாடுவானேயானால் குறுஆனில் நின்று மூண்டாவாகிய துஆவுடைய ஆயத்துகளில் ஓர் ஆயத்தை ஓதினதும் போதுமேயாகும் அல்லது

கலப்பறுதலான ஒரு துஆவை ஓதினாலும் போதுமேயாகும் அல்லது ஹதீதில்வரப்பட்டதல்லாத ஓர் துஆவை ஓதினானேயாகிலும் அந்த சுன்னத்துண்டாகிடும் எங்கிலும் மூன் எழுதியிருக்கும் குனூத்தை ஓதுகிறது வரிசையானதாக விருக்கும்.

இன்னம் அந்த அப்ஆது சுன்னத்திலுண்டானதாகிறது அந்தகுனூத்தை ஓதுகிறதற்காக நிலையில் நிற்கிறதும் நபிஸல்லல்லாகு அலைகிவஸல்லமவர்கள் மீதில் அந்த குனூத்தின் கடைசியில் சலவாத்தை ஓதுவதும் அதுடனே அவர்கள் கிளையாராகிய ஆல்கள் பேரிலும் ஓதிக்கொள்வதும் இன்னம் துஆக்களுடைய துவர்க்கத்திலும் கடைசியில் சலவாத்து ஓதவேண்டுமென்று வந்ததில் இந்தகுனூத்துடையது ஆவில்மட்டும் துவர்க்கத்தில் சலவாத்தை ஓதவேண்டும் இந்த அப்ஆது சுன்னத்துகளில் நின்றும் ஒன்றை ஒருவன் விட்டு விட்டானேயானாலும் அதை விட்டது மனமுரண்டாகவானாலும் அல்லது விட்டேனே விடவில்லையோ யென்று ஷக்கிலிருந்தானாலும் தொழுகைக்குப் பின்னால் சலாமுக்கு முன்னால் சுன்னத்தாக இரண்டு ஸஜதா செய்ய வேண்டும்.

இன்னம் அந்தஸஜ்தாச்செய்யுற வன்னங்களாகிறது யாராகிலும்ஒருவன் தொழுகையில் ஒரு சியலைமனமுரண்டாகச் செய்தானேயானால் அச்சியல் தொழுகையில் ஒரு சியலைமன முரண்டாகச் செய்தானேயானால் அச்சியல் தொழுகையை பாத்திலாக்கிவிடுமே அப்பேர்க்கொத்த ஒருகருமத்தை மறந்து செய்தானேயானாலும் அல்லது சுருக்கமாகிய கட்டைபறலைப்போல் ஒன்றைமறதியாக நீளமாக்கினானேயானாலும் அதில் ஒன்றை விட்டு விட்டானே யென்று சக்குவைத்தானேயானாலும் கட்டைபறலென்பது இடை இரிபபு இஃறத்தி தாலுகளாக விருக்கும் இன்னம் மறந்து கொஞ்சம பழக்கம பேசினான் அல்லது கொஞ்சம்

தின்னான் அல்லது செயலினால் சரீரத்தால் செய்யும் பறுலுகளில் ஒன்றைமடக்கி இரண்டுவிடுத்தம் செய்தான் அல்லது சொல்லினால் ஓதலாலுண்டான பறுலுகளில் ஒன்றை அதனுடைய தானமல்லாத்தளவில் மறந்து ஓதினான் அதுவெதுபோல் அத்தகிய்யாத் தோதுகிறபோது பாத்திகா சூறத்தை ஓதுவதுபோல் நிலையில் பாத்திகாசூறத்தை ஓதுகிறதற்கு அத்தகிய்யாத்தைப்போலொன்றை ஓதவேண்டியதை மறதியாக ஓதினாலும் அல்லது அதுகளிலே ஓதினமோ ஓதவில்லையோ வென்று சக்கு வைத்தானே யானாலும அல்லது அவன் தொழுதான் அத்தொழுகையில் அஞ்சிறக்அத்து ஆயிவிட்டதென்று சுபுகு மக்ரிபுபோலுள்ள தொழுகையிலும் அப்படியே அதினமாயிவிட்டதென்று இவன் மனதில் ஷக்குக்கு இடம்பாடானால் முன் சொன்னதுபோல் இரண்டு ஸஜதாச் செய்வான்.

120-வது பிரிவு.

தொழுகையில் புகுதுகிறதுக்கு முன் உண்டாகிய சுன்னத்துகளுடைய விபரம்.

தொழுகையில் புகுதுகிறதுக்கு முன் உண்டாவாகிய சுன்னத்துகளாகிறது வாங்குசொல்லுகிறதுமாக விருக்கும் இன்னம் காமத்துச் சொல்லுகிறதுமாக விருக்கும் அதை அவனல்லாத வேறே ஒருமனிதன் வாங்குசொல்கிறதை இவன் காதினால் கேட்டிருந்தானே யானாலும் ஆண்பிள்ளைகளுக்கு பறுலுத் தொழுகைகளுக்கு முன்னால் இது இரண்டும் சுன்னத்தாக்கப்படும் பெண்பிள்ளைகளுக்கு காமத்தைச் சொல்கிறதையட்டும் சுன்னத்தாக்கப்படும் இன்னம் அந்த வாங்கையும் காமத்தை

யும் ஒருவன் குர்ஆன் ஓதிக்கொண்டிருந்தாலும் அல்லது ஒலுச்செய்துக்கொண்டிருந்தாலும் அவன்காதில் கேட்டானேயானால் அதற்கு ஜெவாபு சொல்லுகிறதும் அவன் பேரில் சுன்னத்தாக்கப்படும் இன்னம் ஹய்யா அலஸ்ஸலாவென்று சொல்லும்போது ஹய்யா அல்லபலாஹ் வென்று சொல்லும்போதிலும் கீழ் எழுதும்போல் சொல்லவும் அதாவது லாஹவ்ல வலா குவ்வத்த இல்லாபில்லாகில் அலிய்யில் அலீமென்று சொல்வதும் சுன்னத்து இன்னும் சுபஹில் அஸ்ஸலாத்து கைரும் மினன்னவு மென்று சொல்லும்போதில் ஸதக்த்த வபாறக்த்த வென்று சொல்வதும் சுன்னத்தாகயிருக்கும் இன்னம் அந்த வாங்கும் காமத்தும் முழுவதும்சொல்லி முடிந்தபின்னால் இந்தத்து ஆவை ஓதுவதும் சுன்னத்தாகயிருக்கும் அதாவது அல்லாகும்மசல்லி வசல்லிம் அலாமுகம்மதின் வஅலாஆலி முகம்மதின் அல்லாகும் மறப்பஹாதி ஹித்தவுவத்தித்தாம்மத்தி வஸ்ஸலாத்தில் காயிமாத்தி ஆத்திமுகம்மதினில் வஸீலத்த வல்பளீலத்த வஷ்ஷர்பத்த வத்தறஜத்தர்ற பீஅத்தஆலியத் தஷ்ஷரீபத்த வபஃத்ஹு மகாமன் மகுமூதானில்லதீ வ அத்தஹூ வற்சுகுனா ஷபாஅத்தஹூ வஹூதினையவ்மல்கியாமா வென்று ஓதினால் அந்த சுன்னத் துண்டாகவிட்டது இன்னம் அதில்அதிகம் சிலர் ஓதுவார்கள் அப்படி ஓதுவதும் வரிசையாகின்றன.

ஹதீது.

நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைகிவசல்லம் திருவுளமானதாக புகாரியி றலியல்லாஹு அன்குவும் முஸ்லிம் றலியல்லாஹு அன்ஹு அவர்களும் றிவாயத்துச் செய்திருக்கிறார்கள். நீங்கள் தொழுகைக்கு ஹாஸிறானீர்களானால் உங்களில் நின்றும் ஒருவர் வாங்குசொல்லி கொள்ளுங்கள் என்று திருவுளமானதாகச் சொன்னார்கள் இபுனுல் புகாரிய்யி றலியல்

ராஹு அன்ஹு அவர்கள் அபூஹுறைறு றலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தொட்டும் நபிநாயகம் சல்லல்லாஹு அலைஹிவசல்ல மவர்கள் திருவுள மானதாகச் சொல்கிருர்கள் மூன்று கருமமாகிறது அதிலே உண்டான வரிசையையும் கைய்ரேயும் பறக்கத்தையும் அறிவார்களேயானுல் அந்த கருமத்தின் ஸவாபை அவள்க்கை வைத்தவராக நான் செய்வேன் நான் செய்வேன் நானென் செய்வேனென்று முந்துவார்கள் பின்பு அக்கருமத்தை குறித்து சீட்டுபோட்டு எடுக்கப்படும் அதாகிறது தொழுகைக்காக வாங்கு சொல்லுவதும் ஜெமா அத்துடனே தொழுக ஆயத்தமாக்குறதும் முந்தின சப்புலேநின்று தொழுவதும் இம்மூன்று மாகவிருக்கும்.

ஹதீது.

இபுனு அபீசைபா றலியல்லாஹு அன்குவும் பய்ஹக்கிய்யி றலியல்லாகு அன்குவும் ஸல்மானுல் பாரிஸிய்யிறலியல்லாகு அன்குவைத் தொட்டும் (மவுகூபான) ஹதீதாகச் சொல்லுகிருர்கள் நாயகம் முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாஹு அலைகிவசல்லங் திருவுளமானுர்கள், ஏதாகிலும் ஒரு பூமியில் ஒரு மனிதன் காமத்துச் சொல்லித் தொழுதானேயானுல் அவனுக்கு பின்னுலே மவுமூமாக இரண்டு மலாயிக்கத்துமார்கள் துயர்ந்து தொழுவார்கள் இன்னும் வாங்கும் சொல்லி காமத்தும் சொல்லித் தொழுவானே யானுல், அவனுக்கு பின்னுலே மவுமூமாக (மலாயிச்கத்து மார்களில்) நின்றும் இத்தனை எண்ண மென்றில்லாமல் அவனுடைய கண் பார்வை எவ்வளவு தூரம் எத்துரதோ அதைக்காண அதிக கூட்டங் கூட்டமாக கூடித்தொழுவார்கள் அவன் [றுகூவு] செய்யும்போது அவர்களுங் [றுகூவு] செய்வார்கள் இன்னம் அவன் ஸுஜூது செய்யும்போது அவர்களும் ஸுஜூது

செய்வார்கள் அவனுடைய துஆவுக்காகவேண்டி அவர்களடங்கலும் ஆமீன் கூறவும் செய்வார்களென்று திருவுளமானார்கள்.

ஹதீது.

நபிசல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் திருவாய் மலர்ந்தருளியதாக அஹ்மது றலியல்லாகு அன்குவும் முஸ்லீம் றலியல்லாகு அன்குவும் சொல்கிறார்கள் நாயகம் அருளிச் செய்தார்கள் [முஅத்தின்] வாங்கு சொல்வதை நீங்கள் கேட்டீர்களேயானால் அவன் சொல்வதைப்போலே நீங்களும் சொல்லுங்கள் பின்பு என்பேரிலே சலவாத்துச் சொல்லுங்கள் திடனாக யாராகிலுமொருவன் என்பேரில் ஒரு சலவாத்துச் சொல்வானேயானால் அல்லாகுத் தஆலா அவன்பேரில் பத்து சலவாத்துச்சொல்வான் பின்பு எனக்கு அல்லாகுத் தஆலாவிடத்தில் ஒவீலாவைக்கேளுங்கள் அதாகிறது சொர்க்கலோகத்தில் நின்றும் ஒருதானமாக யிருக்கும் அந்த தானமாகிறது எனக்கேயொழிய அல்லாவுடைய அடியார்களில் நின்றும் ஒருவருக்கும் பாத்தியமாகமாட்டாது இன்னும் அந்ததானத்தில் நான் ஆயிருக்க ஆதரவுவைக்கிறேன் யாராகிலும் ஒருவன் எனக்காகவேண்டி அந்த ஒவீலாவென்கிற தானத்தை அல்லா இடத்தில் கேட்டானேயானால் அவனுக்கு கியாமனாளில் சபாஅத்து என்பதை அல்லா இடத்தில் மண்டாட்டம் செய்கிறது என்பேரில் வாஜிபாகவும் கடமையாவு மாயிட்டது இன்னம் சகோதரர்களே அந்த ஒவீலாவை கேழ்க்கிற துஆவாகிறது வாங்குசொல்கிறபோது ஓதுகிற துஆவின்பேரில் அடங்கியிருக்கிறது ஆதலால் அந்த துஆவை மறதியாக விட்டு விடாமல் நபிசல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் சபாஅத்தை ஆதரவு வைத்தவர்களாக வாங்குசொல்லி முடிந்த பின்பு ஓதிக்கொண்டு வருவீர்களாக.

ஹதீது.

யாருகிலு மொருவன் வாங்கு சொல்லும்போது துன்யாப் பேச்சை பேசுவானேயானல் அவனுடைய ஈமானுகிறது அவனை விட்டும் நீங்கிபோகிறதை பயந்துகொள்ளட்டும் என்கிறதாக நபிநாயகம் சல்லல்லாஹு அலைகிவசல்லமவர்கள் திருவுளமான தாக ரிவாயத்துச் செய்திருக்கிருர்கள்.

ஹதீது.

வாங்கு சொல்லும்போதில் ஒருவன் துன்யாப் பேச்சைப் பேசுவானேயானல் மவுத்து நேரத்தில் அவன் நாவுதட்டளிந்து தடுமாறிப்போம் என்று நபிநாயகம் திருவுளமாயிருக்கிருர்கள்.

இன்னந் தொழுகைக்கா பரிவட்டம் அணிகிறதும் தலைப் பா கட்டுகிறதும் தொழுகையளவில் நிற்கிறவிடத்தில் மிஸுவாக்குச் செய்கிறதும் சுன்னத்தாகவிருக்கும் இன்னம் புகாரி றலியல்லாகு அன்குவும் முஸ்லிம் றலியல்லாகு அன்கு அவர்களும் ரிவாயத்துச் செய்திருக்கிருர்கள். உங்களில் ஒருவன் தொழுகிறதாக விருந்தால் அவனுடைய கழுததின்பேரில் ஒரு வஸ்துவும் இல்லாதிருக்க ஒற்றப் பிடவையினல் தொழுக வேண்டாமென்று நாயகம் திருவுளமான தாக சொல்கிருர்கள்.

இபுனு அஸாக்கிற்றலியல்லாகு அன்கு அவர்கள் சொல்கிருர்கள். நாயகம் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிருர்கள். யாராகிலும் ஒருவன் பறலைத்தொழுகையோ அல்லது சுன்னத்துத் தொழுகையானலும் சரி அதற்காக தலைப்பாக் கட்டிக்கொண்டு தொழுவானேயானல் அவன்தொழு ததுபோல் இருபத்தைந்து தொழுகையுடைய (சுகுற்) தவா புண்டாயிருக்குதென்றும் இன்னும் அவன் (ஜும்ஆ) நாளையில்

தலைப்பா உடனே தொழுவானேயானால் தலைப்பா இல்லாமல் தொழுகிறதைக்காணவும் எழுபது (ஜுர்ஆ) உடைய வரிசை யுண்டாயிருக்குதென்றும் திருவுளமானதாகச் சொன்னார்கள்.

இன்னும் நாயகம் சல்லல்லாகு அலைகிவசல்லம் திருவுளமானதாக புகாரி றலியல்லாகு அன்கு அவர்கள் சொல்லுகிறார்கள். என்னுடைய, உம்மத்துகள் பேரில் வருத்தமில்லாமல், இருக்குமேயானால், நான் அவர்களுக்கு மிஸ்வாக்குச் செய்கிறதை தொழுகை, படங்கலிலும் பறுலாக. ஏவிவிடுவேன், என்று திருவுளமானதாகச் சொன்னார்கள் இன்னும் மிசுவாக்குச்செய்து தொழுகிறது மிசுவாக்குச்செய்யாமல் எழுபது தொழுகைதொழுகிறதைக்காண வரிசையாக விருக்குமென்று இபுனு ஸஞ்சவிய்யா சொன்னார்கள். அதை ஹக்கீம் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஸிஹ்ஹத்தாக்கி வைத்திருக்கிறார்கள். இன்னம் நவவீ றலியல்லாஹு அன்ஹு அவர்கள் (மஜ்மூஹு) என்கிற கிதாபில் சொல்லுகிறார்கள். யாராகிலு மொருவன் தொழுகிறதாக யிருந்தால் அவன் கழுத்தில் யாதாவது ஒரு பிடவையை ஆக்கிக்கொள்கிறது சுன்னத்தாக விருக்கு மென்றும் பிடவை யில்லாமல் போனால் அவன் கழுத்தில் ஒரு கயறையாகிலும் எடுத்துப் போட்டுக் கொள்ளவேண்டு மென்றும் அந்த தோள்புயத்திலோ கழுத்திலோ ஒரு வஸ்துவும் இல்லாமல் ஒழிந்திருக்கக் கூடாதென்றும் அப்படிக்கில்லாமல் தோளில் ஒரு வஸ்துவும் இல்லாமல் தொழுகிறது. மக்றூவென்றும், சொல்லி யிருக்கிறார்கள் இன்னம் தலையை திறந்தவனாக தொழுகிறதும் அப்படிப்போல் மக்றூஹாகத் தானிருக்கு மென்று சொல்கிறார்கள் நம்முடைய செய்குனாவாகிய இபுனு ஹஜற் இமாம் றகுமத்துல்லா அலைகி அவர்கள் சொல்லுகிறார்கள் கிடனை தலைப்பாவும் மிஸ்வாக்கும் சுன்னத்தாகவிருக்கும் அதை

ஒருவன் தொழுகையில் புகுந்திட்டானேயாகிலும் அதற்கு
இடம் பாடுண்டாயிருந்தால் கொஞ்சம் சியலைக்கொண்டு செய்
துக் கொள்ளவும் அதெப்படிப்போல் மூன்று சியல் துயர்ச்சி
யாகாமல் செய்து முடிக்க வேண்டும் இன்னம் ஒரு
(ஸுத்ரு) வென்னும் திரையை முன்னாலே ஆக்கிக்கொள்வதும்
சுன்னத்தாகவிருக்கும் அதெப்படியெனில் தொழுகிறவன்
அவன் தொழுகிறதுக்காக நிக்கிற தலத்தில் நின்று மூன்று
முளத்துக்கு அப்புறம் உயர்ந்ததாகிய ஒரு வஸ்துவை வைத்
துக் கொண்டு தொழுகிறதும், அதில்லாதிருக்கில் முஸல்லா
போட்டுக் கொள்கிறதும் அதுவுமில்லாதிருக்கில் அவன் முன்
னாலே நீளமாக ஒருவரையைவரைந்துக் கொள்கிறதும் சுன்னத்
தாக்கப்படும் யாராகிலும ஒரு அகல் பாலிகானவன் அந்தவரை
யுடனே கடந்தானேயானால் அவனை கட்டிக்கொள்ளவும் இன்
னம் அந்நேரத்தில் அவ்விதமாக நடக்குகிறது ஹறாமாகவிருக்
கும். (சறகுஸ்ஸுன்ன) வென்கிற கிதாபில் (பக்வீ) றலியல்
லாகு அன்ஹு அவர்கள் சொல்லுகிறார்கள் இமாமாக்றவர்
அவர் நிக்கிற தானத்துக்கும் மூன்று முளத்துக்கு அப்பால்
ஏதாவது ஒரு அடையாளம் வைத்தாரேயானாலும் அல்லது
அவருடைய ஆஸாவையோ மற்றொன்றையோ நட்டினாரேயானா
லும் மவுமூங்களுக்கு அப்படி அடையாளம் வைக்க தேவை
யில்லை இமாம்வைத்த அடையாளமே போதுமானதாக விருக்
கும் அபூதாவூது றலியல்லாகு அன்கு சொல்லுகிறார்கள். உங்க
ளில் ஒருவன் தொழுதானேயானால் அவனுடைய முகத்துக்கு
நேராலே ஒரு வஸ்துவை ஆக்கிக்கொள்ளவும் அல்லது
ஆஸாவை நட்டிக்கொள்ளவும் அல்லது அஸாவுமில்லையானால்
அவனுக்கு முன்னாலே ஒரு கீத்துகிறிக் கொள்ளவும் பின்பு
அதற்கு முன்னாலே ஒருவன் கடந்தானேயானால் தங்கடம
செய்யமாட்டாது இன்னம் (செய்கான்) புகாரி றலியல்லாகு

அன்குவும் முஸ்லீம் றலியல்லாகு அன்குவும் சொல்கிறார்கள் உங்களில் நின்றும் ஒருவன் ஒரு வஸ்துவை ஸுத்றாவாக வைத்து தொழுதானேயானால் அதைக்கடந்து போகிறதற்கு ஒருவன் ஆரம்பித்தான் அப்பொழுது அவனைக் கட்டவும் அந்த கட்டுதலுக்கும் அவன் விலகவில்லையானால் அவனை வெட்டுகிறதினால் யாதொரு குற்றமில்லையென்றும் இன்னம் அவன் சைத்தானாக இருக்குமென்றும் சொல்கிறார்கள்.

இன்னம் அவர்கள் இரண்டுபேர்களும் சொல்லுகிறார்கள் ஸுத்றாவைத்துத் தொழுகிறானே அவனுக்குமுன்னாலே நடக்கிறதினுடைய பாவத்தை யாராகிலு மொருவர் அறிவார்களேயானால் அவனுக்கு முன்னால் நடக்கிறதைக்காணவும் நாற்பது வருஷமானாலும் மறுபக்கம் தரிபட்டு ஒரே நிலைபாக நின்றிடுகிறது நலமென்று அப்படியே நின்றிடுவார்கள் என்றார்கள் தபுறானிய றலியல்லாகு அங்கு அவர்கள் சொல்கிறார்கள் இமாம் ஸுத்றா வைத்திருந்தாரேயானால் அவர்களுக்கு பின்னின்று தொழுகிறவர்க ளடங்கலுக்கும் அந்த ஸுத்றாவே போதுமென்று சொன்னார்கள் இன்னும் யாராகிலும் ஒருவர் தொழுகைபள்ளியிலே நிற்க நாடுவார்களேயானால் அதற்கு முன்னாலே (தஸ்பீகு என்று சொல்லும் ஸுப்ஹானல்லா) வென்பது பத்து விடுத்தமும் (தஹ்மீது) என்று சொல்லும் (அலஹம்து லில்லாகி) பத்துவிடுத்தமும், தக்பீறு என்று, சொல்லும், (அல்லாகு அக்பற்) பத்துவிடுத்தமும், (தஹ்லீல்) என்று சொல்லும், (லாயிலாக, இல்லல்லாவை பத்துவிடுத்தமும் இஸ்திக்பாறென்று,) சொல்லும், (அஸ்தக்பிறுல்லாகில், அலீம்) பத்து விடுத்தமும், சொல்கிறது சுன்னத்தாக விருக்குமென்றத்திரவு செய்தார்கள்.

121-வது பிரிவு.

கிப்லாவின் திசையை முன்னோக்கி நின்று இருகைகளையும் உயர்த்தி தக்பீர் கட்டுகிறது (ஸுபுஹுக்கு]

தக்பீர்கட்டுகிற மொழித்தல்.

உஸல்லி சுன்னத்தஸ் சுபுஹி றக்அத்தைனி லில்லாகித் தஆலா அல்லாகு அக்பற்.

(பறுலானல்)

உசல்லிபற்பலஸ், சுபுஹி றக்அத்தைனி லில்லாகித் தஆல அல்லாகு அக்பற்.

ளுஹறுக்கு

உசல்லி,சுன்னத்தல்ளுஹரிறக், அதைனிலில்லாகி அல்லாகு அக்பற்.

(பறுலானல்)

உசல்லி பற்லல்ளுஹரி, அற்பஅறக் ஆத்தின், லில்லாகித் தஆலா அல்லாகு அக்பற்.

(அசறுக்கு)

உசல்லிசுன்னத்தல், அசரிறக் அதைனிலில்லாகி அல்லாகு அக்பற்.

பறுலானல்

உசல்லிபற்லல்அசரிஅற்ப அறக்அத்தின்லில்லாகித்தஆலா அல்லாகு அக்பற்.

(மகுரிபுக்கு)

உஸல்லி சுன்னத்தல் மகுரிபிறக் அதைனி லில்லாகி அல்லாகு அக்பற்.

(பறுலானல்)

உசல்லி பற்லல் மகுரிபி தலாத றக்ஆத்தின் லில்லாகித் தஆலா அல்லாகு அக்பற்.

(இசாவுக்கு)

உசல்லி சுன்னத்தில் இசாயி றக் அதைனி லில்லாகி அல்லாகு அக்பற்.

பறுலானல் உசல்லீ பறுலல் இஷாயி அற்ப றகஆத்தின் லில்லாகித்தஆலா அல்லாகு அக்பற்.

122-வது பிரிவு.

அந்த தொழுகையி லுண்டாவாகிய மக்றூஹுகளின் விபரமாக விருக்கும்.

தொழுகையிலுண்டாவாகிய, மக்றூகுகளாகிறது முந்தினது இஹ்றாமுடைய தக்பீறு கட்டுகிறபோதிலோ அல்லது ஸுஜூது செய்கிறபோதிலோ இரண்டு கைகளையும் திறக்கப்பட்டதாக விராமல் சட்டக்கை கொண்டோ அல்லது பிடவை கொண்டோ அல்லது மேலிட்டிருக்கும் பரிவட்டத்தைக்கொண்டோ மூடினதாக விருக்கிறதும், (2) இன்னம் இரண்டுகால்களையும்சேர்த்துக்கொள்கிறதும், (3) இரண்டிலொருகாலை முன்கூட்டினதாக வைத்துக்கொள்கிறதும் (4) இன்னும் நிலையில் நிர்

க்கிறபோது ஒற்றைக் காலின்பேரில் ஊன்றுதல் பிடித்தவனாக நிற்கிறதும், (5) இரகசியமாக ஓதும்தானத்தில் சத்தமிட்டதாய் ஓதுவதும் (6) சத்தமிட்டதாய் ஓதும்தானத்தில் இரகசியமாய் ஓதுவதும் [7] றுகூவு செய்யும்போதில் தலையை தூக்குதலை யர்க்கி தாழ்த்திக் கொள்வதும், (8] மேல் சொன்ன சுன்னத்துகளுக்கு விதர்ப்பம் செய்கிறதும் [9) இன்னம் ஸுஜூதுக்கு உறுப்புகளை வைக்கிறதில், விதர்ப்பம் செய்கிதும், (10) பூமியின் பேரில் இரண்டு முளங்கையும் ஸுஜூதுசெய்யும்போது கிடத்திக்கொள்வதும், (11) அந்த ஸுஜூதில் மூக்கை வைக்கிறதை விடுகிறதும், (12) ஆண்பிள்ளையாக விருந்தால், றுகூவிலே இரண்டு கொடுங்கைகளை நீக்கிறதை விட்டு சேர்த்து கொள்வதும் [13) இன்னா, அஊது ஓதலை விடுகிறதும் 14 ஸூறத்து ஓதலை விடுகிறதும் (15) ஒரு பறுவில் நின்று ஒரு பறுவில் திரும்புகிற போது அல்லாஹு அக்பறென்று தக்பீறு சொல்கிறதை விடுகிறதும், [16] றுகூவு ஸுஜூது; செய்கிறதில், கொஞ்சம் தஸ்பீகை விடுகிறதும், [17] இஹுதிதாலிலும் இரண்டு ஸுஜூதுக்கிடையிலும், இடையிருப்பிலும், சொல்லுகிறதிக்றுகளை விடுகிறதும். [18] பிந்தின அந்தஹிய்யாத்தின் கடைசியில் ஓதுகிற துஆவை விடுகிறதும், [19] இன்னம் தொழுகையை மெத்த தீபரமாக முடிக்கிறதும், [20] இமாம் துஆஓதுகிறதில், தனக்கு சொந்தமாக ஓதிக்கொள்கிறதும், [21] இன்னம் இமாமானவர் இஸ்திருகத்து இருப்பை விட்டுவிட்டாரானால், மவுமூமானவன் அவருடனே எழும்பிவிடாமல், அதர்க்காக இமாமை விட்டுவிட்டு, இருக்கிறதும், [22] இன்னம் தாடியில் அல்லது ரோமங்களில் கைப்பிடிகிறதும், [23] அல்லது பிடவை மன்னுகிறது அல்லது நீங்கி விடுகிறதும், தூசிபோல் உள்ளவைகளில், நின்றும், முகத்தை தடவுகிறதும், [24] தன் கபுவின் பேரில் ஜகத்து பெறுகிறதும்,

[25] முன்னாலேயாகிலும், அல்லது வலதுபுறத்திலாகிலும், தப்புறதும், [26] இன்னம் ஓர் சங்கதிக்காக அல்லது வந்த [கல்க்குகள்] விளங்கிக்கொள்ள, ஓர், இசாரக் காட்டுதலும், [27] கொட்டாவி போடுதலும், [28] இரிப்பினில் இடதுகையைக்கொண்டு இடுப்பில் ஊன்றுதல் பிடித்ததாக இருக்கிறதும், [29] இரண்டுஸலா மூட்டுகிறபோதிலும், இரண்டுகைகளையும், மலத்துகிறதும் மக்ரூகாக விருக்கும்.

123-வது பிரிவு

தொழுகையில் ஹறாமானசங்கதிகள்.

தொழுகையிலே திரும்பிப்பார்க்கிறது, ஹறாமாகவிருக்கும் இன்னம் நெஞ்சை திருப்புகிறது கொண்டு பாத்திலென்றும், வருகுது முத்தவல்லிய்யு றலியல்லாகு அன்கு அவர்களும் ஹில்மி றலியல்லாஹு அன்ஹு அவர்களும் சொல்லுகிறார்கள் ஸுஜூதுடைய தானத்தை விட்டு அவனுடைய பார்வையை உயர்த்துகிறதும் ஹறாமாகுமென்று சொல்லுகிறார்கள். [அதுறபிய்யு] றலியல்லாகு அன்கு சொல்லுகிறார்கள், நபிஸல்லல்லாகு அலைகிவசல்லம் திருவுளமாயிருக்கிறார்கள். யாராகிலும் ஒருவன் தொழுகையிலே திருப்பிப்பார்த்தானேயானால், அல்லாகுத் தஆலாவாகிறவன் அவன் தொழுகையை அவன் பேரில்தான் மீட்டிவிடுவானென்று திருவுளமானார்கள்.

ஹதீது.

நபி சல்லல்லாகு அலைகிவசல்லம் திருவுளமானதாக, (தபுரானிய்யு றலியல்லாகு அன்கு அவர்கள் றிவாயத்துச் செய்திருக்கிறார்கள் ஒரு கூட்டத்தாருடைய ஹாலெல்லா அவர்கள்

தொழுகையில் வானத்தளவிலே பார்க்கிறவர்களாக யிருக்கிறார்களே, என்று அவர்களுடைய சொல் அச்சிபலின்பேரில் கடுசாகவாயிட்டது இன்னம் அப்படி பார்வையை உயர்த்திறதை விட்டும், விலக்கினார்கள். அல்லது அவர்கள் பார்வையை உயர்த்துவார்களேயானால், அவர்கள் கண் குருடாக போகட்டும் என்றதாகச் சொல்லுகிறார்கள் புகாரிய்யு நலியல்லாகு அன்கு றிவாயத்துச் செய்திருக்கிறார்கள் திடனை யூசுபுநபி அலைஹிஸ்ஸலாமவர்களுக்கும் அவர்களுடைய தகப்பனாராகிய, யாகூபுநபி, அலைகிஸ்ஸலாம் அவர்களுக்கும் இடையில் சில துன்பத்தைக் கொண்டு, சோதிக்கப்பட்டதெல்லாம் அவர்கள் தொழுதுக்கொண்டு நிற்கும்போது, மகன் யூஸுநபி உறங்கும்போகில், அவர்கள் பேரில் உண்டாவாகிய பிறியத்தாலும் முஹப்பத்தாலும் திரும்பிப்பார்த்து விட்டார்கள். ஆதலால் அவர்களையும் இவர்களையும் வெகுகாலமாக பிரிக்கப்பட்டு போய்விட்டதென்று, றிவாயத்துச் செய்திருக்கிறார்கள்.

124-வது பிரிவு.

தொழுகையில் மக்றூஹாத்தஹரீமாகிய ஒருத்துக்கிளை பேசுகிறபடமாக விருக்கும்.

தொழுகையிலுண்டாவாகிய மக்றூகுத் தஹரீம்களாகிறது ஜும்ஆநாளையொழிய, மற்றநாள்களில், பொழுதாகிற பதியமென்னும் உச்சியிலிருக்கும்போது, தொழுகிறதும் சுபஹாத் தொழுகைக்குப் பின்னாலேயும் அஸறாத்தொழுகைக்குப் பின்னாலேயும், தொழுகிறதும் பொழுதாகிறது உதித்தெழும்பும் போதிலும், அது அடையும்போதிலும் தொழுகிறதுவாம். அது

வாகிறது பிந்தப்பட்டதல்லாத ஸபபுடை தொழுகையாயிருந்தால், அப்படிக்கல்லைத் தொழலாம் அதேதுபோல் (தஹய்யத்துல் மஸ்ஜிது, இரண்டு றக்அத்தைப்போல அல்லது, உளுவுடைய தொழுகைபோல், அல்லது கலாவாக தப்பித்துப்போன தொழுகையில், இவன்மேல் சொன்ன, ஒகுத்தில்தான் தொழுகவேண்டுமென்று நாடவில்லையே அந்த தொழுகையும் தொழுதுக்கொள்ளலாம். இன்னம் ஜனசாத்தொழுகையும் தொழலாம்.

125-வது பிரிவு.

தொழுகையில் மக்றூஹு தன்ஸீஹுகளை விபரிக்கிற பாடமாகவிருக்கும்.

தொழுகையிலுண்டாவாகிய மக்றூகு தன்ஸீஹுகளாகிறது மலபாதை ஜலபாதை (ஹுருத்தென்னும்) காத்து இதுகள் முடுக்கிறபோது அதை அடக்கிவைத்துக்கொண்டு தொழுகிறதும் ஒஜீபன் முதலிய ஆகாரங்கள் தயாருகவிருக்கும்போது அதில் இவன் ஹாஜத்தாகயிருந்தும் அதை ஒஜீபனிக்காமல் தொழுகிறதும் கட்டடங்கள் பள்ளிவாசல்வீடு முதலியதில் ஆள்கள் போகும்வழியிலோ அல்லது அவர்களுடைய வாசல்களிலோ தொழுகிறதும் இன்னம் கபுறுகளின் மேலும் அதின் கீழும் வலபாகம் இடபாகம் இதுகளில் தொழுகிறதும் மக்றூகு தன்ஸீஹாக விருக்கும்.

ஹதீது.

நபிசல்லல்லாஹு அலைகிவசல்லம் திருவுளமானதாக ஜாபிர் றலியல்லாஹு அன்ஹுவைத் தொட்டும முஸ்லிம றலியல்லாஹு அன்ஹு சொல்கிருர்கள் ஐந்தொகுத்துத் தொழு

கைக்கு உகமான்மாகிறது உங்களுடைய வாசலில் இன்பமாகிய ஓர் ஆறு ஓடுகிறதுபோலேயாக விருக்கும் அந்த ஆற்றில் நீங்கள் ஒருநாள் ஒன்றுக்கு ஐந்து தடவை முழுகினல் உங்கள் சரீரத்தில் ஊத்தை தரிபடுமா தரிபடமாட்டாதே அப்படிப் போல் உங்களுடைய பாவம் அடங்கலேயும் அந்தத் தொழுகையாகிறது அழித்து விடுமென்முர்கள்.

ஹதீது.

அபீதற்று றலியல்லாஹு அன்குவைத்தொட்டும் அஹ்மது றலியல்லாஹு அன்ஹு செல்கிருர்கள் திட்ணுக நபி சல்லல்லாஹு அலைகிவசல்லமவர்கள் ஓர்காலத்தில் வெளியில் புறப்பட்டார்கள் ஓர் மரத்தில்நின்றும் உண்டாவாகிய ஓர் கொம்பை கையிலெடுத்தார்கள் அதை அசைத்தார்கள் இதுகள் அடங்கலும் உதிர்ந்து விட்டது உடனே அபாதற்றே என்று கூப்பிட்டார்கள் அபாதற்று லெப்பைக்யா றசூலுல்லாவென்று சத்தம் கொடுத்தார்கள் உடனே அவர்களிடத்தில திருவுளமானுர்கள் இந்த மரத்தின் இலேயாகிறது உதிர்ந்து போய் விட்டதல்லவா அதைப்போல் ஒரு முஸ்லிமான அடியான் அல்லாவுடைய முகத்தை நாடித்தொழுவானே யானல் அவனுடைய பாவங்களடங்கலும் உடனே உதிர்ந்து விடுமென்றருளினுர்கள்.

வேறே ஒரு றிவாயத்து.

திட்ணுக அந்ததொழுகையில்லாதவன் கியாமநாளில் அவன் முகத்தின்பேரில் மூன்றுவரி எழுதப்பட்டவனுக வருவான் அதில் முந்தினவரியில் எழுதும்வசனம் என்னவென்றல் அல்லாவுடைய ஹக்கைப் பழுதாக்கினவனே என்றும் இரண்டாம் வரியில் அல்லாகுத்த ஆலாவுடைய கோபத்துக்கு சொ

ந்தமானவனே என்றும் மூன்றாவது வரியில் அல்லாஹுத்த ஆலாவுடைய ஹக்கை துன்யாவில் பழுதாக்கினேனே அதுபோல் என்னேயில் அல்லாஹுத்த ஆலாவுடைய றகுமத்தை விட்டும் நீயாகிறவன் கத்துதல் கேட்டவனாக யிருக்குமென்றும், எழுதப்பட்டிருக்குமென்று றிவாயத்து, வந்திருக்குது. ஆனதால் முஸ்லிமாகிய நற்கிருபை வுடையவர்களே தொழுகையை விட்டும் பருக்காகமல் நம்மள் அனைபேரையும் நாயன் காத்துக் கொள்வானாகவும் ஆமீன்.

126-வது பிரிவு

வினையால் வுண்டாகும் கெடுதிகளை சொல்லும் பிரிவுகளாயிருக்கும்.

அக்தாலா குர்ஹானில் திருவுளமானான். பந்தாக்களே நீங்கள், வினையான கெட்ட செயலில் முடுகாதீர்கள், வினையாகிறது, மெத்த கெட்ட செயலாக யிருக்கும் அல்லாவுடைய கோபம் மிகுந்தது. இன்னம் வினையாகிறது நரகமிழுத்துக்கொண்டு போய் விடுமென்றும் திருவுளமானான். ஆனதால் அல்லாவுடைய, பந்தாக்களே, வினையை விட்டு காரமானப் தேடிக்கொள்ளுங்கள்.

றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் திருவுளமானார்கள், ஒரு அடியான் வினை செய்தாலவனுடைய ஈமான் அவனை விட்டும் புறப்பட்டு அவனுடைய தலைமேல் குடையைப்போல் நிற்கும். அவனை விட்டும் மீண்டால்ஈமான் அவனண்டையில் மீளுமென்று திருவுளமானார்கள்.

றசூல் சல்லல்லாஹு அலைஹி வசல்லம் ஸினாவாகிறது மிடிமையை யுண்டாக்கி வீட்டைப் பாழாக்கு மென்று திருவுளமானார்கள்.

ஸபூர் வேதத்தில் வருகின்றது, ஸினாச் செய்கிறவர்களுடைய அபங்களை யிரும்பு கசைகளாலடிக்கப்படும். அவர்கள் இரகஸீங்கத்தோடினால் ஸபானியாக்கள் நீங்கள் அல்லாவில் நின்றும் வெட்கிக்காமல் சிரித்து விளையாடி கொஞ்சும்போது இந்த சப்தமெங்கே போயிருந்ததென்று சொல்வார்கள்.

றிவாயத்து.

மூசா அலைஹிஸ்ஸலாம் வம்பர்களை வெட்டப்போன பொழுது பல்ஆமுபுனு பாஊறு உடைய கவுமுகள் மூசா உடனே அனேக சேனைகளிருக்கிறதென்று பல்ஆமிடம் போய் முறையிட்டார்கள். பல்ஆம் சொன்னார், பெண்களை யலங்கரித்து அவர்களை யந்தக் கூட்டத்தில் சரக்கு விற்கவிட்டு தொட்டவனைத் தட்டவேண்டாமென்று சொல்லி யனுப்புங்களென்று சொன்னார். அவர்களிலொருவன் ஸினாசெய்தால் உங்களுக்குப் போதுமென்று சொன்னார். அப்படிச்செய்யவே அல்லாஹுத் தஆலா மூஸா அலைஹிஸ்ஸலாமுடைய கவுமுகளில் வபாவை யனுப்பினான். ஒரு நாளில் எண்பதினாயிரம்பேர் இறந்தார்கள். ஏனென்றால், ஸினா ஒரு கவுமுகளிலிருந்தால அவர்களில் வபாவுமிருக்கும்.

றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் திருவுளமானார்கள் பாவமாகிறது குப்றுக்குத் தூதாயிருக்கும். இமாம்கள் சொல்லுகின்றார்கள், இஜ்மாவின்படி பழிக்குப் பிறகு ஸினா மெத்த பெரும்பாவ மாயிருக்கும். ஒரு சொற்படி பழியைக் காண ஸினா மெத்த பெரும்பாவமா யிருக்கும். ஆதலால் இஸ்லா

மார்க்கமுடைய முஸ்லிம்களே ஸினுவென்னும் கெட்ட செயல்களை விட்டும் மீட்டிவைப்பாகைவும் இதில் சொல்லியபடி அருமான செயல்களை விட்டு விட்டு நல்ல அமல்களாகிய தொழுகை நோம்பு ஸக்காத்து முதலும் தத்துவமும் இருக்குமாகில் அச்சும்செய்து கொள்ளும்படியாகவும் ஆண்டவன் நற்கிருபையும் செய்வனுகவும் ஆமீன் யாரப்பில் ஆலமீன்.

127-வது பிரிவு.

மதனமானிட சரீரவிர்த்தி லேகியம்.

இந்திரியக் கெடுதியும் அதன் காரணங்களும்

இந்திரிக் கெடுதியின் பலகாரணங்களை மேலே குறித்துச் சொல்லியிருந்தாலும் அவைகளை இங்கே முழுதும் விஸ்தரிப்பது தகுதியாகும்.

பருவம் வந்த பின்பும் விவாஹ மில்லாமை, துஷ்டசகவாசம், துர்மார்க்கச் செய்கையாகிய அஸ்தப் பிரயோகம், வீரியத்தைத் தானே வெளியாக்கல், தன் சக்தியையெண்ணுமலே ஸ்திரீ போகத்தி லழுந்தியிருத்தல் காமவின்பங்களி லிடைவிடாது மூழ்கியிருத்தல், வயித்திய சாஸ்திரத்தில் விலக்கியிருக்குஞ் சமயங்களில் ஸ்திரீ சம்போகம், தனக்கு மூத்தவளோடாவது, பிறப்புறுப்பில் வியாதியுள்ளவளோடாவது ஹயலாயிருப்பவ ளோடாவது புணர்ச்சி, மிதமிஞ்சிய உழைப்பு, தீக்ஷணமான பசி, வறட்டும் தாகம் மிகு சிறு வயதில் அதிகமாய்ப்படித்தல், ஆரோக்கிய மில்லாத உணவும் ஜலமும் கொள்ளுதல், மிருகப் புணர்ச்சி விர்த்தாப்பியம், தேகமனோ

வியாதிகள் (எவ்விதமாயினும்) இவைகளெல்லாம் இந்திரியக் கெடுதியை யுண்டாக்குகின்றன. வீரியம் கெட்டுப்போயிருக்கையில் அடியிற்கண்டிருக்கும் குறிகள் காணப்படுகின்றன. உணர்ச்சியில்லாத ஸ்திதியிலாவது மூத்திரத்தோடாவது இந்திரியப்போக்கும் கனவிற்கண்ட ஸ்திரீபோகத்தாலுண்டாகும் வீரிய வொழுக்குகளும், அச்சமயத்துஜன்ன வுறுப்பிலுண்டாகும் நோயும், இந்திரியக் கெடுதியைத் தெரிவிக்கப்போகிற அடையாளங்களாம்.

ஒரு மனிதனுடைய வீரியம் கெட்டிருக்கையில் அவன் முகம் வெளுப்பாய்க் காண்பது ஸகஜம்; அவனுக்கு வேலையிலிஷ்ட மிராது தலைநோய், இடுப்பு நோய், அஜீரணம், கால்நோய் ஆகிய இவைகளால் பாதைப்படுவான்; மேலும் ஸ்திரீயை வெறுப்புடன் பார்ப்பான் ஸதிரீ சம்போகத்திலாவது அந்தரங்கத்தில் ஒரு ஸதிரீயைப்பார்த்த போதாவது, அவனுக்கு வீரியம் துரிதமா யொழுகும் ஒரு ஸ்திரீயை நெருங்கவும் வெட்கப்படுவான். அவனுடைய கைகால்கள் நடுங்கும் சிறிது வேலை செய்யினும் ஒய்ந்துபோவான். எப்போதும் ஆயாசமாயிருப்பான். ஞாபகம் முழுதும் அற்றுப்போகும்.

சுளுவாகவே வெடு வெடுப்புத் தன்மையுடையவனுவான். இவ்விதமாக அவன் பலநோய்களால் பாதிக்கப்பட்டுத் தேகமும் மனமும் அழிந்து இறுதியிலே பிரயோசனமற்றவனுவான்

கெட்டுப்போன வீரியத்தைச் சீர்ப்படுத்த யுக்தகாலத்தில் உபாயம் தேடாவிடின், அது தனது கருவுண்டாக்கும் வல்லமையை நாளா வட்டத்திலிழக்கும், மேலும் பின்னேவியாதிகள் பயங்கர ரூபங்கொண்டு அவன் வாழ்நாள் முழுவதையும் அழிக்கும். அதுவுமன்றி அவைகள் அக்கால மரணமுண்டாக்கும்

இந்திரியக்கெடுதிக்கு மேற்சொன்னபல காரணங்களில் ஸ்திரீபோகத்திலதிகமாய் ஆழ்ந்திருத்தலும். கையால் இந்திரியத்தைத் தெரித்தலும் மிருகப்புணர்ச்சியும் பிரதானமானவையாம்;

ஏனெனில் வீரியத்தைக்கெடுப்பதில் இவைகள் அதிகப் பலமான காரணங்களாயிருக்கின்றன. இவைகளில் யாதாமொன்றே மனம் தேகம் ஆகிய இவ்விரண்டையும் அழிக்கப் போதுமான வல்லமையுள்ளபோது இம்மூன்றையும் ஏகோபித்து நடந்தினால் பலன்கள் எவ்வளவு பயங்கரமுள்ளவையாயிருக்குமென்பதை இதைவாசிப்போரே ஊகிக்கட்டும்.

சவுக்கிய ஸ்திதியிலிருந்துகொண்டு சுகமாய்த் தன் ஜீவதசையைக் கழிக்கவிரும்புவோன் வீரியத்தைப் பழுதாக்கும் எல்லா ஹேதுக்களினின்றும் சந்தேகமின்றி நீங்கியிருத்தல் வேண்டும். அது அசாத்தியமாயின். மேற்சொன்ன மூன்று காரணங்களினின்றாவது அவன் அவசியம் நீங்கியிருக்கவேண்டும். இம்மூன்று காரணங்களும் ஒரு மனிதனது தேக மனோதிடத்தை யழிக்கத் தனித்தனியே நிகறற்றவையாம். இன்னும் ஒரு மனிதனது ஆயுளைமுழுதும் சின்னாபின்னமாக்க அஸ்தப்பிரயோக மென்னும் அற்பச்செய்கை மற்றிரண்டுக்கும் அஞ்சும்; ஏனெனில். மற்றக்காரணங்களால் நேரிட்ட குணக்கெடுதி சிறிது காலத்தில் தக்க சிகிச்சையாலும் பலவேறு உபாயங்களாலும் ஒழிக்கலாகும். அஸ்தப்பிரயோகத்தின் அழிபலன்களோ நெடுங்காலத்துக்குப் பிறகு அநுபோகமுள்ள ரண வைத்தியர் அல்லது வேறுவைத்தியரின் சிரேஷ்டமான மருந்துகளால் மாத்திரமே ஒழிக்கக்கூடும். ஒரு மனிதன் வியாதிகட்கு இரையாவதற்கு முக்கிய காரணம், வீரியக்கெடுதியென்றேதப்பாமல் ஞாபகத்தில் வைக்கவேண்டும். ஏனெனில் அது மு

க்கிய ஜீவாதாரம்; ஓர் சட்டிடம்பலத்த அஸ்திவாரமில்லாவிடில் நீடித்துக் கெடாமலிருக்க எப்படிக் கூடாதோ, அப்படியே வீரியமில்லாமல் உடல் நிலை நிற்காது. ஆதலால் பல ஹீனமாயிருந்தா, ஸ்தேகம் நீடித்து நில்லாது. ஆகவே கூடுமான எல்லா வகைகளிலும், எல்லா மனிதரும், தங்கள் தாதுவைப் பாதுகாத்துவருவது முக்கிய கடமையாகும். இச்சிறு புஸ்தகத்தை யெழுதுவதில் நமது முக்கிய கருத்து, அஸ்தப்பிரயோகம் என்னும் துஸ்டப்பழக்கத்தில், வெகுபேர்சிக்கியிருக்க, அநுபோகத்தில் காணப்படுகிறார்களாதலால் இந்நாசகரமான செய்கைக்கு இரையாயிருப்பவரை விடுதலை செய்வதும், அதில் சிக்காதவரைத் தப்புவிப்பதுவுமேயாம். தொகுத்துச் சொல்லின்—இப்புஸ்தகத்திற் சொன்ன விதிகளுக்கிணங்கி நடக்கவும், தங்கள் வீரியத்தைப் பாதுகாக்கவும், எல்லோருக்கும் உணர்த்துகிறோம்,

மேற்சொன்னபடி தன் ஜீவிய காலத்தை நடத்துபவன் நீடித்த ஆயுளையும அடைதியுள்ள சௌக்கியத்தையும் அநுபவிப்பானென்பதற்கு மேல்கண்ட லேகியமே ஓர் திண்ணம்.

ஆனதால் மேற்சொல்லிய துர்குண வியாதிகளுக்கெல்லாம் ஆண்டவன் உதவிகொண்டு சூரியனைக்கண்ட பனி நீங்குவதைபோலாகிவிடும்.

மதனமானிட சரீரவிர்த்தி லேகியம் இந்த லேகியத்துடன் சொயமான தங்கரேக்கு சேர்த்து 40-நாள் சாப்பிடகூடிய டப்பி 1-க்கு 80-தங்கரேக்குடன்

கிரையம் ... ரூ. 7-0-0

மாதிரிக்காக சாப்பிடக்கூடிய டப்பி

1-க்கு 40-தங்கரேக்குடன் கிரையம் ரூ. 3-8-0

இந்த லேகியத்தை சிறியவர் முதல் யாவரும் சாதாரணமாக சாப்பிடலாம் பத்தியம் கிடையாது இந்த லேகியத்துடைய பலன்களைப்பற்றி அனுபோகித்த கனவான்கள் தாங்கள் படும் கஷ்டங்களை ஆண்டவன் கிருபையால் சுகப்பட்டு நமக்கு நற்சாச்சி மெடல்கள் கொடுத்து இருக்கிறார்கள். ஆனதால் யாவரும் இந்த விலாசத்துக்கு எழுதி பெற்றுகொள்ளலாம்.

மானேஜர்:—
எஸ். எம். முஸ்தபா, லெப்பை
நெ 16. சூரப்பமுதலி தெருவு,
திருவல்லிக்கேணி மதருஸ்.

---

128 வது பிரிவு.

நாள்பட்ட ரோகங்களை நீக்க சரீர சௌக்கிய பரிகாரம்.

நன்னாரிவேர், வல்லாரை, யானைகத்தாழைவேர், ஆகாஷகருடங்கிழங்கு, கரிஸ்ஹுங்கன்னி, நேர்டிமுத்து, பறங்கிச் சக்கை, அம்பர், கௌதுபான், மருத்தோன்றி, பொன்னுவரை, சால்முகுரு, முதலியவைகளை, தனித்தாவது, சேர்த்தாவது உபயோகித்து வருவதால் மிகவும் சுகந்தரும்.

129-வது பிரிவு.

போகசத்தியை குறைக்கும் பரிகாரங்கள்.

கர்பூரம், குருசானி, ஓமம், சீரகம், கொள்ளு, எலுமிச்சம் பழம், புளிப்பு வஸ்துகள், ஸதாப்பிலை, சதாப்புவிரை, புளிமாதுள்ம்பழம், பேதிக்கிழங்கு, இஸ்பகோல்விரை, புதினா இலை, கம்புளி பூச்சிச்செடிவிரை, பேரிக்காய் மிஷ்மிஷ், காஸினிவிரை, கார்டிஜல்ம், முதலானவைகளெல்லாம், காம வெரிக்கொண்ட பெண்களுக்கு விந்துவிலைவு அதிகரித்து அடிக்கடி தர்ச்சியலாய் இந்திரியம் இஸ்கலிதமாகிற பேர்களுக்கும் மேற்படி மருந்துகளை சூரணம் சேர்த்தாவது உபயோகிக்க மிகவும் பிரயோஜனம் செய்யவும். ஆண்டவன் கிருபையால் சுகப்படும்.

130-வது பிரிவு.

சகலமான வியாதிகளுக்கும் வீரதத்துவ லேகியம்:

கஸ்தூரிமஞ்சள்-சுக்கு-மிளகு-வால்மிளகு-கருஞ்சீரகம்-நற்சீரகம்-அரத்த-அபின்-நிலவாகைவேர் இதுகள் ஒவ்வொருதினுசுவொன்றுக்கு விருகனிடை-2, சாதிக்காய் சாதிபத்திரி-கிரும்புலவுங்கப்பட்டை-லவுங்கப்பத்திரி-கருவாப் பட்டை-அக்கிரகாரம்-அதிமதுரம்-சிருநாகப்பூ-செண்பகப்பூ-குரோசானி ஓமம்-கடுகுரோகணி-சாளியல்-அதிவிடையம்-பூலாங்கிழங்கு ஏலரிசி-தாளிசப்பத்திரி-தான்றிக்காய்-பெருஞ்சீரகம்-கோஷ்டம் இதுகள் தினுசு ஒவ்வொன்றுக்கு விராகனிடை-3, குங்குமப்பூ-சங்

தனம்-அமுக்கிளாவேர்- விலாமிச்சைவேர்-தூதுவளைவேர் - கண்டங்கத்திரிவேர்-வெட்டிவேர்-சங்குவேர்- கீழாநெல்லிவேர்-பொன்னாங்கண்ணிவேர்-நிலவாகைவேர்-ஆவாரம்பட்டை- நெல்லிப்பருப்பு-கடுக்காய்-இவை வகையொன்றுக்கு பலம்-1, தேத்தான்கொட்டை 40-மாசிக்காய்விராகனெடை-5, கண்டதிப்பிலி விராகனெடை-4, அரிசிதிப்பிலி விராகனெடை 6, முத்தக்காசு விராகனெடை-5, மதனகாமப்பூ விராகனெடை4, வெந்தயம்-5, சதகுப்பை விராகனெடை-5, அத்திவேர் பலம்-5, கடுகு பலம் 5 சடைக்கஞ்சாபலம்-அறை ஓமம் பலம்-அறை கசகசா பலம்-அறை கொத்தமல்லிபலம்-அறை, நீர்முள்ளிஅரிசி-பலம்-வ, ஆனைத்திப்பிலி பலம்-4, வெள்ளைப்பூண்டு பலம்-3 ஆக இவ்வளவுதினுசும் வறுத்துபொடிசெய்து ஆவின்பால்விட்டரைத்துநெய்படி 1 சக்கரை பலம்-15, தேன்படி-1, தேன் தள்ளி மற்றதை பாண்டத்தில் விட்டு அடுப்பில்வைத்து கிண்டி மெழுகுபதத்தில் தேன் விட்டுக்கிண்டி இறக்கிவைத்துக்கொண்டு காலை 6-மணிக்குசிறு பாக்களவு சாப்பிடவும் மாலை-5-மணிக்கு சிறுபாக்களவு சாப்பிடவும் தீரும்வியாதி வாதம்-80-ம், பித்தம்-40-ம், சுரம்-64-ம் குன்மம் 8-ம், சூலை-18-ம், மேகநீர்-20-ம், விப்புருதி-கண்டமாலை தொடைவாழை அரையாப்பு கிரந்திபக்கசூலைரோகம் செங்காப்பான் அண்டவாயு ஆகாசவாயு அந்திரவாயு நெஞ்சடைப்பு வயற்றுவலி வயற்றுபொருமல் கால்குடைப்பு காலசதி திமிர்வாதம் புரைஇசவு காக்காவலிப்பு குதிரைவலிப்பு இதுகளெல்லாம் ஆண்டவன் கிருபையால் தீரும் பத்தியமில்லை. யாபேர்களும் சாப்பிடலாம்.

40-நாள் சாப்பிடும் டப்பி 1-க்கு	ரூ.	3—0—0
20 நாள் சாப்பிடும் டப்பி 1-க்கு	ரூ.	1-12—0

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

நமது விலாசத்துக்கு எழுதிபெற்றுகொள்ளவும்

131-வது பிரிவு.

யாலத்தீபு.

பிஸ்மில்லாஹிற் றஹ்மானிற் றஹீ

வைத்திய கைமுறைகள்.

லேகியவகுப்பு.

சோகைகாமாலைக்கு லேகியம்.

சுக்கு	விராகநிடை	3	கடுக்கா	விராகனிடை	
திப்பிலி	,,	3	சிறுதேக்கு	,,	3
மிளகு	,,	3	அரத்தை	,,	3
சாதிக்கா	,,	3	ரோகணி	,,	3
ஓமம்	,,	3	காட்டுசீரகம்	,,	3
சீரகம்	,,	3	சோம்பு	,,	3
கிராம்பு	,,	3	கழற்சிப்பருப்பு	,,	3
இஞ்சி	,,	3			

இவைகளையிடித்து சூரணித்து வஸ்திரகாயம் செய்து அவ்விடைக்குச் சரியாய் வெள்ளாட்டுப் புழுக்கையை சூரணித்து சேர்த்து

கையான்சார்	படி	1
பசும்நெய்	,,	அரை
பனங்கற்கண்டு	பலம்	1

நெய்யும் சாற்றையும் ஒன்ருய்யூற்றி அடுப்பேற்றி சற்று நேரம் காய்ந்த பிறகு சூரணத்தை கொஞ்சங் கொஞ்சமாய் தூவிக்கொண்டே கிளரிவரவும்யாவும் தீர்ந்தபிறகு பனங்கற் கண்டை தூவிக்கிளரவும் லேகியம் முதிராதபதமாய் கிளரி யிரக்கிவைத்துக் கொண்டு நெல்லிக்காய் வீதம் காலை ஒரு வேளையாக 20-40 நாள் கொள்ள நீர் கோர்வை குன்மம் சோகை, காமாலை நெஞ்செரிவு அக்கினிமந்தம் இவையாவும் ஆண்டவன் கிருபையால் தீரும்.

132-வது பிறிவு.

முயல் லேகியம்.

அரத்தை	பலம்	அரை	தூதுவாளை	பலம்	2
பரங்கிச்செக்கை	,,	அரை	கண்டங்கத்திரி	,,	1
தாளிசப்பத்திரி	,,	1	மிளகு	,,	1 அரை
லவுங்கப்பத்திரி	,,	அரை	பழுப்புச்சற்கரை	15	

சக்கரை தவிர மற்றதைஇடித்து சூரணித்து வைத்துக் கொண்டு முயல்கறி 10-பலங்கொண்டு வந்து நல்ல ஜலம் விட்டு, கழுகி பானைசட்டியிலிட்டு, நீர்சுண்டும்மட்டும் பிரட்டி, 10-பலம் நெய்யை அடுப்பேற்றி ஷை கரியையும் சூரணத்தை யுங் கொட்டிகிளரி சிவந்த பதமானவுடன் 5-பலந் தேன் விட்டு ரேகித்து இரக்கிவைத்துக்கொண்டு புன்னக்காய் விதம்

10-20-30-நாள் திட்டமாகத்தின்னுவரவும் பொடி, புகைபோ கம்லாகிரி வெத்திலேப்பாக்கு இவையாகாது க்ஷயம், யிளேயி ருமல், காசம் இதுகள் ஆண்டவன் கிருபையால் தீரும்.

---

133 வது பிரிவு.

தேத்தான் கொட்டை லேகியம்.

தேத்தாங்கொட்டை	பலம்	-3	ஏலம்	பலம்	அரை
கருஞ்சீரகம்	,,	அரை	சீரகம்	,,	அரை
திப்பிலி	,,	அரை	விரைநீக்கியகடுக்காய்		1
மிளகு	,,	அரை	ஜாதிக்கா விராகநிடை		1
சுக்கு	,,	அரை	லவுங்கம்	,,	1

இவைகளை தனித்தனியாய் நெய்யில் வருத்துப்பொடித்து தேன்பலம் 15 அடுப்பேற்றி சூரணத்தைகொட்டி கிளரீ வரு கையில் 10 புலம்சர்க்கரைபோட்டுக் கிண்டி பாகுபதமாயிரக்கி வைத்துக்கொண்டு கெச்சக்காய்வீதம் இருவேளையும் தின்று வரவும் வெள்ளைமேகம் யாவற்றும் ஆண்டவன் தீர்ப்பான் தீர்ந்து தாதுபுஷ்டியாம்.

134-வது பிரிவு.

வச்சிரகண்டி லேகியம்.

மதனகாமப்பூ	பலம்	1	அதிவிடையம்	பலம்	1
கிராம்பு	,,	1	அமினி	,,	1
ஏலம்	,,	1	சுக்கு	,,	1

காட்டாத்திப்பூ	,, 1	சப்சாவிரை	,, 1
கசகசா	,, 1	ஜாதிக்காய்	,, 1
வாலுழுவை	,, 1		

இவைகளையிடித்து வஸ்திரகாயம்செய்து வைத்துக்கொண்டு 10 பலம் பனைவெல்லம் பாகுபிடித்து அந்தபாகில் சூரணத்தை தூவிக்கிளரி முதிராத பதத்தில் இரக்கிவைத்துக்கொண்டு அந்திசந்தி இருவேளையும் கொட்டைப்பாக்கு வீதம் தின்றுவரசுர அனல மந்தக்காச்சல் குழந்தைகள் சோகை அதிசாரபேதி இரத்தபேதிகிராணி இவைகளை ஆண்டவன் கிருபையால் தீரும் போகத்தில் இன்பங்கொடுக்கும் இந்திரியங்கட்டும்.

மூலத்திற்கு லேகியம்.

நாயுருவியிலை ஒருகுத்து பரித்துவந்து அத்துடன் ஒருபிடிபுழுங்கலரிசிவைத்தரைத்து கொஞ்சம் ஜலம்விட்டு அரைத்து அடுப்பேற்றி யெரிக்கவும் அப்படி யெரிக்கையில் நாட்டுச்சக்கரை (5) பலம் போட்டு பசும்நெய் மூணுபலம் விட்டு கிளரிபாகு பதமாயிரக்கிவைத்துக்கொண்டு இருவேளையும் புன்னக்காய் வீதம் சாப்பிட்டு வரவும் மூலவேதனை ஆண்டவன் வுதவியால் தீரும் இச்சாபத்தியம்.

135-வது பிறிவு

எஸ். எம். மகாபூரணாதி லேகியம்.

அதிமதுரம்	பலம்	அரை	சடாமாஞ்சி	,,	அரை
சோம்பு	,,	அரை	கசகசா	,,	1-அரை
கோஷ்டம்	,,	அரை	விலாமிச்சன்வேர்	,,	அரை

பலம்				பலம்
சுக்கு	,, அரை	நன்னாரிவேர்	,,	அரை
ஆனைத்திப்பிலி	,, அரை	வெட்டிவேர்	,,	அரை
வால்மிளகு	,, அரை	நீர்முள்ளிவிரை	,,	1
சீரகம்	,, 1	அத்திவிரை	,,	1
கடுக்காய்	,, 1	ஆலம்விழுது	,,	1
தனியா	,, 1	அரசன்விரை	,,	1
தாளிசப்பத்திரி	,, அரை	பூனைக்காலிவிரை	,,	1
ஜாபத்திரி	,, அரை	வெள்ளரிவிரை	,,	1
ஜாதிக்காய்	,, 1	சப்சாவிரை	,,	1
லவுங்கம்	,, அரை	தால்மக்கானி	,,	1
லவுங்கப்பட்டை	,, அரை	சபேதுமுசலி	,,	3
சின்னராஸ்டம்	,, அரை	வாதுமைப்பருப்பு	,,	3
பருலவுங்கப்பட்டை	அரை	சாரப்பருப்பு	,,	3
நிலப்பனங்கிழங்கு	1	முந்திரிப்பருப்பு	,,	5

பருப்புதினுசுகள் தவிர மற்றயாவும் வெய்யலில் உலர்த்தி யிடித்து வஸ்திரகாயம்செய்து வைத்துக்கொண்டு இரண்டுபலம் கெஞ்சா கொண்டுவந்து மெல்லிய சீலையில் முடித்து இரண்டு படி பாலில் போட்டு காச்சிபுரைக்குத்திமறுநாள்காலையில் கடைந்து வெண்ணை யெடுத்து அந்தவெண்ணையை அடிச்சட்டியிலிட்டு இருக்கி அதில் ஷெ சூரணத்தை கொஞ்சங் கொஞ்சமாய் தூவிச்கிளரி வரவும் அப்படி கிளரயில் கற்கண்டு 10 பலம்போட்டுகிளரவும் பிறகு திராட்சிபழம் பலம் 5 போடவும் அதன்பி

ற்கு ஷி பருப்புவகைகளைப்பேர்ட்டு சேர்க்கயில்தேன் போது மான வரைக்கும் கொஞ்சங் கொஞ்சமாய்விட்டு கிண்டிபாகுப் தமாயும், லேகியம் முதிராமலும், தகுமானபத்தில்வந்தவுடன் யிரக்கி பீங்கான் கோப்பையில வைத்துககொண்டு 20 அல்லது ஒரு மண்டலம் அந்திசந்தி தங்கரேக்கு கலந்து தின்றுவரவும் மேகத்தாற்சார்ந்த வியாதிகளையும் கண்டிக்கும் புணர்ச்சியில் வெகுவலிவு கொடுக்கும் லேசில்கட்டுவிடாது ஆனால் லேகியம் தின்னும்போது புணரப்படாது மற்றலாகிரி முதலான வேறு லாகிரியருந்தக்கூடாது.

ஆனதால் யிந்தலேகியம் ரொம்பவும் மேன்மைபெற்றது யாவரும் இந்தலேகியத்தை உபயோகிக்கலாம் கண்டபடியான லேகியத்தை தின்றுவிட்டு கை சேதமடைய வேண்டாம் இந்த லேகியம் உபயோகித்தால் இதின் குணத்தை அரிவீர்கள் ஆகை யால் கைக் கண்டபலன் 80 வெள்ளிரேக்கு சேர்த்து 40-நாள் சாப்பிடும் டப்பி 1-க்கு கிரையம் ரூ. 3 0 0

மாதிரிக்காக 40 வெள்ளிரேக்கு சேர்த்து 20-நாள் சாப்பிடும் டப்பி 1-க்கு ரூ. 1 12 0.

விலாசம். மானேஜர்:

எஸ். எம். முஸ்தபா, லெப்பை

நெ 16. சூரப்பமுதலி தெருவு,

திருவல்லிக்கேணி, மதிராஸ்.

136-வது பிரிவு.

போசன சஞ்சீவி லேகியம்.

இந்துப்பு	பலம்	1	பொரிந்த பொரிகாரம்	1
பொட்டிலுப்பு		1	பொரித்தவெண்காரம்	1
கல்லுப்பு		1	சுக்கு	1
வளையலுப்பு		1	திப்பிலி	1
கரியுப்பு		1	மிளகு	1
சோத்துப்பு		1	ஓமம்	1
கிராம்பு		1	திப்பிலிமூலம்	1
சோம்பு		1	கோஷ்டம்	1
லவுங்கப்பு		1	காயம்	1
செண்பகப்பு		1	உலமன்	1
கிறுநாகப்பு		1	புட்டிவெல்லம்	10
கடுக்காப்பு		1	வெள்ளுள்ளி	5

வெல்லமும் உள்ளியும்தவிர மற்றவைபிடித்து சூரணித்து வைத்துக்கொண்டு வெல்லம் நீர்க்கப்பாகுசெய்து உள்ளியைப் போட்டுரேகித்து ஷெ சூரணத்தை சிறுகத்தூவிக்கிண்டி பாகு பதமும்லேகியபக்தனமுமாகக் கிளாவும் பாகுபோதாவிட்டால் தேன் சிறுகவிட்டுக்கிண்டி பிரக்கிக்கொள்ளவும் 20 நாள்சுண்டக்காய் விதம்கொள்ள சோகைவயிற்றிற்கட்டி மூலம்குன்மம் மூலக்கிராணி யிவையாவும் தீரும் அஜீர்ணமந்தப்-வாய்வு சூதகவாய்வுகளும் தீரும் இச்சாபத்தியம்-

137-வது பிரிவு.

சீதசுரத்திற்கு.

மிளகு 2 விராகனிடை பொடித்து தயிர்விட்டு பிசைந்து பிறகு கொஞ்சம் நெய்விட்டு மத்தித்து மூன்றுவேளையாக பாகித்துத் தின்னவும் உடனே வெண்ணீர் சாப்பிடவும்.

விரைவாதத்திற்கு குடிநீர்.

கடுக்காய்	பலம்	1
கழற்சிப்பருப்பு	”	1
சுக்கு	”	1
முடக்கொத்தான்	”	1

இவை நாலும் உரலிலிட்டு பஞ்சுபோல் யிடித்து படி ஜெலம்வைத்து கால்படியாக யிரக்கி இருவேளை பாகித்து சாபிடவும் இப்படி 3 நாள் ஆறுவேளை கொள்ளவும், ஆண்டவன் கிருபையால் தீரும்.

---

138 வது பிரிவு.

சூசிகவாய்விற்கு.

பருத்திகொட்டை	பலம்	அரை
கையாண்பிலை	”	அரை
ஏலம்	”	அரை
கௌஷ்பிலை	”	அரை
சுக்கு	”	அரை
திப்பிலி	”	அரை

மிளகு	”	அரை
நவாச்சாரம்	”	அரை

இவையாவும் பிடித்து வஸ்திரகாயம் செய்து இஞ்சிசூரணத்தில் நாலுக்கொருபங்கு ஊமத்தவிதை சூரணம் கூட்டி கலந்து வைத்துக்கொண்டு பனைவெல்லத்தில் கச்சக்காயளவு சூரணத்தை பிசைந்து சாப்பிடவும் (5) நாள் கொள்ளவும் இச்சாபத்தியம். ஆண்டவன் கிருபையால் தீரும்.

நளிர்சுளிருக்கு.

பசும்மோரில் ஊறினமிளகு அரைபலம் யெடுத்து துளசியிலை ஒருபிடி கற்பூரம்விராகன் (1) இதை வென்னீர் விட்டரைத்து இருவேளையாக பாகித்து கொடுக்கவும இப்படி (2-3 நாள் கொடுக்கவும் இச்சாபத்தியம்.

மேகசுரத்திற்கு.

நிலக்குமிழ்வேர் சுக்கு பனைவெல்லம் இம்மூன்றும் சமன் போட்டு கியாழம்வைத்து யெட்டொன்றாக்க இருவேளையும் (4 5) நாள் கொடுக்கவும்.

இருமல் (6) க்கும்.

கண்டங்கத்திரிவித்து	பலம்	அரை
தேத்தான்வித்து	”	அரை
துப்ராவ்ஷ்டகம்	”	அரை
திப்பிலி	”	அரை

இவை நான்கும் சூரணித்து இரண்டரை பலம் தேன் அடுப்பேற்றி இச்சூரணத்தைக் கொட்டிக்கிளரியிரக்கவும்தேன்

போதாவிட்டால் துளிதுளியாய் விட்டுக் கிளரவும் கொட்டைப் பாக்குவிதமாய் இருவேளையும் (10) நாள் கொள்ளவும்.

நேத்திரவாய்விற்கு.

வெள்ளுள்ளி வசம்பு குப்பைமேனியிலை இவைகளை ரவியி லிட்டு யிடித்து சாறுபிழிந்து உச்சியில் தேய்த்து சிய்க்காய் கொதிப்பித்தெடுத்து தலைக்குவார்க்கவும் இப்படி 3 நாட்கொரு தருதி [5-6] விசைவார்க்கவும் உத்தமமாம்.

கண்புகைச்சலுக்கு.

புளியாரையிலை வெங்காயம் சீரகம் இதையிடித்து சாறு பிழிந்து கண்ணிற் குத்திவரவும் தீரும்.

நமைசொரிக்கு.

பூவரசம்பட்டை 1 பலம்யெடுத்து நெகிழஅறைத்து அரிக் கால் படி நீரா கரைத்து கொடுக்கவும் இப்படி 3 நாள்கொள்ள சொரிநமை யிவைதீரும் ஆனல் 2-3 விசை பேதியாகும்.

பேய்சொரிக்கு.

இந்துப்பு பொடித்து நெய்விட்டரைத்து தலைமுதல் பாத மட்டில் பூசிவைத்து மருநாள்காலை சிக்காய் கொதிப்பித்து அல் லது இலுப்பைகட்டி சுட்டரைத்து தலைமுழ்கச் செய்யவும் தீரும்.

கால்வெடிப்புக்கு.

ஆலம்பால்	பலம்-கால்
மெழுகு	,, கால்
பஞ்சள்	,, கால்

அரக்கு	,,	கால்
புராவெச்சம்	,,	கால்
கடல்நுரை	,,	கால்

இவையாவும் காடிவிட்டரைத்து பீங்கான் கோப்பையில் வைத்துக்கொண்டு 5 தினம் பூசிவர வெடிப்புமாறும்.

காலிற்புண்ணுக்கு.

வங்காளபச்சை	பணவிடை	-2
ஆவாரம்பட்டை	,,	2
பற்பாடகம்	,,	2
யீருள்ளி	,,	2
சூதம்	,,	2

இவையாவும் கல்வத்திலிட்டு மைபோலரைத்து வெண்ணையிற் குழப்பி சீலையில் தடவி காலிற் காணும் புண்களின் மேற் போட்டுவர ஆறிவிடும்.

ஒட்டின்புண்ணுக்கு.

சேங்கொட்டை	விராகனிடை	-1
மயில்துத்தம்	,,	1
வசம்பு	,,	1

இவைகளை யிடித்துப் பொடித்து நல்லெண்ணையிர்குழற்பி புண்களின் பேற்றடவிவரத்தீரும்

வெள்ளைக்கொருக்கு அறையாப்புகட்டிக்கு.

சரக்கொன்றைபட்டை சீரகம் இரண்டும் சமன்கொண்டு அறைத்து புன்னைக்காய்விதம் தின்று ஆழாக்கு மோர்சாப்பிடவும் கடும்பத்தியம்

வெள்ளைக்கு.

மிளகும் வெள்ளருகும் சமன்கொண்டரைத்து புளிபங்கொண்டை பிரமாணம் இருவேளையும் 5-10 நாள் தின்னவும் வருத்தஉப்பு சுட்டபுளிகூட்டவும்.

மஞ்சள் வெள்ளைக்கு.

முத்தின பிரண்டையை பிடித்து சார் பிழிந்து அசுற்கு சமன் நல்லெண்ணெவிட்டு கலந்து வீசும்படி பிரமாணம் சாப்பிடவும் இப்படி மூணுநாள் கொள்ளவும் கடும்பத்தியம்.

காமாலைக்கு,

எருமைசாணியின்பால் எருமைத்தயிர் இரண்டுங்கலந்து சீரகம் வெங்காயம் சமன்சேர்த்து ஷை தயிராலரைத்து எருமைப்பாலில் கலக்கி சாப்பிடவும்.

நரம்புசிலந்திக்கு.

எருக்கன்மொக்கு 60 யெடுத்துவந்து பெருங்காயம் சமனிடைகூட்டி அரைத்து5-7 நாள்கொள்ள நரம்புசிலந்திமாறும்.

காதுநோய்க்கு

சுக்கு	உளுந்திடை	1
திப்பிலி		1
கோஷ்டம்	,,	1
சயிந்தலவணம்	,,	1
முத்தக்காசு	,,	1

விசர்ப்பு	,,	1
உள்ளி	,,	1
சுரூர்காய்	,,	1
(9) வெருக்கிலைச்சார்	,,	1

நல்லெண்ணை ஒருபலம் யெடுத்து மேல் சார்விட்டு பற்ற பாருந்துசள்யாவும் பிடித்து வஸ்திரகாயம் செய்துபோட்டு காய்ச்சியிரக்கி காதில் [2-3] துளிவிட எவ்விதகாது நோயும் தீரும் [2-3 வேளைவிடவும்.

பெரும்பாட்டிற்கு.

தென்னம்பாளையின் பூவெடுத்து அதில் பசும்பால் விட்டிடித்துபிழிந்து [அரிக்கால்] படியாக [3] நாள் குடிக்கவும் பெரும்பாடு தீரும்,

பழைய பெரும்பாட்டுக்கு

கௌதும்பையும் குருவசியும் சமநிடை கொண்டிடித்து மோவரக்கி பன்னவெல்லாம போட்டு பிசைந்துபுன்னைக்காய்விதம் [3] நாள் ஆறுவேளை தின்னவும் தீரும்.

அதிசுவாசத்திற்கு

நாரத்தம்பழ மேற்றோல் நீக்கி நடும்பழத்தின் சதையை யெடுத்துப்பிழிந்து அந்த சாற்றில் திப்பிலியைப் பொடித்துப் போட்டு மத்தித்து தின்னவும் (5-7-10) நாள் தின்னசுவாசா சுசாசயிருமல் சுவஸ்தமாம்.

கால்வெடிப்புக்கு.

சுண்ணாம்புகல் ஒருபடி கொண்டுவந்து பாண்டத்திலிட்டு பசும்மோர் நல்லெண்ணை வகைக்கு அரைப்படிவார்த்து அடுப்பேற்றி கொதிக்கவைத்திரக்கி காலுக்கு வேதுபிடிக்கவும் இப்

படி இருவேளையும்மூன்றுநாள் ஆறுவேளையாக வேதுபிடிக்கையில் கால்வெடிப்புமாறும்.

கிராம்பெரும்பாடுக்கு.

நாவல் மரத்தின்றோல் ஒதியன்மரத்தின்றோல் வகைக்கு ஒரு பிடி கொண்டு பந்து டஞ்சுபோல் நருக்கி அறைப்படி ஜலத்திலிட்டு அரிக்கால்படியாகக்காச்சி வடித்து சாப்பிடவும் இப்படி 3 நாள் 6 வேளை கொள்ளவும் சாத்தியாம்.

பெரும்பாட்டுக்கு வேறு.

நாவல்பட்டை ஒருபிடி யெருமைமோரில் போட்டு விடித்து பிழிந்தநீரில் அகில்பட்டைத்தூள் ஐந்துவராகனிடைகலந்து மூனுநாள் ஆறுவேளை சாப்பிடவும் தீரும்.

தாதுபுஷ்டிக்கு.

பேரிச்சங்காய்		40
குங்கிலியம்	பலம் -	1
கிராம்பு		1
ஜாதிக்காய்	,,	1
ஜாபத்திரி	,,	1

இவைகளைபிடித்து தூளாக்கி வைத்துக்கொண்டு ஷை பேரீச்சங்காயை கீரி விதையெடுத்துவிட்டு யிடித்துவைத்திருதூளை வொவ்வொருகாயிலும் புகட்டி நூலால்கட்டி பசும் நெய் அறைப்படி அடுப்பேத்தி ஷை காய்களைப்போட்டு வேகவைத்து யிரக்கும்போது தேன் கால்படி ஊற்றிக் குலுக்கி யிறக்கிவைத்துக் கொண்டு தினம் ஒருகாய் வீதம் (40) நாள் தின்னவும் இந்த நாற்பதுநாளும் பெண்பக்கம் கூடாது லாகிரியா

காது மீன் கருவாடு சேர்ப்படாதுபுகைசுருட்டு தொடப் படாது.

வீரியவிர்த்திக்கு.

முருங்கைப்பூ	விராகனிடை	1
சாபத்திரி	,,	1
காயம்	,,	1
அபின்	,,	1
சுத்திந்து பொரித்த வெண்காரம்	,,	1

இவைகளை கல்வத்திலிட்டு தேன் துளிதுளியாய் விட்டரைத்து (14) உருண்டையாக செய்து தினம் இருவேளையாக (7) நாள் கொள்ளவும் இரவில் புளிப்பாகாது பால்விட்டு அன்னமருந்தவும் புகை புளி போகம் லாகிரி கவிச்சு இதுகளாகாது தித்திப்புபண்டங்கள் யேராளமாய்த் தின்னவும் எட்டாவது நாள் புணரவும்.

புணர்ச்சியில் பிரியமில்லாதவர்க்கு.

உடைக்காத பச்சக்கடலையை நல்லெண்ணெயில் நன்றாய் ஊறவைத்து 10 20 30 கடலை வீதம் அந்திநேரத்திற் தின்று வரவும் இப்படி 10 20 30 நாள் தின்னவும்.

வேறுவகை.

பிரகமும் தேத்தான் கொட்டையும் சிறுகீரை வேரும் சமனிடை கொண்டிடித்து இளநீரில் ஊறவைத்தரைத்து கெச்சக்காய் வீதம் தின்னவும் இப்படி பதனு 20 நாள் இருவேளையுங் கொள்ள வெள்ளை முதலானதும் நீங்கும் சூடு அகலும் புணர்ச்சிக்குமகா ஆவல்கொடுக்கும்.

வெள்ளைபிரமியத்திற்கு.

சங்குப்பி யிலைரசம் அரையாழாக்கு அதில் பசுந்தயிரின் ஏடுபோட்டுப் பிசைந்து காலையில் மூன்று நாள்தின்று கடும் பத்திய மிருக்கவும்.

கீழ்பிரமியத்திற் .

அத்திப்பட்டை ஆவாரப்பட்டை பூர்சம்பட்டை நாவல் பட்டை கொன்றைபட்டைப்பட்டை இவை சமநிடைகொண்டு வந் திடித்து சூரணித்து தேனில் குழைத்துத் தின்னவும் இரு வேளையும் [5பத்து] நாள் கொள்ள தீரும்.

சகலபிரமியத்திற்கும்.

ஷை மருந்துகள் சூரணமாவது அல்லது சார்களாவது ப் பிழிந்து சமநிடை விளக்கெண்ணெய்விட்டு பரிங்கிச் செக்கை தூள் ஒரு பலம்போட்டுக் கலந்து காச்சிவடித்து [7-9] நாள் வீதமாக சாப்பிடவும் இச்சாபத்தியம்.

சிறுநீரில்பிரத்தங்கண்டால்.

நெருஞ்சிவிரை ஒரு பிடி யெடுத்து செவ்விளநீரில் அரைத்து கரைத்துக்குடிக்கவும் இருவேளையும் [5-பத்து] நாள் கொள்ளவும்.

வெகுமூத்திரத்திற்கு.

வெள்ளாட்டிரச்சியைக் கொண்டுவந்து ஷை நோயாளி யின் மூத்திரத்தில் ஒரு ஜாமம் ஊரவைத்து பின்பெடுத்து சமூ கி காரசாரமிட்டு கறிசமைத் துண்ணவும் இப்படி விடாமற் புத்து பதினைந்து நாள் தின்னவும்.

நீரொழுக்கித்திற்கு

எள்ளுப்புண்ணுக்கு கோவையிலே சரியிடை கூட்டி அறை காரமிட்டு புரட்டி மூனுநாள் கொடுக்கவும் சாந்தியாகும்

படுக்கையில் சிறுநீரிரங்கலுக்கு.

படுக்குமிடத்தில் அரிசி தெளித்து அதன்மேல் பாய்போட்டுபடுக்க சிறுநீர்விட்டால் அன்னீரிலூறிய அரிசியை காலையி லெடுத்து அறைத்து அடைதட்டிச் சுட்டுத்திண்ணவும் இப்படி [3-5] நாள் கொடுக்கவும்.

இரத்த மூலத்திற்க்கு.

யெருக்கன்கிழங்கு	பலம்.	1
புழுங்கலரிசி	,,	1
உளுந்து	,,	அரை

இம்மூன்றும் அறைத்துப் புளிக்கவைத்து தோசைசுட்டு இருவேளையும் கொடுக்கவும் [3-5] நாள் கொள்ளவும்.

வெட்டைக்கு.

தேங்காய் ஒன்று கொண்டுவந்து வோட்டை நீக்கியுங்கள் வேர் ஒருபலம்போட்டு உரலிலிட்டு யிடித்து பால்பிழிந்து காலமை அறையாழாக்கு வீதம் [3] நாள் கொடுக்கவும்.

பக்கசூலைக்கு.

கள்ளிக்கொழுந்தின்சார்	விராகநிடை	1
பூண்டுதயிலம்	,,	1
காயம்	,,	1

இம்மூன்றுங் குழைப்பிக்கொடுக்கவும் இப்படி [3 நாள் கொடுக்கவும் இச்சாபத்தியம்.

மேக சூலை,

பச்சைவெள்ளருகு	பலம்	2
பழம்புழுங்கலரிசி	,,	1

இவையிரண்டும் அரைத்து அடைசுட்டுவெந்நீர் ஊத்தி கொண்டு ஒரு அடை தின்னவும் இதை இரட்டையாக இரு வேளையும் குளிக்கும்போதெல்லாம் தின்னவும் இப்படி (20] 40 நாள் தின்று வரவும் தீரும்.

இரத்தக்கழிச்சலுக்கு.

கலைமான்கொம்பை மெல்லியதூளாகசீவி [1] பணவிடை யெடுத்து பசும்பால் அழாக்கில் போட்டு காச்சிஎலுமிச்சம்பழம் ஒருபத்தைபிழிந்து சாப்பிடவும் இப்படி [3] நள் கொள்ளவும் இரத்தக்கழிச்சல் தீரும்.

அஜீரணத்திற்கு.

முருங்கைப்பட்டை	பலம்	அரை
வெள்ளுள்ளி	,,	அரை
சுக்கு	,,	அரை
ஓமம்	,,	அரை
கற்றாழைசோறு	,,	அரை

ஒருபடி நீர் சட்டியிலூற்றி அடி மருந்துகளை யிடித்துப் போட்டு ஆழாக்கு அளவாக சுண்டக்காச்சி கடுகு உளுந்து வகைக்கு ஒருவிராகநிடை தூள்போட்டு கூழுபோல் கிளரிசாப் பிடவும் அஜீரணம் மலபந்தம் இவைதீரும்.

இருவாய்கட்டுக்கு,

தருஞ்சிப்பட்டையை யிடித்துக்காயவைத்து சூரணித்து வென்னீரிற் பிசைந்து நாழிஜெலத்திற் கரைத்து ஆழாக்குகிசாயமாகக் காச்சி யிருவேளையும் குடிக்கவும்.

இரத்தசீதம் விழ்தலுக்கு.

அழிஞ்சிவேர்பட்டையை காயவைத்திடித்து அதைவென்னீரிலரைத்துக் குடிக்கவும் சீதம் நீங்கும்.

கெணக்கழிச்சலுக்கு.

மாதளம்பிஞ்சு தென்னம்பிஞ்சு மாயிலைக்கொழுந்து இம்மூன்றும் சமயிடைகொண்டு அறைத்து புன்னக்காய் வீதம் கொடுக்கவும் உடனே காரமில்லாத சாதம் ஊட்டவும் இப்படி இருவேளையும் செய்யகெணக்கழிச்சல் நீங்கும்.

சீதபேதிக்கு.

கலியாண முருங்கன்பட்டையை அறைத்து கன்னிடையன் தயிரிற் குழப்பி மூன்றுவேளையும் தின்னவும் இப்படி (3) நாள் ஒன்பதுவேளை கொள்ளவும்.

தேககக்ழிச்சலுக்கு.

பேதாறு (கால்பலம்) கொண்டுவந்து ஜெலத்தில் போட்டு ஊரியபின் அதை சிலுப்பி நுரையேறியபின் தொட்டால் பிசினிபோலாகும் கற்கண்டுபொடி அரை பலம் கூட்டி குச்சியினல் நன்றாய்கிளரி யெல்லியசல்லாவில் வடிகட்டி சாப்பிடவும் இப்படி ஒருமண்டலம் சாப்பிடவும்.

வெள்ளோக்காளத்திற்கு.

சக்கரை	களஞ்சி	ட
ஏலம்	,,	–
மதுரம்	,,	ப
திப்பிலி	,,	ப
இஞ்சி	,,	

இவை பொடித்து பசுப்பாலில்கலந்து சாப்பிடவும் தலைச் சுற்று வெள்ளோக்காளம் மயக்கம் பித்தம் இவை தீரும்.

அதிசாரத்திற்கு.

விளாம்பிசினியை பொடித்து வேண்டியமட்டில் யெடுத்து சரியிடை நெல்பொரி பொரித்துப்போட்டு தேனில் குழப்பித் தின்னவும் இருவேளையும் கொள்ளவும்,

சைவர்வாதத்திற்கு.

பச்சைதுவரை சமூலம்கொண்டுவந்து பிடித்து சார்பிழிந்து ஷை செடியின்வேர் ஒருபிடி யெடுத்து சாற்றுலரைத்து குடித்துவர 10 நாளில் வாதம் தீரும் இச்சாபத்தியம்.

விப்புருதிக்கு.

சித்தாமணக்கப் பருப்பு மஞ்சள் யீருள்ளி மூன்றும் சமநிடை கொண்டரைத்து எருக்கன் பாலில் குழைப்பித் திரட்டி உமிக்கும்பியில் புதைத்து வெந்தபிரகெடுத்து, உண்ண விப்புரி தீரும்.

மேகசெற்பம்

கற்றாழைமடல் சோற்றையெடுத்து நல்லஜெலத்தில் யேழுவிசை கழுவி புன்னைக்காயளவெடுத்து பள்ளங்கோலி பணவிடை கல்னூர் பஸ்பம் வைத்துத் தின்னவும் இப்படி 7 நாள் காலையில் தின்னவும் மேகச்சூடுதணியும்.

மேகரோகத்திற்கு.

தேங்காய்ப் பாலில் சிறுகுறிஞ்சான் வேரையரைத்து புன்னைக்காய்விதம் 7 பத்து நாள் தின்னவும் மேகசாந்தியாம்.

கபாலை ரோகத்திற்கு.

விரைநீக்கிய கடுக்காய்ப் பொடிசெய்து வஸ்திரகாயமிட்டெடுத்து கையான்சாற்றில் மத்தித்து கால்பலம்விதமாய் நாற்பதுநாள் தின்னவும்.

வயித்தியகைமுறைகள்.

சூரணவகுப்பு.

நித்திரையற்ற வாய்விற்கு.

சூரணம்.

ஏலம்	விராகனிடை	
செஞ்சந்தனம்	,,	1
சந்தனத்தூள்	,,	1
தேத்தான் கொட்டை	,,	1

இவைகளின் சூரணம் சமயிடைக்கு சக்கரை சமயிடை கூட்டி பூசினிக்காய் சார் ஆழாக்குப் பிழிந்தெடுத்து மேற்படி சூரணமும் 8 விராகனிடை கூட்டிக்கலக்கி சாப்பிடவும் 3 ப 7 9 நாள் கொள்ள பித்தவாய்வு நீரேறிவுவாய்வு யாவும் தீரும் நித்திரை பிடிக்கும்.

சீரகம்	பலம்	1
நெல்லி	,,	1
முள்ளி	,,	1
சுக்கு	,,	1

இவைகள் வகைக்கு சமன்கொண்டுவந்து சூரணித்து அவ்விடைக்கு சமன் சீக்கரைகூட்டி வேளைக்கு காலணாயிடையாக யெடுத்து தேன்விட்டு மத்தித்து சாப்பிடவும் இப்படி இருவேளையும் 10 தினமுண்ண பித்தமயக்கம் தீரும் இச்சாபத்தியம்.

ஐபேதிச்சூரணம்.

சுக்கு	பலம்	அரை
திப்பிலி	,,	,,
மிளகு	,,	,,
கடுக்காய்	,,	,,
தான்றிக்காய்	,,	,,
நெல்லிக்காய்	,,	,,
லவுங்கம்	,,	,,
சிறுநாகப்பு	,,	,,

இவைகளை யிடித்துப்பொடித்து சூரணித்து சமநிடைசக்கரைக்கூட்டி மூனேமுக்கால் விராநிடையெடுத்து தேனில் குழைத்து காலையில் சாப்பிடவும் 2-3-விசை பேதியாகும் பித்தவாய்வு தீரும் 2-3-நாட் கொள்ளவும்.

நிலாவரைச்சூரணம்.

நிலாவிரை	பலம்	4
ஏலம்	,,	1
கடுக்காய்பூ	,,	1

சுக்கு	,,	1
திப்பிலி	,,	1
மிளகு	,,	1
செல்லுப்பருப்பு	,,	1

இவைகளை யிடித்து சூரணம் செய்து திருகடி பிரமாணம் வெந்நீரிற்போட்டு சாப்பிடவும் 3-4 விசை பேதியாகும் வாய்வுகலையும் வாதபித்தநீர்கள் சமரசப்படும்.

சுகபேதிசூரணம்.

பசும்பாலில் வேகவைத்தெடுத்த சிவதைவேர் பலம் ரெண்டரை இதையிடித்து சூரணித்து சக்கரைரெண்டரைபலம் போட்டுசீசாவில் வைத்துக்கொண்டு வேருகடி தூனெடுத்து வெந்நீரிற்போட்டருந்த சுகமாய் பேதியாம் ஆயாசமிராது,

இரத்தபேதிக்கு சூரணம்

கடுக்காப்பு	விராகனிடை	1
லவுங்கப்பட்டை	,,	1
கிராம்பு	,,	1

இவைகளை சிவக்கவறுத்து பொடித்து சூரணித்து ஒன்றாய்க்கலந்து 6-பங்காகப்பிரித்து பசும் வெண்ணெயில குழைத்துசாப்பிடவும் சுவஸ்தமாம் காரமில்லாத பொசிப்பெடுக்கவும்,

தீபனசூரணம்.

சுக்கு	பலம்	அரை	நவாச்சாரம்	பலம்	அரை
திப்பிலி	,,	,,	சத்திசாரம்	,,	,,
மிளகு	,,	,,	பூநீரு	,,	,,
சிறுமீதக்கு	,,	,,	பெருங்காயம்	,,	,,

ஓமம்	,,	,,	இந்துப்பு	,,	,,
சித்திரமூலவேர்பட்டை	,,		பஞ்சலவணம்	,,	,,

இவையாவும்பிடித்துசூரணித்துசீசாவில் வைத்துக்கொண்டு திருகடிபிரமாணம் பெடுத்து வென்னீரில்போட்டுக் குடிக்க மந்தம் அஜீரனம் இவையாவும் போக்கும் பசிதீபன மூண்டாம்.

இங்குளர்தீச்சுரணம்.

பெருங்காயம்	விராகநிடை	1	ஜாதிக்கா	விராகநிடை	5
வசம்பு	,,	2	கடுக்காய்	,,	6
லவங்கம்	,,	3	தாமரைசமூலம்	,,	7
சுக்கு	,,	4	கோஷ்டம	,,	8

இவையாவும்கூட்டி சூரணித்து வேளைக்கி 3 விராகநிடையாகக்கொண்டுவென்னீரில் குழப்பி சாப்பிடவும் குன்மசாந்தியாம் சில வாய்வுகளை கண்டிக்கும்.

க்ஷயசுரணம்.

இலைக்கல்லிவேரின் மேற்றோலைக்கிழித்தெடுத்து வெயிலுலர்த்தி பிடித்து சூரணித்து வைத்துக்கொண்டு விராகநிடை சூரணத்தை நெய்யில் குழைத்து சாப்பிடவும் 3-5-7-6-11 நாள் வீதமாயுண்ண க்ஷயவலிநீங்கும் மற்றயிருமல் யாவும் சாந்தியாம்,

இருமற்சூரணம்.

ஆடாதோடை	பலம்	ரெண்டரை
கடுக்காய்	,,	,,
கண்டங்கத்திரி	,,	,,

தூளசி	,,	,,
அதிபதுரம்	,,	,,

இவைகளை யிடித்துப்பொடித்து சூரணித்து வஸ்திரகாயம் செய்து வைத்துக்கொண்டு திருகடிபிரமாணம் யெடுத்து நெய்யில்குழைத்து சாப்பிடவும் இப்படி இருமண்டலம் கொள்ள இருமல்யீளை கபம் கோழை இவைகள் சாந்தியாம்,

தனிமூலிச்சூரணம்.

நூறுவருடத்திய வேப்பமரத்தின் துளிரும் அம்மரத்தினது வேரின் மேற்பட்டையும் சமமாய் நிறுத்தெடுத்து உலர்த்தி யிடித்து வஸ்திரகாயம்செய்து சமநிடை சக்கரைகலந்து சீசாவில் வைத்துக்கொண்டு வேளைக்கு காலணாயிடையாக இருவேளையும் 40 நாள்கொள்ளவும் சூதக்உடையும் தூலதேகம் கரையும் மேகங்களைக் கண்டிக்கும் வாய்வுயென்பவ, யெல்லாம் [illegible]கைட கடந்தோடும் தினாமாறும் கண்ணொளிவுண்டாம் காயசித்திக்கு சமானமென அனேக பண்டிதரும் சொல்லுவார் இச்சா பத்தியம்.

பஞ்சாக்கினி சூரணம்.

மருள்கிழங்கு	பலம்	
புளிக்கருணைகிழங்கு	,,	1
காட்டுக்கருணைக்கிழங்கு	,,	1
பிரண்டைக்கிழங்கு	,,	1
சித்திரமூலவேர்பட்டை	,,	1
பரங்கிச்செக்கை	,,	1

இவையாவும் வெய்யலிலுலர்த்தியிடித்து சூரணித்துவஸ்திரகாயமசெய்து சீசாவில் வைத்துக்கொண்டு தினம் காலையில்

4-விராகனிடை சூரணம்யெடுத்து பசும்மோரு ஆழாக்கில்கலந்து குடிக்கவும இப்படி 10-20 நாள்கொள்ள வல்லீக்கட்டி காச்சல் கட்டி நீர்சோவை குன்மம் இவைபோம் இச்சாபத்தியம்.

சூலைச்சூரணம்.

சித்திரமூலம்	பலம்		ஏலம்	பலம்	அரை
ஓமம்	,,	அரை	சுக்கு	,,	1
சிறுதேக்கு	,,	,,	திப்பிலி	,,	1
இந்துப்பு	,,	,,	மிளகு	,,	1
லவங்கம்	,,	,,	ஏவாச்சாரம்	,,	1
காயம்	,,	,,			

இவைகளிடித்து பொடித்து வஸ்திரகாயம்செய்து சீசாவில் வைத்துக்கொண்டு மூவிரல் சூரணம் யெடுத்து வெந்நீரிற்போட்டுகலக்கி சாப்பிடவும் சூலைகட்டு தீரும் தீபனமுண்டாகும வாய்வு அண்டாது தேகம் லேசாயிருக்கும் இச்சாபத்தியம்.

வால்மிளகு சூரணம்.

வால்மிளகு	விராகனிடை	5
சீரகம்	,,	5
கொத்தமல்லி	,,	5
கற்கண்டுதூள்	,,	5

இவையிடித்து சூரணித்து கற்கண்டு தூளுங்கூட்டிவெண்ணையில் 4 விராகனிடை சூரணமிட்டு குழப்பி சாப்பிடவும் இப்படி அந்திசந்தி 10-நாள்கொள்ள வெள்ளை வீழ்தலும் தீரும் சூடு அனல் மேககாங்கை நீர்சுருக்குதீரும் இச்சாபத்தியம்.

மதனகாமேசூரணம்.

அதிமதுரம்	பலம்	1
அமுக்கனைங்கிழங்கு	,,	1
பூசுணையின்வேர்	,,	1
நரிபயற்றம்வேர்	,,	1
உளுந்துசெடியின்வேர்	,,	1
முந்திரிவேர்	,,	1
நிலப்பனங்கிழங்கு	,,	1
நெல்லிவித்து	,,	1
இலவன்பிசின்	,,	3
முருங்கைப்பிசின்	,,	3

இவையாவும் பிடித்து சூரணித்து அவ்விடைக்கு அறை யினிசீனிகூட்டி கலந்து சீசாவில்வைத்துக்கொண்டு 2-விருக நிடை சூரணமெடுத்து காச்சியதேனிற் குழைத்துத்தின்னவும் தின்னவுடன் ஆழாக்குபால் சாப்பிடவும் மாலை 6-மணிவேளை யாக 20-நாள் தின்னவும் புகை புளி போகம் லாகிரிகூடாது 21-வது நாள் போகிக்கவும் மிகுந்த இன்பத்தோடு லேசில்கட்டு விடாது தாதுபுஷ்டியாம்.

மாங்கொட்டை சூரணம்.

மாங்கொட்டை	பலம்	1
வெந்தியம்	,,	1
கருவேப்பிலை	,,	1
மாதுளம்பழத்தோல்	,,	1
சுண்டக்காய்வற்றல்	,,	1

இவையிடித்து சூரணித்துவைத்துக்கொண்டு பெருமைத் தயிரில் அரை பலம் சூரணமிட்டுக்கலக்கி சாப்பிட சீதபேதி நீங் கும் இருவேளையும் 2-3-நாள்கொள்ளவும்காரமாகாது.

பித்தத்திற்கு சூரணம்.

சீரகம்	கழஞ்சு	3
அதிமதுரம்	,,	3
இஞ்சி உலர்த்தியது	,,	2
திப்பிலி	,,	2
ஏலம்	,,	1

இவைகளையிடித்து சூரணித்து வஸதிரகாயம்செய்து சக்கரை 4-கழஞ்சு கூட்டிக்கலந்து சீசாவில்வைத்துக்கொள்ளவும் திருகடிசூரணம யெடுத்து தேனிற் குழப்பித் தின்னவும் பித்தம் நாற்பதும் பரந்தோடிப்போம் இருவேளையுமாக 10-20 30-40 நாள் வீதம் கொள்ளவும் இச்சாபத்தியம்,

பலரோகவகுப்பு.

விரைவாத வாய்வுக்கு.

ஆதண்டைவேர்	பிடி	1
வெண்காரம்	,,	1
மிளகு	,,	1
நாயுருவி விரை	,,	1

இவையாவும் ஒன்றாயிட்டு அரைத்து பின்னக்காய்வீதம் இருவேளையும் 5-7 நாள் கொள்ளவும் வாதத்தால் வீங்கியவிரை வீக்கம் சுவஸ்தமாகும் இச்சாபத்தியம்.

அண்டவாய்வுக்கு.

கருஞ்சீரகம் ஆண்டு தேன்விட்டரைத்து சுழர்ச்சிக்கர யளவு இருவேளையும் 10-நாள் தின்னிவும் அண்டவாய்வு தீரும்,

வாதகுன்மத்திற்கு.

பாப்பார்முள்ளி தப்பைமிராச்சி திப்பிலி ஆண்டு காயம் நல்லிவல்லம் ஓமம் இவ்வகளை சமன்கொண்டு மிதிபாவால் சாறுவிட்டு அரைத்து கெச்சக்காய்வீதம் இருவேளையும் 5 நாள் கொள்ள வேண்டியது ஆண்டவன் கிருபையால் சுகப்படும்,

மிஸ்பாஹுஸ்ஸலாஹ், பீ. தெளலீஹின்னிகாஹ்.

முற்றுப்பெற்றது.

இதனால் சகல முஸ்லிமான இக்வாங்களுக்கு தெரிவிப்பதாயாதெனில், மதராஸ் திருவல்லிக்கேணி, சூராப்பமுதலி தெருவு 16, நெம்பரில் நம்மால புஸ்தகஷாப்பொன்று வைக்கப்பட்டு அல்லா வுதவியால் க்ஷேமமாய் நடந்துவருகிறது, அதில் பலவிதமான குருஆன்களும், ஜஞ்சுவகைகளும், அரபுத்தமிழ் கிதாபுகளும் தமிழ் புத்தகங்களும், சகாயமான கிறயத்திற்கு விற்கப்படுகிறது, வேண்டுமான கனவான்கள் நேராக்கமாகவும், வி. பி. போஸ்ட்டு, மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம், கேட்டாக்கு தேவையானவர்களுக்கு இனுமாய் அனுப்பி கொடுக்கப்படும்.

இங்ஙனம்

எஸ். எம். முஸ்தபா லெப்பை.

நெ. 16 சூராப்பமுதலி தெருவு,

திருவல்லிக்கேணி, மதராஸ்.

விளம்பரம்.

இஸ்லா மார்க்க தமிழ் புத்தகங்கள்.

தயாராயிருக்கிறது.

சுபுஹான மௌலூது தர்ஜுமா

தமிழில்.

புதிதாய் வெளிவந்து விட்டது.

இதன் கிரயம் அணா 8.

வி. பி. சார்ஜ் பிரத்தியகம்.

—:*:—

முகியித்தின் மௌலிது.

தர்ஜுமா உரை.

புதிதாய் வெளிவந்து இருக்கிறது.

இதன் கிரயம் அணா 8.

வி. பி. சார்ஜ் பிரத்தியகம்.

(:—:)

பஅந்த நூறுல் ஹுதா

தர்ஜுமா யாலைலயிதிமாலே

தயாராகயிருக்கிறது.

இதன் கிரயம் அணா 4.

வி. பி. சார்ஜ் பிரத்தியகம்.

எஸ். எம். முஸ்தபா லெப்பை,

நெ. 16, சூரப்பமுதலி தெரு,

திருவல்லிக்கேணி மதராஸ்.